சமூக அரசியல்
ஆரம்ப நூல் வரிசை

# சமூக விஞ்ஞான பாடநூல்

## சோஷலிசம் என்றால் என்ன?
## கம்யூனிசம் என்றால் என்ன?




முன்னேற்றப் பதிப்பகம்

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

# சமூக விஞ்ஞான பாடநூல்

## சோஷலிசம் என்றால் என்ன?

## கம்யூனிசம் என்றால் என்ன?

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

நூல் வரிசையின் பதிப்பாசிரியர் குழு:
எஃப். எம். வோல்கவ் (தலைமைப் பதிப்பாசிரியர்),
ஈ. எஃப். குப்ஸ்கி (துணைப் பதிப்பாசிரியர்),
எஃப். எம். புர்லாட்ஸ்கி, வி.டி. ஸோதவ், வி.வி. கிரபிவின்,
யூ.என்.பொபோவ், வி.வி. ஸோபலெவ், எஃப்.என்.யூர்லொவ்

АВС СОЦИАЛЬНО-ПОЛИТИЧЕСКИХ ЗНАНИЙ

ХРЕСТОМАТИЯ ПО ОБЩЕСТВОВЕДЕНИЮ

ЧТО ТАКОЕ СОЦИАЛИЗМ?
ЧТО ТАКОЕ КОММУНИЗМ?

*на тамильском языке*

ABC OF SOCIAL AND POLITICAL KNOWLEDGE

A READER ON SOCIAL SCIENCES

WHAT IS SOCIALISM?
WHAT IS COMMUNISM?

*in Tamil*

© Progress Publishers, 1985
© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1990

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$X\frac{0101000000-059}{014(01)-90}275-90$

ISBN 5—01—002352—0

## பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . . . . . 5

சோஷலிசம் என்றால் என்ன?
கம்யூனிசம் என்றால் என்ன?

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ். கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை என்ற நூலிலிருந்து . . . . . . . 19

வி.இ. லெனின். கம்யூனுக்கு அஞ்சலி . . . . . . 64

வி.இ. லெனின். அரசும் புரட்சியும் என்ற நூலிலிருந்து . . . . . . . . . . . . . . 73

வி.இ.லெனின். சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன? . . . . . . . . . . . . . 107

வி.இ. லெனின். தொழிலாளி வர்க்கமும் தேசிய இனப் பிரச்சினையும் . . . . . . . . . 110

வி.இ. லெனின். ஆசியாவின் விழிப்பு . . . . 115

விளதீமிர் இலியீச் லெனினின் 100ஆவது பிறந்த நாளையொட்டி சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி வெளியிட்ட ஆய்வுரைகள் என்ற நூலிலிருந்து 120

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரஸ் ஆவணங்களிலிருந்து . . 133

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் பொதுச் செயலர் மி.செ. கர்பச்சோவ் 1986 பிப்ரவரி 25இல் கட்சியின் 27ஆவது காங்கிரசில் சமர்ப்பித்த அரசியல் அறிக்கையிலிருந்து . . . . . . . . 134

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி சமர்ப்பித்த அரசியல் அறிக்கை சம்பந்தமாக 27ஆவது கட்சி காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்திலிருந்து . . . . 196

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரசில் ஏற்கப்பட்ட கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பிலிருந்து . . 220

பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . . 274

## முன்னுரை

இப்பாடநூலில் கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி.இ. லெனினின் மிக முக்கிய தனிப்பட்ட படைப்புகள் முழுமையாக அல்லது அவற்றின் சில பகுதிகள் இடம் பெற்றுள்ளன. சோவியத் அரசு, சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆவணங்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. மார்க்சிய—லெனினியத்தின் மூன்று உட்கூறுகளாகிய தத்துவஞானம் (இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம்), அரசியல் பொருளாதாரம், விஞ்ஞான கம்யூனிசம் ஆகியவற்றை இவை தொடர்ச்சியாக விளக்குகின்றன.

இப்பாடநூல் இரண்டு தொகுதிகளில் வெளியிடப்படுகிறது. முதல் தொகுதியில் மார்க்சிய—லெனினிய தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம் சம்பந்தமான படைப்புகள் தொகுத்து தரப்பட்டன. இந்தத் தொகுதியில் விஞ்ஞான கம்யூனிச மூல படைப்புகள் அடங்கும்.

இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள படைப்புகளை சுயமாகப் பயிலுவதை எளிதாக்கும் பொருட்டு இத்தொகுதியின் இறுதியில் பெயர்க் குறிப்பகராதி (கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி.இ. லெனினின் படைப்புகளில் குறிப்பிடப்படும் நபர்களைப் பற்றிய விவரங்கள்), தரப்பட்டுள்ளது.

# சோஷலிசம் என்றால் என்ன?
# கம்யூனிசம் என்றால் என்ன?

முதன்முதலில் சோஷலிசத்தைப் பற்றிய போதனைகள் விமர்சன, கற்பனாவாதத் தன்மையைக் கொண்டவையாயிருந்தன. 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த கற்பனாவாத சோஷலிஸ்டுகளாகிய சான்–சிமோன், ஃபூரியே ஆகியோரும், பிரிட்டனைச் சேர்ந்த ஓவனும் முதலாளித்துவ சமுதாயத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினர். அச்சமுதாயத்தில் உற்பத்தி அராஜகம் கோலோச்சுகிறது, தனியுடைமையாளர்களின் நலன்கள் எப்போதும் சமுதாய நலன்களுடன் மோதுகின்றன, பிறர் உழைப்பில் வாழும் ஒட்டுண்ணி வர்க்கங்கள் செழிக்கின்றன, உழைப்பிற்கான உரிமையை அளிக்காமல் வெறுமனே ''மானுட உரிமை'' பற்றி வாய்கிழியப் பேசப்படுகிறது என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

மிக நீதியான சமுதாய அமைப்பைப் பற்றி—சோஷலிசம், கம்யூனிசத்தைப் பற்றி—கற்பனாவாத சோஷலிஸ்டுகள் கனவு கண்டனர். அச்சமுதாய அமைப்பில் எல்லோரும் உண்மையிலேயே சுதந்திரமானவர்களாக, சமமான சமூக அந்தஸ்தை உடையவர்களாக இருப்பர், சமுதாயம் அமிதமான பொருளாயத செல்வத்தைப் படைக்கும், அது மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்யும், தனிநபரின் மலர்ச்சிக்கு உதவும் என்று அவர்கள் எதிர்

பார்த்தனர். ஆனால் சான்–சிமோன், ஃபூரியே, ஓவன் ஆகியோர் சமூக வளர்ச்சியின் புறவய விதிகள், அதன் உந்து சக்திகளை அறிந்திருக்கவில்லை, முதலாளித்துவ கூலியடிமையிலிருந்து மீளும் உண்மையான வழியை அவர்களால் சுட்டிக்காட்ட இயலவில்லை.

முதன்முதலாக கா. மார்க்சும் பி. எங்கெல்சும் தான் சோஷலிசத்தைக் கனவிலிருந்து உண்மையான விஞ்ஞானமாக—பாட்டாளி வர்க்கப் போராட்ட நியதிகள், வடிவங்கள், வழிகளைப் பற்றிய விஞ்ஞானமாக, சோஷலிசப் புரட்சி மற்றும் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிப்பதைப் பற்றிய விஞ்ஞானமாக—மாற்றினர். 1840க்களில் கா. மார்க்சும் பி. எங்கெல்சும் கண்டுபிடித்துக் கூறிய இரண்டு மாபெரும் விஷயங்கள்—வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தும் உபரிம்திப்புத் தத்துவமும்—விஞ்ஞான கம்யூனிசம் தோன்றுவதற்கான தத்துவார்த்த அடிப்படையாக விளங்கின. மனித சமுதாயம் நிலவுவதன் புறவய அடிப்படைகளையும், அதன் முன்னோக்கிய வளர்ச்சியின் பொது நியதிகளையும் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் சுட்டிக்காட்டியது. உபரி மதிப்பைப் பற்றிய மார்க்சிய தத்துவம், முதலாளித்துவத்தில் கூலி அடிமையின் சாரத்தை விளக்கியது, பூர்ஷ்வா சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகளின் பொருளாதார அடிப்படையை அம்பலப்படுத்தியது. சோஷலிசப் புரட்சி தவிர்க்கப்பட முடியாதது, முதலாளித்துவம் சோஷலிசத்தால் நியதியாக மாற்றப்படும் என்று மெய்ப்பித்தது.

விஞ்ஞான கம்யூனிச தத்துவத்தை முன்வைத்த

மார்க்சும் எங்கெல்சும், முதலாளித்துவத்தின் சமரசப்படுத்த இயலாத முரண்பாடுகளை சோஷலிசப் புரட்சியால்தான் தீர்க்க முடியும், இப்புரட்சி முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்திற்கு முடிவு கட்டி, தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியை ஏற்படுத்தும் என்று நிரூபித்தனர். முதலாளித்துவத்தை அழித்து சோஷலிச அமைப்பை நிலைநாட்ட வல்ல சமூக சக்தியாக பாட்டாளி வர்க்கம் திகழுகிறது, பிற உழைப்பாளிகள் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகளாக விளங்குகின்றனர். சுயமான அரசியல் கட்சியை—கம்யூனிஸ்டுக் கட்சியைத் தோற்றுவிப்பது பாட்டாளிகளுக்கு எவ்வளவு அவசியமானது என்று காட்டியது மார்க்ஸ், எங்கெல்சின் மாபெரும் சேவையாகும்; இக்கட்சிதான் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக விளங்கி, சோஷலிசம், கம்யூனிசத்திற்காக உழைப்பாளிகள் நடத்தும் போராட்டத்திற்குத் தலைமை தாங்கும்.

வரலாற்றில் முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியாயும் தொழிலாளி வர்க்கத்தின் முதல் அரசாங்கமாயும் அமைந்த 1871ஆம் ஆண்டு பாரிஸ் கம்யூனின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்திய மார்க்சும் எங்கெல்சும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பற்றிய (சோஷலிசப் புரட்சியின் பொழுது நிலைநாட்டப்படும் தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சி) போதனையை முன்வைத்தனர். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் புரட்சிகர மாறு காலகட்டத்தின் தவிர்க்க இயலாமையைப் பற்றிய கருத்துநிலையை அவர்கள் வளர்த்தனர். கம்யூனிச சமுதாய பொருளாதார அமைப்பைப் பற்றிய விஞ்ஞான கருத்தை (இச்சமுதாய அமைப்

பில் சோஷலிசம், கம்யூனிசம் என்ற இரண்டு கட்டங்கள் அடங்கும்) முன்வைத்த மார்க்சிய ஆசான்கள் இக்கட்டங்களின் திட்டவட்டமான அம்சங்களை நிர்ணயித்துக் கூறினர்.

விஞ்ஞான கம்யூனிச தத்துவ வளர்ச்சியில் புதிய கட்டம் வி.இ. லெனினின் பெயருடன் தொடர்புடையது. சோஷலிசப் புரட்சி, சோஷலிச மற்றும் கம்யூனிச கட்டுமானம் பற்றிய தத்துவத்தை அவர் ஆக்கபூர்வமாக செழுமைப்படுத்தினார். அவர் ருஷ்ய மற்றும் சர்வதேசப் புரட்சி இயக்கத்திற்கு விஞ்ஞான ரீதியான நீண்டகால திட்டத்தையும் நடைமுறைத் தந்திரத்தையும் அளித்தார், விஞ்ஞான கம்யூனிச கருத்துகளை நடைமுறைப்படுத்துவதற்கான போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

விஞ்ஞான கம்யூனிசத்தின் வளர்ச்சியில் லெனினிய கட்டம், சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி, பிற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் தத்துவார்த்த நடவடிக்கையில் தொடருகிறது.

1917இல் ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றதும், பின்னர் இன்னும் சில நாடுகளில் சோஷலிசப் புரட்சிகள் வெற்றியடைந்ததும், சோஷலிசம் உலக சமூக அமைப்பாக மாறியதும் விஞ்ஞான கம்யூனிச தத்துவம் வளர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் பாதையில் நடந்த முக்கிய வரலாற்று சம்பவங்களாகும். எதார்த்த சோஷலிசம் நடைமுறையில் நிர்மாணிக்கப்பட்ட பின் விஞ்ஞான கம்யூனிசமானது, புதிய சமுதாய நிர்மாணிப்பைப் பற்றி அனுபவத்தில் சோதிக்கப்பட்ட விஞ்ஞானமாகியது.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி பிற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளுடன் சேர்ந்து புதிய முடிவுகள், கருத்துநிலைகளால் விஞ்ஞான கம்யூனிசத்தைச் செழுமைப்படுத்தியுள்ளது, இவை இன்றைய காலத்தின் மிக முக்கிய கேள்விகளுக்குப் பதிலளிக்கின்றன. இவை புரட்சிகரத் தொழிலாளர், தேசிய விடுதலை இயக்கத்திற்கும், சோஷலிச, கம்யூனிச கட்டுமானத்திற்கும், உலக சமாதானம், பாதுகாப்பிற்கான போராட்டத்திற்கும் நம்பகரமான வழிகாட்டிகளாகத் திகழுகின்றன.

உதாரணமாக, நவீன சகாப்தத்தை மார்க்சிய-லெனினியம், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் சகாப்தமாக, இரண்டு உலக சமூக அரசியல் அமைப்புகளுக்கு இடையில் வரலாற்றுப் போட்டி நடைபெறும் சகாப்தமாக, சோஷலிச மற்றும் தேசிய விடுதலைப் புரட்சிகளின் சகாப்தமாக, காலனியாதிக்கம் தகர்ந்து விழும் சகாப்தமாக, சமுதாய வளர்ச்சியின் முக்கிய உந்து சக்திகள் (உலக சோஷலிசம், தொழிலாளர் மற்றும் கம்யூனிச இயக்கம், விடுதலையடைந்த நாடுகளின் மக்கள், வெகுஜன ஜனநாயக இயக்கம்) ஏகாதிபத்தியம், அதன் ஆக்கிரமிப்புக் கொள்கை, ஒடுக்குமுறைக்கு எதிராயும் ஜனநாயகம், சமூக முன்னேற்றத்திற்காகவும் போராட்டம் நடத்தும் சகாப்தமாக சித்தரிக்கிறது. இன்றைய எதார்த்தத்தைப் புரிந்து கொள்ள இது பெரிதும் உதவும். மேற்கூறிய முற்போக்கு சக்திகளின் இடையறா வளர்ச்சியும் பரஸ்பரச் செயலாக்கமும், சமாதானமான, சுதந்திரமான, மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பற்றிய மக்களின் கனவுகள் நனவாகும் என்பதற்கான அடிப்படையாகும்.

கடந்த பத்தாண்டுகளில் விஞ்ஞான கம்யூனிச தத்துவம் எதார்த்த சோஷலிசத்தைப் பற்றிய புதிய கருத்துகளால் செழுமையடைந்துள்ளது. புதிய சமுதாயத்தை நிர்மாணிப்பது சம்பந்தமான மார்க்சிய–லெனினிய தத்துவம் சர்வதேச அளவில் சரிபார்க்கப்பட்டுள்ளது. சோஷலிசத்தின் பொது நியதிகளின்—தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் உழைப்பாளிகளின் ஆட்சி, விஞ்ஞான சோஷலிச சித்தாந்தத்தால் ஆயுதந் தரித்த கம்யூனிஸ்டுக் கட்சி சமுதாய வளர்ச்சிக்குத் தலைமை தாங்குதல், அடிப்படை உற்பத்திச் சாதனங்களின் மீது பொதுவுடைமையை நிலைநாட்டி, அதன் அடிப்படையில் மக்களின் நலன் கருதி பொருளாதாரத்தைத் திட்டமிட்ட ரீதியில் வளர்த்தல், ''திறமைக்கேற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம்'' என்ற கோட்பாட்டை நடைமுறைப்படுத்தல், சோஷலிச ஜனநாயகத்தின் வளர்ச்சி, எல்லா மக்கள் இனங்கள், தேசிய இனங்களின் சமத்துவமும் நட்புறவும், புரட்சியின் சாதனைகளை வர்க்க எதிரிகளிடமிருந்து பாதுகாத்தல்—பெரும் முக்கியத்துவம் நடைமுறையில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. பொது நியதிகளை ஒவ்வொரு சோஷலிச நாட்டின் திட்டவட்டமான சூழ்நிலையில் பயன்படுத்துவது என்பது உறுதியோடு முன்னோக்கி நடைபோடவும், வளர்ச்சி இடர்ப்பாடுகளை அகற்றவும், பொது சோஷலிச வளர்ச்சிப் போக்கில் தோன்றும் முரண்பாடுகளை உரிய தருணத்தில் தீர்க்கவும் அடிப்படையாகும்.

சோஷலிச நாடுகளுக்கு இடையில் தோன்றும் புதிய வகையான உறவுகளைப் பற்றிய கருத்து

நிலைகள் விஞ்ஞான கம்யூனிச தத்துவத்தில் விரிவாக வளர்க்கப்பட்டன. மார்க்சிய-லெனினிய சித்தாந்தம், வர்க்க ஒருமைப்பாடு, புதிய சமுதாயத்தை நிர்மாணித்து பாதுகாப்பதில் ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி, சமத்துவம், ஒவ்வோர் அரசின் சுதந்திரத்தையும் அரசுரிமையையும் மதித்தல் ஆகியவைதான் இவ்வுறவுகளின் உறுதியான அடிப்படையாகும். சோஷலிச நாடுகள் மேன்மேலும் நெருங்கி வரும் புறவய தேவையானது சோஷலிசத்தின் சாரத்திலிருந்து வருகிறது; சோஷலிச நாடுகளின் சமுதாய வளர்ச்சி மட்டங்கள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமானவையோ, நெருக்கமானவையோ, அவ்வளவுக்கவ்வளவு அவற்றின் ஒத்துழைப்பு செழுமையானது, ஆழமானது, அவை நெருங்கி வரும் நிகழ்ச்சிப் போக்கு அவ்வளவுக் கவ்வளவு எளிதானது.

உலக புரட்சி நிகழ்ச்சிப் போக்கின் ஒரு முக்கிய அம்சம்—காலனியாதிக்க நுகத்தடியைத் தூக்கியெறிந்த நாடுகள் தம் தேசிய சுதந்திரத்தை வலுப்படுத்தவும் சமூக முன்னேற்றத்திற்கும் இந்நாடுகளின் மக்கள் நடத்தும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம்—விஞ்ஞான கம்யூனிச தத்துவத்தில் பிரதிபலிக்கிறது. சுதந்திர வளர்ச்சியில் இந்நாடுகளில் பல பொருளாதார கட்டுமானம், கலாசார வளர்ச்சி, தேசிய அரசை வலுப்படுத்துவதில் கணிசமான வெற்றிகளை அடைந்துள்ளன. சர்வதேச அரங்கில் தம் உரிமைகளுக்காக இந்நாடுகள் கூட்டாகப் போராடுகின்றன.

ஆனால் காலனியாதிக்கமும் அரைக்காலனியாதிக்கமும் விட்டுச்சென்றுள்ளவையும், ஏகாதிபத்

தியத்தின் நடவடிக்கைகளும் இளம் நாடுகள் தம் சுதந்திரத்தை வலுப்படுத்தி, பொருளாதார, சமூக புத்துயிர்ப்பைப் பெறும் பாதையில் தீவிரத் தடைகளாக உள்ளன. இந்நாடுகளின் மக்கள், நவீன காலனியாதிக்கம், உள்விவகாரங்களில் அன்னியத் தலையீடு, நிறவெறி, இனவெறி ஆகியவற்றிற்கு எதிரான உறுதியான போராட்டத்தைத் தொடருகின்றனர். இந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு, விடுதலை, சமாதானம், சமூக முன்னேற்றத்திற்கான மக்களின் பொது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துடன் ஒன்று கலக்கிறது.

விடுதலையடைந்த நாடுகளில் ஒரு சில முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையை, சோஷலிச திசையமைவுப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளன, இது சமுதாய முன்னேற்றத்திற்கான பரவலான வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது. இன்று உலகில் நிலவும் சக்திகளின் சமன்பாட்டில், முதலாளித்துவத்தைத் தூக்கியெறிந்து, சுரண்டலாளர்கள் இல்லாமல் உழைப்பாளிகளின் நலன் கருதி தம் எதிர்காலத்தை அமைக்க முன்னர் கட்டுண்டு கிடந்த மக்களின் முன் பரவலான வாய்ப்புகள் தோன்றியுள்ளதை இந்நாடுகளின் அனுபவம் காட்டுகிறது. உள்நாட்டு, வெளிநாட்டு பிற்போக்கின் எதிர்ப்பை முறியடிக்கும் ஆளும் புரட்சிகர ஜனநாயக கட்சிகள் ஏகாதிபத்திய ஏகபோகங்கள், குலத் தலைவர்கள், நிலப்பிரபுக்கள், பிற்போக்கு முதலாளிகள் ஆகியோரின் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டும் கொள்கையைப் பின்பற்றுகின்றன. இவை பொருளாதாரத்தில் அரசுத் துறையை வலுப்படுத்துகின்றன, கிராமத்தில் கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவிக்கின்றன,

பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் உழைப்பாளிகளின் பங்கேற்பை அதிகரிக்கின்றன. தம் சுதந்திரத்தை ஏகாதிபத்திய தாக்குதலிலிருந்து காப்பாற்றும் இந்நாடுகள் சோஷலிச அரசுகளுடனான உறவுகளை விரிவுபடுத்துகின்றன. இந்நாடுகள் தேர்ந்தெடுத்த பாதை மக்கள் திரளினரின் உண்மை நலன்களுக்கு ஏற்றதாயுள்ளது, நீதியான சமூக அமைப்பை நோக்கிய இவர்களின் நாட்டத்தை பிரதிபலிக்கிறது, மனித சமுதாய வளர்ச்சியின் பிரதான திசையமைவுடன் ஒத்துப் போகிறது.

விஞ்ஞான கம்யூனிச தத்துவம் இன்று முதலாளித்துவ உலகில் நடைபெறும் புதிய நிகழ்ச்சிப் போக்குகளை—இங்கே பொது நெருக்கடி ஆழமடைந்து வருகிறது—பிரதிபலிக்கிறது. இதன் ஆதிக்கம் தவிர்க்க இயலாதபடி குறுகி வருகிறது, இதன் வரலாற்று அழிவு மேன்மேலும் தெளிவாகத் தெரிகிறது. முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்தின் உள் ஸ்திரமின்மை வலுப்பட்டு வருகிறது, இது இதனுடைய பொது வளர்ச்சி வேகங்கள் குறைவதிலும் சுழல் நெருக்கடிகளும் கட்டமைப்பு நெருக்கடிகளும் பின்னிப் பிணைவதிலும் வெளிப்படுகிறது. பெரும் வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், பெரும் பட்ஜெட் பற்றாக்குறைகள், அரசுக் கடன்கள் ஆகியவை தீரா நோய்களாகியுள்ளன. ஏகாதிபத்தியமானது தீர்க்கவே முடியாத உள்நாட்டு மற்றும் உலக முரண்பாடுகள், அதிர்ச்சிகள், சச்சரவுகளில் சிக்கித் தவிக்கிறது.

இரண்டு உலக யுத்தங்களைக் கட்டவிழ்த்து விட்ட ஏகாதிபத்தியம் இன்று மூன்றாவது உலக யுத்த அபாயத்தை ஏற்படுத்துகிறது, இது மட்டும்

மூண்டால் மனித நாகரிகமே அழியக் கூடும். ஆனால் மேன்மேலும் வலுப்பட்டு வரும் உலக சமாதான சக்திகளின் உள்ளாற்றல் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு எதிராயுள்ளது. சோஷலிச நாடுகளின் தீவிரமான, தொடர்ச்சியான சமாதான கொள்கை, இவற்றின் வளர்ந்து வரும் பொருளாதார, தற்காப்பு வல்லமை, பெரும்பாலான ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் கொள்கை, உலகெங்கும் பரவலான மக்கள் திரளினர் நடத்தும் யுத்த எதிர்ப்பு இயக்கங்கள் ஆகியவை இதிலடங்கும். யுத்தத்தைத் தவிர்த்து, மனித குலத்தைப் பேரழிவிலிருந்து காப்பாற்றுவதுதான் சோஷலிசத்தின், உலக சமாதான சக்திகளின் வரலாற்றுக் கடமையாகும்.

நடைமுறையில் சோதிக்கப்பட்ட விஞ்ஞான கம்யூனிச தத்துவத்தை வழிகாட்டியாகக் கொண்டு சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியும், பிற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளும் சர்வதேச உறவுகளில் விவேக முன்முயற்சிகளுக்காகவும், பதட்ட நிலைத் தணிவு, சமாதான லட்சியங்களுக்காகவும், ஒவ்வொரு மக்களினத்தின், மனிதகுலம் முழுவதன் நலன்களுக்காகவும் மிகத் தொடர்ச்சியாகப் போராடுகின்றன.

இத்தொகுதியில், விஞ்ஞான கம்யூனிச தத்துவத்தின் அடிப்படைகளைப் பற்றி கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி.இ. லெனின் எழுதிய நூல்கள், கட்டுரைகள் இடம் பெறுகின்றன. இதில் வெளியிடப்படும் சோவியத் அரசு மற்றும் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆவணங்களில், நவீன சூழ்நிலையில் விஞ்ஞான கம்யூனிச தத்துவம் எப்படி வளர்ச்சியடைகிறது என்று காட்டப்படுகிறது.

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ்

**கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை**
**என்ற நூலிலிருந்து**

புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முதல் சர்வ தேச ஸ்தாபனமாகிய கம்யூனிஸ்டுகளின் சங்கத்தின் இரண்டாவது காங்கிரசின் கட்டளைக்கேற்ப கா.மார்க்சும் பி. எங்கெல்சும் 1848இல் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை** எழுதினர். இது கம்யூனிச சமுதாயத்தைப் படைக்கும் லட்சியங்கள், நோக்கங்கள் அடங்கிய முதல் வேலைத்திட்ட ஆவணமாகியது. இதன் நான்கு அத்தியாயங்களில் விஞ்ஞான கம்யூனிசத்தின் அடிப்படை கருத்துகள் தரப் பட்டுள்ளன. முதல் அத்தியாயமும் இரண்டாவது அத்தியாயமும் முழுமையாகவும், நான்காவது அத் தியாயத்தின் முக்கியப் பகுதியும் கீழே தரப்படுகின்றன.

**முதலாளிகளும் பாட்டாளிகளும்** என்ற முதல் அத்தியாயத்தில், முதலாளித்துவ சமுதாயம் கம் யூனிச சமுதாயத்தால் மாற்றப்படுவது எப்படித் தவிர்க்க இயலாதது என்று காட்டப்பட்டுள்ளது. இங்கேதான் மார்க்சும் எங்கெல்சும் வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம் பற்றிய தம் போதனையை முதன்முதலாக விரிவாக எடுத்துரைத்தனர். மனித வளர்ச்சியின் வரலாற்றைத் தத்துவார்த்த ரீதியில் பொதுமைப்படுத்திய அவர்கள், பூர்வீக சமுதாயம் தவிர மனித வரலாறு பூராவும் வர்க்கங்களுக்கு இடையிலான போராட்ட வரலாறாக இருந்தது என்று சுட்டிக்காட்டினர்; சுரண்டல் சமுதாயங்

களில் இவ்வர்க்கங்களின் நலன்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தாமல் முரண்படுகின்றன. வர்க்கப் போராட்டம் அடிமையுடைமை சமூகத்தில் அடிமையுடைமையாளர்களுக்கும் அடிமைகளுக்கும் இடையிலும், நிலப்பிரபுத்துவ சமூகத்தில் நிலப்பிரபுக் களுக்கும் பண்ணை அடிமைகளுக்கும் இடையிலும் நடந்தது, பூர்ஷ்வா சமுதாயத்தில் இது முதலாளி களுக்கும் பாட்டாளிகளுக்கும் இடையில் நடக்கிறது. மார்க்சும் எங்கெல்சும் எடுத்துக் காட்டியபடி இப் போராட்டத்தின் முடிவு ஏற்கெனவே முன்நிர்ண யிக்கப்பட்டது: முதலாளி வர்க்கமானது தனக்கு குழிபறிக்கும் ஆயுதத்தை—பெருவீத இயந்திர உற் பத்தியின் நவீன உற்பத்திச் சக்திகள்—படைத்தது மட்டுமல்ல, இந்த ஆயுதத்தைத் தனக்கெதிராகப் பயன்படுத்தப் போகும் நவீன தொழிலாளர்களை யும் உருவாக்கியது. தொழிலாளி வர்க்கம் தன் உழைப்பால் படைத்ததைத் தானே தன் கரங்களில் எடுக்க வேண்டுமென்பது வரலாற்றின் கட்டளை யாகும், இது சோஷலிசப் புரட்சியின் போக்கில் உற்பத்திச் சாதனங்களைப் பொதுமைப்படுத்தி நவீன பொருளாதாரத்தை, சமுதாயம் முழுவதை யும் நிர்வகிக்க வேண்டும்.

**பாட்டாளிகளும் கமயூனிஸ்டுகளும்** என்ற இரண் டாவது அத்தியாயம் சமுதாயத்தை கம்யூனிச ரீதி யில் மாற்றியமைப்பதற்கு அர்ப்பணிக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகள் ஏதோ சொத்தை, தேசிய இனத் தை, தாயகத்தை, மதத்தை, ஒழுக்கத்தை ஒழிக்க விரும்புவதாகக் கூறப்படும் பொய்க் குற்றச்சாட்டு கள் இதில் மறுக்கப்படுகின்றன. இவற்றில் பெரும் பாலானவற்றை முதலாளித்துவம்தான் மக்களிட

மிருந்து பிடுங்குகிறது என்று கா. மார்க்சும் பி. எங்கெல்சும் காட்டினர். சோஷலிசத்தில் வாழ்க்கையின் பொருளாயத சூழ்நிலை மாறுவதால் மக்களின் கண்ணோட்டங்களும் உணர்வும் அவர்களின் சமூக பரஸ்பர உறவுகளும் தவிர்க்க இயலாது மாறுமென்று அவர்கள் விஞ்ஞான ரீதியில் கணித்துக் கூறினர்.

தொழிலாளி வர்க்க அரசு எம்மாதிரியான கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற முக்கிய கேள்விக்கு கா. மார்க்சும் பி. எங்கெல்சும் பதிலளித்தனர். முதல் கடமை, எல்லா உற்பத்திச் சாதனங்களையும் முதலாளிகளிடமிருந்து பிடுங்கி அவற்றை பாட்டாளி வர்க்க அரசின் கரங்களில் குவித்து பொதுச் சொத்தாக மாற்றுவதாகும். இரண்டாவது கடமை பொருளாயத செல்வங்களின் உற்பத்தியை விரைவாக வளர்த்து, சமுதாய உறுப்பினர்கள் அனைவரின் நல்வாழ்விற்கு வகை செய்வதாகும். கா. மார்க்சும் பி. எங்கெல்சும் புதிய கம்யூனிச அமைப்பின் சாரத்தை, ''ஒவ்வொருவரின் சுதந்திரமான வளர்ச்சியும் எல்லோருடைய சுதந்திரமான வளர்ச்சிக்கான நிபந்தனையாகத் திகழும்'' கூட்டமைப்பாக வரையறுத்துக் கூறினர்.

**சோஷலிச மற்றும் கம்யூனிச இலக்கியம்** என்ற மூன்றாவது அத்தியாயத்தில் கற்பனாவாத சோஷலிஸ்டுகளின் தத்துவங்கள் உட்பட பல்வேறு விஞ்ஞான பூர்வமற்ற சோஷலிச, கம்யூனிச போதனைகள் விமர்சனம் செய்யப்படுகின்றன.

**தற்போதுள்ள பற்பல எதிர்க்கட்சிகள் குறித்து கம்யூனிஸ்டுகளின் நிலை** என்ற நான்காவது அத்தியாயத்

தில் பல்வேறு சமூக இயக்கங்களின் பாலான கம்யூனிஸ்டுகளின் அணுகுமுறை பற்றி கூறப்படுகிறது. பூர்ஷ்வா அமைப்பிற்கு எதிரான எந்த ஒரு புரட்சி இயக்கத்தையும் எங்கும் கம்யூனிஸ்டுகள் ஆதரிப்பர் என்ற முக்கிய கருத்துநிலையை மார்க்சும் எங்கெல்சும் முன்வைத்தனர். மக்களாட்சியை (ஜனநாயகத்தை) ஏற்படுத்தப் போராடும் எல்லா சமூக சக்திகளையும் ஒன்றிணைக்க அவர்கள் பாடுபடுகின்றனர். இதில் கம்யூனிசத்தை நிர்மாணிப்பது என்ற புரட்சி இயக்கத்தின் இறுதி லட்சியத்தை நிறைவேற்ற அவர்கள் எப்போதும் தொடர்ச்சியாக முயலுகின்றனர். இந்த லட்சியத்தை அடைய தொழிலாளி வர்க்கம், எல்லா உழைப்பாளிகள், உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமை வேண்டும்.

**கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** மனித வரலாற்றில் புதிய சகாப்தத்திற்கான பாதையைத் திறந்து விட்டது, உலகை சோஷலிச ரீதியில் மாற்றியமைப்பதற்கான மாபெரும் புரட்சி இயக்கத்தை ஆரம்பித்து வைத்தது. கம்யூனிஸ்டுகளின் முதல் வேலைத்திட்ட ஆவணத்தை வி.இ. லெனின் பின்வருமாறு மதிப்பிட்டார்: ‘‘இந்தச் சிறு பிரசுரம் மிகப் பெரிய நூல் தொகுதிகளுக்குச் சமமானது. அதன் உணர்ச்சி நாகரிக உலகில் ஒழுங்கமைப்பு பெற்று அணிதிரண்டு போராடி வரும் பாட்டாளி வர்க்கம் முழுவதையும் இன்றைக்கும் கூட ஊக்குவித்து இயங்கிச் செல்கிறது.’’*

---

* வி. இ. லெனின், **மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள்**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், *1985*, பக்கம் *92*.

ஐரோப்பாவை ஆட்டுகிறது ஒரு பூதம்—கம்யூனிசம் என்னும் பூதம். போப்பாண்டவரும் ஜாரரசனும், மெட்டர்னிகும், கிஸோவும், பிரெஞ்சுத் தீவிரவாதிகளும் ஜெர்மன் உளவாளிகளுமாய், பழைய ஐரோப்பாவின் சக்திகள் அனைத்தும் இந்தப் பூதத்தை விரட்டுவதற்காகப் புனிதக் கூட்டு சேர்ந்திருக்கின்றன.

ஆட்சியிலுள்ள தனது எதிராளிகளால் கம்யூனிஸ்டு என்று ஏசப்படாத எதிர்க்கட்சி எங்கேனும் உண்டா? கம்யூனிசம் என்று இடித்துரைத்துத் தன்னிலும் முன்னேறிய எதிர்த்தரப்பாருக்கும் மற்றும் பிற்போக்கான தனது எதிராளிகளுக்கும் பதிலடி கொடுக்காத எதிர்க்கட்சிதான் உண்டா?

இரண்டு முடிவுகள் இவ்வுண்மையிலிருந்து எழுகின்றன.

1) கம்யூனிசமானது ஒரு தனிப்பெரும் சக்தியாகி விட்டதை ஐரோப்பிய சக்திகள் அனைத்தும் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு விட்டன.

2) பகிரங்கமாய் அனைத்து உலகும் அறியும் வண்ணம் கம்யூனிஸ்டுகள் தமது கருத்துகளையும் தமது நோக்கங்களையும் தமது போக்குகளையும் வெளியிட்டு, நேரடியாய்க் கட்சியின் அறிக்கை மூலம் கம்யூனிசப் பூதமெனும் இந்தக் குழந்தைப் பிள்ளைக் கதையை எதிர்க்க வேண்டிய தருணம் வந்து விட்டது.

இந்த நோக்கத்துடன், பல்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் லண்டனில் கூடி, அடியிற் கண்ட அறிக்கையை ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியன், ஃபிளெமிஷ், டேனிஷ் மொழிகளில் வெளியிடுவதற்காக வகுத்திட்டனர்.

I

## முதலாளிகளும் பாட்டாளிகளும்*

இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும்** வர்க்கப் போராட்டங்களது வரலாறே ஆகும்.

* இக்காலத்து முதலாளிகளாகிய பூர்ஷ்வாக்கள் சமூக உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்கள், கூலி உழைப்பை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறவர்கள். இக்காலத்துக் கூலித் தொழிலாளர்களது வர்க்கமே பாட்டாளி வர்க்கம் எனப்படுவது; இத்தொழிலாளர்கள் சொந்தத்தில் தம்மிடம் உற்பத்திச் சாதனங்கள் இல்லாத காரணத்தால் தமது உழைப்புச் சக்தியை விற்று வாழ்க்கை நடத்தும்படி தாழ்த்தப்பட்டிருக்கிறவர்கள். **[1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

** அதாவது, **ஏட்டிலேறிய** வரலாறு அனைத்தும். வரலாற்றுக்கு முற்பட்ட சமுதாயம் குறித்து, எழுத்தில் பதிவாகியுள்ள வரலாற்றுக்கு முன்பு நிலவிய சமூக ஒழுங்கமைப்பு குறித்து, 1847இல் அனேகமாய் ஏதும் அறியப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பிற்பாடு, ஹாக்ஸ்த்ஹாவுசன் ருஷ்யாவில் நிலம் பொதுவுடைமையாய் இருந்ததென்று கண்டுபிடித்தார்; டியூட்டானிய இனங்கள் யாவுமே நிலத்தின் மீது பொதுவுடைமை நிலவிய இந்தச் சமூக அடித்தளத்திலிருந்துதான் வரலாற்றை ஆரம்பித்தன என்று மௌரர் நிரூபித்துக் காட்டினார்; இந்தியாவிலிருந்து அயர்லாந்து வரை எங்குமே நிலத்தைப் பொதுவுடைமையாய்க் கொண்ட கிராம சமுதாயங்கள்தான் சமுதாயத்தின் புராதன ஆதி வடிவமாய் இருக்கிறது அல்லது இருந்திருக்கிறது என்பது நாளாவட்டத்தில் தெரியலாயிற்று. இவற்றுக்கு எல்லாம் மணிமுடி வைத்தாற் போல், **கணம்** என்பதன் மெய்யான தன்மையையும் அதற்கும் **பூர்வகுடிக்கும்** உள்ள உறவையும் மார்கன் கண்டுபிடித்ததானது, இந்தப் புராதனக் கம்யூனிச சமுதாயத்தின் உள்ளமைப்பை அதன் தூய வகையிலான வடிவில் தெளிவாய்ப் புலப்படுத்திற்று. இந்தப் புராதன சமுதாயங்களின் சிதைவைத் தொடர்ந்து சமுதாயமானது பாகுபாடுற்றுத் தனித்தனியான, முடிவில் ஒன்றுக்கொன்று பகைமையான வர்க்கங்களாய்ப் பிரிய முற்படுகிறது. இந்தச் சிதைவு நடந்தேறிய நிகழ்ச்சிப் போக்கினை *Der Ursprung der Familie, des Privateigentums und des Staats* **(குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்)** என்ற நூலில் (இரண்டாம் பதிப்பு, ஷ்டுட்கார்ட், 1886) நான் விவரித்துக் காட்ட முயன்றிருக்கிறேன். **[1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

சுதந்திரமுடையானும் அடிமையும், பட்ரீஷிய உயர் குலச் சீமானும் பிலெபியப் பாமரக் குடியோனும், நிலப்பிரபுவும் பண்ணையடிமையும், கைவினைச் சங்க ஆண்டானும்* கைவினைப் பணியாளனும், சுருங்கக் கூறுமிடத்து ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் ஒருவருக்கொருவர் தீராப்பகை கொண்டோராய், சில நேரங்களில் மறைவாகவும் சில நேரங்களில் பகிரங்கமாகவும் இடையறாப் போராட்டம் நடத்தி வந்தனர். இந்தப் போராட்டம் சமுதாயம் முழுவதன் புரட்சிகரப் புத்தமைப்பிலோ, அல்லது போராடும் வர்க்கங்களது பொது அழிவிலோதான் எப்போதும் முடிந்து வந்துள்ளது.

வரலாற்றின் முந்திய சகாப்தங்களில் அனேகமாய் எங்குமே பல்வேறு வகுப்புகளாலாகிய சிக்கலான சமூகப் பாகுபாடு, சமூக அந்தஸ்தின் பன்மடிப் படிநிலை அமைவு இருக்கக் காண்கிறோம். பண்டைய ரோமாபுரியில்: சீமான்கள், வீரமறவர், பாமரக் குடியோர், அடிமைகள்; மத்திய காலத்தில்: பிரபுத்துவக் கோமான்கள், மான்யக்காரர்கள், கைவினைச் சங்க ஆண்டான்கள், கைவினைப் பணியாளர்கள், பண்ணையடிமைகள், இந்த வகுப்புகளில் அனேகமாய் ஒவ்வொன்றிலும் படிநிலை உட்பிரிவுகளும் இருக்கக் காண்கிறோம்.

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் இடிபாடுகளிலிருந்து முளைத்தெழுந்துள்ள தற்கால முதலாளித்துவ சமுதாயம் வர்க்கப் பகைமைகளுக்கு முடிவு கட்டி விடவில்லை; பழையவற்றின் இடத்தில் புதிய வர்க்கங்களையும், புதிய ஒடுக்குமுறை நிலைமைகளையும், புதிய போராட்ட வடிவங்களையும் நிலைநாட்டியிருக்கிறதே அன்றி வேறில்லை.

ஆயினும் நமது சகாப்தமாகிய இந்த முதலாளி வர்க்க சகாப்தத்தின் ஒரு தனி இயல்பு என்னவெனில், வர்க்கப் பகைமைகளை இது சுருக்கி எளிமையாக்கியுள்ளது: சமுதாயம் மேலும் மேலும் இரு பெரும் பகை முகாம்களாய், எதிரும் புதிருமான இரு பெரும் வர்க்கங்களாய்—முதலாளி

---

* கைவினைச் சங்க ஆண்டான் (guild master), அதாவது கைவினைச் சங்கத்தின் முழு உறுப்பினன், இச்சங்கத்துக்கு உட்பட்டுள்ள ஆண்டான்; இதன் தலைவனல்ல. **[1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

வர்க்கமும் பாட்டாளி வர்க்கமுமாய்—பிளவுண்டு வருகிறது.

மத்திய காலத்துப் பண்ணையடிமைகளிடமிருந்து ஆதி நகரங்களின் சுதந்திர நகரத்தார் உதித்தெழுந்தார்கள். இந்த நகரத்தாரிடமிருந்து முதலாளி வர்க்கத்தின் ஆரம்பக் கூறுகள் வளரலாயின.

அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதாலும், ஆப்பிரிக்க நன்னம்பிக்கை முனையைச் சுற்றிச் செல்லும் கடல்வழி கண்டறியப்பட்டதாலும், தலைதூக்கி வந்த முதலாளி வர்க்கத்துக்குப் புதிய வாய்ப்புகள் கிடைத்தன. கிழக்கு இந்திய, சீனச் சந்தைகள், அமெரிக்காவில் குடியேற்றம், காலனிகளுடனான வாணிபம், பரிவர்த்தனைச் சாதனங்களிலும் பொதுவாய் பண்டங்களிலும் ஏற்பட்ட பெருக்கம் ஆகிய இவை எல்லாம் வாணிபத்துக்கும் கப்பல் போக்குவரத்துக்கும் தொழில்துறைக்கும் இதன்முன் என்றும் கண்டிராத அளவுக்கு ஊக்கமூட்டின; ஆட்டங் கண்டு விட்ட நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் புரட்சிகரக் கூறு வேகமாய் வளர்வதற்கு இவ்விதம் இவை தூண்டுதல் அளித்தன.

நிலப்பிரபுத்துவ முறையில் அமைந்த தொழில் அமைப்பில் தொழிற் பண்டங்களது உற்பத்தியானது தனியுரிமை பெற்ற கைவினைச் சங்கங்களின் ஏகபோகமாய் இருந்தது. இப்போது இது புதிய சந்தைகளின் வளர்ந்து பெருகும் தேவைகளுக்கு ஒவ்வாததாகியது. இதன் இடத்தில் பட்டறைத் தொழில் முறை வளரலாயிற்று. கைவினைச் சங்க ஆண்டான்களைப் பட்டறைத் தொழில் மத்தியதர வர்க்கத்தார் அப்புறப்படுத்தினர், பல்வேறு கூட்டிணைவுகளாய் அமைந்த கைவினைச் சங்கங்களுக்கு இடையிலான உழைப்புப் பிரிவினை தனித்தனி தொழிலகத்திலுமான உழைப்புப் பிரிவினையின் முன்னால் நிற்க முடியாமல் மறைந்தொழிந்தது.

இதற்கிடையில் சந்தைகள் தொடர்ந்து மேன்மேலும் வளர்ந்து விரிவடைந்தன, தேவை மேன்மேலும் உயர்ந்து சென்றது. பட்டறைத் தொழில் முறையுங்கூட இப்போது போதாததாகியது. இந்நிலையில்தான் நீராவியும் இயந்திரங்களும் தொழிற் பண்டங்களின் உற்பத்தியில் புரட்சியை உண்டாக்கின. பட்டறைத் தொழில் முறை போய் அதனிடத்

தில் பிரம்மாண்டமான நவீனத் தொழில்துறை எழுந்தது; பட்டறைத் தொழிலில் மத்தியதர வர்க்கத்தாரின் இடத்தில் கோடீஸ்வரத் தொழிலதிபர்கள், பெரும் பெரும் தொழில் துறைப் பொருளுற்பத்திச் சேனைகளது அதிபதிகள், தற்காலத்து முதலாளிகள் உருவாயினர்.

நவீனத் தொழில்துறை அனைத்து உலகச் சந்தையை நிறுவியிருக்கிறது; அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதானது இதற்குப் பாதையைச் செப்பனிட்டது. வாணிபத்தையும் கடல்வழிப் போக்குவரத்தையும் நிலவழிப் போக்குவரத்தையும் அனைத்து உலகச் சந்தை பிரமாதமாய் வளரச் செய்திருக்கிறது. இந்த வளர்ச்சி அதன் பங்கிற்கு மீண்டும் தொழில்துறையின் விரிவகற்சியை ஊக்குவித்தது. எந்த அளவுக்குத் தொழில்துறையும் வாணிபமும் கப்பல் போக்குவரத்தும் ரயில்பாதைகளும் விரிவடைந்து சென்றனவோ, அதே அளவுக்கு முதலாளி வர்க்கமும் வளர்ச்சியுற்று ஓங்கிற்று, தனது மூலதனத்தைப் பெருகச் செய்து கொண்டது, மத்திய காலம் விட்டுச் சென்றிருந்த ஒவ்வொரு வர்க்கத்தையும் பின்னிலைக்குத் தள்ளிற்று.

இவ்வாறு, நவீன முதலாளி வர்க்கம் நீண்டதொரு வளர்ச்சிப் போக்கின் விளைவாய், உற்பத்தி முறைகளிலும் பரிவர்த்தனை முறைகளிலும் வரிசையாய் ஏற்பட்ட புரட்சிகளின் விளைவாய் உருவானதே என்பதைக் காண்கிறோம்.

முதலாளி வர்க்கம் அதனுடைய வளர்ச்சியின் ஒவ்வொரு படிக்கும் ஏற்றவாறு அரசியல் வெற்றிகளையும் அடைந்தது. பிரபுத்துவக் கோமான்களது ஆதிக்கத்தில் ஒடுக்கப்பட்ட ஒரு வகுப்பாகவும், மத்திய காலக் கம்யூனில்* ஆயுதமேந்திய

---

* ''கம்யூன்'' என்பது பிரெஞ்சு நாட்டில் உதித்தெழுந்து வந்த நகரங்கள், அவற்றின் பிரபுத்துவக் கோமான்களிடமிருந்தும் ஆண்டான்களிடமிருந்தும் வட்டாரத் தன்னாட்சியும் அரசியல் உரிமைகளும் வென்று ''மூன்றாவது ஆதீனம்'' ("Third Estate") ஆகும் முன்னரே தமக்கு இட்டுக் கொண்ட பெயராகும். பொதுவாய் இங்கு முதலாளி வர்க்கத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இங்கிலாந்தும், அதன் அரசியல் வளர்ச்சிக்கு பிரான்சும் மாதிரி நாடுகளாய்க் கொள்ளப்படுகின்றன. **[1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

தன்னாட்சிக் கழகமாகவும் இருந்தது; இங்கே (இத்தாலியிலும் ஜெர்மனியிலும் காணப்பட்டது போல) சுயேச்சை நகரக் குடியரசாகவும், அங்கே (பிரான்சில் காணப்பட்டது போல) வரிக்குரிய ''மூன்றாவது ஆதீன''மாகவும் விளங்கிற்று; பிற்பாடு பட்டறைத் தொழில் மேலோங்கிய காலத்தில் பிரபுத்துவக் கோமான்களுக்கு எதிராய் அரைப் பிரபுத்துவ முடியரசுக்கோ, வரம்பிலா முடியரசுக்கோ துணை நின்றது, மொத்தத்தில் முடிப் பேரரசுகளுக்கு ஆதாரத் தூணாயிற்று; முடிவில் நவீனத் தொழில்துறையும் அனைத்து உலகச் சந்தையும் நிறுவப்பட்டதும் தனக்கு நவீன காலப் பிரதிநிதித்துவ அரசில் ஏகபோக அரசியல் ஆதிக்கத்தை வென்றது. நவீன கால அரசின் ஆட்சியதிகாரமானது முதலாளி வர்க்கம் அனைத்துக்குமான பொது விவகாரங்களை நிர்வகிக்கும் குழுவே அன்றி வேறல்ல.

வரலாற்று அரங்கில் முதலாளி வர்க்கம் மிகவும் புரட்சிகரமான பங்காற்றியிருக்கிறது.

எங்கெல்லாம் முதலாளி வர்க்கம் ஆதிக்க நிலை பெற்றதோ, அங்கெல்லாம் அது எல்லாப் பிரபுத்துவ உறவுகளுக்கும், தந்தைவழிச் சமுதாய உறவுகளுக்கும், கிராமாந்திரப் பாரம்பரிய உறவுகளுக்கும் முடிவு கட்டியது. மனிதனை ''இயற்கையாகவே மேலானோருக்குக்'' கீழ்ப்படுத்திக் கட்டிப் போட்ட பல்வேறு வகையான பிரபுத்துவ பந்தங்களையும் ஈவிரக்கமின்றி அறுத்தெறிந்து விட்டு, மனிதனுக்கும் மனிதனுக்கும் அப்பட்டமான தன்னலத்தைத் தவிர, பரிவு உணர்ச்சியில்லாப் ''பணப் பட்டுவாடா''வைத் தவிர வேறு ஒட்டுமில்லை, உறவுமில்லை என்றாக்கிற்று. சமயத் துறைப் பக்திப் பரவசம், பேராண்மையின் வீராவேசம், சிறு மதியோரது உணர்ச்சிப் பசப்பு ஆகிய புனிதப் பேரானந்தங்களை எல்லாம் தன்னலக் கணிப்பெனும் உறைபனிக் குளிர்

---

**கம்யூன்**—இத்தாலியிலும் பிரான்சிலும் நகரவாசிகள் தன்னாட்சிக்கான முதலாவது உரிமைகளைத் தமது பிரபுத்துவக் கோமான்களிடமிருந்து விலை கொடுத்தோ, போராடியோ பெற்ற பிறகு தமது நகர சமுதாயங்களுக்கு இட்டுக் கொண்ட பெயர். [1890ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]

நீரில் மூழ்க்கடித்துள்ளது. மனிதனது மாண்பினைப் பரிவர்த் தனை மதிப்பாய் மாற்றியிருக்கிறது. சாசனங்களில் பிரகட னம் செய்யப்பட்ட விலக்கவோ துறக்கவோ முடியாத எண் ணியடங்காச் சுதந்திரங்களுக்குப் பதிலாய், வெட்கங் கெட்ட வாணிபச் சுதந்திரமெனும் ஒரேயொரு சுதந்திரத்தை ஆச னத்தில் அமர்த்தி வைத்திருக்கிறது. சுருங்கச் சொல்வ தெனில் சமயத் துறைப் பிரமைகளாலும் அரசியல் பிரமை களாலும் திரையிட்டு மறைக்கப்பட்ட சுரண்டலுக்குப் பதி லாய், முதலாளி வர்க்கம் வெட்க உணர்ச்சியற்ற அம்மண மான, நேரடியான, மிருகத்தனமான சுரண்டலை நிலை நாட்டியிருக்கிறது.

இதுகாறும் போற்றிப் பாராட்டப்பட்டு, பணிவுக்கும் பக்திக்குமுரியதாய்க் கருதப்பட்ட ஒவ்வொரு பணித் துறை யையும் முதலாளி வர்க்கம் மகிமை இழக்கச் செய்துள்ளது. மருத்துவரையும் வழக்கறிஞரையும் சமய குருவையும் கவி ஞரையும் விஞ்ஞானியையும் அது தனது கூலியுழைப்பாளர் கள் ஆக்கி விட்டது.

குடும்பத்திடமிருந்து முதலாளி வர்க்கம் அதன் உணர்ச்சி நய முகத்திரையைக் கிழித்தெறிந்து, குடும்ப உறவை வெறும் காசுபண உறவாய்ச் சிறுமையுறச் செய்து விட்டது.

பிற்போக்கர்கள் போற்றிப் பாராட்டுகிறார்களே மத்திய காலத்துப் பேராண்மையின் முரட்டுக் கூத்து, அது எவ்வளவு மூடத்தனமான செயலின்மையைத் தனது உற்ற துணை யாய்க் கொண்டிருந்தது என்பதை முதலாளி வர்க்கம் நிதர் சனமாக்கியிருக்கிறது. மனிதச் செயற்பாடு என்னவெல்லாம் செய்ய வல்லது என்பதை முதன்முதலாய்த் தெரியப்படுத் தியது முதலாளி வர்க்கம்தான். எகிப்திய பிரமிடுகளையும் ரோமானியக் கட்டுக்கால்வாய்களையும் கோதிக் தேவால யங்களையும் மிஞ்சிய மாபெரும் அதிசயங்களை அது சாதித் திருக்கிறது; முற்காலத்துக் குடிப் பெயர்ச்சிப் பயணங்களும் சிலுவைப் போர்ப் பயணங்களும் அற்ப காரியங்களாய்த் தோன்றும்படியான தீரப் பயணங்களை நடத்தியிருக்கிறது.

முதலாளி வர்க்கத்தால் ஓயாது ஒழியாது உற்பத்திக் கருவிகளிலும், இதன் மூலம் உற்பத்தி உறவுகளிலும், இவற் றுடன் கூடவே சமூக உறவுகள் அனைத்திலுமே புரட்சிகர

மாற்றங்களை ஏற்படுத்தாமல் வாழ முடியாது. ஆனால் இதற்கு முந்திய தொழில் வர்க்கங்களுக்கு எல்லாம் பழைய உற்பத்தி முறைகளை மாற்றமில்லா வடிவில் அப்படியே பாதுகாத்துக் கொள்வதுதான் வாழ்வதற்குரிய முதலாவது நிபந்தனையாய் இருந்தது. ஓயாது ஒழியாது உற்பத்தியில் ஏற்படும் புரட்சிகர மாற்றங்களும் சமூக உறவுகள் யாவும் இடையறாது அமைதி குலைதலும் முடிவே இல்லாத நிச்சய மற்ற நிலைமையும் கொந்தளிப்பும் முதலாளித்துவ சகாப் தத்தை அதற்கு முந்திய எல்லா சகாப்தங்களிலிருந்தும் வேறு படுத்திக் காட்டுகின்றன. நிலையான, இறுதியில் கெட்டிப் பிடித்துப் போன எல்லா உறவுகளும், அவற்றுடன் இணைந்த பழங்காலத் தப்பெண்ணங்களும் கருத்துகளும் துடைத் தெறியப்படுகின்றன, புதிதாய் உருவாகியவை எல்லாம் இறுகிக் கெட்டியாவதற்கு முன்பே பழமைப்பட்டு விடுகின் றன. கெட்டியானவை யாவும் கரைந்து காற்றிலே கலக்கின் றன, புனிதமானவை யாவும் புனிதத்தை இழக்கின்றன, முடி வில் மனிதன் தெளிந்த புத்தியுடன் தனது வாழ்க்கையின் மெய்யான நிலைமைகளையும் தனது சக மனிதர்களுடன் தனக்குள்ள உறவுகளையும் நேர் நின்று உற்று நோக்க வேண் டியதாகிறது.

முதலாளி வர்க்கத்தின் உற்பத்திப் பொருள்களுக்குத் தொடர்ந்து மேலும் மேலும் விரிவடைந்து செல்லும் சந்தை அவசியமாகும். இந்த அவசியம் முதலாளி வர்க்கத்தைப் புவிப்பரப்பு முழுதும் செல்லும்படி விரட்டுகிறது. அது எல்லா இடங்களுக்கும் சென்று ஒட்டிக்கொள்ள வேண்டி யதாகிறது, எல்லா இடங்களிலும் குடியேற வேண்டியதா கிறது, எல்லா இடங்களிலும் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டியதாகிறது.

உலகச் சந்தையைப் பயன்படுத்திச் செயல்படுவதன் மூலம் முதலாளி வர்க்கம் ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தி யையும் நுகர்வையும் அனைத்துலகத் தன்மை பெறச் செய் திருக்கிறது. பிற்போக்கர்கள் கடுங் கோபங் கொள்ளும்படி அது தொழில்களது காலுக்கு அடியிலிருந்து அவற்றின் தேசிய அடிநிலத்தை அகற்றியுள்ளது. நெடுங்காலமாய் நாட்டிலே இருந்துள்ள தொழில்கள் யாவும் அழிக்கப்பட்டு விட்டன,

அல்லது நாள்தோறும் அழிக்கப்பட்டு வருகின்றன. புதிய தொழில்களால் அவை அப்புறப்படுத்தப்படுகின்றன. இந்தப் புதிய தொழில்களைத் தோன்றச் செய்வது நாகரிக நாடுகள் யாவற்றுக்கும் ஜீவ மரணப் பிரச்சினையாகி விடுகிறது. முன்பிருந்தவற்றைப் போல இந்தப் புதிய தொழில்கள் உள்நாட்டு மூலப் பொருள்களை மட்டும் உபயோகிப்பவை அல்ல, தொலைதூரப் பிரதேசங்களிலிருந்து தருவிக்கப் படும் மூலப் பொருள்களை உபயோகிப்பவை. இவற்றின் உற்பத்திப் பொருள்கள் தாய்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட்டு எல்லாப் பகுதிகளிலும் நுகரப்படுகிறவை. தாய்நாட்டு உற்பத்திப் பொருள்களால் பூர்த்தி செய்யப்பட்ட பழைய தேவைகளுக்குப் பதில், தொலைதூர நாடுகள், மண்டலங்களது உற்பத்திப் பொருள்களால் பூர்த்தி செய்யப்படும் புதிய தேவைகள் எழுகின்றன. வட்டாரங்கள், நாடுகள் இவற்றின் பழைய ஒதுக்க நிலைக்கும் தன்னிறைவுக்கும் பதில், எல்லாத் திசைகளிலுமான நெருங்கிய தொடர்பும் உலக அளவில் நாடுகளுக்கிடையிலான சார்புடைமையும் ஏற்படுகின்றன. பொருள் உற்பத்தியில் எப்படியோ அப்படியேதான் அறிவுத் துறை உற்பத்தியிலும். தனித்தனி நாடுகளுடைய அறிவுத் துறைப் படைப்புகள் எல்லா நாடுகளுக்குமான பொதுச் சொத்தாகின்றன. தேசிய ஒருதலைப்பட்ச பார்வையும் குறுகிய மனப்பாங்கும் மேலும் மேலும் இயலாதனவாகின்றன. நாட்டளவிலும் மண்டல அளவிலுமான எத்தனையோ பல இலக்கியங்களிலிருந்து ஓர் அனைத்துலக இலக்கியம் உருவாகின்றது.

உற்பத்திக் கருவிகள் அனைத்தின் அதிவேக அபிவிருத்தியின் மூலமும், போக்குவரத்துச் சாதனங்களின் பிரமாதமான மேம்பாட்டின் மூலமும் முதலாளி வர்க்கம் எல்லாத் தேசங்களையும், மிகவும் அநாகரிகக் கட்டத்தில் இருக்கும் தேசங்களையும்கூட, நாகரிக வட்டத்துக்குள் இழுக்கிறது. தன்னுடைய பண்டங்களின் மலிவான விலைகளை அது சக்தி வாய்ந்த பீரங்கிகளாய்க் கொண்டு, சீன மதிலை ஒத்த எல்

லாத் தடைமதில்களையும் தகர்த்திடுகிறது; அநாகரிகக் கட்டத்தில் இருப்போருக்கு அந்நியர்பால் உள்ள முரட்டுப் பிடிவாத வெறுப்பைப் பணிய வைக்கிறது. ஏற்காவிடில் அழியவே நேருமென்ற நிர்ப்பந்தத்தின் மூலம் அது எல்லா தேசங்களையும் முதலாளித்துவ உற்பத்தி முறையை ஏற்கச் செய்கிறது; நாகரிகம் என்பதாய்த் தான் கூறிக் கொள்வதைத் தழுவும்படி, அதாவது முதலாளித்துவமயமாகும்படி எல்லா தேசங்களையும் பலவந்தம் செய்கிறது. சுருங்கக் கூறுமிடத்து, அப்படியே தன்னை உரித்து வைத்தாற் போன்றதோர் உலகைப் படைத்திடுகிறது அது.

முதலாளி வர்க்கம் நாட்டுப்புறத்தை நகரங்களது ஆட்சிக்குக் கீழ்ப்படச் செய்துள்ளது, மாபெரும் நகரங்களை அது உதித்தெழ வைத்திருக்கிறது; கிராம மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் நகர மக்கள் தொகையை வெகுவாய் அதிகரிக்கச் செய்திருக்கிறது; இவ்விதம் மக்களில் ஒரு கணிசப் பகுதியோரை கிராம வாழ்க்கையின் மடமையிலிருந்து மீட்டிருக்கிறது. எப்படி அது நாட்டுப்புறத்தை நகரங்களைச் சார்ந்திருக்கச் செய்துள்ளதோ, அதே போல அநாகரிக நிலையிலும் குறை நாகரிக நிலையிலுமுள்ள நாடுகளை நாகரிக நாடுகளையும், விவசாய நாடுகளை முதலாளித்துவ நாடுகளையும், கிழக்கு நாடுகளை மேற்கு நாடுகளையும் சார்ந்திருக்கச் செய்துள்ளது.

மக்கள் தொகை, உற்பத்திச் சாதனங்கள், சொத்து இவற்றின் சிதறுண்ட நிலைக்கு முதலாளி வர்க்கம் மேலும் மேலும் முடிவு கட்டி வருகிறது. மக்கள் தொகையை அது அடர்ந்து திரட்சி பெறச் செய்திருக்கிறது, உற்பத்திச் சாதனங்களை மையப்படுத்தியிருக்கிறது, சொத்துகளை ஒரு சிலர் கையில் குவிய வைத்திருக்கிறது. இதன் தவிர்க்கவொண்ணாத விளைவு என்னவெனில், அரசியல் அதிகாரமும் மையப்படுத்தப்பட்டது. தனித்தனி நலன்களும் சட்டங்களும் அரசாங்கங்களும் வரிவிதிப்பு முறைகளும் கொண்டனவாய்ச் சுயேச்சையாகவோ, அல்லது தளர்ந்த இணைப்புடனோ இருந்த மாநிலங்கள் ஒரே அரசாங்கத்தையும் ஒரே சட்டத் தொகுப்பையும் தேச அளவிலான ஒரே வர்க்க நலனையும் ஒரே தேச எல்லையையும் ஒரே சுங்கவரி முறையையும் கொண்ட ஒரே தேசமாய் ஒருசேர இணைக்கப்பட்டன.

முதலாளி வர்க்கம் ஒரு நூற்றாண்டு கூட நிறைவுறாத அதன் ஆட்சிக் காலத்தில், இதற்கு முந்திய எல்லாத் தலை முறைகளுமாய்ச் சேர்ந்து உருவாக்கியதைக் காட்டிலும் மலைப்பு தட்டும்படியான பிரம்மாண்ட உற்பத்திச் சக்தி களைப் படைத்தமைத்திருக்கின்றது. இயற்கைச் சக்திகளை மனிதனுக்கு அடிபணியச் செய்தல், இயந்திரச் சாதனங்கள், தொழில்துறையிலும் விவசாயத்திலும் இரசாயனத்தைப் பயன்படுத்தல், நீராவிக் கப்பல் போக்குவரத்து, ரயில் பாதைகள், மின்விசைத் தந்தி, முழுமுழு கண்டங்களைத் திருத்திச் சாகுபடிக்குச் செப்பனிடுதல், ஆறுகளைக் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றனவாய் ஒழுங்கு செய்தல், மனிதன் அடியெடுத்து வைத்திராத இடங்களில் மாயவித்தை புரிந் தாற் போல் பெரும் பெரும் தொகுதிகளிலான மக்களைக் குடியேற்றுவித்தல்—இம்மாதிரியான உற்பத்திச் சக்திகள் சமூக உழைப்பின் மடியில் சயனம் புரியுமென இதற்கு முந் திய எந்த நூற்றாண்டாவது கனவிலும் நினைத்திருக்குமா?

ஆக நாம் காண்பது என்னவெனில்: முதலாளி வர்க்கம் உருப்பெற்று எழுவதற்கு அடிப்படையாய் இருந்த உற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்கள் பிரபுத்துவ சமுதாயத்தில் ஜனித்தவை. இந்த உற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங் களது வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், பிரபுத்துவ சமுதாயத்தின் உற்பத்தி, பரிவர்த்தனை உறவுகள், விவ சாயத்துக்கும் பட்டறைத் தொழிலுக்குமான பிரபுத்துவ ஒழுங்கமைப்பு—சுருக்கமாய்ச் சொல்வதெனில் பிரபுத்துவச் சொத்துடைமை உறவுகள்—வளர்ச்சியுற்று விட்ட உற் பத்திச் சக்திகளுக்கு ஒவ்வாதனவாயின; அவை உற்பத்திக்குப் பூட்டப்பட்ட கால் விலங்குகளாய் மாறின. அந்த விலங்கு களை உடைத்தெறிய வேண்டியிருந்தது; அவை உடைத் தெறியப்பட்டன.

அவற்றின் இடத்தில் தடையில்லாப் போட்டியும், அத னுடன் கூடவே அதற்குத் தகவமைந்த சமூக, அரசியல் அமைப்பும் முதலாளி வர்க்கத்தினுடைய பொருளாதார, அரசியல் ஆதிக்கமும் வந்தமர்ந்து கொண்டன.

இதைப் போன்றதோர் இயக்கம் இப்போது நம் கண் ணெதிரே நடைபெற்று வருகிறது. முதலாளித்துவ உற்

பத்தி, பரிவர்த்தனை உறவுகளையும் முதலாளித்துவச் சொத்துடைமை உறவுகளையும் கொண்டதாகிய நவீன முதலாளித்துவ சமுதாயம், மாயவித்தை புரிந்து தோற்றுவித்தாற் போல் இவ்வளவு பிரம்மாண்ட உற்பத்திச் சாதனங்களையும் பரிவர்த்தனைச் சாதனங்களையும் தோற்றுவித்திருக்கும் இச்சமுதாயம், பாதாள உலகிலிருந்து தனது மந்திரத்தின் வலிமையால் தருவித்த சக்திகளை அடக்கியாள முடியாமற் போன மந்திரவாதியின் நிலையில் இருக்கக் காண்கிறோம். கடந்த சில பத்தாண்டுகளது தொழில், வாணிப வரலாறே, நவீன உற்பத்திச் சக்திகள் நவீன உற்பத்தி உறவுகளை எதிர்த்து, முதலாளி வர்க்கமும் அதனுடைய ஆதிக்கமும் நிலவுதற்கு அவசியமான நிலைமைகளாகிய சொத்துடைமை உறவுகளை எதிர்த்துப் புரிந்திடும் கலகத்தின் வரலாறுதான். இதைத் தெளிவுபடுத்த, கால அலைவட்ட முறையில் திரும்பத் திரும்ப எழும் வாணிப நெருக்கடிகளைக் குறிப்பிட்டால் போதும்—திரும்பத் திரும்ப எழுந்து, ஒவ்வொரு தரமும் முன்னிலும் அபாயகரமான முறையில் இந்நெருக்கடிகள் முதலாளித்துவ சமுதாயம் அனைத்தின் நிலவுதலை ஆட்சேபக் கேள்விக்குரியதாக்குகின்றன. இந்த வாணிப நெருக்கடிகளின் போது ஒவ்வொரு தரமும் இருப்பிலுள்ள உற்பத்திப் பொருள்களில் மட்டுமின்றி, ஏற்கெனவே உருவாக்கப்பட்ட உற்பத்திச் சக்திகளிலும் ஒரு பெரும் பகுதி அழிக்கப்படுகிறது. இந்த நெருக்கடிகளின் போது, இதற்கு முந்திய எல்லா சகாப்தங்களிலும் அடி முட்டாள்தனமாய்த் தோன்றியிருக்கும்படியான ஒரு கொள்ளை நோய்—அமித உற்பத்தி என்னும் கொள்ளை நோய்—மூண்டு விடுகிறது. திடுமென சமுதாயம் பின்னோக்கி இழுக்கப்பட்டுச் சிறிது காலத்துக்குக் காட்டுமிராண்டி நிலையில் விடப்படக் காண்கிறோம். பெரும் பஞ்சம், சர்வநாச முழுநிறைப் போர் ஏற்பட்டு வாழ்க்கைத் தேவைப் பொருள்கள் எவையும் கிடைக்காதபடி செய்து விட்டாற் போலாகிறது; தொழிலும் வாணிபமும் அழித்தொழிக்கப்பட்டு விட்டதாய்த் தோன்றுகிறது—ஏன் இப்படி? ஏனென்றால் நாகரிகம் மிதமிஞ்சி விட்டது, வாழ்க்கைத் தேவைப் பொருள்கள் அளவு மீறி விட்டன, தொழிலும் வாணிபமும் எல்லை கடந்து விட்

டன. சமுதாயத்தின் வசமுள்ள உற்பத்திச் சக்திகள் முதலாளித்துவச் சொத்துடைமை உறவுகளின் வளர்ச்சிக்கு இனி உதவுவதாய் இல்லை. மாறாக, அவை இந்த உறவுகளுக்குப் பொருந்தாதபடி அளவு மீறி வலிமை மிக்கவையாகி விட்டன, இந்த உறவுகள் அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாகி விட்டன. உற்பத்திச் சக்திகள் இந்தத் தடைகளைக் கடக்க முற்பட்டதும் அவை முதலாளித்துவ சமுதாயம் முழுமையிலும் குழப்பம் உண்டாக்குகின்றன, முதலாளித்துவச் சொத்துடைமை நிலவுவதற்கே அபாயத்தை ஏற்படுத்துகின்றன. அவை உற்பத்தி செய்யும் செல்வத்துக்குத் தம்முள் இடம் போதாதபடி முதலாளித்துவ சமூக உறவுகள் குறுகலாயிருக்கின்றன. இந்த நெருக்கடிகளை முதலாளி வர்க்கம் எப்படிச் சமாளிக்கிறது? ஒரு புறத்தில், வலுக்கட்டாயமாய் உற்பத்திச் சக்திகளில் ஒரு பெரும் பகுதியை அழிப்பதன் மூலமும், மறு புறத்தில் புதிய சந்தைகளை வென்று கைப்பற்றுவதன் மூலமும் பழைய சந்தைகளை இன்னும் அழுத்திப் பிழிவதன் மூலமும்—அதாவது மேலும் விரிவான, மேலும் நாசகரமான நெருக்கடிகளுக்கு வழி கோலுவதன் மூலமும் நெருக்கடிகளைத் தடுப்பதற்கான வழிதுறைகளைக் குறைப்பதன் மூலமும்.

எந்த ஆயுதங்களைக் கொண்டு முதலாளி வர்க்கம் பிரபுத்துவத்தை வீழ்த்திற்றோ, அதே ஆயுதங்கள் இப்பொழுது முதலாளி வர்க்கத்துக்கு எதிராய்த் திருப்பப்படுகின்றன.

முதலாளி வர்க்கம் தன்னை அழித்தொழிக்கப் போகும் ஆயுதங்களை வார்த்தெடுத்திருப்பதோடு அன்னியில், அந்த ஆயுதங்களைப் பிரயோகிப்பதற்குரிய ஆட்களையும்—பாட்டாளிகளாகிய நவீனத் தொழிலாளி வர்க்கத்தையும்—தோன்றியெழச் செய்திருக்கிறது.

எந்த அளவுக்கு முதலாளி வர்க்கம், அதாவது மூலதனம் வளர்கிறதோ, பாட்டாளி வர்க்கமாகிய நவீனத் தொழிலாளி வர்க்கமும் அதே அளவுக்கு வளர்கிறது. இந்தத் தொழிலாளர்கள் தமக்கு வேலை தேடிக் கொள்ள முடிகிற வரைதான் வாழ முடியும், தமது உழைப்பு மூலதனத்தைப் பெருகச் செய்யும் வரைதான் வேலை தேடிக் கொள்ள முடியும். சிறுகச் சிறுகத் தம்மைத் தாமே விலைக்கு விற்கவேண்

டிய நிலையிலுள்ள இந்தத் தொழிலாளர்கள், ஏனைய எல்லா விற்பனைப் பொருள்களையும் போல் தாமும் ஒரு பரிவர்த்தனைப் பண்டமாகவே இருக்கிறார்கள்; ஆகவே போட்டா போட்டியின் எல்லா அசம்பாவிதங்களுக்கும், சந்தையின் எல்லா ஏற்றயிறக்க அலைவுகளுக்கும் இலக்காகிறார்கள்.

விரிந்த அளவில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதன் விளைவாகவும், உழைப்புப் பிரிவினையின் விளைவாகவும் பாட்டாளிகளுடைய வேலையானது தனித்தன்மையை முற்றும் இழந்து விட்டது; ஆதலால் தொழிலாளிக்கு அவரது வேலை அறவே சுவையற்றதாகி விட்டது. இயந்திரத்தின் துணையுறுப்பு ஆகி விடுகிறார் அவர்; மிகவும் எளிமையானதும், அலுப்புத் தட்டும்படியாய் ஒரே விதமானதும், ஆகவே சுலபமாய்ப் பெறத் தக்கதுமாகிய கைத்திறன்தான் அவருக்கு வேண்டியிருக்கிறது. எனவே தொழிலாளியினது உற்பத்திச் செலவு அனேகமாய் முற்றிலும் அவரது பராமரிப்புக்கும் அவரது இன விருத்திக்கும் தேவையான பிழைப்புச் சாதனங்களுக்கு மேற்படாதபடி குறுகி விடுகிறது. ஆனால் பண்டத்தின் விலை—ஆகவே உழைப்பின் விலை*—அதன் உற்பத்திச் செலவுக்குச் சமமாகும். இதனால் வேலை எவ்வளவுக்கு எவ்வளவு வெறுக்கத் தக்கதாய் அமைகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு கூலியும் குறைகிறது. அது மட்டுமல்ல, இயந்திரங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுவதும் உழைப்புப் பிரிவினையும் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரிக்கின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு வேலைப் பளுவும் அதிகமாகிறது—வேலை நேரத்தை அதிகமாக்குவதன் மூலமோ, குறிப்பிட்ட நேரத்தில் வாங்கப்படும் வேலையைக் கூடுதலாக்குவதன் மூலமோ, இயந்திரங்களின் வேகத்தை அதிகரிப்பதன் மூலமோ, இன்ன பிற வழிகளிலோ இது நடந்தேறுகிறது.

நவீனத் தொழில்துறையானது தந்தைவழிக் குடும்ப ஆண்டானுடைய சிறிய தொழிற் கூடத்தைத் தொழில் முதலாளியினது பெரிய தொழிற்சாலையாய் மாற்றியுள்ளது.

---

* தொழிலாளி உழைப்பையல்ல, உழைப்புச் சக்தியைத் தான் விற்கிறான் என்று பின்னால் மார்க்ஸ் சுட்டிக்காட்டினார்.—ப-ர்.

தொழிற்சாலையினுள் நெருக்கமாய்க் கூட்டப்பட்டிருக்கும் திரளான தொழிலாளர்கள் படையாட்களைப் போல் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறார்கள். தொழில்துறைச் சேனையின் படையாட்களாகிய இவர்கள், ஆபீசர்கள் என்றும் சார்ஜெண்டுகள் என்றும் முற்றும் படிநிலைக் கிரமத்தில் அமைந்த படைத்தலைமையின் கீழ் இருத்தப்படுகிறார்கள். இவர்கள் அடிமைகளாய் இருப்பது முதலாளி வர்க்கத்துக்கும் பூர்ஷ்வா அரசுக்கும் மட்டுமல்ல; நாள்தோறும் மணிதோறும் இயந்திரத்தாலும், மேலாளர்களாலும், யாவருக்கும் முதலாய்த் தனித்தனி முதலாளித்துவ ஆலையதிபராலும் இவர்கள் அடிமைகளாக்கப்படுகிறார்கள். இந்தக் கொடுங்கோன்மை எவ்வளவுக்கு எவ்வளவு பகிரங்கமாய் இலாபத்தைத் தனது இறுதி முடிவாகவும் குறிக்கோளாகவும் பிரகடனம் செய்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் இது இழிவானதாய், வெறுக்கத்தக்கதாய், கசப்பூட்டுவதாய் இருக்கிறது.

உடலுழைப்புக்கு வேண்டிய திறமையும் உடல் வலிவும் குறையக் குறைய, அதாவது நவீனத் தொழில்துறையின் வளர்ச்சி மட்டம் உயர உயர, ஆடவரின் உழைப்பு மேலும் மேலும் அகற்றப்பட்டு அதனிடத்தில் பெண்கள், குழந்தைகளின் உழைப்பு அமர்த்தப்படுகிறது. வயது வேறுபாடும் ஆண், பெண் வித்தியாசமும் இனி தொழிலாளி வர்க்கத்துக்குத் தனியான எந்த சமூக முக்கியத்துவமும் இல்லாமல் போய்விட்டன. எல்லோருமே உழைப்புக் கருவிகள்தான், உபயோகித்துக் கொள்வதற்கு ஆகும் செலவுதான் வயதுக்கும் பாலுக்கும் ஏற்ப அதிகமாகவோ குறைவாகவோ இருக்கிறது.

ஆலை முதலாளியால் இதுவரை சுரண்டப்பட்ட தொழிலாளி, இந்தச் சுரண்டல் முடிவுற்று தனது கூலியைப் பண வடிவில் பெற்றுக் கொண்டவுடனே, முதலாளி வர்க்கத்தின் பிற பகுதியோரான வீட்டுச் சொந்தக்காரராலும் கடைக்காரராலும் அடகு வட்டிக்கடைக்காரராலும் இன்னபிறராலும் தாக்கப்படுகிறார்.

மத்தியதர வர்க்கத்தின் கீழ்த் தட்டுகளைச் சேர்ந்த சிறு உற்பத்தியாளர்கள், கடைக்காரர்கள், சிறு வாடகை,

வட்டி வருவாயினர், கைவினைஞர்கள், விவசாயிகள் ஆகிய எல்லோரும் சிறிது சிறிதாய்த் தாழ்வுற்று பாட்டாளி வர்க்கத்தை வந்தடைகிறார்கள். காரணம் என்னவெனில், முதலாவதாக அவர்களிடமுள்ள சொற்ப அளவு மூலதனம் நவீனத் தொழிலின் வீச்சுக்குப் போதாமல் பெரிய முதலாளிகளுடைய போட்டிக்குப் பலியாகி விடுகிறது, இரண்டாவதாக அவர்களுடைய தனித் தேர்ச்சியானது உற்பத்தியின் புதிய முறைகளால் மதிப்பற்றதாக்கப்படுகிறது. இவ்விதம் தேச மக்கள் தொகுதியைச் சேர்ந்த எல்லா வர்க்கங்களிடமிருந்தும் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆட்கள் திரட்டப்படுகிறார்கள்.

பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி பல்வேறு கட்டங்களைக் கொண்டதாகும். பிறந்ததுமே அது முதலாளி வர்க்கத்தை எதிர்த்துத் தனது போராட்டத்தைத் துவக்கி விடுகிறது.

ஆரம்பத்தில் இந்தப் போராட்டத்தைத் தனிப்பட்ட தொழிலாளர்களும், அடுத்து ஓர் ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்களும், பிறகு ஒரு வட்டாரத்தில் ஒரு தொழிற் கிளையைச் சேர்ந்த தொழிலாளர்களும் தம்மை நேரடியாய்ச் சுரண்டும் தனிப்பட்ட முதலாளிகளை எதிர்த்து நடத்துகிறார்கள். முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை எதிர்த்து அவர்கள் தமது தாக்குதல்களைத் தொடுக்கவில்லை; உற்பத்திக் கருவிகளையே தாக்குகிறார்கள். தமது உழைப்புக்குப் போட்டியாய் வந்த இறக்குமதிப் பொருள்களை அவர்கள் அழிக்கிறார்கள்; இயந்திரங்களைச் சுக்கு நூறாய்த் தகர்க்கிறார்கள்; ஆலைகளுக்குத் தீவைத்து எரிக்கிறார்கள்; மறைந்து விட்ட மத்திய காலத்துத் தொழிலாளி நிலையை வன்முறையின் மூலம் மீட்டமைக்க முயலுகிறார்கள்.

இந்தக் கட்டத்தில் தொழிலாளர்கள் இன்னமும் தம்மிடையே தொடர்பின்றி நாடெங்கிலும் சிதறியமைந்த திரளினராய் இருக்கிறார்கள்; தம்மிடையிலான போட்டியால் பிளவுபட்டிருக்கிறார்கள். எங்காவது ஒன்றுபட்டு முன்னிலும் ஒருங்கிணைந்த தொகுப்புகள் ஆகிறார்கள் என்றால், இன்னுமும் அது அவர்களது செயல் திறன் மிக்க சொந்த ஒற்றுமையின் விளைவு அல்ல; முதலாளி வர்க்கத்தின் ஒற்று

மையால் ஏற்பட்டதாகவே இருக்கிறது. முதலாளி வர்க்கம் தனது சொந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பாட்டாளி வர்க்கம் அனைத்தையும் இயங்க வைக்க வேண்டியிருக்கிறது; சிறிது காலத்துக்கு அதனால் இப்படி இயங்க வைக்கவும் முடிகிறது. ஆகவே இந்தக் கட்டத்தில் பாட்டாளிகள் தமது பகைவர்களை எதிர்த்துப் போராடவில்லை; பகைவர்களின் பகைவர்களாகிய எதேச்சாதிகார முடியாட்சியின் மீதமிச்சக் கூறுகளையும் நிலச்சுவான்தார்களையும் தொழில்துறையைச் சேராத முதலாளிகளையும் குட்டி முதலாளித்துவப் பிரிவோரையும்தான் எதிர்த்துப் போராடுகிறார்கள். இவ்விதம் வரலாறு வழிப்பட்ட இந்த இயக்கம் முற்றிலும் முதலாளி வர்க்கத்தின் கைக்குள் இருக்கிறது; இவ்வழியில் பெறப்படும் ஒவ்வொரு வெற்றியும் முதலாளி வர்க்கத்தின் வெற்றியாகிறது.

ஆனால் தொழில்துறையின் வளர்ச்சியைத் தொடர்ந்து பாட்டாளி வர்க்கம் எண்ணிக்கையில் அதிகமாவதோடு கூட, மேலும் மேலும் பெருந் திரள்களாய் ஒன்றுகுவிகிறது; அதன் பலம் கூடுதலாகிச் செல்கிறது; அது இந்தப் பலத்தை மேன்மேலும் உணர்கின்றது. இயந்திரச் சாதனங்கள் உழைப்பின் இடையிலான பாகுபாடுகளை ஒழித்து அனேகமாய் எங்கும் கூலி விகிதங்களைக் கீழ்நிலையிலான ஒரே மட்டத்துக்குக் குறையச் செய்வதற்கு ஏற்ப, பாட்டாளி வர்க்க அணிகளினுள் வெவ்வேறு நலன்களும் வாழ்க்கை நிலைமைகளும் மேலும் மேலும் சமனமாக்கப்படுகின்றன. முதலாளி வர்க்கத்தாரிடையே வளரும் போட்டியும் இதன் விளைவாய் மூளும் வாணிப நெருக்கடிகளும் தொழிலாளர்களுடைய கூலிகளை மேன்மேலும் அலைவுறச் செய்கின்றன. இயந்திரச் சாதனங்கள் ஓயாது ஒழியாது மேம்பாடடைந்து தொடர்ந்து மேலும் மேலும் வேகமாய் வளர்ந்து பெருகுவதானது, அவர்களுடைய பிழைப்பை மேன்மேலும் நிலையற்றுச் சரியச் செய்கிறது. தனிப்பட்ட தொழிலாளர்களுக்கும் தனிப்பட்ட முதலாளிகளுக்கும் இடையில் எழும் மோதல்கள் மேலும் மேலும் இரு வர்க்கங்களுக்கு இடையிலான மோதல்களின் தன்மையைப் பெறுகின்றன. இதனால் தொழிலாளர்கள் முதலாளிகளுக்கு எதிராய் இணைவுகள் (தொழிற்சங்கங்கள்) அமைத்துக் கொள்ள முற்படுகிறார்கள்; கூலிகள் குறையாதவாறு பாது

காத்துக் கொள்ள அவர்கள் ஒன்றிணைகிறார்கள், அவ்வப் போது மூண்டு விடும் இந்த மோதல்களுக்கு முன்னேற்பா டாய் நிரந்தரமான சங்கங்களை நிறுவிக் கொள்கிறார்கள். சிற்சில இடங்களில் இந்தப் போராட்டம் கலகங்களாய் வெடிக்கின்றன.

சிற்சில சந்தர்ப்பங்களில் தொழிலாளர்கள் வெற்றி யடைகிறார்கள். ஆனால் இவ்வெற்றிகள் சிறிது காலத்துக்கு மேல் நீடிப்பதில்லை. அவர்களுடைய போராட்டங்களது மெய்யான பலன் உடனடி விளைவில் அல்ல, தொழிலாளர் களது இடையறாது விரிவடையும் ஒற்றுமையில் காணக்கிடக் கிறது. நவீனத் தொழில்துறையால் தோற்றுவிக்கப்பட்டிருக் கும் வளர்ச்சியுற்ற போக்குவரத்துச் சாதனங்கள், வெவ் வேறு வட்டாரங்களையும் சேர்ந்த தொழிலாளர்களை ஒரு வரோடொருவர் தொடர்பு பெறச் செய்து இந்த ஒற்று மைக்குத் துணை புரிகின்றன. யாவும் ஒரே தன்மையனவாய் இருக்கும் எண்ணற்ற வட்டாரப் போராட்டங்களை வர்க் கங்களுக்கு இடையே தேச அளவில் நடைபெறும் ஒருமித்த போராட்டமாய் மையப்படுத்த இந்தத் தொடர்புதான் தேவையாய் இருந்தது. வர்க்கப் போராட்டம் ஒவ்வொன் றும் ஓர் அரசியல் போராட்டமாகும். மத்திய கால நகரத் தார் அக்காலத்திய படுமோசமான சாலைகளின் துணை கொண்டு பெறுவதற்குப் பன்னூறு ஆண்டுகள் தேவைப் பட்ட அந்த ஒற்றுமையை நவீனப் பாட்டாளிகள் ரயில் பாதைகளின் துணை கொண்டு ஒருசில ஆண்டுகளிலேயே பெறுகிறார்கள்.

பாட்டாளிகள் இவ்விதம் ஒரு வர்க்கமாகவும், ஆகவே ஓர் அரசியல் கட்சியாகவும் ஒழுங்கமைப்பு பெறும் நிகழ்வானது தொழிலாளர்களிடத்தே ஏற்படும் போட்டியால் ஓயாமல் மீண்டும் குலைக்கப்படுகிறது. ஆயினும் இந்த ஒழுங்கமைப்பு முன்னிலும் வலிவும் உறுதியும் சக்தியும் மிக்கதாய்த் திரும் பத் திரும்ப உயர்ந்து எழுகிறது. இது முதலாளி வர்க்கத்தா ரிடத்தே இருக்கும் பிளவுகளைப் பயன்படுத்தி வலுக்கட் டாயப்படுத்தி தொழிலாளர்களுக்குரிய தனி நலன்களுக்குச் சட்ட அங்கீகாரம் பெறுகிறது. இங்கிலாந்தில் பத்து மணி நேர வேலை நாள் மசோதா இவ்வாறுதான் சட்டமாய் நிறைவேற்றப்பட்டது,

பொதுவாய்ப் பேசுமிடத்து, பாட்டாளி வர்க்க வளர்ச்சிப் போக்குக்குப் பழைய சமுதாயத்தின் வர்க்கங்களிடையே எழும் மோதல்கள் பல வழிகளிலும் உதவியாய் இருக்கின்றன. முதலாளி வர்க்கம் இடையறாத போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருக்கிறது: ஆரம்பத்தில் பிரபுக் குலத்தோருடனும், பிற்பாடு முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த சில பகுதிகளின் நலன்கள் தொழில் முன்னேற்றத்துக்கு விரோதமாகி விடும் போது இந்தப் பகுதிகளுடனும், எக்காலத்துமே அன்னிய நாடுகளின் முதலாளி வர்க்கத்துடனும் அது போராட வேண்டியிருக்கிறது. இந்தப் போராட்டங்களின் போது முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தை அணுகி வேண்டுகோள் விடுக்கும்படியும், அவ்வர்க்கத்தின் உதவியை நாடும்படியும், இவ்விதம் அதை அரசியல் அரங்கில் பிரவேசிக்குமாறு இழுக்கும்படியும் நேருகிறது. ஆகவே முதலாளி வர்க்கமே பாட்டாளி வர்க்கத்துக்கு வேண்டிய அரசியல் கல்வி, பொதுக் கல்வி ஆகியவற்றின் கூறுகளை அதற்கு அளித்திடுகிறது; அதாவது, தன்னையே எதிர்த்துப் போராடுவதற்கான ஆயுதங்களை அது பாட்டாளி வர்க்கத்துக்கு வழங்குகிறது.

தவிரவும், மேலே நாம் கண்ணுற்றது போல், தொழில் முன்னேற்றத்தின் விளைவாய் ஆளும் வர்க்கங்களில் முழு முழுப் பிரிவுகள் பாட்டாளி வர்க்கத்துக்குள் தள்ளப்படுகின்றன, அல்லது குறைந்தது அவை தமது வாழ்வு நிலைமைகளை இழக்கும்படியான ஆபத்துக்கு உள்ளாக்கப்படுகின்றன. இப்பிரிவுகளும் பாட்டாளி வர்க்கம் அறிவொளி பெறுவதற்கும் முன்னேறுவதற்கும் பல புதிய கூறுகளை வழங்குகின்றன.

இறுதியில், வர்க்கப் போராட்டம் முடிவு கட்டும் நிலையை நெருங்கும் நேரத்தில் ஆளும் வர்க்கத்தினுள்ளும் பழைய சமுதாயம் அனைத்தினுள்ளும் நடந்தேறும் சிதைவுப் போக்கானது அவ்வளவு உக்கிரமுற்றுப் பட்டவர்த்தனமாகி விடுவதால், ஆளும் வர்க்கத்திலிருந்து ஒரு சிறு பிரிவு துண்டித்துக் கொண்டு அதனிடமிருந்து விலகி எதிர்காலத்தைத் தன் பிடியில் கொண்டிருக்கும் வர்க்கமாகிய புரட்சி வர்க்கத்துடன் சேருகிறது. இதற்கு முந்திய காலத்தில் எப்படிப் பிரபுக்களில் ஒரு பிரிவினர் முதலாளி வர்க்கத்தின் தரப்புக்குச்

சென்றார்களோ, அதே போல இப்போது முதலாளி வர்க்கத்தாரில் ஒரு பிரிவினர் பாட்டாளி வர்க்கத் தரப்புக்குச் செல்கின்றனர்; குறிப்பாய் பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளில் வரலாற்று இயக்கத்தை ஒட்டுமொத்தமாய்த் தத்துவார்த்த வழியில் புரிந்து கொள்ளும் நிலைக்கு உயர்ந்து விட்ட ஒரு பிரிவினர் பாட்டாளி வர்க்கத் தரப்புக்குச் செல்கின்றனர்.

இன்று முதலாளி வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் எல்லா வர்க்கங்களிலும் பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் மெய்யாகவே புரட்சிகரமான வர்க்கமாகும். ஏனைய வர்க்கங்கள் நவீனத் தொழிலினது வளர்ச்சியின் முன்னால் நலிவுற்றுச் சிதைந்து முடிவில் மறைந்து போகின்றன, பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் நவீனத் தொழிலுக்கே உரித்தான அதன் நேரடி விளைவாய் அமைகிறது.

மத்தியதர வர்க்கத்தின் கீழ்ப்பகுதிகளாகிய சிறு பட்டறையாளர், சிறு கடைக்காரர், கைவினைஞர், விவசாயி இவர்கள் எல்லாரும் தொடர்ந்து தாம் மத்தியதர வகுப்பினராய் நீடித்திருப்பதற்காக முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். ஆகவே இவர்கள் பழமைப் பற்றாளர்களே அன்றி புரட்சித் தன்மை வாய்ந்தோரல்லர். அது மட்டுமல்ல, இவர்கள் பிற்போக்கானவர்களும் கூட; ஏனெனில் வரலாற்றின் சக்கரத்தை இவர்கள் பின்னோக்கி உருளச் செய்ய முயலுகிறார்கள். சந்தர்ப்பவசமாய்ப் புரட்சிகரமாய் இருப்பார்களாயின், இவர்கள் பாட்டாளி வர்க்கத்துக்குப் போய்விடும் தறுவாயில் இருக்கிறார்கள் என்பதே அதற்குக் காரணம்; இவ்வாறு இவர்கள் பாதுகாப்பது தமது எதிர்கால நலன்களையே அன்றி நிகழ்கால நலன்களை அல்ல; பாட்டாளி வர்க்கத்தின் நோக்குநிலையை ஏற்கும் பொருட்டு, தமது சொந்த நோக்குநிலையைக் கைவிடுகிறார்கள்.

பழைய சமுதாயத்தின் அடிமட்டத்து அடுக்குகளிலிருந்து எறியப்பட்டுச் செயலற்று அழுகிக் கொண்டிருக்கும் சமூகக் கசடாகிய ‘‘அபாயகரமான வர்க்கம்’’ பாட்டாளி வர்க்கப் புரட்சியால் எங்கேனும் ஒருசில இடங்களில் இயக்கத்துக்குள் இழுக்கப்படலாம், ஆனால் அதன் வாழ்க்கை நிலைமைகள் பிற்போக்குச் சதியின் கைக்கருவியாய் லஞ்சம் பெற்று

ஊழியம் புரியவே மிகப் பெரும் அளவுக்கு அதைத் தயார் செய்கின்றன.

பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகளில் பழைய சமுதாயத்தின் வாழ்க்கை நிலைமைகள் ஏற்கெனவே அனேகமாய்ப் புதையுண்டு விடுகின்றன. பாட்டாளிக்குச் சொத்து ஏதும் இல்லை, மனைவி, மக்களிடத்து அவனுக் குள்ள உறவுக்கும் பூர்ஷ்வா குடும்ப உறவுகளுக்கும் பொது வானது இப்போது எதுவும் இல்லை. பிரான்சில் எப்படியோ அதே போல் இங்கிலாந்திலும், ஜெர்மனியில் எப்படியோ அதே போல் அமெரிக்காவிலும், நவீனத் தொழில்துறை உழைப்பானது, மூலதனத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கும் நவீன அடிமை நிலையானது, பாட்டாளியிடமிருந்து தேசியத் தனித்தன்மையில் எந்தச் சாயலையும் விட்டு வைக்காமல் துடைத்தெடுத்து விட்டது. இந்தப் பாட்டாளிக்கு, சட்டம், ஒழுக்க நெறி, சமயம் ஆகியவை அத்தனையும் அத்தனை விதமான பூர்ஷ்வா நலன்கள் பதுங்கிக் கொண்டிருக்கும் பூர்ஷ்வா தப்பெண்ணங்களே அன்றி வேறல்ல.

மேலாதிக்கம் பெற்ற முந்திய வர்க்கங்கள் யாவும் வாழ்க் கையில் ஏற்கெனவே தாம் அடைந்திருந்த உயர் நிலைக்கு அரண் அமைத்துக் கொள்ளும் பொருட்டுத் தமது சுவீகரிப்பு முறைக்கு சமுதாயம் முழுவதையும் கீழ்ப்படுத்த முற்பட்டன. ஆனால் பாட்டாளிகள் தமது முந்திய சுவீகரிப்பு முறையை யும், ஆகவே ஏனையோரது முந்திய சுவீகரிப்பு முறைகள் யாவற்றையும் ஒழித்திடாமல் சமுதாயத்தின் உற்பத்திச் சக் திகளுக்கு எஜமானர்களாக முடியாது. அவர்கள் பாதுகாத்துக் கொள்ளவும் அரண் அமைத்துக் கொள்ளவும் சொந்தத் தில் ஏதும் இல்லாதவர்கள், தனியார் சொத்துடைமைக்கு இதன் முன்பிருந்த பாதுகாப்புகளையும் காப்புறுதிகளையும் தகர்த்து ஒழிப்பதே அவர்களது இலட்சியப் பணி.

முந்திய வரலாற்று இயக்கங்கள் எல்லாம் சிறுபான்மை யோரது இயக்கங்களே, அல்லது சிறுபான்மையோரது நலனுக்கான இயக்கங்களே ஆகும். ஆனால் பாட்டாளி வர்க்க இயக்கம் மிகப் பெருவாரியானோரது நலனுக்காக மிகப் பெருவாரியானோர் தன்னுணர்வோடு நடத்தும் சுயேச்சையான இயக்கமாகும். தற்கால சமுதாயத்தின் அடி

மட்டத்து அடுக்காகிய பாட்டாளி வர்க்கமானது அங்கீகாரம் பெற்ற சமுதாயத்தில் மேலமைந்த அத்தனை அடுக்குகளை யும் காற்றிலே பறந்தெழச் செய்யாமல் அசையவோ நிமிர்ந்து நிற்கவோ முடியாது.

முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டம், உள்ளடக்கத்தில் இல்லையேனும் எப்படியும் வடிவத்தில், ஆரம்பத்தில் தேசியப் போராட்ட மாகவே இருக்கிறது. ஒவ்வொரு நாட்டின் பாட்டாளி வர்க் கமும் தனது நாட்டின் முதலாளி வர்க்கத்துடன்தான் முத லில் கணக்கு தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

பாட்டாளி வர்க்கத்தினது வளர்ச்சியின் மிகப் பொது வான கட்டங்களை விவரித்த நாம், தற்கால சமுதாயத்தில் ஏறக்குறைய திரை மறைவில் நடைபெறும் உள்நாட்டுப் போரை, அது பகிரங்கப் புரட்சியாய் வெடித்து, முதலாளி வர்க்கம் பலாத்காரமாய் வீழ்த்தப்படுவதன் மூலம் பாட் டாளி வர்க்க ஆட்சியதிகாரத்துக்கு அடித்தளம் இடப்படும் நிலை வரையில் உருவரை தீட்டிக் காட்டினோம்.

இதுகாறும் சமூக அமைப்பு ஒவ்வொன்றும், ஏற்கெனவே நாம் கண்ணுற்றது போல், ஒடுக்கும் வர்க்கத்துக்கும் ஒடுக் கப்படும் வர்க்கத்துக்கும் இடையிலான பகைமையையே அடிப்படையாய்க் கொண்டிருந்தது. ஆனால் ஒரு வர்க் கத்தை ஒடுக்கி வைக்க வேண்டுமாயின், அந்த வர்க்கம் தொடர்ந்து தனது அடிமை நிலையிலாவது நீடிப்பதற்கு அவசியமான குறிப்பிட்ட நிலைமைகளை அதற்கு உத்தர வாதம் செய்து தந்தாக வேண்டும். பண்ணையடிமை முறை நிலவிய காலத்தில் பண்ணையடிமை தன்னை நகர சமுதாய உறுப்பினனாய் உயர்த்திக் கொள்ள முடிந்தது, அதேபோல் பிரபுத்துவ எதேச்சாதிகாரத்தின் ஒடுக்குமுறையில் குட்டி முதலாளித்துவப் பிரிவினர் முதலாளியாய் வளர முடிந்தது. ஆனால் நவீன காலத்திய தொழிலாளி இதற்கு மாறாய், தொழில் முன்னேற்றத்துடன் கூடவே உயர்ந்து செல்வதற்குப் பதில், தனது வர்க்கம் நிலவுவதற்கு அவசியமான நிலை மைகளுக்கும் கீழே மேலும் மேலும் தாழ்ந்து செல்கிறான். அவன் ஒட்டாண்டியாகி ஏதும் இல்லாதான் ஆகின்றான்; மக்கள் தொகையையும் செல்வத்தையும் காட்டிலும்

இல்லாமை அதிவேகமாய் அதிகரிக்கிறது. ஆகவே இப்போது தெட்டத்தெளிவாய்த் தெரிகிறது—முதலாளி வர்க்கம் இனி சமுதாயத்தின் ஆளும் வர்க்கமாய் இருக்கத் தகுதியற்றது, தான் நீடித்து நிலவுவதற்கு வேண்டிய நிலைமைகளை யாவற்றுக்கும் மேலான சட்டவிதியாய் இனியும் சமுதாயத்தின் மீது பலவந்தமாய் இருக்கத் தகுதியற்றது என்பது தெட்டத் தெளிவாய்த் தெரிகிறது. அது ஆளத் தகுதியற்றதாகிறது—ஏனெனில் அதன் அடிமை அவனது அடிமை நிலையில் தொடர்ந்து வாழ்வதற்கு அதனால் வகை செய்ய முடியவில்லை; அவன் அதற்கு உண்டி அளிப்பதற்குப் பதில் அது அவனுக்கு உண்டி அளிக்க வேண்டிய ஒரு நிலைக்கு அதன் அடிமை தாழ்ந்து செல்வதை அதனால் தடுக்க முடியவில்லை. சமுதாயம் இனி இந்த முதலாளி வர்க்கத்துக்குப் பணிந்து வாழ முடியாது, அதாவது முதலாளி வர்க்கம் இனியும் தொடர்ந்து நீடிப்பது சமுதாயத்துக்கு ஒவ்வாததாகி விட்டது.

மூலதனம் உருவாதலும் பெருகிச் செல்லுதலும்தான் முதலாளி வர்க்கம் நிலவுவதற்கும் ஆதிக்கம் புரிவதற்குமான அத்தியாவசிய நிபந்தனை. கூலியுழைப்புதான் இந்த மூலதனத்துக்கு அத்தியாவசிய நிபந்தனையாய் அமைகிறது. கூலியுழைப்பானது தொழிலாளர்களுக்கு இடையிலான போட்டியையே ஆதாரமாய்க் கொண்டிருக்கிறது. முதலாளி வர்க்கம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ஊக்குவிக்க வேண்டியிருக்கும் தொழில் முன்னேற்றமானது, தொழிலாளர்களிடையே போட்டியின் விளைவான தனிமைப்பாட்டை நீக்கி, ஒற்றுமையின் விளைவான புரட்சிகர இணைவை உண்டாக்குகிறது. இவ்விதம் நவீனப் பெருவீதத் தொழிலின் வளர்ச்சியானது, எந்த அடிப்படையில் முதலாளி வர்க்கம் பொருள்களை உற்பத்தி செய்தும் சுவீகரித்தும் வருகிறதோ அந்த அடிப்படைக்கே உலை வைக்கிறது. ஆகவே முதலாளி வர்க்கம் தனக்குச் சவக்குழி தோண்டுவோரையே அனைத்துக்கும் மேலாய் உற்பத்தி செய்கிறது. இவ்வர்க்கத்தின் வீழ்ச்சியும், அதேபோல் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியும் தவிர்க்கவொண்ணாதவை.

## II

### பாட்டாளிகளும் கம்யூனிஸ்டுகளும்

ஒட்டுமொத்தமாய்ப் பாட்டாளிகளுடன் கம்யூனிஸ்டுகளுக்கு இருக்கும் உறவு என்ன?

கம்யூனிஸ்டுகள் ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளுக்கு எதிரான ஒரு தனிக் கட்சியாய் இருக்கவில்லை.

அவர்கள் பாட்டாளி வர்க்கம் அனைத்துக்குமுள்ள நலன்கள் அன்னியில் தனிப்பட்ட நலன்கள் எவையும் இல்லாதவர்கள்.

பாட்டாளி வர்க்க இயக்கத்தை வடிவமைக்க அவர்கள் தமக்கெனக் குறுங்குழுக் கோட்பாடுகள் எவற்றையும் வகுத்துக் கொள்ளவில்லை.

ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளிடமிருந்து கம்யூனிஸ்டுகளை வேறுபடுத்திக் காட்டுகிறவை பின்வருவன மட்டுமேதான்: 1) வெவ்வேறு நாடுகளிலும் தேச அளவில் பாட்டாளிகள் நடத்தும் போராட்டங்களில் அவர்கள் தேசிய இனம் கடந்து பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் உரித்தான பொது நலன்களைச் சுட்டிக்காட்டி முன்னிலைக்குக் கொண்டு வருகிறார்கள். 2) முதலாளி வர்க்கத்துக்கு எதிரான தொழிலாளி வர்க்கப் போராட்டம் கடந்து செல்ல வேண்டியிருக்கும் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும் அவர்கள் எப்போதும் எங்கும் இயக்கம் அனைத்துக்குமான நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.

ஆகவே நடைமுறையில் கம்யூனிஸ்டுகள் எல்லா நாடுகளிலும் தொழிலாளி வர்க்கக் கட்சிகளது மிகவும் முன்னேறிய, மிகவும் வைராக்கியமான பகுதியாய், ஏனைய எல்லோரையும் முன்னோக்கி உந்தித் தள்ளும் பகுதியாய் இருக்கிறார்கள்; தத்துவார்த்தத்தில் அவர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வழிநடப்பையும் நிலைமைகளையும் பொதுவான இறுதி விளைவுகளையும் தெளிவாய்ப் புரிந்து கொள்ளும் அனுகூலத்தை, பாட்டாளி வர்க்கத்தின் பெருந்திரளினருக்கு இல்லாத அனுகூலத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

கம்யூனிஸ்டுகளுடைய உடனடி நோக்கம் ஏனைய எல்லாப் பாட்டாளி வர்க்கக் கட்சிகளது உடனடி நோக்கம் என்னவோ

அதுவேதான்: பாட்டாளிகளை ஒரு வர்க்கமாய் உருப் பெறச் செய்வதும், முதலாளி மேலாதிக்கத்தை வீழ்த்துவதும், பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வென்று கொள்வதும்தான்.

கம்யூனிஸ்டுகளுடைய தத்துவார்த்த முடிவுகள் உலகைப் புத்தமைக்க நினைக்கும் இந்த அல்லது அந்தச் சீர்திருத்தாளர் புனைந்தமைத்தோ, கண்டுபிடித்தோ கூறிய கருத்துகளை அல்லது கோட்பாடுகளை எவ்வகையிலும் அடிப்படையாய்க் கொண்டவையல்ல.

நடப்பிலுள்ள வர்க்கப் போராட்டத்திலிருந்து, நம் கண்ணெதிரே நடைபெற்று வரும் வரலாற்று இயக்கத்திலிருந்து உதிக்கும் மெய்யான உறவுகளையே இந்த முடிவுகள் பொதுப்பட எடுத்துரைக்கின்றன. நடப்பிலுள்ள சொத்துடைமை உறவுகளை ஒழிப்பது எவ்விதத்திலும் கம்யூனிசத்துக்கு உரித்தான ஒரு தனிச் சிறப்பல்ல.

வரலாற்று நிலைமைகளில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாய்ச் சொத்துடைமை உறவுகள் யாவும் கடந்த காலத்தில் தொடர்ந்தாற்போல் வரலாற்று வழியில் மாற்றமடைந்தே வந்திருக்கின்றன.

எடுத்துக்காட்டாய் பிரெஞ்சுப் புரட்சியானது பிரபுத்துவச் சொத்துடைமையை ஒழித்து அதனிடத்தில் பூர்ஷ்வா சொத்துடைமையை நிலைநாட்டிற்று.

பொதுப்பட சொத்துடைமையை ஒழிப்பதல்ல, பூர்ஷ்வா சொத்துடைமையை ஒழிப்பதே கம்யூனிசத்திற்குரிய சிறப்பியல்பு. ஆனால் நவீன பூர்ஷ்வா தனிச்சொத்துடைமையானது வர்க்கப் பகைமைகளின் அடிப்படையில், ஒருசிலர் மிகப் பலரைச் சுரண்டுவதன் அடிப்படையில் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் சுவீகரிப்பதற்குமான அமைப்பின் இறுதியான, மிகவும் நிறைவான வெளிப்பாடாகும்.

இந்த அர்த்தத்தில் கம்யூனிஸ்டுகளுடைய தத்துவத்தை இரத்தினச் சுருக்கமாய், தனிச்சொத்துடைமையை ஒழித்திடல் என்பதாய்க் கூறலாம்.

ஒருவர் தமது சொந்த உழைப்பின் பயனாய்ப் பெறுவதைத் தமது தனிச்சொத்தாக்கிக் கொள்ளும் உரிமையைக் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஒழிக்க விரும்புவதாய் எங்

களை ஏசுகிறார்கள்; இந்தத் தனிச்சொத்துதான் தனியாளின் சுதந்திரம், செயற்பாடு, சுயேச்சை வாழ்வு ஆகியவற்றுக்கு எல்லாம் அடிநிலை என்கிறார்கள்.

பாடுபட்டுப் பெற்ற, சொந்த முயற்சியால் சேர்த்த, சுயமாய்ச் சம்பாதித்த சொத்தாம் இது! இங்கே நீங்கள் குறிப்பிடுவது எந்தச் சொத்து? சிறு கைவினைஞர், சிறு விவசாயி ஆகியோரது சொத்தா? அதாவது பூர்ஷ்வா சொத்து வடிவத்துக்கு முற்பட்டதாகிய சொத்து வடிவமா? இம் மாதிரியான சொத்தை ஒழிக்கத் தேவை இல்லை; தொழில் வளர்ச்சியானது இதை ஏற்கெனவே பெருமளவுக்கு அழித்து விட்டது. இனியும் தொடர்ந்து நாள்தோறும் அழித்து வரு கிறது.

அல்லது நவீன கால பூர்ஷ்வா தனிச்சொத்தையா குறிப் பிடுகிறீர்கள்?

ஆனால் கூலியுழைப்பானது பாட்டாளிக்குச் சொத்தையா படைத்தளிக்கிறது? இல்லவே இல்லை. அது படைப்பது மூல தனம்தான்; அதாவது கூலியுழைப்பைச் சுரண்டுவதும், புதி தாய்ச் சுரண்டுவதற்குப் புதிதாய்க் கூலியுழைப்பு கிடைக்கா விடில் அதிகரிக்க முடியாததுமாகிய சொத்து வகைதான். சொத்தானது அதன் தற்கால வடிவில் மூலதனத்துக்கும் கூலி யுழைப்புக்கும் இடையிலான பகைமையை அடிப்படையாய்க் கொண்டதாகும். இந்தப் பகைமையின் இரு தரப்புகளையும் பரிசீலிப்போம்.

முதலாளியாய் இருப்பதற்கு அர்த்தம் உற்பத்தியில் தனி யாள் வழியில் மட்டுமின்றி சமூக வழியிலுமான அந்தஸ்து வகிப்பதாகும். மூலதனமானது கூட்டுச் செயற்பாட்டினால் விளைவதாகும்; சமுதாயத்தின் பல உறுப்பினர்களது ஒன்று பட்ட செயலால் மட்டுமே, இறுதியாய்ப் பார்க்குமிடத்து சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களது ஒன்றுபட்ட செய லால் மட்டுமே அதை இயங்க வைக்க முடியும்.

எனவே மூலதனம் தனியாளின் சக்தியல்ல, சமூக சக்தி.

ஆகவே மூலதனமானது பொதுச் சொத்தாய், சமுதாயத் தின் எல்லா உறுப்பினர்களுக்குமான சொத்தாய் மாற்றப் படும் போது, தனியாளின் சொத்து அதன் மூலம் சமூகச் சொத்தாய் மாற்றப்படவில்லை. சொத்தின் சமூகத் தன்மை

தான் மாற்றப்படுகிறது. சொத்தானது அதன் வர்க்கத் தன்மையை இழந்து விடுகிறது.

இனி கூலியுழைப்பைப் பரிசீலிப்போம்.

கூலியுழைப்பின் சராசரி விலைதான் குறைந்தபட்சக் கூலி, அதாவது தொழிலாளி தொழிலாளியாய்த் தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமாய்த் தேவைப்படும் பிழைப்புச் சாதனங்களின் மொத்த அளவு. ஆகவே கூலித் தொழிலாளி தமது உழைப்பின் மூலம் சுவீகரித்துக் கொள்வது எல்லாம், தொடர்ந்து உயிர் வாழ்வதற்கும் இவ்வாழ்வினைப் புனருற்பத்தி செய்வதற்கும் மட்டும்தான் போதுமானது. உழைப்பின் உற்பத்திப் பொருள்களிலான இந்தத் தனியாள் சுவீகரிப்பை, மனித உயிர் வாழ்வின் பராமரிப்புக்காகவும் புனருற்பத்திக்காகவும் வேண்டியதை மட்டும் அளித்து, ஏனையோரது உழைப்பின் மீது ஆண்மை செலுத்த உபரியாய் எதையும் விட்டு வைக்காத இந்தச் சுவீகரிப்பை ஒழிக்க வேண்டுமென்ற விருப்பம் எங்களுக்குக் கிஞ்சித்தும் இல்லை. இந்தச் சுவீகரிப்பின் இழிவான தன்மையைத்தான், மூலதனத்தைப் பெருகச் செய்வதற்கு மட்டுமே தொழிலாளி வாழ்கிறான், ஆளும் வர்க்கத்தின் நலனுக்குத் தேவைப்படும் வரை மட்டுமே தொழிலாளிக்கு வாழ அனுமதி உண்டு என்ற இந்த இழிவான தன்மையைத்தான் நாங்கள் ஒழித்திட விரும்புகிறோம்.

முதலாளித்துவ சமுதாயத்தில் உயிருள்ள உழைப்பு சேமித்துத் திரட்டப்பட்ட உழைப்பைப் பெருகச் செய்வதற்குரிய ஒரு சாதனமாகவே இருந்து வருகிறது. கம்யூனிச சமுதாயத்தில் சேமித்துத் திரட்டப்பட்ட உழைப்பானது தொழிலாளியின் வாழ்வை விரிவு பெற்று வளமடைந்து ஓங்கச் செய்வதற்கான ஒரு சாதனமாகவே இருக்கும்.

ஆகவே முதலாளித்துவ சமுதாயத்தில் கடந்த காலம் நிகழ்காலத்தின் மீது ஆதிக்கம் புரிகிறது; கம்யூனிச சமுதாயத்தில் நிகழ்காலம் கடந்த காலத்தின் மீது ஆதிக்கம் புரியும். முதலாளித்துவ சமுதாயத்தில் மூலதனம் சுயேச்சையானதாய், தனித்தன்மை கொண்டதாய் இருக்கிறது; அதேபோது உயிருள்ள ஆள் சுயேச்சையற்றவனாய், தனித்தன்மை இல்லாதவனாய் இருக்கின்றான்.

இப்படிப்பட்ட உறவுகளை ஒழிப்பதைத்தான் தனியாளது தனித்தன்மையின் ஒழிப்பாய், சுதந்திரத்தின் ஒழிப்பாய்க் கூறுகிறார்கள் முதலாளிகள்! சந்தேகமே வேண்டாம், பூர்ஷ்வா தனித்தன்மையையும் பூர்ஷ்வா சுயேச்சையையும் பூர்ஷ்வா சுதந்திரத்தையும் ஒழிப்பதுதான் குறிக்கோள்.

தற்போதுள்ள பூர்ஷ்வா உற்பத்தி உறவுகளில், சுதந்திரம் என்பதற்கு சுதந்திரமான வாணிபம், சுதந்திரமான விற்பனையும் வாங்குதலும் என்றே அர்த்தம்.

ஆனால் விற்பனையும் வாங்குதலும் மறையும் போது சுதந்திரமான விற்பனையும் வாங்குதலும் கூடவே மறைந்து போகும். சுதந்திரமான விற்பனை, வாங்குதல் என்ற பேச்சுக்கும் பொதுப்பட சுதந்திரத்தைப் பற்றிய நமது முதலாளி வர்க்கத்தாரது ஏனைய எல்லாத் ''தீரச் சொல்வீச்சுகளுக்கும்'' எதாவது அர்த்தம் இருக்குமாயின், அது மத்திய காலத்திய கட்டுண்ட விற்பனையுடனும் வாங்குதலுடனும் வணிகர்களுடனும் ஒப்பிடும்போது மட்டும்தான். ஆனால் விற்பனையும் வாங்குதலும், பூர்ஷ்வா உற்பத்தி உறவுகளும், இவற்றோடு முதலாளி வர்க்கமுங்கூட கம்யூனிசத்தின் மூலம் ஒழிக்கப்படுவதற்கு எதிராய் முன்வைக்கப்படுகையில் இந்தப் பேச்சுகள் யாவும் அர்த்தமற்றுப் போகின்றன.

தனிச்சொத்தை நாங்கள் ஒழித்துக் கட்ட விரும்புகிறோம் என்று நீங்கள் கிலி கொண்டு பதறுகிறீர்கள். ஆனால் தற்போதுள்ள உங்களுடைய சமுதாயத்தில் பத்தில் ஒன்பது பங்கு மக்களுக்குத் தனிச்சொத்து ஏற்கெனவே இல்லாமல் ஒழிக்கப்பட்டு விட்டது; ஒருசிலரிடத்தே தனிச்சொத்து இருப்பதற்கே காரணம் இந்தப் பத்தில் ஒன்பது பங்கானோரிடத்தே அது இல்லாது ஒழிந்ததுதான். ஆக சமுதாயத்தின் மிகப் பெரும் பகுதியோரிடம் எந்தச் சொத்தும் இல்லாதொழிவதையே தனக்குரிய அவசிய நிபந்தனையாய்க் கொண்ட ஒரு சொத்து வடிவத்தை ஒழிக்க விரும்புகிறோம் என்று எங்களை ஏசுகிறீர்கள்.

சுருங்கச் சொல்வதெனில், உங்களுடைய சொத்தை ஒழிக்க விரும்புகிறோம் என்று ஏசுகிறீர்கள். ஆம், உண்மையில் அதுவேதான் நாங்கள் செய்ய விரும்பும் காரியம்.

எத்தருணம் முதல் உழைப்பை மூலதனமாய், பணமாய், நிலவாடகையாய்—ஏகபோகமாக்கிக் கொண்டுவிடுவதற்கு ஏற்ற ஒரு சமூக சக்தியாய்—மாற்ற முடியாமற் போகிறதோ, அதாவது எத்தருணம் முதல் தனியாளின் சொத்தினை பூர்ஷ்வா சொத்தாய், மூலதனமாய் மாற்ற முடியாமற் போகிறதோ, அத்தருணம் முதற்கொண்டே தனியாளின் தனித்தன்மை மறைந்து விடுவதாய் நீங்கள் கூறுகிறீர்கள்.

ஆதலால் ''தனியாள்'' என்னும் போது நீங்கள் முதலாளியையே தவிர, மத்தியதர வர்க்கச் சொத்துடைமையாளரையே தவிர, வேறு யாரையும் குறிப்பிடவில்லை என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டாக வேண்டும். இம்மாதிரியான தனியாள் மெய்யாகவே மறையத்தான் வேண்டும், இருக்க முடியாதபடிச் செய்யப்படத்தான் வேண்டும்.

சமுதாயத்தின் உற்பத்திப் பொருள்களைச் சுவீகரித்துக் கொள்வதற்கான வாய்ப்பைக் கம்யூனிசம் எம்மனிதனிடமிருந்தும் பறிக்கவில்லை; இப்படிச் சுவீகரித்துக் கொள்வதன் மூலம் அவன் ஏனையோரது உழைப்பை அடிமைப்படுத்துகிறவனாகும் வாய்ப்பைத்தான் அது அவனிடமிருந்து பறிக்கிறது.

தனிச்சொத்தை ஒழித்ததும் எல்லாச் செயற்பாடுகளும் நின்று போய்விடும், அனைத்து மக்களும் சோம்பேறித்தனத்தால் பீடிக்கப்படுவர் என்பதாய் ஆட்சேபம் கூறப்படுகிறது.

இது மெய்யானால், முதலாளித்துவ சமுதாயம் நெடு நாட்களுக்கு முன்பே முழுச் சோம்பேறித்தனத்தில் மூழ்கி மடிந்திருக்க வேண்டும். ஏனெனில் முதலாளித்துவ சமுதாயத்தின் உறுப்பினர்களில் உழைப்போர் சொத்து ஏதும் சேர்ப்பதில்லை, சொத்து சேர்ப்போர் உழைப்பதில்லை. மூலதனம் இல்லாமற் போகும் போது கூலியுழைப்பு இருக்க முடியாதென்ற ஒருண்மையையே திருப்பித் திருப்பிப் பல வாறாய்ச் சொல்லும் கூற்றே ஆகும் இந்த ஆட்சேபம் அனைத்தும்.

பொருளாயதப் படைப்புகளின் உற்பத்திக்கும் சுவீகரிப்புக்குமான கம்யூனிச வழிமுறைக்கு எதிராய் எழுப்பப்படும் எல்லா ஆட்சேபங்களும், அறிவுத் துறைப் படைப்புகளின் உற்பத்திக்கும் சுவீகரிப்புக்குமான கம்யூனிச வழிமுறைக்கு

எதிராகவும் எழுப்பப்படுகின்றன. எப்படி வர்க்கச் சொத்துடைமையின் மறைவு முதலாளிக்கு உற்பத்தியே மறைந்து போவதைக் குறிப்பதாகின்றதோ, அதே போல வர்க்கக் கலாசாரத்தின் மறைவு அவருக்கு எல்லாக் கலாசாரமுமே மறைவதற்கு ஒப்பானதாகின்றது.

அழிந்து விடுமென அவர் அழுது புலம்பும் அந்தக் கலாசாரம் மிகப் பெருவாரியான மக்களுக்கு இயந்திரமாய்ச் செயல்படுவதற்கு வேண்டிய பயிற்சியாகவே இருந்து வருகிறது.

ஆனால் பூர்ஷ்வா சொத்துடைமையின் ஒழிப்பை நீங்கள் சுதந்திரத்தையும் கலாசாரத்தையும் சட்டநெறியையும் இன்ன பிறவற்றையும் பற்றிய உங்களது பூர்ஷ்வா கருத்துகளைப் பிரமாணமாய்க் கொண்டு மதிப்பீடு செய்யும் வரை எங்களுடன் சர்ச்சைக்கு வர வேண்டாம். உங்களுடைய சட்டநெறி உங்கள் வர்க்கத்தின் சித்தத்தை எல்லாருக்குமான சட்டமாய் விதித்திடுவதுதான்; உங்களது இந்தச் சித்தத்தின் சாரத்தன்மையும் போக்கும் உங்களது வர்க்கம் நிலவுவதற்கு வேண்டிய பொருளாதார நிலைமைகளால் தீர்மானிக்கப்படுகிறவைதாம். இதே போல் உங்கள் கருத்துகள் எல்லாமே உங்களது பூர்ஷ்வா உற்பத்தி உறவுகளுக்கும் பூர்ஷ்வா சொத்துடைமைக்கும் வேண்டிய நிலைமைகளிலிருந்து பிறந்தெழுகிறவைதாம்.

தற்போதுள்ள உங்களுடைய உற்பத்தி முறையிலிருந்தும் சொத்துடைமை வடிவிலிருந்தும் உதித்தெழும் சமூக அமைப்பு வடிவங்களை, உற்பத்தியின் முன்னேற்றத்தின் போது வரலாற்று வழியில் தோன்றி மறைந்து போகும் உறவுகளாகிய இவற்றை, என்றும் நிலையான சாசுவத இயற்கை விதிகளாகவும் பகுத்தறிவு விதிகளாகவும் மாற்றும்படி உங்களது தவறான தன்னலக் கருத்தோட்டம் உங்களைத் தூண்டுகிறது. இந்தத் தவறான கருத்தோட்டம் உங்களுக்கு மட்டும் உரியதன்று, உங்களுக்கு முன்பிருந்த ஆளும் வர்க்கங்கள் யாவற்றுக்குமே உரியதாய் இருந்ததுதான். பண்டைக் காலத்துச் சொத்துடைமையைப் பொறுத்த வரை நீங்கள் தெட்டத்தெளிவாய் காண்பதை, பிரபுத்துவச் சொத்துடைமை சம்பந்தமாய் நீங்கள் ஒத்துக்கொள்வதை, உங்களுடைய

பூர்ஷ்வா சொத்துடைமை குறித்து உங்களால் ஒத்துக் கொள்ள முடிவதே இல்லை, நீங்கள் தடுக்கப்பட்டு விடு கிறீர்கள்.

குடும்பத்தை ஒழிப்பதாவது! கம்யூனிஸ்டுகளுடைய இந்தக் கேடுகெட்ட முன்மொழிவை எதிர்த்து அதிதீவிர வாதிகளும் கூட கொதித்தெழுகிறார்கள்.

இக்காலத்துக் குடும்பத்துக்கு, பூர்ஷ்வா குடும்பத்துக்கு, அடிப்படையாய் அமைவது எது? மூலதனம்தான், தனியார் இலாபம்தான். இந்தக் குடும்பம் அதன் முழு வளர்ச்சியிலு மான வடிவில் முதலாளி வர்க்கத்தாரிடையே மட்டும்தான் இருந்து வருகிறது. ஆனால் இந்நிலைமையின் உடன் நிகழ் வாய் குடும்பவாழ்வு பாட்டாளிகளிடத்தே அனேகமாய் அற்றுப் போயிருப்பதையும், பொதுநிலையிலான விபசாரத் தையும் காண்கிறோம்.

பூர்ஷ்வா குடும்பத்தின் உடன் நிகழ்வு மறையும் போது கூடவே முதலாளி குடும்பமும் இயல்பாகவே மறைந்து போகும், மூலதனம் மறையும் போது இரண்டும் மறைந்து விடும்.

குழந்தைகள் அவர்களுடைய பெற்றோரால் சுரண்டப் படுவதற்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்புகிறோம் என்றா எங்கள் மீது குற்றம் சாட்டுகிறீர்கள்! நாங்கள் இந்தக் குற்றத்தைப் புரிகிறவர்கள்தான், ஒப்புக்கொள்கிறோம்.

ஆனால் வீட்டுக் கல்விக்குப் பதிலாய் நாங்கள் சமூக முறையிலான கல்வியைப் புகுத்தி மனிதர்களிடையிலான உறவுகளிலேயே மிகப் புனிதமானவற்றை நாசமாக்க விரும்பு கிறோம் என்பீர்கள்.

உங்களுடைய கல்வி இருக்கிறதே, அது மட்டும் என்ன வாம்? அதுவும் சமூக முறையிலான கல்விதானே? எந்தச் சமூக நிலைமைகளில் நீங்கள் கல்வி போதிக்கிறீர்களோ அந்த நிலைமைகளாலும், பள்ளிக்கூடங்கள் மூலமும் இன்ன பிற வற்றின் மூலமும் சமுதாயத்தின் நேரடியான அல்லது மறை முகமான தலையீட்டாலும் தீர்மானிக்கப்பட்டதுதானே அது? கல்வியில் சமுதாயம் தலையிடுதல் என்பது கம்யூனிஸ்டு களுடைய கண்டுபிடிப்பு அல்ல; இந்தத் தலையீட்டின் இயல் பினை மாற்றவும், ஆளும் வர்க்கத்தினுடைய செல்வாக்கி

லிருந்து கல்வியை விடுவிக்கவுமே கம்யூனிஸ்டுகள் முயலு கிறார்கள்.

குடும்பம், கல்வி என்றும், பெற்றோருக்கும் குழந்தைக்கு முள்ள புனித உறவு என்றும் பேசப்படும் பூர்ஷ்வா பகட்டுப் பேச்சுகள் மேலும் மேலும் அருவருக்கத்தக்கனவாகி வருகின்றன; ஏனெனில் நவீனத் தொழில்துறையின் செயலால் பாட்டாளிகளிடையே குடும்பப் பந்தங்கள் மேலும் மேலும் துண்டிக்கப்பட்டு, பாட்டாளிகளது குழந்தைகள் சாதாரண வாணிபச் சரக்குகளாகவும் உழைப்புக் கருவிகளாகவும் மாற்றப்படுகிறார்கள்.

ஆனால் கம்யூனிஸ்டுகளாகிய நீங்கள் பெண்களை எல் லார்க்கும் பொதுவாக்கி விடுவீர்களே என்று முதலாளி வர்க் கம் அனைத்துமாய்ச் சேர்ந்து கூக்குரலிடுகிறது.

முதலாளியாய் இருப்பவர் தனது மனைவியை வெறும் உற்பத்திக் கருவியாகவே பாவிக்கிறார். உற்பத்திக் கருவி கள் எல்லார்க்கும் பொதுவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படப் போவதாய்க் கேள்விப்பட்டதும், உடனே அவர் எல்லார்க் கும் பொதுவாகி விடும் இதே கதிதான் பெண்களுக்கும் ஏற் படப் போகிறதென்று இயற்கையாகவே முடிவு செய்து கொண்டு விடுகிறார்.

பெண்கள் வெறும் உற்பத்திக் கருவிகளின் நிலையில் இருத்தப்பட்டிருப்பதை ஒழிக்க வேண்டும், உண்மையில் இதுதான் நோக்கம் என்பது அவருக்குக் கனவிலும் கருத முடியாத ஒன்றாகும்.

இருப்பினும், பெண்களைக் கம்யூனிஸ்டுகள் பகிரங்க மாகவும் அதிகார பூர்வமாகவும் எல்லார்க்கும் பொது வாக்கப் போகிறார்களென நமது முதலாளிமார்கள் புரளி பண்ணி நல்லொழுக்கச் சீலர்களாய் சீற்றம் கொள் கிறார்களே, அதைக் காட்டிலும் நகைக்கத்தக்கது எதுவும் இருக்க முடியாது. பெண்களை எல்லார்க்கும் பொதுவாக் கும் கைங்கரியத்தைக் கம்யூனிஸ்டுகள் செய்யத் தேவை யில்லை, நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே இது செய்யப் பட்டு வருகிறது.

நமது முதலாளிமார்கள் சாதாரண விபசாரிகளிடம் செல் வதைச் சொல்லவே வேண்டாம், அதோடு அவர்கள் தமது

பிடியிலுள்ள பாட்டாளிகளது மனைவியரும் பெண்டிரும் போதாமல் தமக்குள் ஒருவர் மனைவியை ஒருவர் வசப் படுத்திக் களவொழுக்கம் கொள்வதில் மிகப் பெரிய இன் பம் காண்கிறார்கள்.

பூர்ஷ்வா திருமணமானது உண்மையில் மனைவியரைப் பொதுவாக்கிக் கொள்ளும் ஒரு முறையே ஆகும். ஆகவே கள்ளத்தனமாய்த் திரைமறைவில் பெண்களை எல்லார்க் கும் பொதுவாக்கி வைக்கும் முறைக்குப் பதில், ஒளிவு மறை வற்ற சட்டபூர்வ முறையைக் கொண்டுவர விரும்புகிறார் கள் கம்யூனிஸ்டுகள் என்று இவர்கள் கண்டிக்கலாமே தவிர அதிகமாய் ஒன்றும் சொல்வதற்கில்லை. எப்படியும், இன் றைய உற்பத்தி அமைப்பு ஒழிக்கப்படும் போது, இந்த அமைப்பிலிருந்து எழும் பொதுப் பெண்டிர் முறையும்—அதாவது பகிரங்கப் பொது விபசாரமும் இரகசியத் தனி விபசாரமும்—கூடவே ஒழிந்தே ஆக வேண்டும் என்பது தெளிவு.

மேலும் தாய்நாட்டையும் தேசியத் தன்மையையும் இல்லாதொழிக்க விரும்புவதாகவும் கம்யூனிஸ்டுகள் குற்றம் சாட்டப்படுகிறார்கள்.

தொழிலாளர்களுக்குத் தாய்நாடு இல்லை. அவர்களிடம் இல்லாத ஒன்றை அவர்களிடமிருந்து பிடுங்குவது முடியாத காரியம். பாட்டாளி வர்க்கம் யாவற்றுக்கும் முதலாய் அர சியல் மேலாண்மை பெற்றாக வேண்டும், தேசத்தின் தலை மையான வர்க்கமாய் உயர்ந்தாக வேண்டும், தன்னையே தேசமாக்கிக் கொண்டாக வேண்டும். அது வரை பாட்டாளி வர்க்கம் தேசியத் தன்மை கொண்டதாகவே இருக்கிறது, ஆனால் இச்சொல்லுக்குரிய பூர்ஷ்வா அர்த்தத்தில் அல்ல.

முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சி, வாணிபச் சுதந்திரம், அனைத்துலகச் சந்தை, பொருளுற்பத்தி முறையிலும் இம் முறைக்கு உரித்தான வாழ்க்கை நிலைமைகளிலும் நாடுகள் ஒருபடித்தானவை ஆதல்—இவற்றின் காரணமாய் வெவ் வேறு நாடுகளது மக்களுக்கும் இடையிலுள்ள தேசிய வேறு பாடுகளும் பகைமைகளும் நாள்தோறும் மேலும் மேலும் மறைந்து வருகின்றன.

பாட்டாளி வர்க்க மேலாண்மையானது இவற்றை

மேலும் துரிதமாய் மறையச் செய்யும். குறைந்தது தலைமையான நாகரிக நாடுகளின் அளவிலாவது அமைந்த செயல் ஒற்றுமை, பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு வேண்டிய தலையாய நிபந்தனைகளில் ஒன்றாகும்.

தனியொருவர் பிறர் ஒருவரைச் சுரண்டுதல் எந்த அளவுக்கு ஒழிக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு ஒரு தேசிய இனம் பிறிதொன்றைச் சுரண்டுதலும் ஒழிக்கப்படும்.

தேசிய இனத்தினுள் வர்க்கங்களுக்கிடையிலான பகைநிலை எந்த அளவுக்கு மறைகிறதோ, அதே அளவுக்கு தேசிய இனங்களுக்கிடையிலான பகைமையும் இல்லாதொழியும்.

சமயத்தின், தத்துவவியலின், பொதுவாய்ச் சித்தாந்தத்தின் நோக்குநிலையிலிருந்து கம்யூனிசத்துக்கு எதிராய்க் கூறப்படும் குற்றச்சாட்டுகள் விவரமாய்ப் பரிசீலிக்கத் தக்கவையல்ல.

மனிதனது கருத்துகளும் நினைப்புகளும் கண்ணோட்டங்களும்—சுருங்கச் சொன்னால் மனிதனது உணர்வானது—அவனது பொருளாயத வாழ்நிலைமைகளிலும் சமூக உறவுகளிலும் சமூக வாழ்விலும் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலுடனும் சேர்ந்து மாறிச் செல்வதைப் புரிந்து கொள்ள ஆழ்ந்த ஞானம் வேண்டுமா, என்ன?

பொருள் உற்பத்தியில் ஏற்படும் மாறுதலுக்கு ஏற்ப, அறிவுத் துறை உற்பத்தியின் தன்மையிலும் மாற்றம் ஏற்படுகிறது—கருத்துகளின் வரலாறு நிரூபிப்பது இதன்றி வேறு என்னவாம்? ஒவ்வொரு சகாப்தத்திலும் ஆதிக்கம் செலுத்தும் கருத்துகள் அந்த சகாப்தத்தின் ஆளும் வர்க்கத்தினுடைய கருத்துகளாகத்தானே எப்போதுமே இருந்திருக்கின்றன.

சமுதாயத்தைப் புரட்சிகர முறையில் மாற்றும் கருத்துகள் என்பதாய்ச் சொல்கிறார்களே, அவர்கள் உண்மையில் குறிப்பிடுவது என்ன? பழைய சமுதாயத்தினுள் புதியதன் கூறுகள் படைத்துருவாக்கப்பட்டு விட்டன, பழைய வாழ்நிலைமைகள் சிதைவதற்கு ஒத்தபடி பழைய கருத்துகளும் கூடவே சிதைகின்றன என்ற உண்மையைத்தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பண்டைய உலகு அதன் அந்திமக் காலத்தை நெருங்கிக்

கொண்டிருந்த போது பண்டைய சமயங்களை கிறிஸ்துவ சமயம் வெற்றி கொண்டது. பிறகு 18ஆம் நூற்றாண்டில் கிறிஸ்துவ சமயக் கருத்துகள் அறிவொளி இயக்கக் கருத்து களுக்கு அடிபணிந்து அரங்கை விட்டகன்ற போது அக்காலத் திய புரட்சி வர்க்கமான முதலாளி வர்க்கத்துடன் பிரபுத்துவ சமுதாயம் தனது மரணப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது. சமயத் துறை சுதந்திரம், மனசாட்சி சுதந் திரம் ஆகிய கருத்துகள் கட்டற்ற சுதந்திரப் போட்டியின் ஆதிக்கத்தினது அறிவு உலகப் பிரதிமைகளே ஆகும்.

''வரலாற்று வளர்ச்சியின் போது சமயம், ஒழுக்கநெறி, தத்துவவியல், சட்டநெறி இவை சம்பந்தமான கருத்துகள் உருத்திரிந்தது மெய்தான். ஆனால் சமயமும் ஒழுக்கநெறி யும் தத்துவவியலும் அரசியல் விஞ்ஞானமும் சட்டமும் இந்த மாற்றங்களால் அழிந்துபடாது எப்போதுமே இவற்றைச் சமாளித்து வந்திருக்கின்றன'' என்று நம்மிடம் கூறுவார்கள்.

''இதன்றி சுதந்திரம், நீதி என்பன போன்ற சாசுவத உண்மைகள் இருக்கின்றன, இவை சமுதாயத்தின் எல்லாக் கட்டங்களுக்கும் பொதுவானவை. ஆனால் கம்யூனிசமானது சாசுவத உண்மைகளை இல்லாதொழியச் செய்கிறது; சம யம், ஒழுக்கநெறி ஆகிய அனைத்தையும் புதிய அடிப்படை யில் அமைப்பதற்குப் பதில் இவற்றை ஒழித்துக் கட்டிவிடு கிறது. ஆகவே கம்யூனிசம் கடந்த கால வரலாற்று அனு பவம் அனைத்துக்கும் முரணாய்ச் செயல்படுகிறது.''

இந்தக் குற்றச்சாட்டில் அடங்கியுள்ள சாரப்பொருள் என்ன? கடந்த கால சமுதாயம் அனைத்தின் வரலாறும் வர்க்கப் பகைமைகளின் இயக்கமாய் இருந்திருக்கிறது, இந்தப் பகைமைகள் வெவ்வேறு சகாப்தங்களில் வெவ் வேறு வடிவங்களை ஏற்று வந்திருக்கின்றன.

ஆனால் இந்த வர்க்கப் பகைமைகள் ஏற்ற வடிவம் எது வானாலும், சமுதாயத்தின் ஒரு பகுதி மற்றொரு பகுதியால் சுரண்டப்பட்டு வந்தது என்பது கடந்த சகாப்தங்கள் யாவற் றுக்கும் பொதுவான உண்மையாகும். எனவே, கடந்த சகாப் தங்களது சமூக உணர்வு எவ்வளவுதான் பல்வேறுபட்டதாக வும் பலவிதமானதாகவும் இருந்திருப்பினும், வர்க்கப் பகை மைகள் அறவே மறைந்தாலொழிய முற்றிலும் கரைந்து

விட முடியாத குறிப்பிட்ட சில பொது வடிவங்கள் அல்லது பொதுவான கருத்துகளின் வட்டத்தினுள்ளேதான் அந்த சமூக உணர்வு இயங்கி வந்திருக்கிறது, இதில் வியப்பு ஏது மில்லை.

கம்யூனிசப் புரட்சி பாரம்பரியச் சொத்துடைமை உறவு களிலிருந்து மிகவும் தீவிரமாய்த் துண்டித்துக் கொண்டு விடும் புரட்சியாகும், ஆகவே இந்தப் புரட்சியின் வளர்ச்சி யின் போது பாரம்பரியக் கருத்துகளிடமிருந்து மிகவும் தீவிர மாய்த் துண்டித்துக் கொள்ளும்படி நேர்வதில் வியப்புக்கு இடமில்லை.

போதும், கம்யூனிசத்தை எதிர்த்து எழுப்பப்படும் பூர்ஷ்வா ஆட்சேபங்களை இத்துடன் முடித்துக் கொள் வோம்.

பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயரச் செய்வதுதான், ஜனநாயகத்துக்கான போரில் வெற்றி ஈட்டுவதுதான், தொழிலாளி வர்க்கம் நடத்தும் புரட்சியின் முதலாவது படி என்பதை மேலே கண்டோம்.

பாட்டாளி வர்க்கம் தனது அரசியல் மேலாண்மையைப் பயன்படுத்தி முதலாளி வர்க்கத்திடமிருந்து படிப்படியாய் மூலதனம் முழுவதையும் கைப்பற்றும்; உற்பத்திக் கருவிகள் யாவற்றையும் அரசின் கைகளில், அதாவது ஆளும் வர்க்க மாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஒரு சேர மையப்படுத்தும்; மற்றும் உற்பத்திச் சக்திகளது ஒட்டு மொத்தத் தொகையைச் சாத்தியமான முழு வேகத்தில் அதிகமாக்கும்.

ஆரம்பத்தில் இந்தப் பணியினைச் சொத்துடைமை உரி மைகளிலும் பூர்ஷ்வா உற்பத்தி உறவுகளிலும் எதேச்சாதி கார முறையில் குறுக்கிட்டுச் செயல்படுவதன் மூலம்தான் நிறைவேற்ற முடியும். அதாவது, பொருளாதார வழியில் போதாமலும் வலுக் குறைவாகவும் தோன்றும் நடவடிக் கைகளாய் இருப்பினும், இயக்கப் போக்கின் போது தம்மை மிஞ்சிச் சென்று விடுகிறவையும் பழைய சமூக அமைப்பினுள் மேலும் குறுக்கிடும்படியான அவசியத்தை உண்டாக்குகிற

வையுமாகிய நடவடிக்கைகள் மூலம்தான், உற்பத்தி முறையைப் புரட்சிகரமாய் அடியோடு மாற்றியமைத்திடும் பாதையில் தவிர்க்க முடியாதவையாகிய இந்நடவடிக்கைகள் மூலம் தான், இந்தப் பணியினை நிறைவேற்ற முடியும்.

இந்த நடவடிக்கைகள் வெவ்வேறு நாடுகளில் வெவ் வேறானவையாகவே இருக்கும்.

ஆயினும் மிகவும் வளர்ந்து முன்னேறிய நாடுகளுக்குப் பொதுவாய்ப் பெருமளவுக்குப் பொருந்தக் கூடிய நடவடிக் கைகள் வருமாறு:

*1)* நிலத்தின் மீதான சொத்துடைமையை ஒழித்தலும் நிலவாடகைகள் அனைத்தையும் பொதுக் காரியங்களுக் காகப் பயன்படுத்தலும்.

*2)* கடுமையான வளர்வீத அல்லது படித்தர வருமான வரி.

*3)* பரம்பரை வாரிசாய்ச் சொத்துடைமை பெறும் உரிமை அனைத்தையும் ஒழித்தல்.

*4)* நாட்டை விட்டு வெளியேறி விடுவோர், கலகக்காரர் கள் ஆகியோர் எல்லோரது சொத்தையும் பறிமுதல் செய் தல்.

*5)* அரசு மூலதனத்துடன் தனியுரிமையான ஏகபோகம் கொண்ட தேசிய வங்கியின் மூலமாய், கடன் செலாவணியை அரசின் கைகளில் ஒருசேர மையப்படுத்தல்.

*6)* செய்தித் தொடர்பு, போக்குவரத்துச் சாதனங் களை அரசின் கைகளில் ஒருசேர மையப்படுத்தல்.

*7)* பொதுத் திட்டத்தின் பிரகாரம் ஆலைகளையும் உற் பத்திக் கருவிகளையும் விரிவாக்குதலும், தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவருதலும், பொதுவாய் மண் வளத்தை உயர்த்தலும்.

*8)* உழைப்பைச் சரிசமமாய் எல்லோருக்கும் உரிய கடமையாக்குதல், முக்கியமாய் விவசாயத் துறைக்காகத் தொழிற் பட்டாளங்களை நிறுவுதல்.

*9)* விவசாயத்தைத் தொழில்துறையுடன் இணைத்தல், தேச மக்களை மேலும் சீரான முறையில் நாடெங்கும் பர

வியமையச் செய்வதன் மூலம் நகரத்துக்கும் கிராமப்புறத்துக்கும் இடையிலான பாகுபாட்டைப் படிப்படியாய் அகற்றுதல்.

*10)* எல்லாக் குழந்தைகளுக்கும் பொதுப் பள்ளிக்கூடங்களில் இலவசக் கல்வி அளித்தல். ஆலைகளில் குழந்தைகளது உழைப்பின் தற்போதைய வடிவை ஒழித்திடல். கல்வியைப் பொருள் உற்பத்தியுடன் இணைத்தல், இன்ன பிற.

வளர்ச்சியின் போது வர்க்கப் பேதங்கள் மறைந்து விடும் போதும், தேச மக்கள் அனைவராலுமான மாபெரும் கூட்டமைப்பின் கைகளில் பொருளுற்பத்தி அனைத்தும் ஒருசேர மையமுற்று விடும் போதும், பொது ஆட்சியதிகாரம் அதன் அரசியல் தன்மையை இழந்து விடும். அரசியல் ஆட்சியதிகாரம் என்பது அதன் சரியான பொருளில், ஒரு வர்க்கத்தின் ஒழுங்கமைந்த பலவந்த அதிகாரத்தையே, பிறிதொரு வர்க்கத்தை ஒடுக்குவதற்காக அமைந்த பலவந்த அதிகாரத்தையே குறிக்கின்றது. முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் சந்தர்ப்பங்களது நிர்ப்பந்தம் காரணமாய்த் தன்னை ஒரு வர்க்கமாய் ஒழுங்கமைத்துக் கொள்கிறதெனில், புரட்சியின் மூலம் தன்னை ஆளும் வர்க்கமாக்கிக் கொள்கிறதெனில், ஆளும் வர்க்கம் என்ற முறையில் பழைய உற்பத்தி உறவுகளைப் பலவந்தமாய் ஒழித்திடுகிறதெனில், அப்போது அது இந்தப் பழைய உற்பத்தி உறவுகளுடன் கூடவே வர்க்கப் பகைமைகளும் பொதுவாய் வர்க்கங்களும் நிலவுவதற்குரிய நிலைமைகளையும் ஒழித்திடுவதாகிறது, அதன் மூலம் அது ஒரு வர்க்கமாய்த் தனக்குள்ள மேலாண்மையையும் ஒழித்திடுவதாகிறது.

வர்க்கங்களையும் வர்க்கப் பகைமைகளையும் கொண்டிருந்த பழைய பூர்ஷ்வா சமுதாயத்துக்குப் பதிலாய், ஒவ்வொருவரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதையே எல்லோரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதற்கான நிபந்தனையாய்க் கொண்ட மக்கட்கூட்டு ஒன்று எழுந்து விடும்....

## IV

### தற்போதுள்ள பற்பல எதிர்க்கட்சிகள் குறித்து கம்யூனிஸ்டுகளின் நிலை

இங்கிலாந்திலுள்ள சார்ட்டிஸ்டுகளையும் அமெரிக்காவிலுள்ள நிலச் சீர்திருத்தாளர்களையும் போல் தற்போதுள்ள தொழிலாளி வர்க்கக் கட்சிகள் சம்பந்தமாய் கம்யூனிஸ்டுகளுடைய உறவுநிலை இரண்டாவது பிரிவில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வர்க்கத்தின் உடனடி நோக்கங்கள் சித்தி பெறுவதற்காக, உடனடி நலன்கள் நிறைவேற்றம் பெறுவதற்காகப் போராடுகிறார்கள்; ஆனால் தற்காலத்திய இயக்கத்தில் இந்த இயக்கத்தின் எதிர்காலத்தையும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்து பேணிப் பாதுகாக்கின்றனர். பிரான்சில் கம்யூனிஸ்டுகள் பழமைவாத, தீவிரவாத முதலாளி வர்க்கத்தாருக்கு எதிராய் சோஷலிஸ்ட்-ஜனநாயகவாதிகளுடன்* கூட்டு சேர்ந்து கொள்கிறார்கள்; ஆனால் மாபெரும் புரட்சியிடமிருந்து மரபுவழியில் வந்துள்ள தொடர்கள் குறித்தும் பிரமைகள் குறித்தும் விமர்சனப் பார்வை கொண்ட ஒரு நிலையை ஏற்பதற்கான உரிமையை விட்டு விடாமல் தம் கையில் வைத்திருக்கிறார்கள்.

---

* அக்காலத்தில் பாராளுமன்றத்தில் லெத்ரூ-ரொலேனும், இலக்கியத்தில் லுயீ பிளானும், நாளேடுகளில் *Réforme* பத்திரிகையும் பிரதிநிதித்துவம் செய்த கட்சி. சோஷலிஸ்ட்-ஜனநாயகம் என்னும் பெயர், அதைக் கண்டுபிடித்தவர்களாகிய இவர்களுக்கு, அதிகமாகவோ குறைவாகவோ சோஷலிசச் சாயல் கொண்ட ஜனநாயக அல்லது குடியரசுக் கட்சியின் ஒரு பிரிவைக் குறிப்பதாய் இருந்தது. **[1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

பிரான்சில் அக்காலத்தில் தன்னை சோஷலிஸ்ட்-ஜனநாயகக் கட்சி என்று அழைத்துக் கொண்ட கட்சியை அரசியல் வாழ்க்கையில் லெத்ரூ-ரொலேனும், இலக்கியத்தில் லுயீ பிளானும் பிரதிநிதித்துவம் செய்தனர்; இவ்வாறு அது இன்றைய ஜெர்மன் சமூக-ஜனநாயகத்திடமிருந்து வெகுவாய் வேறுபடுவதாய் இருந்தது. **[1890ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

ஸ்விட்சர்லாந்தில் அவர்கள் தீவிரவாதிகளை ஆதரிக்கிறார்கள், அதேபோது தீவிரவாதக் கட்சி பிரெஞ்சு நாட்டு அர்த்தத்தில் ஜனநாயக சோஷலிஸ்டுகளாகிய ஒரு பகுதியும் தீவிரவாத முதலாளி வர்க்கத்தாராகிய ஒரு பகுதியுமான ஒன்றுக்கொன்று பகைமையான இரு கூறுகளைக் கொண்டிருப்பதை அவர்கள் தவறாமல் கவனத்தில் வைத்திருக்கிறார்கள்.

போலந்தில் தேச விடுதலைக்கு விவசாய நிலவுடைமையிலான புரட்சி தலையாய முந்நிபந்தனையென வற்புறுத்தும் கட்சியை, 1846ஆம் ஆண்டு கிராக்கோவ் எழுச்சியை உசுப்பி விட்ட கட்சியை அவர்கள் ஆதரிக்கிறார்கள்.

ஜெர்மனியில் முதலாளி வர்க்கம் எதேச்சாதிகார முடியாட்சியையும் பிரபுத்துவ நிலவேந்தர் அமைப்பையும் பிற்போக்குவாதக் குட்டி முதலாளித்துவப் பகுதிகளையும் எதிர்த்துப் புரட்சிகரமாய்ச் செயல்படும் போதெல்லாம், அவர்கள் அதனுடன் சேர்ந்து நின்று போராடுகிறார்கள்.

ஆனால் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள தீராப் பகைமை குறித்து கணப்பொழுதும் ஓயாமல் அவர்கள் சாத்தியமான முழு அளவுக்குத் தொழிலாளர்களுக்கு உணர்வூட்டுகிறார்கள்; முதலாளி வர்க்கம் தனது மேலாண்மையுடன் கூடவே தவிர்க்க முடியாதபடி கொண்டு வந்தாக வேண்டியிருக்கும் சமூக, அரசியல் நிலைமைகளை ஜெர்மன் தொழிலாளர்கள் அப்படியே நேரே முதலாளி வர்க்கத்துக்கு எதிரான ஆயுதங்களாய்ப் பயன்படுத்தும் பொருட்டும், ஜெர்மனியில் பிற்போக்கு வர்க்கங்கள் வீழ்ச்சியுற்றதும் முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டம் உடனடியாகவே ஆரம்பமாகிவிடும் பொருட்டும் அவர்கள் இப்படித் தொழிலாளர்களுக்கு உணர்வூட்டுகிறார்கள்....

சுருங்கக் கூறின், கம்யூனிஸ்டுகள் எங்கும் தற்போதுள்ள சமூக, அரசியல் நிலைவரங்களது அமைப்பு முறையை எதிர்த்து நடைபெறும் புரட்சிகர இயக்கம் ஒவ்வொன்றையும் ஆதரிப்பவர்கள் ஆவர்.

இந்த இயக்கங்கள் யாவற்றிலும் அவர்கள் சொத்துடைமைப் பிரச்சினையை, இதுவரை அது எந்த அளவுக்கு

வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதைப் பொருட்படுத்தாமல், தலைமையான பிரச்சினையாய் முன்னிலைக்குக் கொண்டு வருகிறார்கள்.

முடிவில், எல்லா நாடுகளையும் சேர்ந்த ஜனநாயகக் கட்சிகளது ஒற்றுமைக்காகவும் அவற்றினிடையிலான உடன் பாட்டுக்காகவும் அவர்கள் பாடுபடுகிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் தமது கருத்துகளையும் நோக்கங்களையும் மூடிமறைக்க மனம் ஒப்பாதவர்கள். இன்றுள்ள சமுதாயத்தின் நிலைமைகள் யாவற்றையும் பலவந்தமாய் வீழ்த்த வேண்டும், அப்போதுதான் தமது இலட்சியங்கள் நிறைவேறும் என்று கம்யூனிஸ்டுகள் ஒளிவுமறைவின்றி பறைசாற்றுகிறார்கள். அஞ்சி நடுங்கட்டும் ஆளும் வர்க்கங்கள், கம்யூனிசப் புரட்சி வருகிறதென்று. பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர இழப்பதற்கு ஏதும் இல்லாதவர்கள். அவர்கள் வென்று பெறுவதற்கு அனைத்து உலகும் இருக்கிறது.

**உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!**

## வி. இ. லெனின்

## கம்யூனுக்கு அஞ்சலி

வி.இ. லெனின் இக்கட்டுரையை 1911இல், பாரிஸ் கம்யூன் பிரகடனம் செய்யப்பட்டதன் 40ஆம் ஆண்டு விழாவையொட்டி எழுதினார். பிரெஞ்சு பாட்டாளி வர்க்கத்தின் இந்தப் புரட்சிப் போராட்டம் தான் உலக வரலாற்றில் முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சி, முதல் தொழிலாளி வர்க்க அரசாகும். சர்வதேச தொழிலாளி வர்க்கத்திற்கும் எல்லா உழைப்பாளிகளுக்கும் 1871ஆம் ஆண்டின் பாரிஸ் கம்யூன் விட்டுச் சென்ற அனுபவத்தை இதில் லெனின் ஆழமாகப் பகுப்பாய்வு செய்கிறார்.

தொழிலாளர்களின் புதிய வகையான அரசு என்ற வகையில் பாரிஸ் கம்யூன் எப்படியிருந்தது? யாருடைய நலனுக்காக, எப்படிப்பட்டப் பொருளாதார, அரசியல், சமூக மாற்றங்களைத் தொழிலாளர் ஆட்சி நிறைவேற்றியது? ஆகிய கேள்விகள் மீது வி.இ. லெனின் முக்கிய கவனம் செலுத்தினார். இக்கேள்விகளுக்கான பதில்கள், முதலாளிகளோ சுரண்டலாளர்களோ இல்லாத உண்மையான மக்களாட்சிதான் எல்லா உழைப்பாளிகளின் வாழ்க்கையையும் அடிப்படையில் மேம்படுத்த உதவும் என்று காட்டின.

பாரிஸ் கம்யூன் தோல்வியடைந்ததற்கான காரணங்களை வி.இ. லெனின் தன் கட்டுரையில் சுட்டிக்காட்டினார். தொழிலாளி வர்க்கத்திற்கு

போதுமான அரசியல் முதிர்ச்சி இல்லாதது, பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம் பற்றிய போதனையை அடிப்படையாகக் கொண்ட தனி அரசியல் கட்சி அதனிடம் இல்லாமலிருந்தது, பாரிஸ் கம்யூனின் அரசியல் உள்ளடக்கம் மிகவும் பலதரப்பட்டதாக இருந்தது (இதில் பூர்ஷ்வா பிரதிநிதிகளும் இடம் பெற்றிருந்தனர்), தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் விவசாயிகளுக்கும் இடையில் நெருங்கிய கூட்டு இல்லாமை ஆகியவைதான் தோல்விக்கான முக்கியக் காரணங்களாகும்.

பாரிஸ் கம்யூனின் படிப்பினைகளை வி. இ. லெனின் ஆழந்து, பன்முக ரீதியில் பயின்றதானது விஞ்ஞான சோஷலிச தத்துவத்தைச் செழுமைப் படுத்தியது, சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கு விலைமதிப்பற்ற புரட்சிகர மாற்ற அனுபவத்தை அளித்தது. புதிய அரசாட்சியின் வகை பல்வேறு வடிவங்களில்—பாரிஸ் கம்யூன் வடிவத்தில், சோவியத் ஒன்றியத்தில் உள்ளதைப் போல் சோவியத்துகளின் வடிவத்தில், ஐரோப்பிய சோஷலிச நாடுகளில் உள்ளதைப் போல் மக்கள் ஜனநாயக வடிவத்தில்—இருக்கக் கூடும் என்று பாட்டாளி வர்க்கப் புரட்சி நடைபெற்ற பல்வேறு நாடுகளின் அனுபவம் காட்டுகிறது. ஆனால் இதன் சாரம் ஒன்றுதான்—உழைப்பாளிகளின் ஆட்சிதான் அச்சாரமாகும், தொழிலாளி வர்க்கமும் இதன் முன்னணிப் படையாகிய கம்யூனிஸ்டுக் கட்சியும் இந்த ஆட்சியின் தலைமையில் நிற்கின்றன.

பாரிஸ் கம்யூன் பிரகடனப்படுத்தப்பட்டு நாற்பது ஆண்டுகள் உருண்டோடி விட்டன. வழக்கப்படி பிரெஞ்சு பாட்டாளி வர்க்கம் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தி 1871ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் தேதியின் புரட்சியாளர்களுக்கு நினைவாஞ்சலி செலுத்தியது; மே மாத இறுதியில் அப்பாட்டாளி வர்க்கம், சுட்டுக் கொல்லப்பட்ட கம்யூன் உறுப்பினர்களின் கல்லறைகளுக்கு, பயங்கர ''மே மாத வாரத்திற்கு'' பலியானவர்களின் கல்லறைகளுக்கு மீண்டும் மலர் வளையங்களை எடுத்துச் செல்லும், அவர்களுடைய இலட்சியங்கள் இறுதி வெற்றி பெறும் வரை, அவர்கள் விட்டுச் சென்ற காரியத்தை முழுமையாக நிறைவேற்றும் வரை ஓய்வொழிச்சலின்றி போராடப் போவதாக சபத மேற்கும்.

பிரெஞ்சு பாட்டாளி வர்க்கம் மட்டுமின்றி, உலகெங்கும் உள்ள பாட்டாளி வர்க்கம் முழுவதும் ஏன் பாரிஸ் கம்யூன் உறுப்பினர்களைத் தம் முன்னோடிகளாகப் பார்க்கிறது? கம்யூன் விட்டுச் சென்ற சொத்து என்ன?

கம்யூன் தானாகவே தோன்றியது, யாரும் இதை உணர்வு பூர்வமாக, திட்டமிட்டு தயார்படுத்தவில்லை. ஜெர்மனியுடன் நடந்த, தோல்வியில் முடிந்த யுத்தம், முற்றுகையின் பொழுது ஏற்பட்ட வேதனைகள், பாட்டாளிகளின் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம், குட்டி முதலாளிகள் மத்தியில் ஏற்பட்ட நொடிப்பு; உயர் வர்க்கங்களுக்கு எதிராயும், முழு திறமையின்மையைக் காட்டிய அதிகாரிகளுக்கு எதிராயும் மக்கள் திரளினர் வெளிப்படுத்திய சீற்றம், தன் நிலையின் மீது அதிருப்தி கொண்டு வேறு சமூக அமைப்பை நாடிய தொழிலாளி வர்க்கத்தின் நடுவில் நடந்த தெளிவற்ற சஞ்சலம்; குடியரசின் எதிர்காலம் மீது கவலை கொள்ளும்

படி தூண்டிய தேசிய சபையின் பிற்போக்கு உள்ளமைப்பு ஆகியவையும் இன்னும் பலவும் எல்லாமாக ஒன்றுசேர்ந்து மார்ச் 18ஆம் தேதி புரட்சிக்கு பாரிஸ் மக்களை உந்தித் தள்ளின, இது முற்றிலும் எதிர்பாராமல் ஆட்சியை தேசிய கார்டு படையின் கரங்களுக்கு, தொழிலாளி வர்க்கத்தின் கரங்களுக்கு, அதனுடன் சேர்ந்திருந்த குட்டி முதலாளி களின் கரங்களுக்கு அளித்தது.

இது வரலாறு முன்பின் காணா சம்பவமாக விளங்கியது. அது வரை ஆட்சி சாதாரணமாக நிலவுடைமையாளர்கள், முதலாளிகளின் கரங்களில், அதாவது அவர்களுடைய நம் பிக்கையைப் பெற்று, அரசாங்கம் என்றழைக்கப்பட்டதை ஏற்படுத்தியவர்களின் கரங்களில் இருந்தது. மார்ச் 18 புரட் சியையடுத்து, திரு. தியேரின் அரசாங்கம் தன்னுடைய துருப்பு கள், போலீஸ், அதிகாரிகளுடன் பாரிசை விட்டு ஓடிய பின்னரோ மக்கள் எஜமானர்களாயினர், ஆட்சி பாட்டாளி களிடம் வந்தது. ஆனால் நவீன சமுதாயத்தில், பொருளா தார ரீதியாக மூலதனத்தால் அடிமைப்படுத்தப்பட்ட பாட் டாளியால், தன்னை மூலதனத்துடன் பிணைக்கும் சங்கிலி களை அறுக்காமல் அரசியல் ரீதியில் ஆதிக்கம் செலுத்த முடியாது. எனவேதான் கம்யூன் இயக்கம் தவிர்க்க இயலாதவாறு சோஷலிச வண்ணத்தைப் பெற வேண்டி யிருந்தது, அதாவது முதலாளிகளின் ஆதிக்கத்தை, மூல தனத்தின் ஆதிக்கத்தைத் தூக்கியெறியவும் நவீன சமுதாய அமைப்பின் அடிப்படைகளை அழிக்கவும் ஆரம்பிக்க வேண்டி யிருந்தது.

முதலில் இந்த இயக்கம் பெரும் கலவையானதாக, வரை யறுக்கப்படாததாக இருந்தது. கம்யூன் ஜெர்மனியுடனான யுத்தத்தை மீண்டும் துவக்கி, வெற்றி கிட்டும் வரை நடத் தும் என்று நம்பிய தேசபக்தர்களும் இதனுடன் சேர்ந்து கொண்டனர். கடன் பத்திரப் பணத்தையும் வீட்டு வாட கையையும் செலுத்தும் காலக்கெடுவைத் தள்ளிப் போடா விடில் நொடித்துப் போகும் நிலையிலிருந்த சிறு கடைக் காரர்களும் இதை ஆதரித்தனர் (இத்தள்ளிவைப்பைத் தர அரசாங்கம் விரும்பவில்லை, ஆனால் கம்யூன் இதை தந்தது). இறுதியில், பிற்போக்கு தேசிய சபை (''கிராமப்புறத்தி

னர்'', காட்டுமிராண்டி நிலவுடைமையாளர்கள்) முடியாட்சியை மீண்டும் ஏற்படுத்தும் என்று அஞ்சிய பூர்ஷ்வா குடியரசுவாதிகளும் பகுதியளவிற்கு இதற்கு ஆதரவளித்தனர். ஆனால் இந்த இயக்கத்தில் தொழிலாளர்கள்தான் (குறிப்பாக பாரிஸ் பட்டறைத் தொழிலாளிகள்) முக்கிய பங்காற்றினர் என்பது சொல்லாமலேயே விளங்கும்; இரண்டாவது பேரரசின் கடைசி ஆண்டுகளில் இவர்கள் மத்தியில் சுறுசுறுப்பான சோஷலிச பிரசாரம் நடந்தது, இவர்களில் பலர் அகிலத்தில் கூட உறுப்பினராயிருந்தனர்.

தொழிலாளர்கள் மட்டுமே இறுதி வரை கம்யூனுக்கு விசுவாசமாயிருந்தனர். பூர்ஷ்வா குடியரசுவாதிகளும் குட்டி முதலாளிகளும் அதிலிருந்து விரைவில் பின்தங்கினர்: இயக்கத்தின் புரட்சிகர-சோஷலிச, பாட்டாளித் தன்மை ஒரு சிலரை அச்சுறுத்தியது; மற்றவர்களோ, அது தவிர்க்க இயலாது தோல்வியைத் தழுவும் என்று கண்ட போது அதிலிருந்து பின்தங்கினர். பிரெஞ்சு பாட்டாளிகள் மட்டுமே அச்சமோ களைப்போ இல்லாமல் தம் அரசாங்கத்தை ஆதரித்தனர், அவர்கள் மட்டுமே அதற்காக, அதாவது தொழிலாளி வர்க்கத்தை விடுவிப்பதற்காக, எல்லா உழைப்பாளிகளின் சிறந்த எதிர்காலத்திற்காக சமரிட்டனர், உயிர் கொடுத்தனர்.

நேற்றைய கூட்டாளிகள் கைவிட, யாராலும் ஆதரிக்கப்படாத கம்யூன் தவிர்க்க இயலாது தோல்வியைத் தழுவ வேண்டியிருந்தது. பிரான்சின் முதலாளி வர்க்கம் முழுவதும் எல்லா நிலச்சுவான்தார்களும், பங்கு மார்கெட்காரர்களும் ஆலையதிபர்களும், எல்லாப் பெரிய, சிறிய திருடர்களும் எல்லாச் சுரண்டலாளர்களும் கம்யூனுக்கு எதிராக அணி திரண்டனர். பிஸ்மார்க்கால் ஆதரிக்கப்பட்ட இந்த பூர்ஷ்வா கூட்டணி (புரட்சிகர பாரிசை அடக்குவதற்காக அவர் ஜெர்மன் சிறையிலிருந்து 1,00,000 பிரெஞ்சு போர்வீரர்களை விடுவித்தார்) பாரிஸ் பாட்டாளிகளுக்கு எதிராக கல்வியறிவற்ற விவசாயிகளையும் பிராந்திய குட்டி முதலாளிகளையும் நிறுத்துவதில் வெற்றி பெற்றது, அது பாதி பாரிசை இரும்பு வளையத்தால் சுற்றி வளைத்தது (இரண்டாவது பாதி ஜெர்மன் இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டது).

வேறு சில பெரிய பிரெஞ்சு நகரங்களிலும் (மார்சேல், லியோன், சென்ட்-எத்யேன், டிஷோன், இதரவை) தொழிலாளர்கள் ஆட்சியைப் பிடித்து, கம்யூனைப் பிரகடனப் படுத்தி, பாரிசிற்கு உதவச் செல்ல முயன்றனர், ஆனால் இம்முயற்சிகள் விரைவில் தோல்வியில் முடிந்தன. பாட்டாளி வர்க்க எழுச்சியின் பதாகையை முதன்முதலில் உயர்த்திய பாரிஸ் சொந்த பலத்தை மட்டுமே நம்ப வேண்டியிருந்தது, நிச்சயமான அழிவு அதை எதிர்நோக்கியது.

சோஷலிசப் புரட்சி வெற்றியடைய குறைந்தபட்சம் இரண்டு நிபந்தனைகள் வேண்டும்: உற்பத்திச் சக்திகளின் உயர்வான வளர்ச்சியும் பாட்டாளிகளின் தயார்நிலையும் தான் அந்த நிபந்தனைகளாகும். 1871இலோ இந்த இரண்டு நிபந்தனைகளும் இருக்கவில்லை. பிரெஞ்சு முதலாளித்துவம் அப்போது அவ்வளவாக வளர்ச்சியடைந்து இருக்கவில்லை, பிரான்ஸ் பெரும்பாலும் குட்டி பூர்ஷ்வா (பட்டறைத் தொழிலாளிகள், விவசாயிகள், சிறு கடைக்காரர்கள், பிறரின்) நாடாயிருந்தது. மறு புறம், தொழிலாளர் கட்சி இருக்கவில்லை, தொழிலாளி வர்க்கம் உரிய விதத்தில் பயிற்றுவிக்கப்படவில்லை, இது பெரும்பாலும் தன் கடமைகளையோ அவற்றை அடையும் வழிகளையோ தெளிவாக புரிந்து கொண்டிருக்கவில்லை. பாட்டாளிகளின் கருத்தாழமுள்ள அரசியல் ஸ்தாபனமோ, பரவலான தொழிற்சங்கங்களோ, கூட்டுறவு அமைப்புகளோ இருக்கவில்லை....

ஆனால் முக்கியமானது என்னவெனில் சற்று நிதானித்து, தன் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதில் இறங்க போதிய நேரம் அதற்கு இல்லாமல் போனதாகும். அது காரியத்தில் இறங்கும் முன்னரே வெர்சேயில் அமர்ந்த அரசாங்கம் முதலாளி வர்க்கம் முழுவதன் ஆதரவோடு பாரிசிற்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. கம்யூன் முதலில் தன் தற்காப்பைப் பற்றி யோசிக்க வேண்டி வந்தது. இறுதியாக மே 21—28 தேதி வரை வேறு எதைப் பற்றியும் உண்மையாக யோசிக்க அதற்கு நேரமே கிட்டவில்லை.

என்றாலும், அவ்வளவு மோசமான சூழ்நிலையிலும், மிகக் குறுகிய காலமே நிலவிய போதிலும் கம்யூன் ஒரு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது, இந்நடவடிக்கைகள்

இதன் உண்மையான உட்பொருளையும் நோக்கங்களையும் நன்கு காட்டுகின்றன. ஆதிக்க வர்க்கங்களின் கரங்களில் குருட்டுத்தனமான ஆயுதமாக இருந்த நிரந்தர இராணுவத்தை கம்யூன் கலைத்து, அதற்குப் பதில் மக்கள் அனைவரையும் ஆயுதந்தரிக்க வைத்தது; அது மதத்தை அரசிலிருந்து பிரித்தது, மத பட்ஜெட்டை (அதாவது பாதிரிகளுக்கு அரசு ஊதியம் வழங்கப்படுவதை) ரத்து செய்தது, பொதுக் கல்விக்கு மதச் சார்பற்ற அடிப்படையை வழங்கியது—இதன் மூலம் பாதிரிமார் ஆடையில் உலாவிய போலீஸ்காரர்கள் மீது பெரும் அடி விழுந்தது. சமூகத் துறையில் அதனால் சிறிதளவு மட்டுமே செய்ய முடிந்தது, என்றாலும் இச்சிறு அளவே இது எப்படி மக்களுடைய, தொழிலாளர்களுடைய அரசாங்கமாக விளங்குகிறது என்பதை தெட்டத்தெளிவாக காட்டியது: ரொட்டிக் கடைகளில் இரவு நேர உழைப்பு தடை செய்யப்பட்டது; தொழிலாளர்களை சட்டபூர்வமாக கொள்ளையடிக்கும் முறையாகத் திகழ்ந்த அபராத முறை ரத்து செய்யப்பட்டது; இறுதியாக, ஒரு பிரபல ஆணை கொண்டுவரப்பட்டது, இதன்படி ஆலைகள், தொழிற்சாலைகள், பட்டறைகளை விட்டு எஜமானர்கள் வெளியேறினாலோ, அவற்றை மூடினாலோ அவை உற்பத்தியைப் புனரமைப்பதற்காக தொழிலாளர் ஆர்டெல்கள் வசம் ஒப்படைக்கப்பட்டன. தான் உண்மையான ஜனநாயக, பாட்டாளி அரசாங்கம் என்பதை கோடிட்டுக்காட்ட விரும்புவதைப் போல் நிர்வாக அதிகாரிகள், அரசாங்க உறுப்பினர்களின் ஊதியம் சாதாரண தொழிலாளர் ஊதியத்தை விஞ்சக் கூடாது, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஆண்டில் 6,000 பிராங்குகளுக்கு (மாதத்திற்கு 200 ரூபிள்களுக்கும் குறைவு) அதிகமாக இருக்கக் கூடாது என்று கம்யூன் தீர்மானம் நிறைவேற்றியது.

ஒடுக்குமுறை, சுரண்டலின் அடிப்படையிலான பழைய உலகிற்கு கம்யூன் மரண அபாயமானது என்று இந்த நடவடிக்கைகள் தெட்டத்தெளிவாக காட்டின. எனவே பாரிஸ் நகர டூமாவில் பாட்டாளிகளின் செம்பதாகை பட்டொளி வீசிப் பறந்த வரை பூர்ஷ்வா சமுதாயத்தால் நிம்மதியாக உறங்க முடியவில்லை. இறுதியாக, ஒழுங்கமைக்கப்பட்ட

அரசாங்க சக்திகள், நன்கு ஒழுங்கமைக்கப்படாத புரட்சி சக்திகளை விஞ்சி நின்ற பொழுது, ஜெர்மானியர்களால் அடித்து துரட்டப்பட்ட, வெல்லப்பட்ட சொந்த நாட்டு மக்களின் முன் வீரங்காட்டிய போனபார்ட்டிஸ்டு ஜெனரல்கள், அந்த பிரெஞ்சு ரென்னென்காம்ப்களும் மேல்லெர்-ஸகொமேல்ஸ்கிகளும் பாரிஸ் முன்பின் காணா படுகொலைகளை நடத்தினர். கிட்டத்தட்ட 30,000 பாரிஸ் வாசிகள் மூர்க்கமடைந்த படைவீரர்களால் கொல்லப்பட்டனர், சுமார் 45,000 பேர் கைது செய்யப்பட்டனர், இவர்களில் பலர் பின்னால் தூக்கிலிடப்பட்டனர், ஆயிரக்கணக்கானோர் கடுந்தண்டனைகளுக்கு ஆளாயினர், நாடு கடத்தப்பட்டனர். மொத்தத்தில் பாரிஸ், பல்வேறு துறைகளைச் சேர்ந்த தலைசிறந்த தொழிலாளர்கள் உட்பட கிட்டத்தட்ட தன் புதல்வர்களில் 1 லட்சம் பேரை பறி கொடுத்தது.

முதலாளி வர்க்கம் திருப்தியடைந்தது. அதன் தலைவனாகிய ரத்தவெறி பிடித்த குள்ளன் தியேர் தன் ஜெனரல்களுடன் சேர்ந்து பாரிஸ் பாட்டாளிகளை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்த பின், ''இப்போது சோஷலிசத்திற்கு நீண்ட கால சமாதி கட்டியாகி விட்டது'' என்று கூறினான். ஆனால் அப்பூர்ஷ்வா காக்கைகள் வீணாக கத்தின. கம்யூன் ஒடுக்கப்பட்டு சுமார் 6 ஆண்டுகள் ஆனதும், அதன் வீரர்களில் பலர் இன்னமும் கொடுஞ்சிறைகளிலும் நாடுகடத்தல்களிலும் வேதனைப்பட்ட பொழுது பிரான்சில் புதிய தொழிலாளர் இயக்கம் ஆரம்பமாகியது. புதிய சோஷலிச தலைமுறை தன் முன்னோடிகளின் அனுபவத்தால் செழுமையடைந்து, அவர்களின் தோல்வியைக் கண்டு சிறிதும் கலங்காது, கம்யூன் வீரர்களின் கரங்களிலிருந்து கீழே விழுந்த பதாகையை, ''சோஷலிசம் வாழ்க! கம்யூன் வாழ்க!'' என்ற முழக்கங்களோடு, உறுதியோடும் துணிவோடும் முன் எடுத்துச் சென்றது. இன்னும் ஒரிரு ஆண்டுகளுக்குப் பின் புதிய தொழிலாளர் கட்சியும் அதனால் நாட்டில் முடுக்கி விடப்பட்ட கிளர்ச்சியும், அரசாங்கம் இன்னமும் சிறையில் வைத்திருந்த கம்யூன் வீரர்களை விடுவிக்கும்படி ஆதிக்க வர்க்கங்களை நிர்ப்பந்தித்தன.

கம்யூன் வீரர்களை பிரெஞ்சு தொழிலாளர்கள் மட்டு

மின்றி உலகெங்கும் உள்ள பாட்டாளிகளும் தம் நினைவில் பேணி அஞ்சலி செலுத்துகின்றனர். ஏனெனில் கம்யூன் ஏதோ ஒரு உள்ளூர் நோக்கம் அல்லது குறுகிய தேசியக் கடமைக்காகப் போராடவில்லை, உழைப்பாளிகள், ஒடுக்கப் பட்ட மக்கள், புண்படுத்தப்பட்டவர்கள் ஆகிய அனைவரின் விடுதலைக்காக கம்யூன் போராடியது. சமூகப் புரட்சிக்கான முன்னணிப் போராளி என்ற வகையில், எங்கெல்லாம் பாட் டாளிகள் வேதனைக்காளாகி போராடுகின்றனரோ அங்கெல் லாம் கம்யூன் ஆதரவைப் பெற்றது. இதன் வாழ்வும் மரண மும், இரண்டு மாதங்களுக்கும் மேலாக உலகத் தலைநகரை தன் கையில் பிடித்து வைத்திருந்த தொழிலாளர் அரசாங் கத்தின் காட்சியும், பாட்டாளிகள் நடத்திய வீரம் மிகு போராட்டக் காட்சியும், தோல்விக்குப் பின் அவர்களுடைய வேதனைகளும்—இவையெல்லாம் லட்சோபலட்சம் தொழி லாளர்களின் மன உற்சாகத்தை ஊக்குவித்தது, அவர்களின் நம்பிக்கைகளைத் தட்டியெழுப்பியது, அவர்களுடைய அனு தாபத்தை சோஷலிசத்தின் பக்கம் ஈர்த்தது. பாரிஸ் பீரங்கி களின் முழக்கம், ஆழ்ந்த உறக்கத்திலிருந்த மிகப் பின்தங் கிய பாட்டாளிப் பிரிவினரைத் தட்டியெழுப்பி, எல்லா இடங்களிலும் புரட்சிகர சோஷலிச பிரசாரம் வலுப்பட உந்து சக்தியாய் அமைந்தது. எனவேதான் கம்யூனின் இலட் சியம் மடியவில்லை, இன்று வரை அது நம் ஒவ்வொருவரின் உள்ளேயும் வாழுகிறது.

கம்யூனின் இலட்சியம் என்பது சமூகப் புரட்சியின் இலட் சியம், உழைப்பாளிகளை அரசியல், பொருளாதார ரீதியில் முழுமையாக விடுவிக்கும் இலட்சியம், இது உலக பாட்டாளி வர்க்கத்தின் இலட்சியம். இந்த அர்த்தத்தில் இது இறாவாப் புகழ் பெற்றது.

**வி. இ. லெனின்**

**அரசும் புரட்சியும்**
**என்ற நூலிலிருந்து**

**அரசும் புரட்சியும்** என்ற நூலை வி. இ. லெனின் 1917இல், ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கான தயாரிப்புகள் நடந்து கொண்டிருந்த பொழுது எழுதினார். இந்நூலின் ஆறு அத்தியாயங்களில் அவர் அரசு, சோஷலிசப் புரட்சி, சோஷலிசம், கம்யூனிசம் பற்றிய மார்க்சிய போதனையை விவரித்து ஆக்கபூர்வமாக வளர்த்தார். **அரசு உலர்ந்து உதிர்வதற்குரிய பொருளாதார அடிப்படை** என்ற ஐந்தாவது அத்தியாயம் கீழே தரப்படுகிறது.

கா. மார்க்ஸ், பி. எங்கெல்சின் போதனையின் அடிப்படையில் வி. இ. லெனின், முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து கம்யூனிச சமுதாயத்திற்கு மாறிச் செல்லும் பொழுது அரசாட்சிக்கு என்னவாகும் என்ற பிரச்சினையை ஆராய்கிறார், இது விஞ்ஞான கம்யூனிசத்தின் அடிப்படை பிரச்சினைகளில் ஒன்றாகும். பாட்டாளி வர்க்கப் புரட்சி பூர்ஷ்வா அரசைத் தூக்கியெறியும் என்று அவர் காட்டினார்; சாராம்சத்தில் பூர்ஷ்வா அரசு சிறுபான்மையினரின் (உற்பத்திச் சாதனங்களைத் தம்மிடம் வைத்திருக்கும் தனியுடைமையாளர்களாகிய சுரண்டலாளர்களின்) ஜனநாயகமாகும், இது பெரும்பான்மை மக்களை ஒடுக்கும் இயந்திரமாகப் பயன்படுத்தப்படுகிறது. புதிய வகையான அரசா

கிய பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் இதற்கு மாற்றாக வருகிறது, இதில் இரண்டு அம்சங்களைத் திட்டவட்டமாக வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். ஒரு புறம், முதலில், புரட்சியின் ஆரம்ப கட்டங்களில் தொழிலாளி வர்க்கம், முறியடிக்கப்பட்ட சுரண்டும் வர்க்கங்களின் எதிர்ப்பை ஒடுக்க அரசைப் பயன்படுத்துகிறது. மறு புறம், வரலாற்றிலேயே முதன்முதலாக உண்மையான மக்களாட்சி நிலைநாட்டப்படுகிறது, ஜனநாயகம் பெரும்பான்மை மக்களையும் தழுவுகிறது, சகலவித ஒடுக்குமுறை, சுரண்டலிலிருந்தும் உழைப்பாளிகள் விடுவிக்கப்படுகின்றனர்.

புதிய சமுதாயம், சோஷலிசம், கம்யூனிசம் என்ற இரண்டு தொடர்ச்சியான கட்டங்களைக் கடந்து செல்கிறது என்று வி.இ. லெனின் காட்டினார். சமுதாயத்தின் பொருளாதார, அரசியல், கலாசார வளர்ச்சியில் சோஷலிசம் கீழ்நிலைக் கட்டம், கம்யூனிசம் மேல்நிலைக் கட்டமாகும். சோஷலிசத்தின் கீழ், பொதுச் சொத்தாக உள்ள உற்பத்திச் சாதனங்களின் பால் எல்லா உழைப்பாளிகளும் சமமானவர்கள். அவர்கள் ''திறமைக்கேற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம்'' என்ற சோஷலிசக் கோட்பாட்டின்படி நுகர்வுப் பண்டங்களைப் பெறுகின்றனர். இதற்கு அரசு அவசியம் வேண்டும்— இது ஒவ்வொரு நபரின் உழைப்பு அளவையும் நுகர்வு அளவையும் கண்காணிக்கிறது.

கம்யூனிசம் என்ற உயர் கட்டத்தில் வி.இ. லெனின் அரசு உதிர்ந்து உலருவதற்கான நிபந்தனைகளைச் சுட்டிக்காட்டினார்: உற்பத்திச் சக்திகளும் உழைப்பின் உற்பத்தித் திறனும் உயர்வாக வளர்ச்சியடைதல், உடலுழைப்பாளர்களுக்

கும் மூளையுழைப்பாளர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் மறைதல், இவர்களுடைய பன்முக வளர்ச்சி, பொருளாயத நலன்கள் அபரிமிதமாக இருத்தல், மக்களின் கலாசார மட்டம், சுய உணர்வை உயர்த்தல், உழைப்பை சமுதாய உறுப்பினர்கள் அனைவரின் முதல் ஜீவாதார தேவையாக மாற்றுதல் ஆகியவைதான் அந்நிபந்தனைகளாகும். சமுதாய நிர்வாகம் முழுவதிலும் உழைப்பாளிகள் அனைவரும் மேன்மேலும் முழுமையாகப் பங்கேற்பதற்கும் பெரும் முக்கியத்துவம் உண்டு. சமூக சுயநிர்வாகம் நிலை பெற்று, பொது நலனுக்கான உழைப்பு ஒவ்வொருவருக்கும் பழக்கமானதாக மாறும் பொழுது, வி.இ. லெனின் சுட்டிக்காட்டியபடி, சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாற, ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப'' என்ற கோட்பாட்டிற்கு மாற கதவு அகலத் திறந்து விடப்படும், அதோடு அரசு முழுமையாக உதிர்ந்து உலரும்.

கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம் (*பிராக்கேயுக்கு எழுதிய கடிதம், 1875 மே 5, 1891*இல்தான் *Neue Zeit, IX, 1*இல் *அச்சிடப்பட்டது; ருஷ்யனில் ஒரு தனிப்பதிப்பாய் வந்துள்ளது)* என்ற தமது நூலில் மார்க்ஸ் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமாய் விளக்கிக் கூறுகிறார். சிறப்புமிக்க இந்நூலின் எதிர்வாதப் பகுதி லஸ்ஸாலியத்தை விமர்சிக்கிறது. இப்பகுதி இந்நூலின் கருப் பகுதியை—அதாவது கம்யூனிசத்தின் வளர்ச்சிக்கும் அரசு உலர்ந்து உதிர்வதற்கும் இடையிலுள்ள தொடர்பைப் பகுத்தாயும் பகுதியை—ஓரளவுக்குப் பின்னுக்குத் தள்ளுவதாய் உள்ளது.

**1. பிரச்சினையை மார்க்ஸ் எடுத்துரைத்தல்**

1875 மே 5இல் பிராக்கேயுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தையும் 1875 மார்ச் 28இல் பெபெலுக்கு எங்கெல்ஸ் எழுதிய (மேலே நாம் ஆராய்ந்த) கடிதத்தையும் மேலெழுந்தவாரியாய் ஒப்பிட்டுப் பார்க்கையில், எங்கெல்சைக் காட்டிலும் அதிக அளவு மார்க்ஸ் ''அரசின் ஆதரவாளராய்'' இருந்ததாகவும், அரசென்னும் பிரச்சினையில் இவ்விரு ஆசிரியர்களுக்கும் கணிச அளவு கருத்து வேறுபாடு இருந்ததாகவும் தோன்றக் கூடும்.

அரசு பற்றிய எல்லாப் பேச்சையும் அறவே விட்டொழித்து விடும்படி, ''அரசு'' என்னும் சொல்லையே வேலைத்திட்டத்திலிருந்து நீக்கி விட்டு அதற்குப் பதில் ''கூட்டுச் சமூகம்'' என்னும் சொல்லை உபயோகிக்கும்படி பெபெலுக்கு எங்கெல்ஸ் ஆலோசனை கூறினார். அரசென்

னும் சொல்லின் சரியான பொருளில் பாரிஸ் கம்யூனானது ஓர் அரசாய் இருக்கவில்லை என்பதாகவும் எங்கெல்ஸ் கூறினார். ஆனால் மார்க்ஸ் ''கம்யூனிச சமுதாயத்துக்குரிய வருங்கால அரசு'' என்பதாய்க் கூடப் பேசினார், அதாவது கம்யூனிசத்திலுங்கூட அரசு அவசியமே என்பதாய் அவர் ஏற்றுக்கொண்டதாய்த் தோன்றக் கூடும்.

இது போன்ற கருத்து அடிப்படையிலேயே தவறானது. மேலும் நெருங்கிச் சென்று பரிசீலித்தோமாயின் அரசு குறித்தும் அது உலர்ந்து உதிரும் நிகழ்ச்சி குறித்தும் மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரின் கருத்துகளும் எந்த வேறுபாடுமின்றி முழுதொத்தவையே என்பதும், மேலே குறிப்பிடப்பட்ட மார்க்சின் தொடர் உலர்ந்து உதிர்ந்து கொண்டிருக்கும் நிலையிலுள்ள அரசைத்தான் குறிப்பதாகும் என்பதும் தெளிவாகின்றன.

''உலர்ந்து உதிரும்'' இந்த வருங்கால நிகழ்ச்சி நடைபெறும் தருணத்தை வரையறுத்துக் கூற முடியாது என்பது தெளிவு—இது நீண்ட நெடும் நிகழ்ச்சிப் போக்காய் இருக்குமென்பது வெளிப்படையாதலால் இவ்வாறு வரையறுத்துக் கூறுவது மேலும் இயலாததாகி விடுகிறது. மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் இங்கு ஏதோ கருத்து வேறுபாடு இருப்பதாய்த் தோன்றுவதற்குக் காரணம், அவர்கள் வெவ்வேறு துறைகளைப் பரிசீலித்தும், வெவ்வேறு குறிக்கோள்களைப் பின்பற்றியதும்தான். அரசு சம்பந்தமாய் நிலவிய தப்பெண்ணங்கள் (லஸ்ஸாலே இடத்தும் இவை பெருமளவு இருந்தன) எவ்வளவு அபத்தமானவை என்பதை பெபெலுக்குக் கண்கூடாகவும் எடுப்பாகவும் முழு உருவிலும் தெரியப்படுத்த எங்கெல்ஸ் முற்பட்டார். ஆனால் மார்க்ஸ் இந்தப் பிரச்சினையைப் போகிற போக்கில் இடை நிகழ்வாகவே குறிப்பிட்டுச் சென்றார். மார்க்ஸ் கருத்து செலுத்தியது வேறொரு துறை, அதாவது கம்யூனிச சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய துறை.

வளர்ச்சித் தத்துவத்தை—அதன் முரணற்ற, முழுநிறைவான, தேர்ந்தாய்ந்த, சாரப்பொருள் வடிவில்—நவீன முதலாளித்துவத்தின் ஆய்வுக்காகக் கையாளுதலே மார்க்சின் தத்துவம் அனைத்தும். இயற்கையாகவே இந்தத் தத்து

வத்தை முதலாளித்துவத்தின் வரப்போகும் வீழ்ச்சி, வருங் காலக் கம்யூனிசத்தின் வருங்கால வளர்ச்சி ஆகிய இரண் டிலும் கையாளும் பிரச்சினை மார்க்சின் முன் எழுந்தது.

அப்படியானால், எந்த உண்மைகளை அடிப்படையாய்க் கொண்டு வருங்காலக் கம்யூனிசத்தின் வருங்கால வளர்ச்சி குறித்த பிரச்சினையைப் பரிசீலிப்பது?

கம்யூனிசமானது முதலாளித்துவத்திலிருந்து தோன்று வதாகும், வரலாற்று வழியில் முதலாளித்துவத்திலிருந்து வளர்வதாகும், முதலாளித்துவம் பெற்றெடுத்த ஒரு சமு தாய சக்தியின் செயலால் விளைந்த பலனாகும் என்ற உண் மையை அடிப்படையாய்க் கொண்டுதான் இப்பிரச்சினை யைப் பரிசீலிக்க முடியும். கற்பனைப் படைப்பை உருவாக் கும் முயற்சியினை, தெரிந்து கொள்ள முடியாத ஒன்றைப் பற்றிய பயனற்ற ஊகங்களில் இறங்கும் முயற்சியினை மார்க்சிடம் இம்மியும் காண முடியாது. உதாரணமாய், ஒரு புதிய உயிர்வகை குறிப்பிட்ட இந்த வழியில்தான் தோன் றியது, திட்டவட்டமான இந்தத் திசையிலேதான் மாறுத லடைந்து வந்தது என்பது தெரிந்ததும், உயிரியல் விஞ்ஞானி ஒருவர் இந்த உயிர்வகையின் வளர்ச்சியைப் பற்றிய பிரச் சினையை எப்படி ஆராய்வாரோ அதே முறையில்தான் மார்க்ஸ் கம்யூனிசத்தைப் பற்றிய பிரச்சினையை ஆராய்ந் தார்.

அரசுக்கும் சமுதாயத்துக்குமுள்ள உறவு பற்றிய பிரச் சினையில் கோத்தா வேலைத்திட்டம் செய்திடும் குளறுபடி யை மார்க்ஸ் முதற்கண் அகற்றுகிறார். அவர் எழுதியதாவது:

> ''...இன்றைய சமுதாயம் முதலாளித்துவ சமு தாயம். நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும் இச் சமுதாயம் இருந்து வருகிறது; அதிகமாகவோ குறை வாகவோ மத்திய காலக் கூறுகளின் கலப்படத்தி லிருந்து விடுபட்டதாகவும், அந்தந்த நாட்டின் தனிப் பட்ட வரலாற்று வளர்ச்சியால் அதிகமாகவோ குறை வாகவோ பாதிக்கப்பட்டதாகவும், அதிகமாகவோ குறைவாகவோ வளர்ச்சியுற்றதாகவும் இருந்து வரு கிறது. மறு புறத்தில் 'இன்றைய அரசு' அந்தந்த

நாட்டின் எல்லையைக் கடந்ததும் மாறி விடுகிறது. இது ஸ்விட்சர்லாந்தில் இருப்பதிலிருந்து பிரஷ்ய-ஜெர்மன் சாம்ராஜ்யத்தில் மாறுபட்டதாயும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பதிலிருந்து இங்கிலாந்தில் மாறுபட்டதாயும் உள்ளது. ஆகவே 'இன்றைய அரசு' என்பது ஒரு கற்பனையே ஆகும்.

''இருப்பினும் நாகரிகமடைந்த பல்வேறு நாடுகளிலும் இருந்து வரும் பல்வேறு அரசுகளும் வடிவில் வெவ்வேறு வகைப்பட்டதாய் இருப்பினும், இவை யாவற்றுக்கும் பொதுவானது என்னவெனில், ஒன்று இன்னொன்றைக் காட்டிலும் அதிகமாகவோ குறைவாகவோ முதலாளித்துவ வழியில் வளர்ச்சி பெற்றிருக்கிறதே தவிர இவை நவீன முதலாளித்துவ சமுதாயத்தின் அடிப்படையில் அமைந்தவையே. ஆதலால் இவை சில முக்கிய பொது இயல்புகளைப் பெற்றிருக்கின்றன. இந்த அர்த்தத்தில் 'இன்றைய அரசு' என்பதாய், இவ்வரசின் தற்போதைய மூலவேரான முதலாளித்துவ சமுதாயம் மடிந்து மறைந்து விடும் அந்த வருங்கால அரசிலிருந்து வேறுபடுத்திப் பேசுவது சாத்தியமே.

''ஆகவே இக்கேள்வி எழுகிறது: கம்யூனிச சமுதாயத்தில் அரசில் ஏற்படப் போகும் மாறுதல் என்ன? வேறு விதமாய்க் கூறினால், தற்போதுள்ள அரசின் பணிக்கு ஒப்பான எந்த சமுதாயப் பணிகள் அப்பொழுது எஞ்சியிருக்கும்? இந்தக் கேள்விக்கு விஞ்ஞான வழியில் மட்டுமே பதிலளிக்க முடியும். 'மக்கள்' என்னும் சொல்லை 'அரசு' என்னும் சொல்லுடன் ஆயிரம் வழியில் இணைப்பதன் மூலம் சாண் அளவுங் கூட இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வினை நெருங்கி வந்து விட முடியாது....''

''மக்கள் அரசு'' என்ற எல்லாப் பேச்சுகளையும் இவ்விதம் எள்ளி நகையாடிய பின் மார்க்ஸ் பரிசீலனைக்குரிய கேள்வியை வகுத்திட்டு, இதற்கு விஞ்ஞான வழிப்பட்ட விடை காண விரும்புவோர் உறுதியாய் நிலைநாட்டப்பெற்ற

விவரங்களை மட்டுமே உபயோகிக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கிறார்.

வளர்ச்சித் தத்துவம் அனைத்தாலும், மொத்தத்தில் விஞ்ஞானத்தாலும் மிகவும் துல்லியமாய் நிலைநாட்டப்பட்டிருக்கும் முதலாவது உண்மை என்னவெனில்—இந்த உண்மையைக் கற்பனாவாதிகள் உதாசீனம் செய்தனர், சோஷலிசப் புரட்சியைக் கண்டு மிரளும் இன்றைய சந்தர்ப்பவாதிகளும் இதை உதாசீனம் செய்து வருகிறார்கள்—முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்வதைக் குறிக்கும், வரலாற்று வழிப்பட்ட ஒரு தனிக் கட்டம் அல்லது இடைக்காலம் நிச்சயம் இருக்க வேண்டும் என்பதே.

## 2. முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லுதல்

மார்க்ஸ் மேலும் கூறியதாவது:

> ''...முதலாளித்துவ சமுதாயத்துக்கும் கம்யூனிச சமுதாயத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்றாய்ப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாய் அரசியல் இடைக்கால கட்டமும் ஒன்று உள்ளது. இந்த இடைக்காலத்தில் அரசு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் சர்வாதிகாரமாகவே அன்றி வேறு எதுவாகவும் இருக்க முடியாது....''

தற்கால முதலாளித்துவ சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கம் ஆற்றும் பாத்திரத்தைப் பற்றிய பகுத்தாய்வின் அடிப்படையிலும், இந்த சமுதாயத்தின் வளர்ச்சி சம்பந்தமான விவரங்களின் அடிப்படையிலும், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்குமுள்ள ஒன்றுக்கொன்று எதிரான நலன்களிடையே இணக்கம் காண முடியாத நிலையின் அடிப்படையிலும் மார்க்ஸ் இம்முடிவை வந்தடைகிறார்.

இதன்முன் இப்பிரச்சினை பின்வருமாறு கூறப்பட்டது: பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையைப் பெறும் பொருட்டு முதலாளி வர்க்கத்தை வீழ்த்தி, அரசியல் அதி

காரத்தை வென்று தனது புரட்சிகரச் சர்வாதிகாரத்தை நிறுவியாக வேண்டும்.

இப்பொழுது இப்பிரச்சினை ஓரளவு வேறுவிதமாய்க் கூறப்படுகிறது: முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து—இச் சமுதாயம் கம்யூனிசத்தை நோக்கி வளர்ந்து கொண்டிருக் கிறது—கம்யூனிச சமுதாயத்துக்கு மாறிச்செல்வது ''அரசி யல் இடைக்காலக் கட்டம்'' ஒன்று இல்லாமல் முடியாத காரியம்; இந்த இடைக்காலக் கட்டத்தில் அரசானது பாட் டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் சர்வாதிகாரமாய் மட்டுமே இருக்க முடியும்.

அப்படியானால் இந்தச் சர்வாதிகாரம் ஜனநாயகத்திடம் கொண்டுள்ள உறவு என்ன?

''பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயர்த்துவது'', ''ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் வெற்றி பெறுவது'' என்று இரு கருத்தோட்டங்களையும் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** ஒருங்கே குறிப்பிடுவதுடன் நின்று விடுவதை நாம் ஏற்கெனவே கண்டோம். முதலாளித் துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்கையில், மேலே கூறப்பட்டவை யாவற்றின் அடிப்படையிலும் ஜனநாயகம் எப்படி மாற்றமடைகிறது என்பதை மேலும் துல்லியமாய் நிர்ணயிக்கலாம்.

முதலாளித்துவ சமுதாயத்தில், மிகவும் சாதகமான நிலைமைகளில் அது வளர்வதாய்க் கொள்வோமாயின், ஜன நாயகக் குடியரசில் ஓரளவு முழுமையான ஜனநாயகம் இருக் கக் காண்கிறோம். ஆனால் இந்த ஜனநாயகம் எப்பொழுதும் முதலாளித்துவச் சுரண்டலால் எழுப்பப்படும் குறுகலான வரம்புகளால் இறுக்கப்பட்டுள்ளது. ஆகவே இது நடை முறையில் எப்பொழுது சிறுபான்மையோருக்கான ஜனநாயக மாகத்தான், சொத்துடைத்த வர்க்கங்களுக்கு மட்டுமேயான, செல்வந்தர்களுக்கு மட்டுமேயான ஜனநாயகமாகத்தான் இருக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் சுதந்திரமானது பண்டை கிரேக்கக் குடியரசுகளில் இருந்ததே அதே போல ஏறத்தாழ அடிமையுடைமையாளர்களுக்கான சுதந்திரமாகத் தான் எப்பொழுதுமே இருந்து வருகிறது. முதலாளித்துவச் சுரண்டலின் நிலைமைகள் காரணமாய் தற்காலக் கூலி அடி

மைகள் பட்டினியாலும் வறுமையாலும் நசுக்கப்பட்டு ''ஜன நாயகம் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி'', ''அரசியல் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி'' அவல நிலையில் இருத்தப்பட்டிருக்கிறார்கள். நிகழ்ச்சிகள் சாதாரணமாய், சமாதான வழியில் ஓடிக் கொண்டிருக்கையில் பெரும்பான்மையான மக்கள் சமூக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் ஈடுபட முடியாதவாறு தடுக்கப்பட்டு விடுகிறார்கள்.

இப்படிச் சொல்வது முற்றிலும் சரியே என்பதை வேறு எதையும் விட ஜெர்மனி மிகவும் தெளிவாய் ஊர்ஜிதம் செய்கிறது எனலாம். எப்படியெனில், அரசியலமைப்புச் சட்ட நெறி அங்கே குறிப்பிடத்தக்க நீண்ட காலத்துக்கு—ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கு *(1871—1914)*—தொடர்ந்து நிலைத்திருந்தது. இந்தக் காலத்தில் ''சட்ட நெறியைப் பயன்படுத்திக் கொள்வதில்'' சமூக-ஜனநாயக வாதிகள் ஏனைய நாடுகளை விட அங்கே மிகவும் அதிகமாய் சாதிக்க முடிந்தது. உலகில் வேறு எங்கும் முடிந்ததை விட அதிகமான விகிதாச்சாரத்தில் தொழிலாளர்களை அவர்கள் அரசியல் கட்சியாய் ஒன்றுதிரட்டிக் கொள்ள முடிந்தது.

முதலாளித்துவ சமுதாயத்தில் இதுகாறும் காணப்பட்டிருக்கும் அரசியல் உணர்வு படைத்து ஊக்கமாய்ச் செயல்படும் கூலி அடிமைகளின் இந்த மிக உயர்ந்த விகிதாச்சாரம் என்ன தெரியுமா? ஒன்றரைக் கோடிக் கூலி உழைப்பாளர்களில் பத்து லட்சம் பேர் சமூக-ஜனநாயகக் கட்சியில் உறுப்பினர்கள்! ஒன்றரைக் கோடி பேரில் முப்பது லட்சம் பேர் தொழிற் சங்கங்களில் ஒன்றுபட்டிருக்கிறார்கள்!

மிகச் சொற்பமான சிறுபான்மையோருக்கு ஜனநாயகம், செல்வந்தர்களுக்கு ஜனநாயகம்—இதுதான் முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவும் ஜனநாயகம். முதலாளித்துவ ஜன நாயகத்தின் கட்டமைவை மேலும் நெருங்கிச் சென்று பார்த்தோமாயின், வாக்குரிமையின் ''அற்ப''—அற்பமானவை என்று சொல்லப்படுகிற—விவரங்களிலும் (குடியிருப்புத் தகுதி, பெண்களின் நீக்கம் முதலானவை), பிரதிநிதித்துவ உறுப்புக்களின் செயல் முறையிலும், பொதுக் கூட்ட உரிமைக்கு நடைமுறையில் இருந்து வரும் தடங்கல்களிலும் (பொதுக் கட்டிடங்கள் ''ஓட்டாண்டிகளுக்கு'' உதவாதவை!),

நாளேடுகளின் முற்றிலும் முதலாளித்துவ முறையிலான ஏற்பாட்டிலும், இன்ன பிறவற்றிலும் எங்கும் ஜனநாயகத்துக்குக் கட்டுக்கு மேல் கட்டு போடப்பட்டிருப்பதைத்தான் காண்கிறோம். ஏழைகளுக்கு இடப்பட்டுள்ள இந்தக் கட்டுகளும் விலக்குகளும் ஒதுக்கல்களும் தடங்கல்களும் அற்ப சொற்பமாகவே தோன்றும்; முக்கியமாய் இல்லாமையை நேரில் அறிந்திராதோருக்கும், ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடன் அவற்றின் வெகுஜன வாழ்வில் என்றுமே நெருங்கிய தொடர்பு கொண்டிராதோருக்கும் (பூர்ஷ்வா நூலாசிரியர்களிலும் அரசியல்வாதிகளிலும் பத்தில் ஒன்பது பேர், ஏன் நூற்றில் தொண்ணூற்று ஒன்பது பேர் என்று கூடச் சொல்லலாம், இந்த ரகத்தவரே) இப்படித்தான் அற்பசொற்பமாகவே தோன்றும். ஆனால் ஒட்டுமொத்தத்தில் இந்தக் கட்டுகள் ஏழைகளை அரசியலிலிருந்து, ஜனநாயகத்தில் நேரடியாய் பங்கு கொள்வதிலிருந்து ஒதுக்கி வெளியே தள்ளி விடுகின்றன.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் இந்தச் சாராம்சத்தை மார்க்ஸ் மிக நன்றாய் உணர்ந்திருந்தார். கம்யூனுடைய அனுபவத்தை ஆராய்கையில் ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்கும் வர்க்கத்தின் எந்தப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் தமது பிரதிநிதிகளாய் அமர்ந்து தம்மை அடக்கியொடுக்க வேண்டுமென்று சில ஆண்டுகளுக்கு ஒரு முறை தீர்மானிக்க அனுமதிக்கப்படுகிறார்கள் என்று கூறினார்!

தவிர்க்க முடியாதவாறு குறுகலாகவும், ஏழைகளைத் திருட்டுத்தனமாய் ஒதுக்கித் தள்ளி விடுவதாகவும், ஆகவே கபடமாகவும் முழுக்க முழுக்க பொய்க் கூற்றாகவும் இருக்கும் இந்த முதலாளித்துவ ஜனநாயகத்திலிருந்து முன்னோக்கிச் செல்வதற்குரிய வளர்ச்சி, மிதவாதப் பேராசிரியர்களும் குட்டி பூர்ஷ்வா சந்தர்ப்பவாதிகளும் நம்மை நம்ப வைக்க விரும்புவது போல, எளிய முறையிலும் நேரடியாகவும் ஒழுங்காகவும் ''மேலும் மேலும் கூடுதலாக ஜனநாயகத்தை'' நோக்கி நடைபெறுவதில்லை. இல்லை, முன்னோக்கிச் செல்கிற வளர்ச்சியானது, அதாவது கம்யூனிசத்துக்கான வளர்ச்சியானது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் வாயிலாகவே நடைபெறுகிறது, வேறு எவ்வழியிலும் அல்ல.

ஏனெனில் முதலாளித்துவச் சுரண்டலாளர்களின் எதிர்ப்பை வேறு யாராலும் அல்லது வேறு எந்த வழியிலும் தகர்த்திட முடியாது.

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமானது, அதாவது ஒடுக்குமுறையாளர்களை அடக்குவதற்காக ஒடுக்கப்பட்ட வர்களுடைய முன்னணிப் படை ஆளும் வர்க்கமாய் அமை யும் ஒழுங்கமைப்பானது ஜனநாயகத்தை விரிவாக்குவதோடு மட்டும் நின்று விடக் கூடியதல்ல. ஜனநாயகத்தை பிரம் மாண்டமான அளவில் விரிவாக்குவதுடன், பண மூட்டை களுக்கான ஜனநாயகமாய் இராது முதன் முதலாய் ஏழைகளுக்கான ஜனநாயகமாய், மக்களுக்கான ஜனநாயக மாய் ஆக்குவதுடன் கூடவே ஒடுக்குமுறையாளர்களும் சுரண்டலாளர்களும் முதலாளிகளுமானோரின் சுதந்திரத் துக்குப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் வரிசையாகப் பல கட்டுகளை விதித்திடுகிறது. மனிதகுலத்தைக் கூலி அடிமை முறையிலிருந்து விடுவிக்கும் பொருட்டு இவர்களை நாம் அடக்கியாக வேண்டும், இவர்களுடைய எதிர்ப்பை வன் முறை கொண்டு நசுக்கியாக வேண்டும். அடக்கியாளுதல் இருக்கும் வரை, பலாத்காரம் இருக்கும் வரை சுதந்திரத் துக்கோ ஜனநாயகத்துக்கோ இடமில்லை என்பது தெளிவு.

பெபெலுக்கு எழுதிய கடிதத்தில் எங்கெல்ஸ் இதனை மிகச் சிறப்பான முறையில் எடுத்துரைத்தார். ‘‘பாட்டாளி வர்க்கத்துக்கு அரசு தேவைப்படுவது தனது எதிராளிகளை அடக்கி இருத்துவதற்காகவே அன்றி சுதந்திரத்தின் நலன் களுக்காக அல்ல; சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்திய மாகியதும் அரசு அரசாய் இருப்பதற்கு முடிவு ஏற்படுகிறது’’ என்று இக்கடிதத்தில் எங்கெல்ஸ் கூறியது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

மிகப் பெருவாரியான மக்களுக்கு ஜனநாயகம், சுரண்ட லாளர்களையும் மக்களின் ஒடுக்குமுறையாளர்களையும் வன் முறை கொண்டு அடக்குதல், அதாவது ஜனநாயகத்தி லிருந்து விலக்கி ஒதுக்குதல்—முதலாளித்துவத்திலிருந்து கம் யூனிசத்துக்கு மாறிச்செல்லுகையில் இதுவே ஜனநாயகத்தில் ஏற்படும் மாறுதல்.

கம்யூனிச சமுதாயத்தில்தான் — முதலாளிகளுடைய

எதிர்ப்பு அடியோடு நசுக்கப்பட்டு, முதலாளிகள் மறைந்து போய், வர்க்கங்கள் இல்லாமற் போய்விடும் (அதாவது, சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே சமுதாய உற்பத்திச் சாதனங்களுடன் அவர்களுக்குள்ள உறவு சம்பந்தமாய் எந்தப் பாகுபாடும் இல்லாமற் போய்விடும்) அப்பொழுது மட்டும் தான் ''அரசு... இருப்பதற்கு முடிவு ஏற்படுகிறது'', ''சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்தியமாகிறது''. அப்பொழுது தான் மெய்யாகவே முழுநிறைவான ஜனநாயகம், விதிவிலக்கு எதுவுமில்லாத ஜனநாயகம் சாத்தியமாகிக் கைவரப் பெறுகிறது. அப்பொழுதுதான் ஜனநாயகம் உலர்ந்து உதிரத் தொடங்கும். முதலாளித்துவ அடிமை வாழ்விலிருந்தும் முதலாளித்துவச் சுரண்டலின் சகிக்கவொண்ணாத கொடுமைகளிலிருந்தும் மிருகத்தனத்திலிருந்தும் அபத்தங்களிலிருந்தும் இழுக்குகளிலிருந்தும் மக்கள் விடுபட்டு, பல நூறு ஆண்டுகளாய் அறிந்துள்ள ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அரிச்சுவடி நீதிவிளக்கங்களில் எல்லாம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வந்துள்ள சமுதாய ஒட்டுறவின் சர்வசாதாரண விதிகளைப் பற்றியொழுகச் சிறிது சிறிதாய்ப் பழகிக் கொள்வார்கள். பலாத்காரம் இல்லாமலே, பலவந்தம் இல்லாமலே, கீழ்ப்படிதல் இல்லாமலே, பலவந்தத்துக்கான அரசு எனப்படும் தனிவகை இயந்திரம் இல்லாமலே அவர்கள் இவ்விதிகளைப் பற்றியொழுகப் பழகிக் கொள்வார்கள்.

''அரசு உலர்ந்து உதிர்கிறது'' என்னும் தொடர் நன்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் இத்தொடர் இந்நிகழ்ச்சிப் போக்கின் படிப்படியாய் நடந்தேறும் தன்மை, தன்னியல்பாய்த் தானே நடந்தேறும் தன்மை ஆகிய இரண்டையும் குறிப்பிடுவதாய் உள்ளது. பழக்கத்தால் மட்டுமே இது போன்ற விளைவு ஏற்பட முடியும், ஐயப்பாட்டுக்கு இடமின்றி நிச்சயம் ஏற்படவும் செய்யும். ஏனெனில் சுரண்டல் இல்லாத போது; ஆத்திரம் உண்டாக்கக் கூடியதும் கண்டனத்தையும் கலகத்தையும் எழச் செய்து அடக்க வேண்டியதற்கான தேவையைத் தோற்றுவிப்பதும் இல்லாத போது, மக்கள் எப்படித் தயக்கமின்றி சமுதாய ஒட்டுறவுக்கு அவசியமான விதிகளை பற்றியொழுகப் பழகிக்

கொண்டு விடுகிறார்கள் என்பதற்கு லட்சோபலட்சக்கணக் கான எடுத்துக்காட்டுகளை நம்மைச் சுற்றிலும் காண் கிறோம்.

இவ்வாறாக, முதலாளித்துவ சமுதாயத்தில் இருக்கும் ஜனநாயகம் வெட்டிக் குறுக்கப்பட்ட, அலங்கோலமான, பொய்யான ஜனநாயகம்; செல்வந்தர்களுக்கு மட்டுமேயான, சிறுபான்மையோருக்கான ஜனநாயகம். கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லும் காலத்துக்குரிய பாட்டாளி வர்க்கச் சர் வாதிகாரம் முதன்முதலாய் மக்களுக்கான, பெரும்பான்மை யோருக்கான ஜனநாயகத்தைத் தோற்றுவிக்கிறது; அத னுடன் கூடவே சுரண்டலாளர்களான சிறுபான்மையோரைத் தேவையான அளவுக்கு அடக்கவும் செய்கிறது. மெய்யாகவே முழுநிறைவான ஜனநாயகத்தைத் தோற்றுவிக்க வல்லது கம்யூனிசம் ஒன்று மட்டுமே. எவ்வளவுக்கு எவ்வளவு இது முழுநிறைவானதாய் இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு சீக்கிரமாய் அது தேவையற்றதாகி தானாகவே உலர்ந்து உதிர்கிறது.

வேறு விதமாய்க் கூறினால், முதலாளித்துவத்தில் அர சென்னும் சொல்லின் முறையான அர்த்தத்தைக் குறிக்கும், அதாவது ஒரு வர்க்கம் பிறிதொன்றை, அதுவும் சிறுபான் மையோர் பெரும்பான்மையோரை அடக்குவதற்கான தனி வகைப் பொறியமைவான அரசு இருக்கிறது. சுரண்டப்படும் பெரும்பான்மையோரைச் சுரண்டும் சிறுபான்மையோர் முறையாக அடக்குவதென்னும் இத்தகைய செயல் வெற்றி பெற இயற்கையாகவே, அடக்கியொடுக்கும் பணியில் அளவு கடந்த மூர்க்கமும் மிருகத்தனமும் அவசியமாகி விடுகின்றன; இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வேண்டியதாகி விடு கிறது. இந்த வெள்ளத்தில் நடந்துதான் மனிதகுலம் அடிமை முறை, பண்ணையடிமை அமைப்பு, கூலியுழைப்பு ஆகிய வற்றின் வழியே சென்று கொண்டிருக்கிறது.

மேலும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்கையிலும் அடக்க வேண்டியது இன்னும் தேவை யாகவே இருக்கிறது. ஆனால் இப்பொழுது அது சுரண்டப் பட்ட பெரும்பான்மையோர் சுரண்டும் சிறுபான்மையோரை

அடக்குவதாகிறது. அடக்குவதற்கான ஒரு தனிவகை இயந்திரம், ஒரு தனிவகைப் பொறியமைவு, ''அரசு'' இன்னமும் தேவையாகவே இருக்கிறது, ஆனால் இப்பொழுது அது மாறிச்செல்லும் கட்டத்துக்குரிய அரசாய் அமைகிறது. அரசென்னும் சொல்லின் சரியான பொருளில் இனி அது அரசாய் இல்லை. ஏனெனில் சிறுபான்மையோரான சுரண்டலாளர்களை நேற்றைய கூலி அடிமைகளான பெரும்பான்மையோர் அடக்குவது ஒப்பளவில் மிகச் சாதாரணமான, எளிதான, இயற்கையான பணி ஆகுமாதலால், அடிமைகள் அல்லது பண்ணையடிமைகள் அல்லது கூலி உழைப்பாளர்களின் எழுச்சிகளை அடக்குவதற்கு வேண்டியிருந்ததைப் போலல்லாது மிகச் சொற்ப அளவே இரத்தம் சிந்தும்படி இருக்கும், மனிதகுலத்துக்கு மிகச் சொற்ப சேதமே உண்டாகும். ஜனநாயகத்தை மிகவும் விரிவாக்கி மக்களில் மிகப் பிரம்மாண்டமான பெரும்பான்மையோருக்குக் கிட்டச் செய்வது இப்பணிக்கு ஒவ்வாததல்ல ஆதலால், அடக்குவதற்கான ஒரு தனிவகைப் பொறியமைவின் தேவை மறையத் தொடங்கி விடும். இயல்பாகவே சுரண்டலாளர்களால் மிகச் சிக்கலான பொறியமைவு ஒன்று இல்லாமல் மக்களை அடக்க முடியவில்லை. ஆனால் மக்களால் மிக எளிய ''பொறியமைவு'' கொண்டே, சுரண்டலாளர்களைஅடக்கி விட முடியும்; பெருமளவுக்குப்''பொறியமைவு''இல்லாமலே,ஒரு தனிவகை இயந்திரம் இன்றியே, சாதாரண ஏற்பாடான ஆயுதமேந்திய மக்களின் ஒழுங்கமைப்பைக் கொண்டே (தொழிலாளர்கள், படையாட்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளைப் போன்ற ஒழுங்கமைப்பு என்று முன்னோடிச் சென்று வரப் போவதைக் குறிப்பிடலாம்), இப்பணியைச் செய்து விடலாம்.

முடிவில், கம்யூனிசம் ஒன்று மட்டும்தான் அரசை அறவே தேவையற்றதாக்கும். ஏனெனில் கம்யூனிசத்தில் அடக்கப்பட வேண்டியவர்கள் யாரும் இல்லை—ஒரு வர்க்கம் என்ற அர்த்தத்தில், மக்களில் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு எதிராய் முறையான போராட்டம் நடத்துவது என்ற அர்த்தத்தில் ''யாரும் இல்லை''. நாங்கள் கற்பனாவாதிகளல்ல; தனிநபர்கள் அடாச்செயல்கள் புரியக் கூடும், இது சாத்தியமே,

தவிர்க்க முடியாததே என்பதையோ, இத்தகைய அடாச் செயல்களைத் தடுத்து நிறுத்துவது அவசியமே என்பதையோ நாங்கள் ஒரு போதும் மறுக்கவில்லை. ஆனால் முதலாவதாக, அடக்குவதற்கான ஒரு தனிவகைப் பொறியமைவு, ஒரு தனிவகை இயந்திரம் இதற்குத் தேவையில்லை; ஆயுதமேந்திய மக்கள் தாமே இதனைச் செய்து விடுவார்கள்—நாகரிகமடைந்த மக்கள் திரள் எதுவும் நவீன சமுதாயத்தில் உடனே தலையிட்டு அடிதடிச் சண்டையை நிறுத்துவது போல, அல்லது பெண் ஒருத்தி தாக்கப்படுவதைத் தடுப்பது போல, அவர்கள் இதனைச் சுலபமாகவும் உடனடியாகவும் செய்து விடுவார்கள். இரண்டாவதாக, சமுதாய ஒட்டுறவுக்குரிய விதிகளை மீறுவதால் வரும் விளைவான இந்த அடாச் செயல்களின் அடிப்படை சமூகக் காரணம் மக்கள் உட்படுத்தப்பட்டுள்ள சுரண்டலும் அவர்களை வதைக்கும் இல்லாமையும் வறுமையுமேதான் என்று நமக்குத் தெரியும். இந்தப் பிரதான காரணம் நீக்கப்பட்டதும் அடாச்செயல்கள் தவிர்க்க முடியாதவாறு ''உலர்ந்து உதிரத்'' தொடங்கி விடும். எவ்வளவு விரைவாய், எந்த வரிசையில் நடந்தேறும் என்பது தெரியாது, ஆனால் அவை உலர்ந்து உதிர்ந்து விடும் என்பது நமக்குத் தெரியும். அவை உலர்ந்து உதிரும் போது அரசும் உலர்ந்து உதிரும்.

கற்பனாவாதப் படைப்புகளை எழுப்பாமல், மார்க்ஸ் இந்த வருங்காலத்தைப் பற்றி இப்பொழுது வரையறுத்துச் சொல்லக் கூடியதை, அதாவது கம்யூனிச சமுதாயத்தின் கீழ்க் கட்டத்துக்கும் உயர் கட்டத்துக்கும் (படிகள், நிலைகள்) இடையிலுள்ள வேறுபாட்டை மேலும் பூரணமாய் வரையறுத்துச் சொன்னார்.

### 3. கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டம்

சோஷலிசத்தில் தொழிலாளிக்கு அவனுடைய உழைப்பின் ''குறைக்கப்படாத'' அல்லது ''முழுமையான உற்பத்திப் பொருள்'' கிடைக்குமென்று லஸ்ஸால் கூறிய கருத்து

தவறென்பதை நிரூபிக்க கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனத்தில் மார்க்ஸ் விவரமான பரிசீலனையில் இறங்குகிறார். சமுதாயத்தினுடைய சமூக உழைப்பு அனைத்திலுமிருந்து காப்பு நிதி ஒன்றைக் கழிக்க வேண்டுமென்பதை, பொருளுற்பத்தியை விரிவாக்குவதற்கும், இயந்திரங்களின் ''தேய்மானத்துக்கு'' மாற்றீடு செய்வதற்கும், இன்ன பிறவற்றுக்குமான நிதிகளைக் கழிக்க வேண்டுமென்பதை மார்க்ஸ் தெளிவுபடுத்துகிறார். பிறகு நுகர்வுப் பொருட்களிலிருந்து நிர்வாகச் செலவுகளுக்கும், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், முதிய வயதினர் இல்லங்கள் முதலான பலவற்றுக்கும் வேண்டிய நிதியைக் கழிக்க வேண்டும்.

லஸ்ஸாலின் தெளிவற்ற, குழப்படியான, பொதுத் தொடருக்கு (''தொழிலாளிக்கு அவனுடைய உழைப்பின் முழுமையான உற்பத்திப் பொருள்'') பதிலாய், மார்க்ஸ் சோஷலிச சமுதாயம் அதன் விவகாரங்களை உண்மையில் எப்படி நிர்வகித்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்பது குறித்து நிதானித்து மதிப்பீடு செய்கிறார். முதலாளித்துவம் இல்லாது ஒழிந்து விடும் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை நிலைமைகளை மார்க்ஸ் ஸ்தூலமான முறையில் பகுத்தாராய முற்படுகிறார். அவர் கூறுவதாவது:

> ''இங்கு நாம் ஆராய வேண்டியிருப்பது'' (தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்டத்தைப் பகுத்தாராய்கையில்) ''தனது சொந்த அடித்தளங்களின் மீது வளர்ந்தெழுந்துள்ள ஒரு கம்யூனிச சமுதாயமல்ல; மாறாக, முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து வெளித்தோன்றுவதும், ஆகவே தான் உதித்த அந்தப் பழைய சமுதாயத்தினிடமிருந்து பெறப்பட்ட பிறவிக்குறிகள் ஒவ்வொரு வழியிலும்—பொருளாதார வழியிலும் தார்மிக வழியிலும் அறிவு வழியிலும்—இன்னமும் பதிந்திருப்பதுமான கம்யூனிச சமுதாயத்தையே இங்கு நாம் ஆராய்கிறோம்.''

இந்தக் கம்யூனிச சமுதாயத்தைத்தான், முதலாளித்துவத்திலிருந்து பிறந்து இப்பொழுதுதான் வெளியே வந்து

அந்தப் பழைய சமுதாயத்தின் பிறவிக்குறிகள் எல்லா வழியிலும் பதிந்திருக்கும் இந்த சமுதாயத்தைத்தான் மார்க்ஸ் கம்யூனிச சமுதாயத்தின் ''முதல்'' அல்லது கீழ்க் கட்டம் என்று குறிப்பிடுகிறார்.

உற்பத்திச் சாதனங்கள் இப்பொழுது தனிநபர்களது தனியுடைமையாய் இல்லை. உற்பத்திச் சாதனங்கள் சமுதாயம் அனைத்தின் உடைமையாகி விட்டன. சமூகத்துக்குத் தேவையான வேலையில் ஒரு பகுதியைச் செய்திடும் சமுதாய உறுப்பினர் ஒவ்வொருவரும் இவ்வளவு வேலையைச் செய்திருப்பதாய்க் கூறும் சான்றிதழ் ஒன்றை சமுதாயத்திடமிருந்து பெற்றுக் கொள்கிறார். இச்சான்றிதழைக் கொண்டு இதற்கு இணையான அளவுக்கு அவர் நுகர்வுப் பண்டங்களின் பொதுக் களஞ்சியத்திலிருந்து பண்டங்கள் பெறுகிறார். சமூக நிதிக்குச் செல்லும் உழைப்பின் அளவு கழித்தெடுக்கப்பட்ட பின், ஒவ்வொரு தொழிலாளியும் சமுதாயத்திற்குத் தான் அளித்ததற்குச் சமமான அளவில் அதனிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.

''சமத்துவம்'' அரசோச்சுவதாகவே தோன்றுகிறது.

ஆனால் இத்தகைய சமுதாய அமைப்பினை (வழக்கமாய் இது சோஷலிசம் என்று அழைக்கப்படுகிறது, மார்க்ஸ் இதனைக் கம்யூனிசத்தின் முதல் கட்டமெனக் குறிப்பிடுகிறார்) கருத்தில் கொண்டு லஸ்ஸால் இது ''சமத்துவ வினியோகமாகும்'' என்றும், ''உழைப்பின் உற்பத்திப் பொருளில் சமப்பங்கு பெற எல்லோருக்கும் சம உரிமை அளிப்பதாகும்'' என்றும் கூறும் போது, லஸ்ஸால் தவறிழைக்கிறார்; இந்தத் தவற்றை மார்க்ஸ் அம்பலப்படுத்துகிறார்.

''சம உரிமை'' இங்கு இருக்கிறதுதான், ஆனால் இன்னமும் இது ''பூர்ஷ்வா உரிமையேதான்'', ஒவ்வொரு உரிமையையும் போல சமத்துவமின்மையைக் கொண்டதேதான் என்று மார்க்ஸ் கூறுகிறார். ஒவ்வொரு உரிமையும் உண்மையில் ஒரே மாதிரி இல்லாத, ஒருவருக்கொருவர் சமமாயில்லாத வெவ்வேறானோருக்கும் சம அளவீட்டைப் பயன்படுத்துகிறது. ஆகவே ''சம உரிமை'' என்பது உண்மையில் சமத்துவத்துக்குப் பங்கம் செய்கிறது, அநீதியாகி விடுகிறது. ஒவ்வொருவரும் ஏனையவர் எவரை

யும் போல அதே அளவு சமூக உழைப்பு புரிந்து, சமூக உற்பத்திப் பொருளில் (மேற்கூறியபடி கழித்த பின் எஞ்சுவதில்) சமப் பங்கு பெறுகிறார்.

ஆனால் எல்லோரும் ஒரே மாதிரி இருக்கவில்லை: ஒருவர் வலுவானவர், மற்றொருவர் பலவீனமானவர்; ஒருவர் கல்யாணமானவர், மற்றொருவர் ஆகாதவர்; ஒருவருக்கு அதிக குழந்தைகள், மற்றொருவருக்கு அவ்வளவு இல்லை.... மார்க்ஸ் இதிலிருந்து எடுத்துரைக்கும் முடிவு வருமாறு:

> ''...சமமான உழைப்பை அளித்து, ஆகவே சமூக நுகர்வு நிதியிலிருந்து சமமான பங்கு பெறுவதன் மூலம், உண்மையில் ஒருவர் பிறிதொருவரை விட அதிகம் பெறவும், ஒருவர் பிறிதொருவரை விடச் செல்வந்தராய் இருக்கவும், இன்ன பலவாறாகவும் நேர்கிறது. இந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க, உரிமை சமமாய் இருப்பதற்குப் பதில் சமமின்றி இருத்தல் வேண்டும்....''

ஆகவே கம்யூனிசத்தின் முதல் கட்டம் இன்னமும் நீதியும் சமத்துவமும் அளித்திட முடியாத நிலையிலேதான் இருக்கும்: செல்வத்தில் வேறுபாடுகள், நியாயமில்லா வேறுபாடுகள் இன்னமும் இருந்து கொண்டுதான் இருக்கும், ஆனால் மனிதனை மனிதன் சுரண்டுதல் முடியாததாகி விடும், ஏனென்றால் உற்பத்திச் சாதனங்களை—ஆலைகளையும் இயந்திரங்களையும் நிலத்தையும் பிறவற்றையும்—கைப்பற்றி அவற்றைத் தனியுடைமையாக்கிக் கொள்வது முடியாததாகி விடும். பொதுவில் ''சமத்துவம்'' குறித்தும் ''நீதி'' குறித்தும் லஸ்ஸால் கூறும் தெளிவற்ற குட்டி பூர்ஷ்வா தொடர்களைத் தகர்த்திட்டு, மார்க்ஸ் கம்யூனிச சமுதாயத்தின் வளர்ச்சிப் பாதையைத் தெளிவுபடுத்துகிறார். கம்யூனிச சமுதாயம் தனிநபர்களால் உற்பத்திச் சாதனங்கள் கைப்பற்றப்பட்டு விட்டதிலுள்ள ''அநீதியை'' மட்டும்தான் முதலில் ஒழிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறது என்பதையும், மற்றோர் அநீதியை, அதாவது நுகர்வுப் பண்டங்களை (தேவைகளுக்கு ஏற்ப அல்லாமல்) ''ஆற்றிய உழைப்பின் அளவுக்கு ஏற்ப''

வினியோகிப்பதிலுள்ள அநீதியை அதனால் உடனடியாக அகற்ற முடியவில்லை என்பதையும் மார்க்ஸ் காட்டுகிறார்.

பூர்ஷ்வா பேராசிரியர்களும் ''நமது'' துகானும் அடங்கலான கொச்சைவாதப் பொருளாதார நிபுணர்கள் ஓயாமல் சோஷலிஸ்டுகள் மீது குற்றம் சாட்டுகிறார்கள்; சோஷலிஸ்டுகள் மக்களிடையிலான சமத்துவமின்மையை மறந்து விடுவதாகவும் இந்த சமத்துவமின்மையை அகற்றி விடலாமெனக் ''கனவு காண்பதாகவும்'' கூறுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டு பூர்ஷ்வா சித்தாந்திகளுடைய அளவு கடந்த அறியாமையைத்தான் காட்டுகிறது என்பது விளங்குகிறது.

சிறிதும் தவறாது உன்னிப்புடன் மார்க்ஸ் மனிதர்களிடையிலான தவிர்க்க முடியாத சமத்துவமின்மையைக் கணக்கில் எடுத்துக்கொள்வதுடன் நிற்காது, உற்பத்திச் சாதனங்களை சமுதாயம் அனைத்துக்குமுரிய பொதுவுடைமையாய் மாற்றுவதால் மட்டும் (சகஜமாய் இது ''சோஷலிசம்'' என்றழைக்கப்படுகிறது) வினியோகத்திலுள்ள குறைபாடுகளும் ''பூர்ஷ்வா உரிமையின்'' சமத்துவமின்மையும் அகற்றப் பட்டு விடுவதில்லை என்பதையும், ''ஆற்றப்படும் உழைப்புக்கு ஏற்ப'' உற்பத்திப் பொருட்கள் பகிர்ந்து கொள்ளப்படும் வரை பூர்ஷ்வா உரிமை தொடர்ந்து நிலவும் என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்கிறார். மேலும் தொடர்ந்து மார்க்ஸ் கூறுவதாவது:

> ''...இந்தக் குறைபாடுகள் கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டத்தில் தவிர்க்க முடியாதவை, ஏனெனில் இச்சமுதாயம் நீடித்த பிரசவ வேதனைக்குப் பிறகு முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து இப்பொழுதுதான் பிறந்து வெளிவந்திருக்கிறது. உரிமையானது ஒருபோதும் சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பையும் இதனால் நெறிப்படுத்தப்பட்ட அதன் கலாசார வளர்ச்சி நிலையையும் காட்டிலும் உயர்வானதாகி விட முடியாது....''

ஆக, கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டத்தில் (சாதாரணமாய் இது சோஷலிசம் என்றழைக்கப்படுகிறது) ''பூர்ஷ்வா

உரிமை'' அதன் முழு அளவிலும் ஒழிக்கப்பட்டு விடுவது இல்லை; பகுதி அளவுக்கே, இதுகாறும் சித்திபெற்றுள்ள பொருளாதாரப் புரட்சிக்கு ஏற்ற அளவுக்கே, அதாவது உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்தமட்டிலுமே ஒழிக்கப் படுகிறது. ''பூர்ஷ்வா உரிமை'' இவற்றைத் தனிநபர் களுடைய தனியுடைமையாய் அங்கீகரிக்கிறது. சோஷலிசம் இவற்றைப் பொதுவுடைமையாய் மாற்றுகிறது. அந்த அள வுக்கு—அந்த அளவுக்கு மட்டுமே—''பூர்ஷ்வா உரிமை'' மறைகிறது.

ஆனால் அதன் மற்றொரு பகுதியைப் பொறுத்தவரை அது தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது; சமு தாய உறுப்பினர்களிடையே உற்பத்திப் பொருட்களின் வினி யோகத்திலும் உழைப்பைப் பிரித்தளிப்பதிலும் ஒழுங்கியக் கியாய் (நிர்ணயிக்கும் காரணியாய்) தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது. ''உழைக்காதவனுக்கு உண வில்லை'' என்னும் சோஷலிச கோட்பாடு ஏற்கெனவே சித்தி பெற்று விட்டது; ''சம அளவிலான உழைப்புக்கு சம அள விலான உற்பத்திப் பொருட்கள்'' என்னும் மற்றொரு சோஷலிச கோட்பாடும் ஏற்கெனவே சித்தி பெற்று விட்டது. ஆயினும் இது இன்னமும் கம்யூனிசமாகி விடவில்லை; சம மல்லாதவர்களுக்கு, சமமில்லா (மெய்யாகவே சமமில்லா) உழைப்பு அளவுகளுக்கு ஊதியமாய்ச் சம அளவிலான உற் பத்திப் பொருட்களை அளிக்கும் ''பூர்ஷ்வா உரிமை'' இன் னும் ஒழிக்கப்பட்டாகவில்லை.

இது ஒரு ''குறைபாடே'', ஆனால் கம்யூனிசத்தின் முதல் கட்டத்தில் இது தவிர்க்க முடியாதது என்று மார்க்ஸ் கூறு கிறார். ஏனெனில் கற்பனாவாதத்தில் ஈடுபடாதிருக்க வேண் டுமாயின், முதலாளித்துவத்தை வீழ்த்தியதும் மக்கள் சட்ட வரையளவு எதுவும் பாராது சமுதாயத்துக்காக வேலை செய்ய உடனடியாய்க் கற்றுக்கொண்டு விடுவார் கள் என்று நாம் நினைக்கக் கூடாது. தவிரவும் முதலா ளித்துவம் ஒழிக்கப்பட்டதும் இத்தகைய ஒரு மாறுதல் ஏற் படுவதற்கு வேண்டிய பொருளாதார முன்னிபந்தனைகள் உடனடியாய்ப் படைக்கப்பட்டு விடுவதில்லை.

''பூர்ஷ்வா உரிமையைத்'' தவிர இப்பொழுது வேறு

வரையளவு இருக்கவில்லை. ஆகவே இந்த அளவுக்கு அரசுக்குரிய தேவை இன்னும் இருந்து வருகிறது; உற்பத்திச் சாதனங்களின் பொதுவுடைமையைப் பாதுகாப்பதுடன், உழைப்பிலும் உற்பத்திப் பொருட்களின் வினியோகத்திலும் சமத்துவத்தைப் பாதுகாக்கக் கூடிய அரசு தேவைப்படுகிறது.

முதலாளிகளும் வர்க்கங்களும் இனி இல்லையாதலால் அந்த அளவுக்கு அரசு உலர்ந்து உதிர்கிறது. ஆகவே எந்த வர்க்கமும் இனி அடக்கப்பட முடியாது.

ஆனால் அரசு இன்னும் அறவே உலர்ந்து உதிர்ந்து விடவில்லை, ஏனெனில் உண்மையில் சமத்துவமின்மையைப் புனிதமாக்கிவிடும் ''பூர்ஷ்வா உரிமையைப்'' பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அரசு அறவே உலர்ந்து உதிர முழு நிறைவான கம்யூனிசம் அவசியமாகும்.

### 4. கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டம்

மார்க்ஸ் தொடர்ந்து கூறுகிறார்:

> ''...கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டத்தில், தனிநபரை உழைப்புப் பிரிவினைக்குக் கீழ்ப்படுத்தி அடிமைத் தளையிடுவதும் அதனுடன் கூட மூளை உழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையிலான எதிர் நிலையும் மறைந்த பின், உழைப்பானது பிழைப்புக்கான சாதனமாய் மட்டுமின்றி வாழ்வின் முதல் பெரும் தேவையுமாகிய பின், தனிநபருடைய சர்வாம்ச வளர்ச்சியோடு கூட உற்பத்திச் சக்திகளும் அதிகரித்து விட்ட பின், பொது சமுதாயச் செல்வத்தின் அருவிகள் எல்லாம் மேலும் அபரிமிதமாய்ப் பெருக்கெடுத்து ஓடுகையில்—அப்பொழுதுதான் பூர்ஷ்வா உரிமையின் குறுகிய வரம்பு முழுமையாகக் கடக்கப்பட்டு, சமுதாயம் தன் பதாகைகளில் 'ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப' என்பதாய்ப் பொறித்துக் கொள்ளும்.''

''சுதந்திரம்'', ''அரசு'' இவ்விரு சொற்களையும் இணைத்து முடிபோடுவதிலுள்ள அபத்தத்தை எள்ளிநகையாடும் எங்கெல்சின் உரைகள் எவ்வளவு சரியானவை என்பதை இப்பொழுதுதான் நம்மால் முழு அளவுக்கு உணர முடிகிறது. அரசு இருக்கும் வரை சுதந்திரம் இல்லை. சுதந்திரம் வந்ததும் அரசு இல்லாமற் போய்விடும்.

அரசு பூரணமாய் உலர்ந்து உதிர்வதற்குப் பொருளாதார அடிப்படையாய் அமைவது கம்யூனிசத்தின் மிக உயர்ந்த வளர்ச்சிக் கட்டமாகும். இக்கட்டத்தில் மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்குமுள்ள எதிர்நிலை மறைந்து விடுகிறது; தற்கால சமுதாய சமத்துவமின்மைக்குத் தலைமையான ஆதாரங்களில் ஒன்று இவ்வாறு இக்கட்டத்தில் மறைந்து விடுகிறது. உற்பத்திச் சாதனங்களைப் பொதுவுடைமையாய் மாற்றுவதால் மட்டும், முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்வதால் மட்டும் உடனடியாக எவ்வகையிலும் இந்தத் தலைமையான ஆதாரத்தை அகற்றி விட முடியாது.

முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்வதானது உற்பத்திச் சக்திகள் பிரம்மாண்டமாய் வளர்ச்சியுறுவதைச் சாத்தியமாக்குகிறது. முதலாளித்துவம் ஏற்கெனவே எவ்வளவு நம்ப முடியாத அளவுக்கு இந்த வளர்ச்சியைத் தடுத்து இழுக்கிறதென்பதைக் காணும் போது, ஏற்கெனவே கை வரப்பெற்றுள்ள தொழில்நுட்ப நிலையின் அடிப்படையில் எவ்வளவு அதிக முன்னேற்றத்தை ஏற்படுத்தலாமென்பதைக் காணும் போது, முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்வதன் விளைவாய் மனித சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள் தவிர்க்க முடியாதவாறு பிரம்மாண்டமாய் வளர்ச்சியடையுமென நாம் திட நம்பிக்கையோடு கூற முடியும். ஆனால் இந்த வளர்ச்சி எவ்வளவு துரிதமாய் நடந்தேறும் என்று, உழைப்புப் பிரிவினையிலிருந்து முறித்துக் கொண்டு வருவதும், மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்குமுள்ள எதிர்நிலை ஒழிக்கப்படுவதும், உழைப்பானது ''வாழ்க்கையின் முதல் பெரும் தேவையாவதும்'' எவ்வளவு சடுதியில் நடைபெறும் என்று நாம் அறியோம், அறியவும் முடியாது.

ஆகவேதான் நாம் தவிர்க்க முடியாதபடி அரசு உலர்ந்து உதிர்வது குறித்து மட்டும் பேசி, இந்த நிகழ்ச்சிப் போக்கு நீடித்து நடைபெறும் தன்மை கொண்டதாய் இருப்பதையும் கம்யூனிசத்தின் உயர் கட்டம் வளர்ச்சியுறுவதன் வேகத்தைச் சார்ந்ததாய் இருப்பதையும் வலியுறுத்தி விட்டு, அரசு உலர்ந்து உதிரத் தேவையான காலத்தையோ அதன் ஸ்தூல மான வடிவங்களையோ பற்றிய பிரச்சினைக்கு விடை கூறாது விட்டு வைக்க உரிமை பெற்றிருக்கிறோம். ஏனெனில் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க விவரப்பொருள் இல்லை.

''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப'' என்னும் விதியை சமுதாயம் அனுசரிக்கையில்தான், அதாவது மக்கள் தாமே மனமுவந்து தமது ஆற்றலுக்கு ஏற்ப வேலை செய்யும்படி சமுதாய ஒட்டுறவுக்கான அடிப்படை நியதிகளைப் பற்றியொழுக அந்த அளவுக்குப் பழகிக் கொண்டு விடும் போதும், அவர்களுடைய உழைப்பு அந்த அளவுக்குப் பொருளுற்பத்திப் பயனாற்றல் மிக்கதாகி விடும் போதும்தான் அரசு பூரணமாய் உலர்ந்து உதிர முடியும். வேறொருவரை விட நாம் அரை மணி நேரம் அதிகம் வேலை செய்யவில்லையா, வேறொருவரை விட நாம் குறைவாய் சம்பளம் பெறவில்லையா என்று ஷைலாக்கின்* கல்நெஞ் சுடன் கணக்கிட்டுப் பார்க்கும்படி நிர்ப்பந்தம் செய்யும் ''பூர்ஷ்வா உரிமையின் குறுகிய வரம்பு'' அப்பொழுது கடக் கப்பட்டு விடும். அப்பொழுது சமுதாயம் உற்பத்திப் பொருட் களை வினியோகிக்கையில் அவரவரும் பெற வேண்டிய அளவை ஒழுங்கு செய்ய வேண்டிய தேவை இருக்காது; ஒவ் வொருவரும் ''தமது தேவைகளுக்கு ஏற்பத்'' தடங்கலின்றி சுதந்திரமாய் எடுத்துக்கொள்வார்.

---

* **ஷைலாக்—வி. ஷேக்ஸ்பியரின்** *(1564—1616)* **வென் னிஸ் வியாபாரி** நாடகத்தில் வரும் கதாநாயகன்; கொடுமை யான வட்டிக்காரன், கடனைத் திருப்பித் தராதவர்களிடம் வட்டிக்காரன், கடனைத் திருப்பித் தராதவர்களிடம் ஒரு துண்டு தசையை வெட்ட வேண்டும் என்று கோரினான். **—ப-ர்.**

பூர்ஷ்வா கண்ணோட்டத்திலிருந்து, இத்தகைய ஒரு சமுதாய அமைப்பு ''வெறும் ஆகாயக் கோட்டையே'' என்று அறிவிப்பதும், அந்தந்தக் குடிமகனின் உழைப்பு மீது எந்தக் கண்காணிப்புமின்றி அவரவரும் சமுதாயத்திடமிருந்து வேண்டிய அளவு மிட்டாயும் கார்களும் பியானோக்களும் பிறவும் பெறும் உரிமையை ஒவ்வொருவருக்கும் கிடைக்கச் செய்வதாய் வாக்களிப்பதாக சோஷலிஸ்டுகளை நையாண்டி செய்வதும் சுலபமே. இன்றுங்கூட மிகப் பெருவாரியான பூர்ஷ்வா ''விஞ்ஞானிகள்'' இவ்வாறு நையாண்டி செய்வதோடு நின்று விடுகிறார்கள். இதன் மூலம் தமது அறியாமையையும், தன்னலம் கருதி முதலாளித்துவத்தைப் பாதுகாக்க முனைவோரே தாம் என்பதையும்தான் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

அறியாமைதான்—ஏனென்றால், கம்யூனிச வளர்ச்சியின் உயர் கட்டம் வருமென ''வாக்குறுதி தரும்'' எண்ணம் எந்த சோஷலிஸ்டுக்கும் தோன்றியதில்லை. இது வரவே செய்யுமென்று சோஷலிஸ்டு மூலவர்கள் முன்னறிந்து கூறியதைப் பொறுத்த வரை, அது உழைப்பின் தற்போதைய உற்பத்தித் திறனையோ, பொமியலோவ்ஸ்கியின் கதைகளில் வரும் புர்ஸாக்குகளைப்* போல ''வேடிக்கைக்காக வேண்டி'' பொதுச் செல்வங்களுக்குச் சேதம் விளைவிக்கக் கூடியவர்களும், முடியாததைக் கொடு என்று கோரக் கூடியவர்களுமான தற்போதுள்ள சராசரி மனிதர்களையோ மனதிற் கொண்டு கூறப்பட்டதல்ல.

கம்யூனிசத்தின் ''உயர்'' கட்டம் வரும் வரை, உழைப்பின் அளவை மீதும் நுகர்வின் அளவை மீதும் சமுதாயமும் அரசும் மிகவும் கண்டிப்பான கண்காணிப்பு செய்ய வேண்டுமென்று சோஷலிஸ்டுகள் கோருகின்றனர். ஆனால் இந்தக் கண்காணிப்பு முதலாளிகளுடைய உடைமைகள் பறிமுதல்

---

* புர்ஸாக்குகள்—ருஷ்ய எழுத்தாளர் நி. கெ. பொமியலோவ்ஸ்கி *(1835—1863)* எழுதிய **புர்ஸாவின் கதைகள்** என்ற நூலில் வரும் கதாபாத்திரங்கள். இவர்கள் மத கல்விக்கூடத்தில் பயின்றவர்கள், கடினமான சூழ்நிலையில் வாழ்ந்தனர், பல நேரங்களில் பிறர் பால் கொடூரமாக நடந்தனர்.—ப-ர்.

செய்யப்படுவதிலிருந்தும் முதலாளிகள் மீது தொழிலாளர்களுடைய கண்காணிப்பு நிறுவப்படுவதிலிருந்தும் **ஆரம்பமாக** வேண்டும், தவிரவும் இந்தக் கண்காணிப்பு அதிகார வர்க்கத்தினராலான அரசால் அல்ல, **ஆயுதமேந்திய தொழிலாளர்களாலான** அரசால் நடத்தப்பட வேண்டும் என்கின்றனர்.

பூர்ஷ்வா சித்தாந்திகள் (மற்றும் திருவாளர்கள் தெஸெரெத்தேலிகள், செர்னோவ்கள் முதலானோரை ஒத்த பூர்ஷ்வா சித்தாந்திகளது பரிவாரத்தினரும்) தன்னலம் கருதி முதலாளித்துவத்தைப் பாதுகாப்பது எதில் காணக் கிடக்கிறது என்றால், **இன்றைய** அரசியல் கொள்கையின் ஜீவாதாரமான அவசர அவசியப் பிரச்சினையை விட்டுவிட்டு, அதாவது முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்தல், குடிமக்கள் எல்லோரையும் பிரம்மாண்டமான ஒரே ''கூட்டமைவின்''—அனைத்து அரசின்—தொழிலாளர்களாகவும் அலுவலர்களாகவும் மாற்றுதல், இந்தக் கூட்டமைவின் செயல் அனைத்தையும் மெய்யான ஜனநாயக அரசுக்கு, **தொழிலாளர், படையாட்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின்** அரசுக்கு முற்றிலும் கீழ்ப்படியச் செய்தல் ஆகியவற்றை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாய் நெடுந்தொலைவிலுள்ள எதிர்காலத்தைப் பற்றிய வாக்குவாதத்தையும் பேச்சையும் மேற்கொள்கிறார்கள்.

புலமை வாய்ந்த பேராசிரியரும், அவரைத் தொடர்ந்து அற்பவாதியும், அவரையும் தொடர்ந்து திருவாளர்கள் தெஸெரெத்தேலிகளும் செர்னோவ்களும் போல்ஷிவிக்குகளின் அதீத கற்பனைகள் என்றும், வாய்ச்சவடால் வாக்குறுதிகள் என்றும், சோஷலிசத்தைப் ''புகுத்துவது'' சாத்தியமல்ல என்றும் பேசுகையில், இவர்கள் கம்யூனிசத்தின் உயர் கட்டம் அல்லது படியை மனதிற் கொண்டிருக்கிறார்கள். இதனைப் ''புகுத்துவதாய்'' யாரும் ஒருநாளும் வாக்குறுதி கூறவுமில்லை, நினைத்ததுங்கூட இல்லை; இது ''புகுத்தப் படக்'' கூடியது அல்ல.

இது நம்மை சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்குமுள்ள விஞ்ஞான வழியிலான வேறுபாடு குறித்த பிரச்சினைக்கு இட்டுச் செல்கிறது. ''சமூக-ஜனநாயகவாதி'' என்னும்

பெயர் சரியல்ல என்பது குறித்து மேலே குறிக்கப்பட்ட தமது வாதத்தில் எங்கெல்ஸ் இந்த வேறுபாட்டைச் சுட்டிக் காட்டினார். கம்யூனிசத்தின் முதல் அல்லது கீழ்க் கட்டத்துக் கும் உயர் கட்டத்துக்குமுள்ள வேறுபாடு அரசியல் வழியில் காலப் போக்கில் மிகப் பெரியதாய் இருக்கும் எனலாம். ஆனால் இவ்வேறுபாட்டை இப்பொழுது முதலாளித்துவத் தில் இருக்கையில் கண்டறிய முற்படுவது நகைக்கத்தக்கதே ஆகும். தனிப்பட்ட அராஜகவாதிகள் மட்டும் வேண்டு மானால் (கிரொபோட்கின்களும் கிராவும் கார்னெலிசனும் அராஜகவாதத்தின் ஏனைய ''தாரகைகளும்'' சமூக-தேசிய வெறியர்களாகவும், இன்னமும் கண்ணிய உணர்வையும் மன சாட்சியையும் விட்டு விடாதுள்ள ஒரு சில அராஜகவாதி களில் ஒருவரான கே குறிப்பிட்டது போல அராஜகவாத-அகழாளர்களாகவும், ''பிளெஹானவின் பாணியில்'' மாற்ற மடைந்திருப்பதிலிருந்து எதுவும் அறிந்து கொள்ளாதோர் அராஜகவாதிகளிடையே இன்னமும் இருப்பார்களாயின்) இதற்குத் தலைமை முக்கியத்துவம் அளிக்கக் கூடும்.

ஆனால் சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்குமுள்ள விஞ் ஞான வழியிலான வேறுபாடு தெட்டத்தெளிவானது. வழக் கமாய் சோஷலிசம் என்று அழைக்கப்படுவதை மார்க்ஸ் கம்யூனிச சமுதாயத்தின் ''முதல்'' அல்லது கீழ்க் கட்டம் என்று குறிப்பிட்டார். உற்பத்திச் சாதனங்கள் பொது வுடைமை ஆகி விடும் அளவுக்கு இக்கட்டத்துக்கும் ''கம்யூ னிசம்'' என்னும் சொல் பொருந்துவதாகும், ஆனால் இது முழுநிறைக் கம்யூனிசம் அல்ல என்பதை நாம் மறக்காதிருக்க வேண்டும். மார்க்சின் விளக்கங்களுக்குள்ள மாபெரும் முக் கியத்துவம் என்னவெனில் இங்கும் அவர் பொருள்முதல் வாத இயக்கவியலை, வளர்ச்சித் தத்துவத்தை முரணின்றிக் கையாளுகிறார்; கம்யூனிசத்தை முதலாளித்துவத்தில் இருந்து வளர்ச்சியுறும் ஒன்றாகக் கருதுகிறார். பண்டிதப் புலமை சார்ந்த வழியில் கண்டுபிடிக்கப்பட்ட, ''புனையப் பட்ட'' இலக்கணங்களுக்கும் சொற்களைப் பற்றிய பய னற்ற சண்டப் பிரசண்டங்களுக்கும் (எது சோஷலிசம்? எது கம்யூனிசம்?) பதிலாய், மார்க்ஸ் கம்யூனிசத்தின் பொருளா

தார முதிர்ச்சியினுடைய இரு கட்டங்கள் எனப்படதத்தக்க வற்றின் பகுத்தாய்வை அளிக்கிறார்.

முதல் கட்டத்தில் அல்லது படியில் கம்யூனிசமானது பொருளாதார வழியில் இன்னமும் முழு அளவு முதிர்ச்சியுற்ற தாக, முதலாளித்துவத்தின் மரபுகள் அல்லது மிச்சசொச் சங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டதாக இருக்க முடியாது. ஆகவே கம்யூனிசம் அதன் முதல் கட்டத்தில் ''பூர்ஷ்வா உரி மையின் குறுகிய வரம்பை'' விட்டொழிக்காமல் வைத்துக் கொள்ளும் சுவாரஸ்யமான நிகழ்வு ஏற்படுகிறது. நுகர்வுப் பொருட்களின் விநியோகம் குறித்த இந்த பூர்ஷ்வா உரி மைக்கு பூர்ஷ்வா அரசு இருப்பது தவிர்க்க முடியாத முன் னிபந்தனையாகும், ஏனெனில் சட்ட வரையளவு அனுசரிக் கப்படுமாறு உறுதிப்படுத்த வல்ல இயந்திரம் இல்லையேல் உரிமை அர்த்தமற்றதாகி விடும்.

இதிலிருந்து பெறப்படுவது என்னவென்றால், கம்யூனிசத் தில் சில காலத்துக்கு பூர்ஷ்வா உரிமை மட்டுமல்ல, முத லாளி வர்க்கம் இல்லாத பூர்ஷ்வா அரசும் கூட இருக்கும்!

இது முரணுரை போலத் தோன்றலாம், அல்லது மார்க் சியத்தின் அதியற்புத உள்ளடக்கச் சாரத்தை ஆய்ந்தறிய கிஞ்சித்தும் முயலாதோர் அடிக்கடி மார்க்சியத்தின் மீது குறை கூறுகிறார்களே அத்தகைய இயக்கவியல் புதிராகவுங் கூடத் தோன்றலாம்.

ஆனால் உண்மை என்னவெனில், இயற்கையிலும் சமு தாயத்திலும் பழைமையின் மிச்சசொச்சங்கள் புதுமையில் எஞ்சி நின்று வாழ்க்கையில் நம்மை ஒவ்வொரு தப்படியிலும் எதிர்நோக்குகின்றன. தான்தோன்றித்தனமாய்க் கம்யூனிசத் தில் ''பூர்ஷ்வா'' உரிமையைக் கடுகளவும் மார்க்ஸ் புகுத்தி விடவில்லை. முதலாளித்துவத்தின் அடிவயிற்றிலிருந்து வெளித்தோன்றும் ஒரு சமுதாயத்தில் பொருளாதார வழி யிலும் அரசியல் வழியிலும் தவிர்க்க முடியாததைத்தான் அவர் சுட்டிக்காட்டினார்.

தொழிலாளி வர்க்கத்துக்கு, தனது விடுதலைக்காக அது முதலாளி வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில், ஜனநாயகம் அளவு கடந்த முக்கியத்துவமுடையதாகும். ஆயினும் ஜனநாயகம் தாண்டிச் செல்லக் கூடாத ஓர்

எல்லைக் கோடல்ல. நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித் துவத்துக்கும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கும் செல்லும் பாதையில் அமைந்த கட்டங்களில் ஒன்றே அது.

ஜனநாயகம் சமத்துவத்தைக் குறிக்கிறது. சமத்துவம் என்றால் **வர்க்கங்கள்** ஒழிக்கப்படுதல் என்று பிழையற்ற முறையில் அர்த்தப்படுத்திக் கொள்வோமாயின், பாட்டாளி வர்க்கம் சமத்துவத்துக்காக நடத்தும் போராட்டத்தின் மாபெரும் முக்கியத்துவமும், ஒரு முழக்கம் என்ற முறையில் சமத்துவத்தின் மாபெரும் முக்கியத்துவமும் தெளிவாய் விளங்கும். ஆனால் ஜனநாயகம் பெயரளவிலான சமத்துவத் தையே குறிக்கிறது. சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களுக் கும் உற்பத்திச் சாதனங்களின் உடைமை சம்பந்தமாய் சமத் துவம் சாதிக்கப் பெற்றதும், அதாவது உழைப்புக்கும் சம்பளங்களுக்குமான சமத்துவம் சாதிக்கப் பெற்றதும், மேலும் தொடர்ந்து முன்னேறுவது எப்படி, பெயரள விலான சமத்துவத்திலிருந்து நடைமுறை உண்மையான சமத்துவத்துக்கு, அதாவது ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவ ருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப'' என்னும் விதி செயல்படும் நிலைக்கு முன்னேறுவது எப்படி என்கிற பிரச்சினை தவிர்க்க முடியாத படி மனிதகுலத்தை எதிர்நோக்கும். எந்தக் கட்டங்களின் வாயிலாய், எந்த நடைமுறை நடவடிக்கைகளைக் கொண்டு மனிதகுலம் இந்தத் தலைமையான குறிக்கோளைச் சென்ற டையும் என்பதை நாம் அறியோம், அறியவும் முடியாது. ஆனால் சோஷலிசத்தை உயிரற்ற, இறுகிக்கெட்டியாகிய, என்றென்றுக்குமாய் மாறாத ஒரே நிலையில் இருத்தப்பட்ட ஒன்றாய்க் கொள்ளும் சாதாரண பூர்ஷ்வா கருத்தோட்டம் நம்ப முடியாத அளவுக்கு பொய்யானது என்பதையும், உண் மையில் சோஷலிசத்தில் **மட்டும்தான்** பொது வாழ்வு, தனி யார் வாழ்வு இவற்றின் எல்லாத் துறைகளிலுமே மிக வேக மான, மெய்யான, உண்மையிலேயே பிரம்மாண்டத் திரளா னோரைக் கொண்ட, முதலில் **பெரும்பான்மையோரையும்** பிறகு மக்கள் தொகை அனைவரையுமே கொண்ட, முன் னேற்றப் பேரியக்கம் தொடங்கும் என்பதையும் உணர்ந்து கொள்வது மிக முக்கியமாகும்.

ஜனநாயகம் என்பது அரசின் ஒரு வடிவமாகும், அரசு வகைகளில் ஒன்றாகும். எனவே ஒவ்வொரு அரசையும் போல ஜனநாயகமும் ஒரு புறத்தில் ஆட்களுக்கு எதிராய் ஒழுங்கமைந்த, முறையான வன்முறைப் பிரயோகத்தைக் குறிக்கிறது. ஆனால் அது மறு புறத்தில் குடிமக்களின் சமத்துவம், அதாவது அரசின் கட்டமைப்பை நிர்ணயிப்பதிலும் அரசை நிர்வகிப்பதிலும் எல்லோருக்கும் சம உரிமை உண்டென்பது பெயரளவில் அங்கீகரிக்கப்படுவதையும் குறிக்கிறது. இதன் விளைவு என்னவெனில், ஜனநாயகம் அதன் வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், முதலாளித்துவத்தை எதிர்த்துப் புரட்சிகரப் போராட்டம் நடத்தும் வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தை ஒன்றுதிரளச் செய்கிறது; முதலாளித்துவ அரசுப் பொறியமைவையும்—குடியரசு வடிவிலான முதலாளித்துவ அரசுப் பொறியமைவையுங்கூட—நிரந்தரச் சேனையையும், போலீசையும், அதிகார வர்க்கத்தையும் இந்தப் பாட்டாளி வர்க்கம் தகர்த்துத் தவிடுபொடியாக்கி புவிப் பரப்பிலிருந்தே துடைத்தெடுத்து விட்டு, இவற்றுக்குப் பதிலாய் மேலும் ஜனநாயகமான ஓர் அரசுப் பொறியமைவை அமைக்கக் கூடியதாக்குகிறது. முன்னிலும் அதிக ஜனநாயகமுடைத்த அரசுப் பொறியமைவு என்றாலுங்கூட இதுவும் ஓர் அரசுப் பொறியமைவுதான். அனைத்து மக்களும் அடங்கிய காவலர் படையை நிறுவ முற்படும் ஆயுதமேந்திய தொழிலாளர்களின் வடிவில் அமைந்த அரசுப் பொறியமைவு இது.

இங்கு ''அளவு பண்பாய் மாறுகிறது'': ஜனநாயகம் இந்த அளவுக்கு அதிகரிப்பதானது முதலாளித்துவ சமுதாயத்தின் வரம்புகளைத் தாண்டிச் சென்று இச்சமுதாயத்தை சோஷலிச வழியில் திருத்தியமைப்பதன் துவக்கத்தைக் குறிக்கிறது. மெய்யாகவே எல்லோரும் அரசு நிர்வாகத்தில் பங்கு கொள்வார்களாயின் முதலாளித்துவத்தால் தன் பிடியை இருத்திக் கொள்ள முடியாது. முதலாளித்துவத்தின் வளர்ச்சிதான் மெய்யாகவே ''எல்லோரும்'' அரசு நிர்வாகத்தில் பங்கு கொள்ளும்படி வகை செய்யும் முன்னிபந்தனைகளைத் தோற்றுவிக்கிறது. இந்த முன்னிபந்தனைகளில் சில வருமாறு: அனைத்து மக்களும் எழுத்தறிவு பெறுதல், மிகவும் வளர்ச்

சியடைந்த முதலாளித்துவ நாடுகள் பலவற்றிலும் ஏற்கெனவே இது சாதிக்கப் பெற்று விட்டது; தபால் துறை, ரயில்வேக்கள், பெரிய ஆலைகள், பெருவீத வாணிபம், வங்கித் துறை, இன்ன பிறவற்றாலான சிக்கல்மிக்க, பிரம்மாண்டமான, சமூகமயமான இயந்திரத்தால் கோடானு கோடியான தொழிலாளர்கள் ''பயிற்சியும் கட்டுப்பாடும்'' உடையோராக்கப்படுதல்.

இந்தப் பொருளாதார முன்னிபந்தனைகள் இருக்குமாயின், முதலாளிகளும் அதிகார வர்க்கத்தினரும் வீழ்த்தப்பட்ட பின், இவர்களுக்குப் பதிலாய் உற்பத்தியையும் வினியோகத்தையும் கண்காணிப்பதிலும் உழைப்பையும் உற்பத்திப் பொருட்களையும் பற்றிய கணக்குப் பதிவு வேலையிலும் உடனடியாகவே, எடுத்தயெடுப்பிலே, ஆயுதமேந்திய தொழிலாளர்களையும், ஆயுதமேந்திய மக்கள் அனைவரையுமே ஈடுபடுத்துவது முற்றிலும் சாத்தியமே. (கண்காணிப்பும் கணக்குப் பதிவுமான இந்தப் பிரச்சினையைப் பொறியாளர்கள், விவசாய நிபுணர்கள் முதலான விஞ்ஞானப் பயிற்சி பெற்ற ஊழியர்களைப் பற்றிய பிரச்சினையுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. இந்தக் கனவான்கள் இன்று முதலாளிகளுடைய விருப்பங்களுக்குப் பணிந்து வேலை செய்கிறார்கள், நாளைக்கு ஆயுதமேந்திய தொழிலாளர்களுடைய விருப்பங்களுக்குப் பணிந்து இன்னுங்கூட திறம்பட வேலை செய்வார்கள்.)

கணக்கீடு, கண்காணிப்பு—கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டம் தடங்கலின்றி இயங்கவும் சரிவரச் செயற்படவும் பிரதானமாய்த் தேவைப்படுகிறவை இவையே. குடிமக்கள் எல்லோரும் அரசின் சம்பள அலுவலர்களாய் மாற்றப்பட்டு விடுகிறார்கள்; அரசு ஆயுதமேந்திய தொழிலாளர்களால் ஆனது. குடிமக்கள் எல்லோரும் அரசினுடைய நாடு தழுவிய ஒரேயொரு ''கூட்டமைப்பின்'' அலுவலர்களும் தொழிலாளர்களும் ஆகி விடுகிறார்கள். தேவைப்படுவது எல்லாம் இவர்கள் சமத்துவமாய் வேலை செய்ய வேண்டும், வேலையில் தமக்கு உரிய பங்கைச் செய்து சமத்துவ சம்பளம் பெற வேண்டும் என்பதே. இதற்கு வேண்டிய கணக்கீடும் கண்காணிப்பும் முதலாளித்துவத்தால் வெகுவாய் எளி

மைப்படுத்தப்பட்டு, எழுத்தறிவுடையவர் எவரும் செய்ய முடியும் படியான மேற்பார்வையிடல், பதிவு செய்தல், எண் கணிதத்தின் அடிப்படை விதிகளை அறிந்திருத்தல், தக்க ரசீதுகளை எழுதிக் கொடுத்தல் போன்ற மிக மிக எளிய வேலைகளாய்க் குறுகும்படிச் செய்யப்பட்டு விட்டன.*

மக்களில் பெரும்பான்மையோர் தாமே சுயேச்சையாகவும் எல்லாவிடத்தும் இத்தகைய கணக்குப் பதிவுகளைச் செய்யவும், (இப்பொழுது அலுவலர்களாய் மாற்றப்பட்டு விட்ட) முதலாளிகளையும் தமது முதலாளித்துவப் பழக்கங்களை விடாது வைத்துள்ள அறிவுத் துறைக் கனவான்களையும் இவ்விதம் கண்காணித்துக் கொள்ளவும் தொடங்குகையில், இந்தக் கண்காணிப்பு மெய்யாகவே சர்வவியாபகமானதாகவும் பொதுவானதாகவும் வெகுஜனத் தன்மையதாகவும் ஆகி விடும், இதிலிருந்து தப்ப வழி இருக்காது, ஏனெனில் ''போக்கிடம்'' எதுவும் இருக்காது.

சமுதாயம் முழுதும் சமமான உழைப்புக்குச் சமமான சம்பளத்துடன் ஒரே அலுவலகமும், ஒரே ஆலையுமாகி விடும்.

ஆனால் பாட்டாளி வர்க்கம் முதலாளிகளைத் தோற்கடித்த பின், சுரண்டலாளர்களை வீழ்த்திய பின் சமுதாயம் முழுவதுக்கும் விரிவடையச் செய்யும் இந்த ''ஆலைத் துறைக்'' கட்டுப்பாடு எவ்வகையிலும் நமது இலட்சியமோ, நமது இறுதிக் குறிக்கோளோ அல்ல. முதலாளித்துவச் சுரண்டலால் விளைந்த எல்லா இழுக்குகளையும் அசிங்கங்களையும் களைந்து சமுதாயத்தைச் சுத்தம் செய்து தூய்மையாக்குவதற்கும், மேலும் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கும் இது அவசியமான ஒரு படியே அன்றி வேறல்ல.

எத்தருணம் முதல் சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்

* அரசின் மிக முக்கிய பணிகள் தொழிலாளர்கள் தாமே செய்யத்தக்க கணக்கீடு, கண்காணிப்பு ஆகியவையாய்க் குறுகும்படிச் செய்யப்படுகையில், அரசானது ''அரசியல் வழியிலான அரசாய்'' இருக்கும் நிலை முடிவுற்று விடும்; ''பொதுப் பணிகள் தமது அரசியல் தன்மையை இழந்து, வெறும் நிர்வாகப் பணிகளாகி விடும்''.

களும்—அல்லது குறைந்தது மிகப் பெரும்பான்மையோர்—அரசைத் தாமே நிர்வகிக்கக் கற்றுக்கொள்கிறார்களோ, இந்தப் பணியை நேரில் தாமே மேற்கொள்கிறார்களோ, மிகச் சொற்ப தொகையினரே ஆன முதலாளி வர்க்கச் சிறுபான்மையோரையும், தமது முதலாளித்துவப் பழக்கங்களை விட்டொழிக்க விரும்பாத கனவான்களையும், முதலாளித்துவத்தால் அறவே பாழ்படுத்தப்பட்டு விட்ட தொழிலாளர்களையும் கண்காணிக்க ''ஏற்பாடு செய்கிறார்களோ''—அத்தருணம் முதலாய் எவ்வகையான நிர்வாகத்துக்குமுள்ள தேவை அடியோடு மறையத் தொடங்கி விடும். ஜனநாயகம் எவ்வளவுக்கு எவ்வளவு பூரணமானதாகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது தேவையற்றதாகும் தருணம் அருகாமையில் வந்து விடுகிறது. ஆயுதமேந்திய தொழிலாளர்களாலான அரசு, ''அரசென்னும் சொல்லின் சரியான பொருளில் அரசாயில்லாத'' இது, எவ்வளவுக்கு எவ்வளவு ஜனநாயகமுடைத்ததாய் ஆகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அரசின் ஒவ்வொரு வடிவமும் வேகமாய் உலர்ந்து உதிரத் தொடங்குகிறது.

ஏனென்றால், எல்லோரும் சமூகப் பொருளுற்பத்தியை நிர்வகிக்கக் கற்றுக்கொண்டு சுயேச்சையாய்த் தாமே நடைமுறையில் நிர்வகிக்கும் போது, சுயேச்சையாய்த் தாமே கணக்குப் பதிவு செய்து கொண்டு சோம்பேறிகளையும் செல்வச் சீமான்களது புதல்வர்களையும் மோசடிக்காரர்களையும் ஏனைய ''முதலாளித்துவ மரபுகளின் காவலர்களையும்'' கண்காணிப்புச் செய்யும் போது, இந்த வெகுஜன அளவிலான கணக்கீட்டிலிருந்தும் கண்காணிப்பிலிருந்தும் தப்புவது தவிர்க்க முடியாத வகையில் அவ்வளவு கடினமாகி விடுமாதலால், அவ்வளவு அரிதிலும் அரிதான விதிவிலக்காகி விடுமாதலால், மற்றும் உடனுக்குடன் கடும் தண்டனைக்கு உரியதாக்கப்படலாமாதலால் (ஏனெனில் ஆயுதமேந்திய தொழிலாளர்கள் காரிய வழிப்பட்டவர்களே அன்றி உணர்ச்சிப் பசப்பாளர்களான அறிவுத் துறையினரல்ல, யாரும் தம்மிடம் வாலாட்ட இடந்தர மாட்டார்கள்), சமூக வாழ்க்கையின் சாதாரண அடிப்படை விதிகளைப் பற்றி

யொழுக வேண்டிய அவசியமானது விரைவில் நிலையான ஒரு பழக்கமாகி விடும்.

இனி கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டத்திலிருந்து அதன் உயர் கட்டத்துக்கு மாறிச் செல்லவும், அதனுடன் கூடவே அரசு பூரணமாய் உலர்ந்து உதிரவும் பாதை விரியத் திறக்கப்பட்டு விடும்.

**வி. இ. லெனின்**

## சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன?

**சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன?** என்ற வி.இ. லெனினின் உரை 1919இல் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் விளைவாக நிலைபெற்ற புதிய அரசாட்சியின் சாரத்தை அவர் அதில் விளக்கினார். இந்த ஆட்சி, எல்லாச் சுரண்டல் அரசிற்கும், குறிப்பாக பூர்ஷ்வா அரசிற்கு நேரெதிரானது என்றார் வி. இ. லெனின். இது உண்மையான மக்களாட்சியாகும்: தொழிலாளர்களும் உழைக்கும் விவசாயிகளும் அரசை நிர்வகிக்கின்றனர். தம் வாழ்க்கை சூழ்நிலைகளை மேம்படுத்தவும் சோஷலிசம், கம்யூனிசத்தை நிர்மாணிக்கவும் இவர்கள் தம் ஆட்சியைப் பயன்படுத்துகின்றனர்.

காலப் போக்கில் எல்லா நாடுகளிலும் மக்களின் நலன்களை வெளிப்படுத்தும் உண்மையான ஜனநாயகம் வெற்றி பெறும் என்று வி. இ. லெனின் தன் உரையில் உறுதியான நம்பிக்கையைத் தெரிவித்தார். இந்த விஞ்ஞானக் கணிப்பு சோஷலிச நாடுகளில் நடைமுறையில் மெய்ப்பிக்கப்பட்டது, இங்கே புதிய வகையான சோஷலிச அரசு ஒரு குறிப்பிட்ட வரலாற்று வடிவத்தில் நிலை பெற்றது.

சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன? மிகப் பல நாடுகளின் மக்களும் இன்னமும் புரித்து கொள்ள விரும்பாத, அல்லது புரிந்து கொள்ள முடியாத இந்தப் புதிய ஆட்சியதிகாரத்தின் சாராம்சம் என்ன? ஒவ்வொரு நாட்டிலும் மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைக் கவர்ந்திழுக்கும் இந்த ஆட்சியதிகாரத்தின் தன்மை பின்வருவதுதான்: கடந்த காலத்தில் இந்த நாடு ஏதேனும் ஒரு வழியில் செல்வந்தர்களால் அல்லது முதலாளிகளால் ஆளப்பட்டு வந்தது. ஆனால், இப்பொழுது முதன்முதலாய் இந்நாடு முன்பெல்லாம் முதலாளித்துவம் ஒடுக்கி வந்த அதே வர்க்கங்களால், அதுவும் அவ்வர்க்கங்களது வெகுஜனங்களால் ஆளப்படுகிறது. மிகமிக ஜனநாயகமான, மிகமிக சுதந்திரமான குடியரசுகளிலுங்கூட, மூலதனம் ஆதிக்கம் செலுத்துகிற வரை, நிலம் தனியார் சொத்தாய் இருக்கிற வரை, அரசாங்கமானது எப்பொழுதும் மிகச் சிறிய சிறுபான்மையோரின் கையிலேதான் இருக்கும், இந்தச் சிறுபான்மையோரில் பத்தில் ஒன்பது பேர் முதலாளிகள் அல்லது செல்வந்தராய் இருப்பர்.

உலக வரலாற்றிலே முதன்முதலாய் இந்த நாட்டில், ருஷ்யாவில், சுரண்டலாளர்கள் ஒதுக்கி விலக்கப்பட்டு, தொழிலாளர்களும் உழைக்கும் விவசாயிகளும் மட்டும் சோவியத்துகள் எனப்படும் வெகுஜன நிறுவனங்களாய் அமையும்படியும் இந்த சோவியத்துகள் அரசு அதிகாரம் அனைத்தையும் வகிக்கும்படியும் நாட்டின் அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் எல்லா நாடுகளிலும் முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் ருஷ்யாவைப் பற்றி பரப்பும் அவதூறுகளையும் மீறி, உலகெங்கும் இப்பொழுது ''சோவியத்'' என்னும் சொல் புரியக் கூடியதாய் மட்டுமின்றி மக்களுடைய

அபிமானத்துக்குரியதாகவும் ஆகி விட்டது; தொழிலாளர்களுக்கு, உழைப்பாளி மக்கள் எல்லோருக்கும் மிகப் பிடித்தமான சொல்லாகி விட்டது. ஆதலால்தான் கம்யூனிசத்தின் ஆதரவாளர்கள் பல்வேறு நாடுகளிலும் எவ்வளவுதான் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட போதிலும், சோவியத் ஆட்சியதிகாரம் உலகெங்கிலும் அவசியமாகவும் தவிர்க்க முடியாதபடியும் தொலை நெடுங்காலமின்றி கூடிய சீக்கிரத்தில் வெற்றி வாகை சூடவே செய்யும்.

இந்த நாட்டில் சோவியத் ஆட்சியதிகாரத்தின் ஒழுங்கமைப்பில் இன்னமும் பல குறைபாடுகள் இருப்பதை நாம் நன்கு அறிவோம். சோவியத் ஆட்சியதிகாரம் மாய வித்தை புரியும் மந்திரத் தாயத்து அல்ல. எழுத்தறியாமை, கலாசாரம் இல்லாத நிலை, காட்டுமிராண்டி யுத்தத்தின் தீய விளைவுகள், கொள்ளைக்கார முதலாளித்துவம் விட்டுச் சென்ற கொடுமைகள் ஆகிய கடந்த காலத்துப் பிணிகளை எல்லாம் அது நொடிப் பொழுதில் தீர்த்து விடவில்லை. ஆயினும் அது சோஷலிசத்துக்குப் பாதையைச் செப்பனிடவே செய்கிறது. முன்பெல்லாம் ஒடுக்கப்பட்டோராய் இருந்தவர்கள் நிமிர்ந்து நிற்கவும், மேலும் மேலும் அதிக அளவுக்கு நாட்டின் அரசாங்கம் அனைத்தையும், பொருளாதாரத்தின் நிர்வாகம் அனைத்தையும், உற்பத்தியின் நிர்வாகம் அனைத்தையும் தாமே மேற்கொள்ளவும் அவர்களுக்கு அது வாய்ப்பளிக்கிறது.

சோவியத் ஆட்சியதிகாரமானது சோஷலிசத்தை அடைவதற்காக உழைப்பாளி மக்களின் பெரும் திரளானோர் கண்டுபிடித்த பாதையாகும். எனவேதான், அது மெய்யான பாதையாக இருக்கிறது; எனவேதான், அது வெல்லற்கரிய பலம் படைத்திருக்கிறது.

வி. இ. லெனின்

## தொழிலாளி வர்க்கமும் தேசிய இனப் பிரச்சினையும்

**தொழிலாளி வர்க்கமும் தேசிய இனப் பிரச்சினையும்** என்ற கட்டுரையை வி. இ. லெனின் 1913இல், ருஷ்யாவில் சோஷலிசப் புரட்சி நடக்கும் முன் எழுதினார். ருஷ்ய ஜார் மன்னன் ஆட்சி செய்த அன்றைய ருஷ்யாவில் சுமார் 100 மக்களினங்களும் தேசிய இனங்களும் வாழ்ந்தன. இவர்களில் பெரும் பாலானோர் ருஷ்ய நிலச்சுவான்தார்கள், முதலாளிகளின் தேசிய இன ஒடுக்குமுறைக்கு ஆளாயினர். இச் சூழலில் வி. இ. லெனின் விஞ்ஞான கம்யூனிச தத்துவ, நடைமுறை பிரச்சினைகளில் மிக முக்கியமான ஒன்றிற்கு—ருஷ்யாவைப் போன்றதொரு பல்தேசிய நாட்டின் உள்ளே தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்திற்கும் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குமுள்ள ஒற்றுமையைப் பற்றிய பிரச்சினைக்கு—திட்டவட்டமான தீர்வை முன்வைத்தார்.

ஒரு மக்களினம் வேறொரு மக்களினத்தை ஒடுக்குவதற்கு முடிவு கட்டுவதுதான் ருஷ்ய தொழிலாளி வர்க்கத்தின் இலட்சியமாகும் என்று வி. இ. லெனின் விளக்கினார். ஒவ்வொரு மக்களினத்தைச் சேர்ந்த உழைப்பாளிகளும் பிற மக்களினங்களைச் சேர்ந்த உழைப்பாளிகளிடமிருந்து பிரிந்து நின்று போராடினால் இந்த இலட்சியத்தை

அடைய முடியாது. தனியாக நின்று வெற்றி பெற முடியாது, ஏனெனில் ஒடுக்குமுறையில் ஈடுபடும் அனைவரும்—எல்லா நாடுகளின் நிலப்பிரபுகளும் முதலாளிகளும் — கைகோர்த்து நிற்கின்றனர், எல்லா நாட்டுத் தொழிலாளர்களையும் கூட்டாகச் சேர்ந்து சுரண்டுகின்றனர்.

தேசிய விடுதலைக்கான உண்மையான பாதையைச் சுட்டிக்காட்டினார் லெனின். எல்லா மக்களினங்களையும் சேர்ந்த உழைப்பாளிகளும் ஒரே அணியாக ஒன்று திரண்டு, தம்மை ஒடுக்குபவர்களை ஒற்றுமையாக எதிர்க்க வேண்டும். அப்போதுதான் மனிதனை மனிதன் ஒடுக்குவதன் எல்லா வகைகளையும் உறுதியோடு முறியடித்து, எல்லா மக்களினங்களுக்கும் உண்மையான விடுதலையைப் பெற்றுத் தர முடியும்.

1917 அக்டோபர் புரட்சியில் ருஷ்யாவிலிருந்த எல்லா மக்களினங்களையும் சேர்ந்த உழைப்பாளிகளும் வி. இ. லெனின் சுட்டிக்காட்டிய பாதையில் செயல்பட்டனர். புரட்சி வெற்றியடைந்து, சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்டதையடுத்து தேசிய இன பகைமை, சகலவித இன, தேசிய சமமின்மை, ஒடுக்குமுறை ஆகியவை மறைந்தன. முன்னர் பின்தங்கியிருந்த மக்களினங்கள், குறுகிய வரலாற்று காலகட்டத்தில் நாகரிகத்தின் சிகரத்திற்கு உயர்ந்தனர். சோவியத் ஒன்றியத்தில் எல்லா மக்களினங்கள், தேசிய இனங்களுக்கும் சட்டரீதியிலும் நடைமுறை ரீதியிலும் சமத்துவம் வழங்கப்பட்டுள்ளது, இவர்களின் பன்முக வளர்ச்சிக்கான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

தேசிய இனங்கள் சம்பந்தப்பட்ட வரை, ருஷ்யா ஒரு கதம்பமான நாடு. அரசாங்கக் கொள்கை—அது பூர்ஷ்வாக்களால் ஆதரிக்கப்படுகிற நிலவுடைமையாளர்களது கொள்கையே—கறுப்பு நூற்றுவர் தேசியவாதத்தில் ஊறியிருப்பதாகும்.

ருஷ்யாவின் குடிமக்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்கின்ற பெரும்பான்மையான மக்களினங்களின் மீது விரோதமான வகையில் ஈட்டி போலத் தாக்குவது இந்தக் கொள்கை. இதற்குப் பக்கத்திலேயே மற்ற தேசிய இனங்களின் (போலிஷ், யூத, உக்ரேனிய, ஜார்ஜிய, இதரவை) பூர்ஷ்வா தேசியவாதம் தன் தலையைத் தூக்குகிறது; ஒரு தேசிய இனப் போராட்டம் அல்லது தேசிய இனக் கலாசாரத்துக்கான போராட்டத்தின் மூலம் தொழிலாளி வர்க்கத்தை, அதன் மகத்தான உலகு தழுவிய கடமைகளிலிருந்து திசைதிருப்ப முயற்சி செய்கிறது.

வர்க்க உணர்வு கொண்ட எல்லாத் தொழிலாளர்களும் தேசிய இனப் பிரச்சினையைத் தெளிவாக முன்வைப்பதும் தீர்ப்பதும் அவசியம்.

முதலாளி வர்க்கம் மக்களோடு சேர்ந்து, உழைப்பில் ஈடுபடுகின்ற எல்லோருடனும் சேர்ந்து சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருந்த பொழுது, அது தேசிய இனங்களின் முழு சுதந்திரத்துக்காகவும் சமமான உரிமைகளுக்காகவும் நின்றது. வளர்ச்சியடைந்த நாடுகள்—ஸ்விட்சர்லாந்து, பெல்ஜியம், நார்வே, மற்ற நாடுகள்—ஒரு உண்மையான ஜனநாயக அமைப்பின் கீழ் சுதந்திரமான தேசிய இனங்கள் சமாதானமாக எப்படி ஒத்து வாழ்கின்றன அல்லது ஒன்றுக்கொன்று எப்படி சமாதானமாகப் பிரிந்து விடு

கின்றன என்பதற்கு நமக்கு உதாரணங்களைத் தருகின்றன.

இன்று பூர்ஷ்வாக்கள் தொழிலாளர்களைக் கண்டு அஞ்சி பிற்போக்காளர்களோடு, புரிஷ்கேவிச்சுகளோடு கூட்டணி ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்; அவர்கள் ஜனநாயகத்தைக் காட்டிக் கொடுத்து, தேசிய இனங்களுக்கிடையே ஒடுக்கு முறையை அல்லது சமத்துவமாக இல்லாத உரிமைகளை வலியுறுத்தித் தொழிலாளர்களைத் தேசியவாத கோஷங்களின் மூலம் கெடுக்கிறார்கள்.

நம் காலத்தில் தேசிய இனங்களின் உண்மையான சுதந்திரத்தையும் எல்லா தேசிய இனங்களின் தொழிலாளர்களின் ஒற்றுமையையும் காப்பாற்றுவது பாட்டாளி வர்க்கம் மட்டுமே.

பல தேசிய இனங்கள் சமாதானமாகவும் சுதந்திரமாகவும் ஒன்றுகூடி வாழ்வதற்கும் அல்லது பிரிந்து போய் வெவ்வேறு அரசுகளை அமைத்துக் கொள்வதற்கும் (இது அவர்களுக்கு அதிக வசதியாக இருக்குமானால்) தொழிலாளி வர்க்கத்தினால் காப்பாற்றப்படுகிற முழுமையான ஜனநாயக வாதம் அவசியமாகும். எந்த தேசிய இனத்துக்கும் அல்லது எந்த ஒரு மொழிக்கும் தனியான சிறப்பு உரிமைகள் கிடையாது! ஒரு தேசிய இன சிறுபான்மையைப் பொறுத்தவரையிலும் மிகக் குறைவான அளவுக்கு ஒடுக்குமுறை அல்லது மிகச் சிறிய அநீதி கூடக் கிடையாது!—இவை தொழிலாளி வர்க்க ஜனநாயகத்தின் கோட்பாடுகள்.

முதலாளிகளும் நிலவுடைமையாளர்களும் வெவ்வேறு தேசிய இனங்களின் தொழிலாளர்களைப் பிரித்து என்ன விலை கொடுத்தாவது பிரித்து வைத்திருக்க விரும்புகிறார்கள்—ஆனால் ஆட்சியிலிருப்போர் கோடிக்கணக்கில் பணத்தைப் போட்டிருக்கும் ''லாபகரமான தொழில்களில்'' (லேனா தங்கச் சுரங்கங்களைப் போல) பங்குதாரர்கள் என்ற முறையில் சிறப்பான வகையில் கூடி வாழ்கிறார்கள்; மரபுவழிக் கிறிஸ்துவர்களும் யூதர்களும், ருஷ்யர்களும் ஜெர்மானியர்களும், போலிஷ்காரர்களும் உக்ரேனியர்களும், மூலதனத்தை வைத்திருக்கின்ற ஒவ்வொருவரும் ஒன்று சேர்ந்து எல்லா தேசிய இனங்களின் தொழிலாளர்களையும் சுரண்டுகிறார்கள்.

வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் எல்லா தேசிய இனங்களின் தொழிலாளர்களுக்குமிடையே ஒவ்வொரு தொழிலாளர் ஸ்தாபனத்திலும்—கல்வி, தொழிற் சங்க, அரசியல், இதரவை—முழு ஒற்றுமையை வலியுறுத்துகிறார்கள். காடேட்டுகளான கனவான்கள் உக்ரேனியர்களுக்குச் சம உரிமைகள் வழங்குவதன் முக்கியத்துவத்தை மறுப்பது அல்லது குறைவாக மதிப்பதன் மூலம் தங்களையே அவமானப்படுத்திக் கொள்ளட்டும். எல்லா தேசிய இனங்களின் பூர்ஷ்வாக்களும் தேசிய இனக் கலாசாரம், தேசிய இனக் கடமைகள், இதரவை, இதரவை பற்றி பொய்யான சொற்களை உபயோகிப்பதன் மூலம் கிடைக்கின்ற சுகத்தை அனுபவிக்கட்டும்.

தேசிய இனக் கலாசாரம், ''தேசிய இனக் கலாசார சுயாட்சி'' பற்றிய இனிப்பான பேச்சுக்கள் தங்களைப் பிரித்து வைத்திருப்பதற்குத் தொழிலாளர்கள் அனுமதிக்க மாட்டார்கள். எல்லா தேசிய இனங்களின் தொழிலாளர்களும் ஒன்றுசேர்ந்து ஒன்றுபட்ட முயற்சியின் மூலம் பொது ஸ்தாபனங்களில் முழு சுதந்திரத்தையும் முழுமையான சமத்துவ உரிமைகளையும் காப்பாற்றி நிற்கிறார்கள்—அதுவே உண்மையான கலாசாரத்துக்கு உத்தரவாதம்.

உலக முழுவதிலுமுள்ள தொழிலாளர்கள் தங்களுடைய சொந்த சர்வதேசியக் கலாசாரத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்—சுதந்திரத்துக்கு ஆதரவாக, ஒடுக்குமுறைக்கு எதிராக இருப்பவர்கள் நெடுங்காலமாக இதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். பழைய உலகத்துக்கு, தேசிய இன ஒடுக்குமுறை, தேசிய இன சச்சரவு, தேசிய இனத் தனிமை என்ற உலகத்துக்கு எதிராகத் தொழிலாளர்கள் ஒரு புதிய உலகத்தை, எல்லா தேசிய இனங்களின் உழைக்கும் மக்களின் ஒற்றுமை என்ற உலகத்தை, எவ்விதமான தனி உரிமைகளும் அல்லது மிகச் சிறிய அளவுக்கு மனிதனை மனிதன் ஒடுக்குவது கூட இல்லாத உலகத்தை எதிரே நிறுத்துகிறார்கள்.

வி. இ. லெனின்

## ஆசியாவின் விழிப்பு

ஆசியாவின் விழிப்பு என்ற கட்டுரையை வி. இ. லெனின் 1913இல் எழுதினார். விஞ்ஞான கம்யூனிச தத்துவம் மற்றும் நடைமுறையின் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்றை—புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்திற்கும் தேசிய விடுதலை இயக்கத்திற்கும் இடையிலான ஒற்றுமை, பரஸ்பரம் செயலாக்கம் பற்றிய பிரச்சினையை—இதில் அவர் ஆராய்ந்தார்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒரு சில ஆசிய நாடுகளில் ஆரம்பமாகிய புரட்சிகர ஜன நாயக இயக்கத்தின் மூல ஊற்றுகளும் பின்விளைவுகளும் இதில் சுட்டிக்காட்டப்படுகின்றன. இந்த இயக்கத்திற்கு உள் காரணங்கள் இருந்தன. காலனி நாடுகளிலும் அரைக் காலனி நாடுகளிலும் வளர்ச்சியடைந்திருந்த முதலாளித்துவம் அந்நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தையும் ஸ்தல அறிவுஜீவிகளையும் படைத்தது, இவர்கள்தான் காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராக மக்கள் திரளினர் நடத்திய உறுதியான போராட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

காலனி நாடுகளில் வெடித்த புரட்சிகர ஜன நாயக இயக்கத்தின் சர்வதேச முக்கியத்துவத்தை வி. இ. லெனின் நன்கு சுட்டிக்காட்டினார். இந்த இயக்கத்திற்கும் வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ அமைப்பிற்கு

எதிராய் நடத்தும் போராட்டத்திற்கும் இடையில் உள்ள பிரிக்க இயலா தொடர்பை அவர் குறிப்பிட்டார். பிற்போக்கு ருஷ்ய ஜாரிசத்திற்கு எதிராக, சமுதாயத்தை ஜனநாயக, சோஷலிச ரீதியில் புதுப்பிப்பதற்காக 1905—1907இல் ருஷ்யாவில் நடந்த புரட்சி ஆசிய நாடுகளில் ஜனநாயகப் புரட்சிகளுக்கு உந்து சக்தியாக அமைந்தது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடும் தேசிய விடுதலை இயக்கம், ஏகாதிபத்திய சக்திகளை வலுக்குன்ற வைத்து, அதன் மூலம் சுரண்டும் முதலாளித்துவ அமைப்பை முறியடிக்க வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழிலாளிகள் நடத்தும் போராட்டத்தை எளிதாக்குகிறது என்று வி. இ. லெனின் கருதினார். அதே நேரத்தில் முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்கள் நடத்தும் புரட்சிப் போராட்டம் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றி பெற உதவுகிறது. இதன் விளைவாக, லெனின் கூறியபடி, உலக வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்று திறந்துவிடப்பட்டது: ருஷ்யாவின் பாட்டாளிகளின் புரட்சிப் போராட்டங்களையடுத்து, காலனி மற்றும் அரைக் காலனி நாடுகளின் மக்கள் மேன் மேலும் தீவிரமாக உலக விடுதலை இயக்கத்தில் இறங்கினர்.

பல நூற்றாண்டுகளாக நிலவிய முழு தேக்கத்தின் முன் மாதிரி நாடாக சீனா நீண்டகாலமாக விளங்குகிறதா? இன்று சீனாவில் அரசியல் வாழ்க்கை முழு மூச்சோடு நடக்கிறது, சமூக இயக்கமும் ஜனநாயக எழுச்சியும் சூடு பிடித்துள்ளன. 1905ஆம் ஆண்டின் ருஷ்ய இயக்கத்தையடுத்து ஜனநாயகப் புரட்சி ஆசியா பூராவையும்—துருக்கி, பாரசீகம், சீனாவை—ஆட்கொண்டுள்ளது. பிரிட்டிஷ் இந்தியாவில் அதிருப்தி அதிகரித்து வருகிறது.

இன்று புரட்சிகர ஜனநாயக இயக்கம் ஹாலந்து இந்தியாவிலும் ஜாவா தீவிலும் 40 மில்லியன் பேர் வரையில் மக்கள் வாழும் பிற ஹாலந்து காலனிகளிலும் பரவியுள்ளது சுவாரசியமானதாகும்.

முதலாவதாக, ஜாவாவில் உள்ள மக்கள் திரளினர்தான் இந்த ஜனநாயக இயக்கத்தில் பங்கேற்கின்றனர், இவர்கள் மத்தியில் இஸ்லாமிய பதாகையின் கீழ் தேசியவாத இயக்கம் விழித்தெழுந்துள்ளது. இரண்டாவதாக, உள்ளூர் சூழலுக்குப் பழக்கப்பட்டுப் போன ஐரோப்பியர்களைக் கொண்டு முதலாளித்துவம் ஸ்தல அறிவுஜீவியினரை உருவாக்கியது, இவர்கள் ஹாலந்து இந்தியாவிற்கு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டுமென்று கோருகின்றனர். மூன்றாவதாக, ஜாவாவிலும் பிற தீவுகளிலும் ஓரளவு கணிசமான சீனர்கள் தம் நாட்டிலிருந்து புரட்சிகர இயக்கத்தைக் கொண்டு வந்தனர்.

ஹாலந்து இந்தியாவின் இந்த விழிப்பை விளக்கும் ஹாலந்து மார்க்சிஸ்டு வான் ரவெஸ்டெய்ன், ஆண்டாண்டு காலமாக நிலவிய எதேச்சாதிகாரமும் ஹாலந்து அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமும் இன்று சுதேசி மக்கள் திர

ளினரின் உறுதியான பதிலடியையும் எதிர்ப்பையும் சந்தித்து வருவதாகக் குறிப்பிடுகிறார்.

புரட்சிக்கு முந்தைய காலகட்டத்தின் சாதாரண புலப்பாடுகள் ஆரம்பமாகின்றன: சங்கங்களும் கட்சிகளும் வியத்தகு வேகத்துடன் தோன்றுகின்றன. அரசாங்கம் இவற்றைத் தடை செய்கிறது, இதன் மூலம் இன்னமும் அதிகமான கோபத்தையும், இயக்கத்தின் புதிய வளர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. உதாரணமாக, ''இந்தியக் கட்சியின்'' விதிமுறைகளிலும் வேலைத்திட்டத்திலும் **சுதந்திரத்திற்கான** நாட்டம் பற்றி கூறப்பட்டிருந்தது என்பதற்காக அதை சமீபத்தில் கலைத்தது. ஹாலந்து ''தெர்ஜிமோர்டாக்கள்''* (இவர்கள் சமயவாதிகள், மிதவாதிகள் இருவராலும் ஆதரிக்கப்பட்டனர், ஐரோப்பிய மிதவாதம் அழிந்தது!) இதை ஹாலந்திலிருந்து பிரிந்து செல்லும் குற்ற பூர்வமான நாட்டமாகப் பார்த்தனர்! கலைக்கப்பட்ட கட்சி புதிய பெயரில் மீண்டும் தோன்றியது என்பதை சொல்லவே வேண்டியதில்லை.

ஜாவாவில் சுதேசி மக்களின் தேசிய சங்கம் தோன்றியது, இதில் ஏற்கெனவே 80,000 உறுப்பினர்கள் இருந்தனர், இது வெகுஜன கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தது. ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சிக்கு கடிவாளமிட முடியாது.

உலக முதலாளித்துவமும் 1905ஆம் ஆண்டின் ருஷ்ய இயக்கமும் ஆசியாவை இறுதியாக விழித்தெழச் செய்தன. மத்திய கால தேக்கத்தில் கட்டுண்டு, ஒடுங்கிக் கிடந்த கோடானுகோடி மக்கள் புதிய வாழ்விற்காக, அடிப்படை மானுட உரிமைகள் மற்றும் ஜனநாயகத்திற்கான போராட்டத்திற்காக விழித்தெழுந்தனர்.

உலகின் எல்லாப் பகுதிகளிலும் எல்லா வடிவங்களிலும் நடைபெறும் உலக விடுதலை இயக்கத்தின் இந்த மகத்தான வளர்ச்சியை முன்னணி நாடுகளின் தொழிலாளர்கள் ஆர்வத்

---

* தெர்ஜிமோர்டா—போலீஸ்காரர், ருஷ்ய எழுத்தாளர் நி. வ. கோகலின் (1809—1852) இன்ஸ்பெக்டர் என்ற நாடகத்தில் வரும் கதாபாத்திரம்; ஜாரிச ருஷ்யாவில் நிலவிய தான்தோன்றித்தனம், சட்டமின்மையை உருவாகப் படுத்துகிறார்.—ப-ர்.

தோடும் உற்சாகத்தோடும் கவனிக்கின்றனர். தொழிலாளர் இயக்கத்தின் பலத்தைக் கண்டு அஞ்சி நடுங்கும் ஐரோப்பிய முதலாளி வர்க்கம் பிற்போக்கையும் இராணுவ கோஷ்டியையும் மதத்தையும் அறியாமையையும் கட்டித் தழுவத் துடிக்கிறது. ஆனால் உயிரோடு அழுகும் இந்த முதலாளி வர்க்கத்திற்கு மாற்றாக ஐரோப்பிய நாடுகளின் பாட்டாளி வர்க்கமும், தன்னுடைய பலத்திலும் மக்கள் திரளினர் மீதும் முழு நம்பிக்கை வைத்துள்ள ஆசிய நாடுகளின் இளம் ஜனநாயகமும் வருகின்றன.

ஆசியாவின் விழிப்பும், ஆட்சியைப் பிடிப்பதற்காக ஐரோப்பாவின் முன்னணி பாட்டாளிகள் ஆரம்பித்துள்ள போராட்டமும்தான் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஆரம்பமாகிய உலக வரலாற்றின் புதிய அத்தியாயத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

**விளதீமிர் இலியீச் லெனினின் 100ஆவது பிறந்த நாளையொட்டி சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி வெளியிட்ட ஆய்வுரைகள்**

**என்ற நூலிலிருந்து**

விளதீமிர் இலியீச் லெனினின் 100ஆவது பிறந்த நாளையொட்டிய ஆய்வுரைகளை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி 1970இல் வெளியிட்டது. கா. மார்க்ஸ், பி. எங்கெல்சின் புரட்சிகர போதனையை மேதாவிலாசத்தோடு பின்தொடர்ந்தவரும், சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தோற்றுவித்தவரும், மாபெரும் சமூகப் புரட்சியின் தலைவரும், உலகின் முதல் சோஷலிச அரசை நிறுவியவரும், சர்வதேச தொழிலாளி வர்க்கத்தின், எல்லா உழைப்பாளிகளின் தலைவருமாகிய வி. இ. லெனின் பிறந்து 1970 ஏப்ரல் 22ஆம் தேதி 100 ஆண்டுகள் ஆவதாக ஆய்வுரைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆய்வுரைகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, மனித வரலாற்றில் ஒரு முழு வரலாற்று சகாப்தமே லெனினின் பெயருடன் தொடர்புடையது. விஞ்ஞான கம்யூனிசத்தின் ஆசான்களாகிய மார்க்ஸ், எங்கெல்சை அடுத்து லெனின், வரலாறு முன்வைத்த மிக முக்கிய கேள்விகளுக்குப் பதிலளித்தார், சோஷலிசப் புரட்சி மற்றும் கம்யூனிச சமுதாய கட்டுமான தத்துவத்தைப் பன்முக ரீதியில் வளர்த்தார், ருஷ்ய மற்றும் சர்வதேச புரட்சி இயக்கத்திற்கு விஞ்ஞான பூர்வமான நீண்டகால திட்டத்தையும் நடைமுறை தந்திரத்தையும் வழங்கினார்,

சோஷலிச இலட்சியங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார். கா. மார்க்ஸ், பி. எங்கெல்சால் கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானமாக மாற்றப்பட்டு, வி. இ. லெனினால் செழுமைப்படுத்தப்பட்ட சோஷலிசம் உலகம் தழுவிய அளவில் சமூக நடைமுறையாக, நம் காலத்தின் முக்கிய புரட்சிகர சக்தியாக ஆகியுள்ளது.

ஆய்வுரைகளின் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பிரிவுகள் இங்கே தரப்படுகின்றன. இவற்றில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிக் கட்சி, அதன் நீண்டகாலத் திட்டம், நடைமுறை தந்திரம் பற்றிய லெனினிய போதனை அடங்கியுள்ளது. ருஷ்யாவின் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கான தயாரிப்புகளைச் செய்து, அதை நடத்தியதில் வி. இ. லெனினால் நிறுவப்பட்ட சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அனுபவமும் இங்கே எடுத்துரைக்கப்படுகிறது.

2. தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிக் கட்சியைத் தோற்றுவித்து வலுப்படுத்துவதுதான் சோஷலிசப் புரட்சி வெற்றியடைவதற்கான தீர்மானகரமான நிபந்தனை என்று லெனின் கருதினார். ''ருஷ்யாவை தலைகீழாகத் திருப்ப'' வல்ல மகத்தான உந்து சக்தியை அவர் பாட்டாளி வர்க்கக் கட்சியிடம் கண்டார்.

கட்சியைத் தோற்றுவிக்கும் முன் லெனின் பெரும் சித்தாந்த தத்துவார்த்தப் பணியில் ஈடுபட்டிருந்தார், குட்டி பூர்ஷ்வா நரோத்னிய சோஷலிசத்தை விமர்சனம் செய்தார், சீர்திருத்தவாதப் போக்குகள், பிற சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கு எதிராய் சமரசமற்ற போராட்டம் நடத்தினார். அத்தகையதொரு தூய்மைப்படுத்தும் பணியின்றி மார்க்சியத்தை விடுதலை] இயக்கத்துடன் இணைத்திருக்கவோ, பாட்டாளிகளின் சுயமான வர்க்கப் போக்கை நிலை நாட்டியிருக்கவோ முடியாது.

புதிய வகையான கட்சியாகிய போல்ஷிவிக் கட்சியைத் தோற்றுவித்ததானது ருஷ்யத் தொழிலாளர் இயக்கத்தில் உண்மையான புரட்சிகர, மார்க்சியப் போக்கு அடைந்த வெற்றியைக் குறித்தது. சர்வதேச சோஷலிச இயக்க வரலாற்றிலேயே முதன்முதலாக தொழிலாளி வர்க்கக் கட்சியின் வேலைத்திட்டத்தில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிலைநாட்டும் கோரிக்கை எழுதப்பட்டது; புதிய சமுதாயத்தை நிர்மாணிக்க இது எவ்வளவு அவசியம் என்பது மார்க்ஸ், எங்கெல்சால் தத்துவார்த்த ரீதியாக மெய்ப்பிக்கப்பட்டு, பின் லெனினால் பன்முக ரீதியில் வளர்க்கப்பட்டது. எதேச்சாதிகாரம், முதலாளித்துவத்திற்கு எதிராக ருஷ்யாவெங்குமிருந்த பாட்டாளிகளும் புரட்சிகர மக்கள் திரளினரும் நடத்திய போராட்டத்திற்குக் கட்சி தலைமை தாங்கியது.

புரட்சி இயக்கத்தின் பெரும் அனுபவத்தைப் பொது மைப்படுத்திய லெனின், **என்ன செய்ய வேண்டும்?, ஓரடி முன் னால், ஈரடி பின்னால்,** இன்னும் பிற நூல்கள், கட்டுரை களில் புதிய வகையான பாட்டாளி வர்க்கக் கட்சியைப் பற்றிய கட்டுக்கோப்பான போதனையை முன்வைத்தார். லெனினுடைய கருத்துப்படி, கட்சி என்பது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக, அதன் ஒழுங்கமைக் கப்பட்ட அணியாக, அரசியல் ஸ்தாபனத்தின் உயர் வடிவமாக இருக்க வேண்டும். அது தொழிலாளி வர்க்கத் தின் சுய நிர்ணயிப்பிற்கு, தம் வரலாற்றுப் பணியை இந்த வர்க்கம் உணர்ந்து நிறைவேற்ற உதவ வேண்டும். புரட்சித் தத்துவமின்றி புரட்சிகர இயக்கம் இருக்க முடியாது, முற் போக்கு தத்துவத்தால் ஆயுதந்தரித்த கட்சியால்தான் முன் னணிப் போராளியாகத் திகழ முடியும் என்று கோடிட்டுக் காட்டினார் லெனின்.

கட்சியை ஒரு விவாத மன்றமாக, பல்வேறு குழுக்கள், கோஷ்டிகளின் திரட்டாக மாற்ற செய்யப்பட்ட முயற்சி களை லெனினும் போல்ஷிவிக்குகளும் நிராகரித்தனர். கட்சி அணிகளின் பிரிக்க இயலா ஒற்றுமை, கட்சி ஒற்றுமையை யும் இரும்புக் கட்டுப்பாட்டையும் குலைக்கும் நடவடிக்கை களை அனுமதிக்காமலிருப்பது ஆகியவைதான் கட்சிப் பலத் திற்குத் தீர்மானகரமான நிபந்தனைகள் என்று லெனினும் போல்ஷிவிக்குகளும் கருதினர்.

போல்ஷிவிக்குகளின் கட்சி உண்மையான பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதிகளின் கட்சியாகத் தோன்றி, வளர்ந்து வலுப்பட்டது. இது தன் சித்தாந்தம், கட் டமைப்பு, நடவடிக்கையில் பெரிதும் சர்வதேசியத் தன்மை யை உடையது. பல்தேசிய நாட்டின் பாட்டாளிகளை அணி திரட்டி நிற்கும் போல்ஷிவிக்குகளின் கட்சி தான் தோன்றி யது முதலே ஒரே முழுமையின் பிரிக்க இயலா அங்கமாக, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் போராளிப் படையாகத் திகழுகிறது.

தொழிலாளி வர்க்கப் போராட்ட முறைகளையும் சாத னங்களையும் முடிவு செய்து அவற்றை மேம்படுத்துவது,

கட்சிக்குப் புரட்சிகர நீண்டகால திட்டத்தையும் நடைமுறை தந்திரத்தையும் அளிப்பது ஆகியவை லெனினின் தலைமையில் போல்ஷிவிக்குகள் தீர்க்க வேண்டியிருந்த சிக்கலான பிரச்சினைகளாக விளங்கின. போராடும் திறமையுள்ள பாட்டாளி வர்க்கக் கட்சியை ஏற்படுத்துவதற்காக லெனின் இடையறாது பாடுபட்டார். இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளின் சந்தர்ப்பவாத நடைமுறையை அவர் உறுதியோடு அம்பலப்படுத்தினார்; இவை படிப்படியாக சமூக சீர்திருத்தக் கட்சிகளாக மாறின, பூர்ஷ்வா சமுதாயத்தின் அரசியல் முறையாக வளர்ச்சியடைந்தன, தம் நடவடிக்கையை சட்டபூர்வமான, பெரும்பாலும் நாடாளுமன்ற முறைகளுடன் மட்டுப்படுத்திக் கொண்டன. சட்டபூர்வமான போராட்ட முறைகளையும் தலைமறைவு முறைகளையும், நாடாளுமன்ற முறைகளையும் நாடாளுமன்றத்தோடு தொடர்பற்ற முறைகளையும், சமாதான போராட்ட வழிகளையும் பலாத்கார முறைகளையும் எப்படித் திறமையாக இணைப்பது என்பதற்கு போல்ஷிவிக்குகள் உதாரணமாகத் திகழ்ந்தனர், நிலவரத்திற்குத் தக்கபடி இவற்றை நெளிவு சுழிவோடு பயன்படுத்தினர். சீர்திருத்தங்களுக்காகப் போராடுவதை போல்ஷிவிக்குகள் கைவிடவில்லை, ஆனால் அவர்கள் எப்போதும் இப்போராட்டத்தை, தம் நடவடிக்கை முழுவதையும் போன்றே புரட்சியைத் தயார்படுத்தும் இலட்சியங்களுக்கு உட்படுத்தினர்.

இரண்டு முனைகளில்—சந்தர்ப்பவாதம் மற்றும் சீர்திருத்தவாதத்தின் வலதுசாரி, ''இடதுசாரி'' வகைகளுக்கு எதிராக—போராடுவதை மார்க்சியக் கட்சியின் நடவடிக்கைகளின் வெற்றிக்கும்,தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சி, வெற்றிக்கும் அவசியமான நிபந்தனையாக லெனின் கருதினார்.

தன்னுடைய புரட்சிகர நடவடிக்கை பூராவிலும் லெனின், மார்க்சியப் போர்வையில் மறைந்து கொண்டு விஞ்ஞான சோஷலிசத்திற்கு விரோதமாக செயல்பட்ட போக்குகளுக்கு எதிராக சமரசமற்று போராடினார். அவர் ''சட்டபூர்வமான மார்க்சிஸ்டுகள்'' மற்றும்''பொருளாதாரவாதிகளின்'' சீர்திருத்தத்தின் பூர்ஷ்வா மிதவாத சாரத்தை விரிவாக

விமர்சித்தார். மார்க்சியத்தின் புரட்சிக் கோட்பாடுகளைக் காத்து நின்று பாதுகாத்த கட்சியும் லெனினும் ருஷ்ய தொழிலாளர் இயக்கத்தின் உள்ளேயிருந்த மிக ஆபத்தான சந்தர்ப்பவாதப் போக்காகிய மென்ஷிவிசத்திற்கு எதிராக சமரச மற்றுப் போராடினர், சர்வதேச அரங்கில் வலதுசாரி சோஷலிஸ்டு தலைவர்களின் சந்தர்ப்பவாதத்தைக் கடுமையாகச் சாடினர். அதே நேரத்தில் லெனின், வர்க்கப் போராட்டத்தின் எதார்த்த சூழ்நிலைகளை நிராகரித்த, பாட்டாளிகளை அரசியல் அதிசாகசவாதங்களுக்குத் தள்ளக் கூடிய, தொழிலாளர் இயக்கத்தைத் தோல்விக்கு இட்டுச் செல்லக் கூடிய குட்டி பூர்ஷ்வா ''அதிதீவிர புரட்சித் தன்மையை'' உறுதியோடு மறுத்தார்.

போல்ஷிவிக் கட்சி தோற்றுவிக்கப்பட்டதானது ருஷ்ய மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் ஒரு புதிய கட்டத்தை ஆரம்பித்து வைத்தது. புதிய வரலாற்று சூழ்நிலையில் தன் சமூக விடுதலைக்கான போராட்டத்திற்கு வெற்றிகரமாகத் தலைமை தாங்க வல்ல ஒரு ஸ்தாபனத்தைப் பாட்டாளி வர்க்கம் பெற்றது.

3. முதலாளித்துவம் ஏகாதிபத்திய கட்டத்தினுள் நுழைந்து, பாட்டாளி வர்க்க இயக்கம் வெகுஜன இயக்கமாகிய பொழுது மார்க்சியத் தத்துவத்தை மேற்கொண்டு வளர்க்க வேண்டியிருந்தது, புதிய வரலாற்றுச் சூழ்நிலைகளுக்கேற்ப புரட்சிகர நீண்டகால திட்டத்தையும் நடைமுறை தந்திரத்தையும் தீட்ட வேண்டியிருந்தது.

**ருஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சி** என்ற தன்னுடைய மாபெரும் நூலில் லெனின் ருஷ்யப் பொருளாதார நடவடிக்கையையும் உலக முதலாளித்துவத்தின் போக்குகளையும் ஒப்பிட்டு, நகரத்திலும் நாட்டுப்புறத்திலும் சமூக பொருளாதார பகை முரண்பாடு மேன்மேலும் வலுப்படுவதைக் காட்டினார், சமுதாயத்தின் வர்க்கக் கட்டமைவில் ஏற்படும் மாற்றங்களைப் பன்முக ரீதியில் பகுப்பாய்வு செய்தார், பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியிலும் சோஷலிசப் புரட்சியிலும் பாட்டாளியின் உண்மையான கூட்டாளிகளைச் சுட்டிக்காட்டினார். புரட்சியின் முக்கிய உந்து சக்தியாகிய தொழிலாளி வர்க்கத்தோடு கூட புரட்சிப் போராட்டத்தில்

விவசாயிகளும் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று அவர் ஆணித்தரமாக குறிப்பிட்டார்.

உழைக்கும் விவசாயிகள் தம் சமூக நிலையின் காரணமாயும் நிலச்சுவான்தார்களின் நிலவுடைமையை ஒழித்துக் கட்டுவதற்காகப் போராடுவதாலும் பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியில் மட்டுமின்றி, மூலதனத்தின் ஆட்சியை முறியடிப்பதிலும் புறவய ரீதியில் அக்கறை கொண்டுள்ளனர், ஏனெனில் சோஷலிசத்தால் மட்டுமே நிலப் பிரச்சினைக்கு முடிவான தீர்வு காண முடியும் என்று லெனின் மெய்ப்பித்தார். லெனின் உலக முதலாளித்துவ விவசாய பரிணாம வளர்ச்சியின் முக்கிய போக்குகளையும் கிராமம் வர்க்க ரீதியில் சிதைவுறுவதையும் ஆராய்ந்தார், புரட்சியின் பல்வேறு கட்டங்களில் விவசாயிகளின் வெவ்வேறு பிரிவினரின் பாலான தொழிலாளர்களின் அணுகுமுறையை நிர்ணயித்தார், நிலப் பிரச்சினை சம்பந்தமாக முழுமையான தத்துவத்தையும் வேலைத்திட்டத்தையும் உருவாக்கினார்.

**ஜனநாயகப் புரட்சியில் சமூக-ஜனநாயகவாதத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள்** என்ற நூலிலும் பிற படைப்புகளிலும் லெனின் 1905ஆம் ஆண்டு ருஷ்யப் புரட்சியின் அனுபவத்தையும் ஐரோப்பியத் தொழிலாளர் இயக்க அனுபவத்தையும் பகுப்பாய்வு செய்தார்; அதன் அடிப்படையில், இப்போது முதல் விடுதலைப் போராட்டத்தில் தலைமைப் பங்கு பாட்டாளிகளின் கைகளுக்கு மாறுகிறது என்றும், பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளிகளின் தலைமைப் பங்கு, எல்லா விவசாயிகளுடனான கூட்டுடன் சேர்ந்து சோஷலிசப் புரட்சியில் பாட்டாளிகளின் தலைமைப் பங்காக மாறும், அதில் பாட்டாளிகளுக்கு நாட்டுப்புற ஏழை மக்களுடனும் நகரத்திலும் நாட்டுப்புறத்திலும் உள்ள சுரண்டப்படும் மக்கள் அனைவருடனும் கூட்டு நிலவும் என்றும் மெய்ப்பித்தார். ''...ஜனநாயகப் புரட்சியிலிருந்து நாம் இப்பொழுதே சோஷலிசப் புரட்சிக்கு மாறத் துவங்குகிறோம். நாம் கோருவது தொடர்ச்சியான புரட்சியாகும். பாதி வழியில் நாம் நின்று விட மாட்டோம்'' என்றார் லெனின்.*

* V. I. Lenin, *Collected Works*, Moscow, Progress Publishers, vol. 9, p. 237.

இம்முடிவு, பூர்ஷ்வா புரட்சிக்குப் பின் நீண்டகால முதலாளித்துவ ஆதிக்கம் ஆரம்பமாக வேண்டும் என்ற வழக்கமான சமூக ஜனநாயக வறட்டுத் தனத்தை நிராகரித்து ஒதுக்கித் தள்ளியது. ஏகாதிபத்திய சகாப்தத்தில் ஜனநாயகப் பிரச்சினைகளின் தீர்வும் சோஷலிசப் பிரச்சினைகளின் தீர்வும் நெருங்கி வந்துள்ளன, இச்சூழ்நிலையில் ஜனநாயகம், சோஷலிசத்திற்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்திற்கும் நடுத்தரப் பிரிவினருக்கும் இடையிலான கூட்டு விசேஷ முக்கியத்துவத்தைப் பெறுகிறது என்று லெனின் காட்டினார். ருஷ்யாவிலும் பிற நாடுகளிலும் புரட்சிகர சம்பவங்களின் வளர்ச்சி லெனினிய கணிப்பு சரியானது என்று ஊர்ஜிதப்படுத்தியது.

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விஞ்ஞான தத்துவத்தை முன்வைத்ததும், அதன் தன்மை, முரண்பாடுகள், நியதிகளை ஆராய்ந்ததும் லெனினின் வரலாற்று சேவைகளாகும். ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்ச கட்டம் என்ற நூலிலும் பிற படைப்புகளிலும் ஏகாதிபத்தியத்தைப் பற்றி லெனின் அளித்த பகுப்பாய்வானது, கா. மார்க்சின் மூலதனம் நூலில் அடங்கியிருந்த கருத்துகளை நேரடியாகத் தொடர்ந்து, மேற்கொண்டு வளர்த்தது. முதலாளித்துவத்தின் ஏகபோக கட்டம் என்பது அதன் இறுதிக் கட்டம், சோஷலிசப் புரட்சியின் முன்னணைப் பொழுது என்று லெனின் மெய்ப்பித்தார். உலக வரலாற்றின் புதிய கட்டத்தைப் பற்றிய பன்முகப் பகுப்பாய்வானது, ஏகாதிபத்திய சகாப்தத்தில் புரட்சி இயக்கத்தின் பெரும் வாய்ப்புகளை நிர்ணயிக்க உதவியது.

ஏகாதிபத்தியக் கட்டத்தில் முதலாளித்துவப் பொருளாதார, அரசியல் வளர்ச்சியின் சமமற்ற தன்மை விதியைக் கண்டுபிடித்துக் கூறிய லெனின், வெவ்வேறு நாடுகள் வெவ்வேறு காலத்தில் சோஷலிசத்தை வந்தடையும், ஏகாதிபத்திய சங்கிலித் தொடர் மிக உயர்வான வளர்ச்சியடைந்த நாட்டில்தான் பிளக்கப்பட வேண்டும் என்று கட்டாயமில்லை என்று முடிவு செய்கிறார். இது மார்க்சிய விஞ்ஞானத்தில் ஒரு புதிய முடிவாகும். இது புதிய அமைப்பின் வெற்றிக்கான நிபந்தனைகள் பற்றிய கருத்தமைப்பை அடியோடு மாற்றியது, ருஷ்ய, சர்வதேச பாட்டாளிகளின் முன் தெட்டத்

தெளிவான போராட்ட வாய்ப்பைத் திறந்து விட்டது. அப்பொழுதே லெனின், ஒரு நாட்டிலோ ஒரு சில நாடுகளிலோ சோஷலிசம் வெற்றியடைந்த பின் நடைபெறும் சமுதாய வளர்ச்சியின் முக்கிய போக்குகளைக் கணித்துக் கூறினார், உலக அரங்கில் இரண்டு முறைகளின் தவிர்க்க இயலா போராட்டத்தைச் சுட்டிக்காட்டினார்.

புதிய வரலாற்றுச் சூழ்நிலைகளுக்கேற்ப லெனின் தேசிய இனப் பிரச்சினையைப் பன்முக ரீதியில் ஆராய்ந்தார், பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தை தேசிய இன ஒடுக்குமுறையை ஒழித்துக் கட்டுவதற்கான போராட்டத்துடனும், சோஷலிசத்திற்கான போராட்டத்தை ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டத்துடனும் இணைக்க வேண்டிய கருத்தை முன்வைத்து ஆதாரப்படுத்தினார்.

வரலாற்று வளர்ச்சியின் புதிய போக்குகளைப் பற்றி சிந்திக்க வேண்டியதன் அவசியமும் மார்க்சிய முறையியலை மேம்படுத்த வேண்டியதன் அவசியமும் சித்தாந்தப் போராட்ட கடமைகளும், முக்கிய தத்துவஞானப் பிரச்சினைகளை ஆழ்ந்து பகுப்பாய்வு செய்யும்படி போல்ஷிவிக் கட்சியையும் அதன் தலைவனையும் நிர்ப்பந்தித்தன. பொருள் முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும், தத்துவஞானக் குறிப்புகள், இன்னும் பிற படைப்புகளில் லெனின், இயக்கவியல், வரலாற்று பொருள்முதல்வாதத்தைப் பற்றிய மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துகளை வளர்த்து செழுமைப்படுத்துகிறார். மார்க்ஸ், எங்கெல்சின் மறைவிற்குப் பின் சேர்ந்த புதிய விஞ்ஞானப் பிரச்சினைகளை லெனின் தத்துவஞான நோக்கில் பகுப்பாய்வு செய்கிறார், மார்க்சிய உலகக் கண்ணோட்டம் மற்றும் முறையின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பேணிக் காத்து வளர்க்கிறார், கருத்துமுதல்வாத, இயக்க மறுப்பியல் கருத்தமைப்புகளுக்குத் தக்க பதிலடி தருகிறார்.

பொருள்முதல்வாத இயக்கவியலை லெனின் மேற்கொண்டு வளர்த்தது, இயக்கவியல் பொருள்முதல்வாத அறிதல் தத்துவப் பிரச்சினைகளை ஆராய்ந்தது, இயற்கை விஞ்ஞானத்திற்கும் தத்துவஞானத்திற்கும் இடையிலான

கூட்டைப் பற்றிய இவருடைய கருத்து ஆகியவற்றிற்குப் பெரும் முக்கியத்துவம் உண்டு. நம் நூற்றாண்டில் தன் காலத்திய இயற்கை விஞ்ஞான சாதனைகளில் மாபெரும் விஞ்ஞான புரட்சியின் ஆரம்பத்தைக் கண்டு, மாபெரும் இயற்கை ஆராய்ச்சியாளர்களின் அடிப்படைக் கண்டுபிடிப்புகளில் அடங்கியிருந்த புரட்சிகர சாரத்தைச் சுட்டிக்காட்டி, அதைத் தத்துவஞான ரீதியில் பொதுமைப்படுத்திய முதல் சிந்தனையாளர் லெனின் ஆவார். இயற்கை விஞ்ஞானத்தின் முக்கிய துறைகளில் ''கோட்பாடுகள் அடியோடு உடைக்கப்பட்ட'' காலகட்டத்தில் புதிய விஞ்ஞான விவரங்களைப் பற்றிய அற்புதமான தத்துவஞான விளக்கத்தை அவர் அளித்தார். பருப்பொருளின் மறையா தன்மை பற்றி அவர் கூறிய கருத்து இயற்கை விஞ்ஞான அறிதலின் பொதுக் கோட்பாடாகியது.

சமுதாய வளர்ச்சியின் இயக்கவியல், பொருளாதாரத்திற்கும் அரசியலுக்கும் இடையிலான பரஸ்பரச் செயலாக்கம், சமுதாய வாழ்நிலைக்கும் சமுதாய உணர்விற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பு, இன்னும் பல பிரச்சினைகளை லெனின் பன்முக ரீதியில் ஆராய்ந்தார். சமுதாய வளர்ச்சிப் பிரச்சினைகளைப் பற்றிய லெனினின் ஆராய்ச்சி, புரட்சி நடைமுறை மற்றும் சித்தாந்தப் போராட்டத் தேவைகளுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தது. தத்துவஞானத்திலும் சமூகவியலிலும் அகவயவாதத்தை விமர்சித்ததன் மூலம் லெனின், அரசியல் தன்னிச்சைப் போக்கு, அதிசாகசவாதத்தின் சித்தாந்த மூலவேர்களைப் பலமாகத் தாக்கினார். வலதுசாரி சந்தர்ப்பவாத நடைமுறைத் தந்திரத்தின் தத்துவார்த்த அடிப்படை என்ற வகையில் விதிவாதம் மற்றும் தன்னிச்சைப் போக்கு கருத்தமைப்புகளுக்கு எதிரான இவருடைய போராட்டத்திற்குக் கோட்பாட்டு முக்கியத்துவம் உண்டு.

சமுதாய வளர்ச்சியின் புறவய சூழ்நிலைகள், போக்குகளின் தீர்மானகரமான முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டிய லெனின், வரலாற்று சந்தர்ப்பங்களின் விஞ்ஞான பகுப்பாய்வின் ஆழத்தை மக்கள் திரளினர், வர்க்கங்கள், கட்சிகளின் புரட்சிகர ஆற்றல், முன்மொழிவு, சுய உணர்வு

மற்றும் தனிநபர்களின் நடவடிக்கை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மிக உறுதியாக அங்கீகரிப்பதுடன் எப்போதும் தொடர்புபடுத்தினார். அவருடைய இயக்கவியல் அறிவு, புரட்சி நிகழ்ச்சிப் போக்கைத் துரிதப்படுத்தும் புதிய வாய்ப்புகளைக் கண்டுபிடித்தது; இந்த வாய்ப்புகள், முதலாளித்துவத்தை சோஷலிசத்தால் மாற்றும் பொது முன்தேவைகள் முதிர்ச்சியடைந்த சூழ்நிலையில் அகவய காரணியின் செயற்பாட்டுடன் தொடர்புடையவை. புரட்சி நடவடிக்கைகளுக்கு உழைப்பாளிகளுக்குள்ள திறமையும், இதற்கு அவர்கள் தயாராயிருப்பதும், இவர்களின் சுய உணர்வும் ஸ்தாபன ஒற்றுமையும் போராட்ட அனுபவமும்தான் புரட்சியின் வெற்றிக்கான தீர்மானகரமான முன்தேவை என்றார் லெனின்.

4. மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் புரட்சிகர மாற்றச் சக்தியும், லெனினுடைய தலைமையில் போல்ஷிவிக் கட்சியின் செயற்பாட்டில் புரட்சிகர நடைமுறையுடனான அதன் ஒற்றுமையும் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றியில் அற்புதமாக வெளிப்பட்டன.

1917ஆம் ஆண்டின் பிப்ரவரி புரட்சி, ஜாரிச எதேச்சாதிகாரத்தை முறியடித்து, பூர்ஷ்வா ஆட்சி நிலைநாட்டப்பட இட்டு வந்தது. போராட்டத்தின் புதிய கட்டத்திற்கு—அரசியலாட்சியை வென்று, சோஷலிசத்திற்காகப் போராடுவதற்கு மாறும் கடமை தொழிலாளி வர்க்கத்தின் முன் நடைமுறையில் நின்றது. சோஷலிசப் புரட்சிக்கு மாறும் திட்டவட்டமான திட்டத்தைக் கட்சியின் முன், தொழிலாளி வர்க்கத்தின் முன் லெனின் வைத்தார். ஏப்ரல் ஆய்வுரைகள், கட்சியின் ஏப்ரல் மாத மகாநாட்டிற்காகவும் 6ஆவது காங்கிரசிற்காகவும் தயாரித்த ஆவணங்கள், கட்டுரைகள், உரைகளில் லெனின் பெரும் அணிதிரட்டும் சக்தி வாய்ந்த நீண்டகால திட்ட கோஷங்களையும் நடைமுறைத் தந்திர கோஷங்களையும் முன்வைத்தார். ''ருஷ்யாவில் இன்றைய நிலைமையிலான பிரத்தியேக இயல்பு, நாடு புரட்சியின் முதல் கட்டத்திலிருந்து இரண்டாம் கட்டத்திற்கு முன்செல்கிறது என்பதேயாகும். பாட்டாளிகளின் வர்க்க உணர்வும் ஒழுங்கமைப்பும் போதிய அளவு இல்லாத காரணத்தால் முதல் கட்டம் ஆட்சி அதிகாரத்தை முதலாளி வர்க்கத்தின்

கரங்களில் ஒப்படைத்தது. இந்த இரண்டாம் கட்டம், ஆட்சி அதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயி களிடையிலான மிக ஏழ்மைப்பட்ட பகுதிகளின் கரங்களில் ஒப்படைக்க வேண்டும்.''*

ஜாரிசமும் சுரண்டும் வர்க்கங்களும் கடைபிடித்த கொடு பாதகக் கொள்கையின் விளைவாய் தேசியப் பேரழிவு நாட்டை எதிர்நோக்கியிருந்த பொழுது, அதைத் தடுக்கும் திட்ட வட்டமான செயல்திட்டத்துடன் போல்ஷிவிக்குகள் சோஷ லிசப் புரட்சிக்கு வந்தனர். பழையதை அழிக்கும் கட்சியாக மட்டுமின்றி, புதியதை நிர்மாணிக்கும் கட்சியாகவும் போல் ஷிவிக்குகள் செயல்பட்டனர். இக்காலகட்டத்தில் லெனின் எழுதிய **அரசும் புரட்சியும், நிகழவிருக்கும் பேராபத்தும் அதை எதிர்ப்பதற்கான வழியும், போல்ஷிவிக்குகள் நீடித்து அரசாள முடியுமா?** என்ற படைப்புகளும் பிறவும் கட்சியைப் பொறுத்த மட்டில் பயன் மிகு சமூக, அரசியல், பொருளாதார செயல் திட்டங்களாகின.

தெட்டத்தெளிவான செயல்திட்ட கருத்துநிலைகள், அவற்றின் நிறைவேற்றத்தில் காட்டிய தொடர்ச்சி ஆகியவை காரணமாக, மென்ஷிவிக்குகள் மற்றும் எஸ்ஸேர்களின் (சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின்) சமரசக் கட்சிகளின் செல் வாக்கிற்கு உட்பட்டிருந்தவர்களில் கணிசமான பகுதியினரை விடுவிக்கவும், பெரும்பாலான உழைப்பாளிகளைத் தம் பக் கம் ஈர்த்து சோஷலிசப் புரட்சியின் அரசியல் படையை உருவாக்கவும் போல்ஷிவிக்குகளால் முடிந்தது. சோஷலிசத் திற்கான தொழிலாளி வர்க்கப் போராட்டம், சமாதானத் திற்கான பொது மக்களின் போராட்டம், நிலத்திற்கான விவ சாயிகளின் போராட்டம், ருஷ்யாவிலிருந்த ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டம் ஆகியவை ஒரே பெருக்காக ஒன்றிணைந்தன.

1917ஆம் ஆண்டு பிப்ரவரிக்கும் அக்டோபருக்கும் இடை யில் லெனின் தலைமையிலான போல்ஷிவிக் கட்சி, வர்க்கப் போராட்டத்தின் பல்வேறு வடிவங்கள், முறைகளைப் பயன்

---

* வி.இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 5, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1980, பக்கம் 32.

படுத்துவது, அவற்றைத் திறமையாக இணைப்பது, மாற்றுவது, ஒவ்வொரு தருணத்திலும் மிகச் சிறந்த செயல்வன்மை மிக்கதைத் தேர்ந்தெடுப்பது ஆகியவற்றிற்கு தலைசிறந்த முன்னுதாரணங்களை அளித்தது. புரட்சி நிலவரம் மற்றும் ஆயுத எழுச்சி பற்றிய போதனையைப் பன்முக ரீதியில் முன்வைத்ததன் மூலம் மார்க்சியத் தத்துவத்திற்கு லெனின் மகத்தான பங்காற்றினார்.

உரிய புறவய, அகவயச் சூழ்நிலைகள் உருவாகி, தேசிய நெருக்கடி முதிர்ச்சியடைந்து, கோடானு கோடி மக்களின் உணர்வும் சித்தமும் வேட்கையும் போராட்டப் போக்கால் தயார்படுத்தப்பட்டிருந்த பொழுதுதான் முதலாளித்துவத்தைத் தாக்க கட்சி, மக்கள் திரளினரை இட்டுச் சென்றது. எழுச்சியை ஒரு கலையைப் போல் அணுக வேண்டும் என்ற மார்க்சியக் கோரிக்கையை லெனின் தலைமையிலான போல்ஷிவிக் கட்சி நடைமுறையில் நிறைவேற்றியது.

சுரண்டலாளர்களின் ஆட்சியை முறியடித்து, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவது, பூர்ஷ்வா-நிலச்சுவான்தார் தனியுடைமையை சோஷலிச, பொதுவுடைமையாக மாற்றுவது, நிலப் பிரச்சினையை விவசாயிகளுக்கு ஆதரவாக, நியாயமாக தீர்த்தல், சார்புநிலையிலுள்ள மக்களினங்களைக் காலனியாதிக்க, தேசிய இன ஒடுக்குமுறையிலிருந்து விடுவித்தல், சோஷலிசத்தைக் கட்டுவதற்கான அரசியல், பொருளாதார முன்தேவைகளைத் தோற்றுவித்தல் ஆகிய அடிப்படை சமூகப் பிரச்சினைகளின் தீர்விற்கு மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி உலகிற்கு ஒரு முன்மாதிரியைக் காட்டியது.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிதான் உலக சோஷலிசப் புரட்சியின் முதல் வெற்றிகரமான நடவடிக்கையாகும். அது மிகப் பெரும் ஒரு வல்லரசின் அரசியல், சமூக, பொருளாதாரத் தோற்றத்தை அடியோடு மாற்றியது, சர்வதேச விடுதலை இயக்கத்தை ஒரு புதிய உயர்வான மட்டத்திற்கு உயர்த்தியது, ''உலகிற்கு சோஷலிசத்திற்கான பாதையைச் சுட்டிக்காட்டியது, முதலாளி வர்க்கத்தின் வெற்றிச் சிரிப்புகளுக்கு முடிவு நெருங்கி விட்டதென்று பூர்ஷ்வாக்களுக்கு உணர்த்தியது'' என்றார் லெனின்.* உலக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகியது.

* V. I. Lenin, *Collected Works*, vol. 28, p. 44.

## சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரஸ் ஆவணங்களிலிருந்து

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி சோவியத் மக்களுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தும் சக்தியாக, சோவியத் சமுதாயத்தின் அரசியலமைப்பின் உட்கருவாகத் திகழுகிறது. மார்க்சிய—லெனினியத் தத்துவத்தைத் தன் தத்துவமாக கொண்ட இக்கட்சி நாட்டு வளர்ச்சியின் பிரதானப் போக்கை வரையறுக்கிறது, மக்களின் ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கு விஞ்ஞானத் தலைமையை அளிக்கிறது, கம்யூனிச கட்டுமானத்திற்கு ஸ்தாபன ரீதியான, திட்டமிட்ட, செயல்முனைப்பான தன்மையை அளிக்கிறது.

கட்சியின் உயர் உறுப்புகளாகிய கட்சி காங்கிரசுகளில்—இவை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கூட்டப்படுகின்றன—கட்சி மத்திய கமிட்டியின் (இது இரண்டு காங்கிரசுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கட்சியைத் தலைமை தாங்கி நடத்தும் உயர் உறுப்பாகும்) அறிக்கைகள் விவாதிக்கப்படுகின்றன, எதிர்கால உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய கடமைகளும் திசையமைவுகளும் வரையறுக்கப்படுகின்றன.

1986ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட ஆவணங்களின்—கட்சி மத்திய கமிட்டியின் அரசியல் அறிக்கை, இந்த அறிக்கை சம்பந்தமான காங்கிரஸ் தீர்மானம், கட்சி வேலைத் திட்டத்தின் புதிய பதிப்பு—மிக முக்கிய பகுதிகள் இங்கே பிரசுரிக்கப்படுகின்றன.

**சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் பொதுச் செயலர் மி. செ. கர்பச்சோவ் 1986 பிப்ரவரி 25இல் கட்சியின் 27ஆவது காங்கிரசில் சமர்ப்பித்த அரசியல் அறிக்கையிலிருந்து**

*பிரதிநிதித் தோழர்களே!*

*மதிப்பு மிகு விருந்தினர்களே!*

நாட்டின் வாழ்விலும் மொத்தமாக நவீன உலக வாழ்விலும் ஒரு பெரும் திருப்புமுனையான கட்டத்தில் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரஸ் கூடியுள்ளது. கட்சியின் முன்னும் சோவியத் மக்களின் முன்னும் நமக்குள்ள பொறுப்பை ஆழ்ந்து புரிந்து கொண்ட உணர்வுடன் காங்கிரசின் பணியை ஆரம்பிக்கின்றோம். நாம் கடந்து கொண்டிருக்கும் காலத்தை லெனினிய நோக்கில் புரிந்து கொள்வதும் மாபெரும் இலட்சியங்களையும் எதார்த்த வாய்ப்புகளையும் இணைக்கக் கூடிய, கட்சியின் திட்டங்களை ஒவ்வொரு நபரின் நம்பிக்கைகள், அபிலாஷைகளுடன் இயல்பாக இணைக்கக் கூடிய எதார்த்தமான, பன்முக ரீதியில் சீர்தூக்கிப் பார்க்கப்பட்ட செயல்திட்டத்தைத் தீட்டுவதும்தான் நம் கடமையாகும். இக்காங்கிரசின் முடிவுகள் அடுத்த சில ஆண்டுகளுக்கு, பல பத்தாண்டுகளுக்கு முன்னோக்கிய நம் இயக்கத்தின்—சோவியத் சோஷலிச சமுதாயத்தின் குணாம்ச ரீதியில் புதிய நிலையை நோக்கிய இயக்கத்தின்—தன்மையையும் வேகங்களையும் நிர்ணயிக்கும்.

கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பையும், கட்சி விதிமுறைகளிலான மாற்றங்களையும், அடுத்த ஐந்தாண்டிலும் எதிர்காலத்திலும் தேசியப் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய திசையமைவுகளையும் நம் காங்கிரசில் விவாதித்து ஏற்க வேண்டும். நம் கட்சிக்கும், நம் அரசிற்கும், நம் மக்களுக்கும் இந்த ஆவணங்கள் எவ்வளவு பெரும் முக்கியத்துவமுள்ளவை என்பதை சொல்லவே தேவையில்லை. இவற்றில் கடந்த காலத்தைப் பற்றிய மதிப்பீடு அடங்கியுள்

ளது, முதிர்ச்சியடைந்த கடமைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதோடு கூட எதிர்காலப் பார்வையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சோவியத் ஒன்றியம் 21ஆவது நூற்றாண்டில் எப்படி அடியெடுத்து வைக்கும், சர்வதேச அரங்கில் சோஷலிசத்தின் தோற்றமும் நிலைகளும் எப்படியிருக்கும், மனிதகுலத்தின் நாளைய தினம் எப்படிப்பட்டதாயிருக்கும் ஆகியவற்றைப் பற்றி நாம் இங்கே குறிப்பிடுகிறோம்.

இப்போது அமலில் உள்ள கட்சி வேலைத்திட்டம் ஏற்கப்பட்ட பின் சோவியத் சமுதாயம் தன் வளர்ச்சியில் பெரிதும் முன்னேறியுள்ளது. சாராம்சத்தில் நாம் நாடு பூராவையும் மீண்டும் புதிதாக்க் கட்டியுள்ளோம், பொருளாதாரம், கலாசாரம், சமூக நலத் துறையில் பெரும் மாற்றங்களை அடைந்துள்ளோம், புதிய சமுதாயத்தை நிர்மாணிக்கும் தலைமுறையினரை வளர்த்துள்ளோம். மனிதகுலத்தின் முன் விண்வெளிப் பாதையைத் திறந்து விட்டோம். இராணுவ போர்த்தந்திர சமன்நிலையை அடைந்தோம், இது ஆக்கிரமிப்பு திட்டங்களைக் கணிசமாக மட்டுப்படுத்தி, அணு ஆயுத யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட ஏகாதிபத்தியத்திற்குள்ள வாய்ப்புகளைக் குறைத்தது. சர்வதேச அரங்கில் சோவியத் நாட்டின், உலக சோஷலிசத்தின் நிலைகள் கணிசமாக வலுப்பட்டன.

நாடு கடந்து வந்துள்ள பாதை, அதன் பொருளாதார, சமூக, கலாசார சாதனைகள் மார்க்சிய-லெனினிய போதனையின் வீரியத்திற்கும், சோஷலிசத்தில் உள்ளடங்கி, சோவியத் சமுதாயத்தின் முன்னேற்றத்தில் உருக் கொண்டுள்ள மாபெரும் உள்ளாற்றலுக்கும் ஆணித்தரமான சான்றுகளாகும். கடும் உழைப்பும் போராட்டமும் மிக்க இந்த ஆண்டுகளில் அடையப்பட்ட சாதனைகளைக் கண்டு நாம் உண்மையிலேயே பெருமிதம் அடைய முடியும்!

சாதனைகளை உரிய வகையில் மதிப்பிடும் அதே நேரத்தில், அரசியல் மற்றும் நடைமுறை நடவடிக்கையில் நாம் செய்த தவறுகள், பொருளாதாரத்திலும் சமூக ஆன்மீகத் துறையிலும் நிலவிய தீய போக்குகள், அவற்றிற்கான காரணங்கள் ஆகியவற்றைப் பற்றி கட்சிக்கும் மக்களுக்கும் நேர்மையாக, ஒளிவு மறைவற்று சொல்வது தன் கடமை

என்று கட்சித் தலைமை கருதுகிறது. ஒரு சில ஆண்டுகளாக, புறவயக் காரணங்களால் மட்டுமல்ல, எல்லாவற்றிற்கும் மேலாக அகவயக் காரணங்களால் கட்சி மற்றும் அரசு உறுப்புகளின் நடைமுறை நடவடிக்கைகள் காலத்தின், வாழ்க்கையின் கோரிக்கைகளிலிருந்து பின்தங்கிப் போயின. நாட்டு வாழ்க்கையில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதை விட அதிக வேகத்தில் அவை திரண்டன. சடத்துவம், தேக்கமடைந்த நிர்வாக வடிவங்கள், முறைகள், வேலையில் சீரிசைவு குறைந்தது, அதிகார சடங்குப் போக்கு வலுப்பட்டது ஆகியவை எல்லாம் சேர்ந்து காரியத்திற்குப் பெரும் கேடிழைத்தன. சமுதாய வாழ்க்கையில் தேக்கப் போக்குகள் நுழையலாயின.

நிலவரம் மாற்றத்தைக் கோரியது, ஆனால் மைய உறுப்புகளில், ஏன் உள்ளூரிலும், ஒன்றையும் மாற்றாமல் காரியத்தை மேம்படுத்த வேண்டும் என்ற ஒருவித விசேஷ மனப்பாங்கு மேலோங்கத் துவங்கியது. ஆனால், தோழர்களே, அது சாத்தியமில்லை. ஒரு நொடி தாமதித்தால் ஒரு பர்லாங் பின்தங்கி விடலாம். தீர்க்க வேண்டிய பிரச்சினைகளிலிருந்து விலகக் கூடாது. இப்படிப்பட்ட நிலையால் நாட்டிற்கு, அரசிற்கு, கட்சிக்குப் பேரிழப்பு ஏற்படும். அதைப் பற்றி ஒளிவு மறைவற்று கூறியாக வேண்டும்!

சமுதாயத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் தீயப் போக்குகளை இயன்ற அளவு விரைவாக அகற்றுவது, அதற்கு அவசியமான சீரிசைவையும் துரிதப் போக்கையும் அளிப்பது, கடந்த காலத்திலிருந்து அதிகபட்ச படிப்பினைகளைப் பெற்று எதிர்காலத் தீர்வுகள் துல்லியமானவையாக, பொறுப்புள்ளவையாக இருக்கும்படி செய்வது, திட்டவட்டமான நடவடிக்கைகள் செயல்முனைப்பானவையாக, செயல்வன்மையுள்ளவையாக இருக்கும்படி செய்வது என்ற கடமைகள் முக்கியமானவையாக முன்நின்றன.

திருப்புமுனையான நிலவரம் உள்நாட்டு விவரங்களில் மட்டும் உருவாகவில்லை. இந்நிலவரம் வெளியுறவுகளிலும் காணப்பட்டது. நவீன உலக வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அவ்வளவு ஆழமானவையாகவும் கணிசமானவையாகவும் இருப்பதால் அவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது, அதன் எல்லாக் காரணிகளையும் பன்முக ரீதியில்

பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது. அணு ஆயுத சகாப்தம், வேறுபட்ட சமூக அமைப்புகள், அரசுகள், பிராந்தியங்களுக்கு இடையிலான பரஸ்பர உறவுகளை புதிய விதங்களில், முறைகளில் அணுகுமாறு கட்டாயப்படுத்துகிறது.

ஏகாதிபத்தியத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஆயுதப் போட்டி, உலக அரசியலில் 20ஆம் நூற்றாண்டு பின்வரும் கேள்வியுடன் முடிவதற்கு இட்டு வந்துள்ளது: மனிதகுலத்தால் அணு ஆயுத ஆபத்திலிருந்து தப்பிக்க முடியுமா அல்லது அணு ஆயுத மோதல் வாய்ப்பை அதிகரிக்க இட்டுச் செல்லும் சச்சரவுக் கொள்கை மேலோங்குமா? மூலதன உலகம் மேலாதிக்க சித்தாந்தத்தையும் கொள்கையையும் இன்னமும் கைவிடவில்லை, சமூகப் பழி வாங்கல் நம்பிக்கை இன்னமும் இதன் ஆட்சியாளர்களை விட்டு அகலவில்லை, பல மேம்பாடு பற்றிய மாயை இன்னமும் அவர்களைப் பிடித்து ஆட்டுகிறது. நடக்கும் சம்பவங்களைப் பற்றிய நிதானமான மதிப்பீடுகள் ஆளும் வர்க்கங்களின் சிந்தனையில் உள்ள மூடநம்பிக்கைகள், ஒரு சார்பு நிலைகளைக் கடக்கப் பெரிதும் பாடுபட வேண்டியுள்ளது. வரலாற்று தருணத்தின் சிக்கலான தன்மையும் கடுமையும், அணு ஆயுதத்தைச் சட்டவிரோதமானதாக அறிவிக்க வேண்டும், அதையும் மற்ற பேரழிவு ஆயுதங்களையும் முழுமையாக ஒழித்துக் கட்ட வேண்டும், சர்வதேச உறவுகளைச் சீர்படுத்த வேண்டும் என்ற கடமையை மேன்மேலும் முக்கியமானதாக ஆக்குகின்றன.

**1985** ஏப்ரல் மாத கட்சி மத்திய கமிட்டியின் முழுப் பேரவைக் கூட்டம் நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் கொள்கையை முன்வைத்தது. இது உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் உருவாகிய கோட்பாட்டு ரீதியில் புதிய நிலவரத்தைக் கட்சி ஆழமாகப் புரிந்து கொண்டதற்கும், தாய்நாட்டின் எதிர்காலத்தில் தனக்குள்ள பொறுப்பை அது உணர்ந்ததற்கும் சான்று பகர்ந்தது,தேவையான மாற்றங்களை நிறைவேற்ற கட்சிக்குள்ள உறுதி, சித்தத்தின் வெளிப்பாடாக அமைந்தது.

நீண்டகால, கோட்பாட்டு ரீதியான கடமைகளை முன்வைக்கும் பொழுது மத்திய கமிட்டி, சமுதாய வளர்ச்சி

பற்றிய உண்மையான விஞ்ஞான தத்துவமாகிய மார்க்சிய-லெனினியத்தைத் தொடர்ச்சியாகப் பின்பற்றி நடக்கிறது. அது உழைப்பாளிகளின் அடிப்படை நலன்களை, சமூக நீதியை வெளிப்படுத்துகிறது. என்றும் குன்றா இளமை, வளரும் ஆற்றல், புதிய விவரங்கள், போக்குகள், புரட்சிப் போராட்ட அனுபவம், சமூக மாற்றங்களை ஆக்கபூர்வமாகப் பொதுமைப்படுத்தும் திறமை ஆகியவற்றில்தான் அதன் ஜீவ சக்தி அடங்கியுள்ளது.

நாம் பின்பற்றி நடக்கும் தத்துவத்தை எல்லா இடங்களுக்கும் எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற சிபாரிசுகள், தேக்கமுற்ற வழிகாட்டிகளின் தொகுப்பாக மாற்ற செய்யப்படும் எந்த ஒரு முயற்சியும் மார்க்சிய-லெனினிய மனப்பாங்கிற்கு, அதன் சாரத்திற்குப் பெரிதும் முரண்பாடானது. மார்க்சும் எங்கெல்சும் '' 'சூத்திரங்களை' வெறுமே மனப்பாடம் செய்து கொண்டு திருப்பிச் சொல்லி வருவதை சரியாகத்தான் கேலிசெய்தார்கள்; இந்தச் சூத்திரங்களால் அதிக பட்சமாகச் சொன்னால் பொதுவான கடமைகளை வரையறுக்க மட்டுமே முடியும்; இந்தப் பொதுவான கடமைகள் சரித்திர இயக்கப் போக்கின் குறிப்பிட்ட ஒவ்வொரு காலப் பகுதிக்கும் உரிய ஸ்தூலமான பொருளாதார, அரசியல் நிலைமைகளால் அவசியம் மாறவே செய்யும்'' என்று வி. இ. லெனின் 1917இல் எழுதினார்.* இவ்வார்த்தைகளை நாம் ஒவ்வொருவரும் தீர யோசித்து நம் மனதிலிறுத்த வேண்டும்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் திட்டவட்டமான பொருளாதார, அரசியல் சூழ்நிலை, சோவியத் சமுதாயமும் உலகம் முழுவதும் கடந்து கொண்டிருக்கும் வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் விசேஷ தருணம், ஆக்கபூர்வமான அணுகுமுறையை, புதிய போக்கை, பழகிப் போன, ஆனால் பழையதாகி விட்ட கருத்துகளின் வரம்புகளிலிருந்து மீளும் திறமையைக் கட்சியிடமிருந்து, ஒவ்வொரு கம்யூனிஸ்டிடமிருந்து கோருகின்றன.

---

* வி. இ. லெனின், போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1982, பக்கம் 7.

காங்கிரசில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் மீதான விவாதங்களில் நம் வாழ்க்கை, கட்சிக் கொள்கையின் எல்லா முக்கிய பிரச்சினைகளைப் பற்றியும் ஒளிவுமறைவற்ற, ஆக்க பூர்வமான பெரும் கருத்துப் பரிமாற்றம் நடந்தது. கட்சி முழுவதன், மக்களனைவரின் ஞானத்தால், அனுபவத்தால் செழுமையடைந்து நாம் இக்காங்கிரசிற்கு வந்துள்ளோம். எந்த வரிசைக் கிரமத்தில் எதைச் செய்ய வேண்டும், நம்முடைய முன்னோக்கிய இயக்கம் உரிய வேகத்தைப் பெற எந்த உந்து சக்திகளை இயக்குவிக்க வேண்டும் என்பதெல்லாம் இன்று நன்கு விளங்குகின்றன.

சோஷலிச அமைப்பின் மேம்பாடுகளையும் வாய்ப்புகளையும், அதன் பொருளாதார வல்லமையையும் சமூக உள்ளாற்றலையும் நம்மால் எப்படி செயல்வன்மையோடு பயன்படுத்த முடியும், பழையதாகிப் போன வேலைப் பாணி, முறை, வடிவங்களை எப்படி புதுப்பித்து, அவை, மாறிய சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி இருக்கச் செய்ய முடியும் என்பதைப் பொறுத்துதான் இன்று பல விஷயங்கள்—ஏன், சாராம்சத்தில் எல்லாமே—அமையும். இந்த வழியில் மட்டுமே நம்மால் நம் நாட்டின் வல்லமையைப் பெருக்க முடியும், சோவியத் மக்களுடைய பொருளாயத, ஆன்மீக வாழ்க்கையை குணாம்ச ரீதியில் புதிய மட்டத்திற்கு உயர்த்த முடியும், சமூக அமைப்பு என்ற வகையில் உலக வளர்ச்சியின் மீது சோஷலிசம் செலுத்தும் ஆக்கபூர்வமான தாக்கத்தின் உதாரணத்தை அதிகரிக்க முடியும்.

நாம் எதிர்காலத்தை உறுதியோடு நோக்குகிறோம், ஏனெனில் நம் கடமைகளும் அவற்றை நிறைவேற்றும் வழிகளும் நமக்கு நன்கு தெரிகின்றன. நாம் எதிர்காலத்தை உறுதியோடு நோக்குகிறோம், ஏனெனில் நாம் மக்களின் பலமான ஆதரவை அடிப்படையாகக் கொண்டுள்ளோம். நாம் எதிர்காலத்தை உறுதியோடு நோக்குகிறோம், ஏனெனில் நாம் சோஷலிசத் தாயகத்தின் நலன் கருதி, எந்த மாபெரும் இலட்சியங்களுக்கு தன்னலமற்று சேவை புரிய கம்யூனிஸ்டுக் கட்சி தன்னை அர்ப்பணித்துள்ளதோ அந்த மாபெரும் இலட்சியங்களின் நலன் கருதி நாம் செயல்படுகிறோம்.

## I. இன்றைய உலகின் முக்கியப் போக்குகளும் முரண்பாடுகளும்

தோழர்களே! வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பின் இந் நகலில் இன்றைய உலக வளர்ச்சியின் முக்கியப் போக்குகள், சிறப்பியல்புகளைப் பற்றிய பன்முக பகுப்பாய்வு தரப்பட்டுள்ளது. எதிர்காலத்தை அதன் எல்லாத் திட்டவட்டமான வெளிப்பாடுகளுடன் சேர்த்து கணித்துக் கூறுவது வேலைத் திட்டத்தின் நோக்கமல்ல. அது ஒரு வீணான முயற்சியாயிருக்கும். அதே நேரத்தில் இன்னொன்றையும் பார்க்க வேண்டும். எதார்த்தத்தின் முக்கியப் போக்குகளைத் திட்டவட்டமாகப் புரிந்து கொண்டால்தான் சரியான, விஞ்ஞான ரீதியான கொள்கையைப் பின்பற்றி நடக்க முடியும். நடக்கும் சம்பவங்களின் இயக்கவியலினுள், அதன் புறவய தர்க்கத்தினுள் புகுவதென்பது, காலத்தின் இயக்கத்தைப் பிரதிபலிக்கும் சரியான முடிவுகளைச் செய்யும் திறமை என்பது சாதாரண காரியமல்ல, ஆனால் இது உடனடியாக அவசியமானதாகும்.

அக்டோபர் புரட்சிக்கு முன்னரே முதலாளித்துவப் பொருளாதாரத்தை மட்டும் மனதிலிறுத்தி லெனின், இதன் எல்லாக் கிளைகளிலும் நடைபெறும் மாற்றங்களின் மொத்தத்தை 70 மார்க்ஸ்களால் கூட ஆராய முடியாதென்றார். ஆனால் ''இம்மாற்றங்களின் விதிகளை மார்க்சியம் கண்டுபிடித்தது, இம்மாற்றங்களின், இவற்றின் வரலாற்று வளர்ச்சியின் **புறவய ரீதியான** தர்க்கம் பிரதானமாயும் முக்கியமாயும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது...'' என்றார் லெனின்.*

நவீன உலகம் சிக்கலானது, பன்முகமயமானது, சீரிசைவானது, அதில் எதிரெதிரான போக்குகள் ஊடுருவி நிற்கின்றன. அது முரண்பாடுகளால் நிறைந்துள்ளது. அது மிகச் சிக்கலான மாற்று வழிகளும் கவலைகளும் நம்பிக்கைகளும் கலந்து நிறைந்தது. இதற்கு முன் எப்போதுமே நம் உலகம் இவ்வளவு அரசியல், பௌதீக சுமைகளைத் தாங்கியதில்லை. இதற்கு முன் எப்போதுமே மனிதன் இயற்கை

* V. I. Lenin, *Collected Works*, vol. 14, p. 325.

யிடமிருந்து இவ்வளவு அதிகமாகப் பெற்றதில்லை, தான் தோற்றுவித்த வல்லமையின் முன் இப்படிக் கட்டுண்டு நின்றதுமில்லை.

சமுதாய வரலாறு என்பது தற்செயலான காரணிகளின் ஒட்டுமொத்தமோ, தாறுமாறான ''பிரௌன் இயலியக்கமோ'' அல்ல, இது ஒரு நியதியான, முன்னோக்கிய நிகழ்ச்சிப் போக்கு என்ற மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படை முடிவை உலக வளர்ச்சி ஊர்ஜிதப்படுத்துகிறது. இதன் முரண்பாடுகள் பழைய உலகிற்கு, எவையெல்லாம் முன்னோக்கிச் செல்ல தடையாக உள்ளனவோ அவையெல்லாவற்றிற்கும் தண்டனையை அறிவிப்பதோடு கூட சமுதாய முன்னேற்றத்தின் மூல ஊற்றாக, உந்து சக்தியாகவும் திகழுகின்றன. இம்முன்னேற்றம், சுரண்டலும் சுரண்டும் வர்க்கங்களும் நிலவும் வரை தவிர்க்க இயலாததாகத் திகழும் போராட்டச் சூழ்நிலையில் நடைபெறும்.

மாபெரும் அக்டோபர் புரட்சியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட விடுதலை இயக்கங்கள்தான் 20ஆம் நூற்றாண்டின் தன்மையை நிர்ணயிக்கின்றன. விஞ்ஞான, தொழில்நுட்ப சாதனைகளும் சமுதாய வாழ்க்கை மீது விரைவான விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் செலுத்தும் தாக்கமும் எவ்வளவுதான் கணிசமானவையாக இருந்தாலும் மனிதனின் சமூக, ஆன்மீக விடுதலைதான் அவனை உண்மையிலேயே சுதந்திரமானவனாக ஆக்குகிறது. இப்பாதையில் ஏற்படும் இடர்ப்பாடுகள் எப்படிப்பட்டவையாக—புறவய ரீதியானவையாக, பழைய உலகத்தால் செயற்கையாக ஏற்படுத்தப்படுபவையாக—இருந்தாலும் வரலாற்றுப் போக்கைத் தவிர்க்க முடியாது.

நம் நூற்றாண்டின் சமூக மாற்றங்கள், எதிர்கால சமுதாய வளர்ச்சியின் சூழ்நிலைகளை மாற்றியமைக்கின்றன. புதிய பொருளாதார, அரசியல், விஞ்ஞான தொழில்நுட்ப, உள்நாட்டு மற்றும் சர்வதேசக் காரணிகள் செயல்படுகின்றன. அரசுகள், மக்களினங்களின் பரஸ்பரத் தொடர்பு அதிகரிக்கிறது. இவையெல்லாம் சேர்ந்து அரசுகளின் முன் எல்லா விஷயங்களிலும்—வெளிநாட்டுக் கொள்கை, பொருளாதார மற்றும் சமூக செயல்வன்மை, சமுதாயத்தின் ஆன்

மீகத் தன்மை எதுவாயிருந்தாலும் சரி—குறிப்பாக கறா ரான கோரிக்கைகளை வைக்கின்றன.

நம் காலத்தில் முன்னேற்றம் என்பது சோஷலிசத்துடன் சமப்படுத்தப்படுவது முற்றிலும் நியாயமானதே. உலக சோஷலிசம் என்பது வலிமையான சர்வதேச அமைப்பாகும், இது உயர் வளர்ச்சியடைந்த பொருளாதாரம், நன்கு உறுதி யான விஞ்ஞான அடித்தளம், நம்பகரமான இராணுவ அர சியல் உள்ளாற்றல் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டுள் ளது. மனிதகுலத்தில் மூன்றிலொரு பங்கிற்கு மேற்பட்டோர் இதன் கீழ் வாழுகின்றனர், மனிதனின், சமுதாயத்தின் அறிவு செல்வத்தையும் தார்மீக பொக்கிஷத்தையும் பன்முக ரீதி யில் வெளிப்படுத்தும் பாதையில் நடைபோடும் பல டஜன் நாடுகளும் மக்களினங்களும் இதிலடங்குவர். சோஷலிச நீதிக் கோட்பாடுகளின் அடிப்படையிலான புதிய வாழ்க்கை முறை தோன்றியது, இதில் ஒடுக்குபவர்களோ, ஒடுக்கப்படு பவர்களோ, சுரண்டுபவர்களோ, சுரண்டப்படுபவர்களோ கிடையாது, இங்கே ஆட்சி மக்களுக்குச் சொந்தமானது. கூட்டு மனப்பாங்கு, தோழமை ரீதியான பரஸ்பர உதவி, விடுதலை இலட்சியங்களின் வெற்றி, சமுதாய உறுப்பினர் கள் ஒவ்வொருவரின் உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் இடையிலுள்ள பிரிக்க இயலா ஒற்றுமை, மானுட மேன்மை, உண்மையான மனிதாபிமானம் ஆகியவை இதன் சிறப்பு அம்சங்களாகும். சோஷலிசம் என்பது மனிதகுலம் முழு வதன் முன்னும் திறந்து விடப்பட்டுள்ள எதார்த்த வாய்ப்பு, எதிர்காலத்தை நோக்கிய எடுத்துக்காட்டாகும்.

அன்றைய பொருளாதார, சமுதாய மட்டத்தில் பெரி தும் முன்னணியில் இல்லாத, தம் பொருளாதார அமைப் பிலும் வரலாற்று, தேசியப் பாரம்பரியங்களிலும் தம் மிடையே மிகவும் வேறுபட்டிருந்த நாடுகளில்தான் சோஷ லிசம் தோன்றியது, கட்டப்பட்டது. இவற்றில் ஒவ்வொன்றும் புதிய அமைப்பிற்குத் தத்தம் பாதையில் வந்தது; இதன் மூலம், ஒரே அடித்தளம் அதன் திட்டவட்டமான வெளிப் பாடுகளில் முடிவற்ற வகைகளில், விதங்களில் தோன்றும் என்ற மார்க்சின் கணிப்பு மெய்ப்பிக்கப்பட்டது.

இப்பாதைகள் தங்கு தடைகளற்றவையாகவோ சாதாரணமானவையாகவோ இருக்கவில்லை. பின்தங்கியிருந்த அல்லது சிதறிப் போயிருந்த பொருளாதாரத்தை உயர்த்துவது, கோடானு கோடி மக்களுக்குச் சாதாரண எழுத்தறிவைக் கற்பிப்பது, அவர்களுக்கு இருப்பிடம், உணவு, இலவச மருத்துவ உதவியை அளிப்பது மிகக் கடினமானதாக இருந்தது. சமூக கடமைகளின் புதிய தன்மை, ஏகாதிபத்தியத்தின் இடையறா இராணுவ, பொருளாதார, அரசியல், மனநிலை நிர்ப்பந்தம், பாதுகாப்பிற்காக மிகப் பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம்—இவையெல்லாம் சம்பவப் போக்குகளின் மீது, சமூக பொருளாதார செயல் திட்டங்கள், மாற்றங்களின் தன்மை, நிறைவேற்ற வேகங்கள் மீது தாக்கம் செலுத்தின. கொள்கைத் தவறுகளும் பல்வேறு அகவய ரீதியான பிறழ்வுகளும் ஏற்படாமலில்லை.

ஆனால் இப்படிப்பட்டதுதான் வாழ்க்கையாகும், இது எப்போதும் பன்முக ரீதியான முரண்பாடுகளில்—இவை பல நேரங்களில் மிகவும் எதிர்பாராதவை—வெளிப்படுகிறது. இதை விடப் பன்மடங்கு அதிக முக்கியமானது இன்னொன்றாகும். சமூக பிரச்சினைகளைக் கோட்பாட்டு ரீதியில் இது வரையில்லா அடிப்படையில்—அதாவது கூட்டு அடிப்படையில்—தீர்க்க முடியுமென்று சோஷலிசம் காட்டியது, நாட்டை உயர்வான வளர்ச்சி மட்டத்திற்கு உயர்த்தியது, உழைப்பாளிகளுக்கு உறுதியான, மேன்மையான வாழ்க்கையை அளித்தது.

சோஷலிசம் இடையறாமல் சமூக உறவுகளை மேம்படுத்துகிறது, அடையப்பட்டவற்றைச் செயல்முனைப்போடு பெருக்குகிறது, தன் உதாரணத்தின் சக்தியையும் உறுதியையும் வலுப்படுத்துகிறது, வாழ்க்கை முறை முழுவதன் உண்மையான மனிதாபிமானத்தை வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் இது யுத்தம், இராணுவ வெறி, பிற்போக்கு மற்றும் வன்முறையின் சித்தாந்தம், கொள்கைக்கு, மானுட விரோதத் தன்மையின் சகலவிதமான வடிவங்களுக்கு மேன்மேலும் உறுதியாகத் தடையிடுகிறது, சமூக முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுகிறது. இது மகத்தான தார்மீக, பொருளாதாரச் சக்தியாக வளர்ந்துள்ளது, நவீன நாகரிகத்

தின் முன் எத்தகைய வாய்ப்புகள் திறந்து விடப்படுகின்றன என்று காட்டியுள்ளது.

சமூக முன்னேற்றப் போக்கானது காலனி எதிர்ப்பு புரட்சிகள், தேசிய விடுதலை இயக்கம், பல்வேறு அரசுகளின் புனர்வாழ்வு, பல டஜன் புதிய அரசுகளின் தோற்றம் ஆகியவற்றுடன் நெருக்கமாகத் தொடர்புடையது. அரசியல் சுதந்திரத்தை வென்ற இவை பின்தங்கிய நிலை, ஏழ்மை, பல நேரங்களில் போக்கற்ற வறுமை ஆகியவற்றிற்கு—இவையெல்லாம் பழைய அடிமைத்தனம் விட்டுச் சென்ற கடினமான சொத்தாகும்—எதிராகக் கடும் போராட்டத்தை நடத்துகின்றன. கடந்த காலத்தில் ஏகாதிபத்தியக் கொள்கையின் கீழ் உரிமைகளற்று வாடிய இம்மக்கள் சுயமான வரலாற்றைப் படைக்கும் பாதைக்கு வந்துள்ளனர்.

சர்வதேச கம்யூனிச, தொழிலாளர் இயக்க வளர்ச்சியிலும் யுத்த எதிர்ப்பு, அணு ஆயுத எதிர்ப்பு உட்பட புதிய வெகுஜன ஜனநாயக இயக்கம் விரிந்து பரந்ததிலும் சமுதாய முன்னேற்றம் வெளிப்படுகிறது. ஏகாதிபத்தியத்தின் தலைநாடாகிய அமெரிக்க ஐக்கிய நாடு உட்பட முதலாளித்துவ உலகம் பூராவும் அரசியல் சக்திகள் பிரிந்து போவதிலும் இது நன்கு தெரிகிறது. இங்கே முற்போக்கு விஷயங்கள் ஏகபோக எதேச்சாதிகார முறையைப் பிளந்து செல்ல வேண்டியுள்ளது, அணி திரண்டு நிற்கும் பிற்போக்கின்—மனிதர்களை முட்டாள்களாக்கும் ஏராளமான பொய்த் தகவல்களைக் கொட்டும் மிகப் பெரும் பிரசார இயந்திரமும் இதிலடங்கும்—நிரந்தர நிர்ப்பந்தத்தைத் தாங்க வேண்டியுள்ளது.

மார்க்ஸ், சுரண்டல் சமுதாயத்தில் ஏற்படும் முன்னேற்றத்தைக் ''கொலையுண்டோரது மண்டையோடுகளில் இருந்து மட்டுமே அமுதம் பருகும் பயங்கரமான காட்டுமிராண்டி விக்ரகத்துடன்'' ஒப்பிட்டார்.* ''நம் காலத்தில் ஒவ்வொன்றும் அதன் மறுப்பையும் சூல் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. மனித உழைப்பைக் குறைக்கக்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 3, பக்கம் 215.

கூடிய, பலன் விளைவிக்கக் கூடிய அதிசயமான சக்தியைக் கொண்ட இயந்திரம் மக்களைப் பட்டினி போடுவதையும் கூடுதலாக உழைக்கச் செய்வதையும் பார்க்கிறோம். புதுவர வான செல்வத்தின் தோற்றுவாய்கள் ஏதோ ஒரு விசித்திர மான சாபத்தினால் வறுமையின் தோற்றுவாய்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஒழுக்கத்தின் வீழ்ச்சியை விலை யாகக் கொடுத்துத் தொழில்நுட்ப வெற்றிச் சாதனைகளை வாங்குவதாகத் தோன்றுகிறது. மனிதகுலம் இயற்கையை அடிமைப்படுத்துகின்ற அதே வேகத்தில் மனிதன் மற்ற மனிதர்களுக்கு அல்லது தன்னுடைய கொடும்பழிகளுக்கு அடிமையாகி விடுவதைப் போலத் தோன்றுகிறது. விஞ்ஞா னத்தின் தூய்மையான வெளிச்சம் அறியாமை என்ற இருண்ட பின்னணி இல்லாவிட்டால் ஒளி வீச முடியாது என்று தோன்று கிறது. நம்முடைய எல்லாக் கண்டுபிடிப்பும் முன்னேற்ற மும், பொருளாயதச் சக்திகளுக்கு அறிவு பூர்வமான வாழ்க் கையைக் கொடுத்து, தன்னுடைய அறிவு அம்சத்தை இழந்த மனித வாழ்க்கையை ஒரு பொருளாயதச் சக்தியாக வீணாக் கும் விளைவில் முடிவதைப் போலத் தோன்றுகின்றன'' என் கிறார் மார்க்ஸ்.*

மார்க்சின் பகுப்பாய்வில் அடங்கியுள்ள பரந்த வர லாற்றுத் தன்மையும் கூர்மையும் ஆழமும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. 19ஆம் நூற்றாண்டை விட, 20ஆம் நூற் றாண்டின் பூர்ஷ்வா எதார்த்தத்திற்கு இப்பகுப்பாய்வு இன்ன மும் அதிகப் பொருத்தமானதாகப் படுகிறது. ஒரு புறம், விஞ்ஞானம், தொழில்நுட்பத்தின் விரைவான வளர்ச்சி, இயற்கைச் சக்திகளை அடக்கியாளவும் வாழ்க்கைச் சூழ்நிலை களை மேம்படுத்தவும் முன்பின் காணா வாய்ப்புகளைத் திறந்து விடுகிறது. மறு புறமோ, ஏகாதிபத்தியத்தால் தோற்றுவிக்கப்பட்ட மிக ரத்தக் களறியான யுத்தங்கள், இராணுவ வெறி மற்றும் பாசிசத்தின் பேயாட்டம், இனப் படுகொலை, கோடானுகோடி மக்களின் பங்கிழப்பு ஆகிய வற்றோடுதான் ''அறிவொளியூட்டப்பட்ட'' 20ஆம் நூற்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 4, பக்கம் 201.

றாண்டு வரலாற்றில் இடம் பெற்றது. மூலதன உலகில் உயர்வான விஞ்ஞான, கலாசார சாதனைகளோடு கூட அறியாமையும் முன்னேற்ற விரோதப் போக்கும் அருகருகே நிலவுகின்றன. இந்த சமுதாயத்தோடு கூடத்தான் நாம் சேர்ந்து வாழ வேண்டும், அதனுடன் ஒத்துழைக்கவும் பரஸ்பரம் புரிந்து கொள்ளவும் பாதைகளைத் தேட வேண்டும். வரலாறு இப்படித்தான் கட்டளையிட்டுள்ளது.

மனிதகுலத்தின் முன்னேற்றம் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியுடனும் நேரடியாகத் தொடர்புடையது. படிப்படியாக, மெதுவாக முதிர்ச்சியடைந்த இப்புரட்சி நூற்றாண்டின் கடைசி கால் பகுதியில் மனிதனின் பொருளாயத, ஆன்மீக வாய்ப்புகள் பிரம்மாண்டமான வளர்ச்சியடைய வழியமைத்தது. இவ்வாய்ப்புகள் இரண்டு வகையானவை. மனிதகுலத்தின் உற்பத்திச் சக்திகளில் ஏற்பட்டுள்ள குணாம்ச ரீதியான பாய்ச்சல் கண்கூடு. அதே பொழுது, அழிவுச் சாதனங்களில், இராணுவத் துறையில் ஏற்பட்டுள்ள குணாம்ச ரீதியான பாய்ச்சலும் தெரிகிறது—இது பூமியில் உள்ள உயிரினம் அனைத்தையும் அப்படியே அழிக்கும் திறமையை வரலாற்றிலேயே முதன்முதலாக மனிதனுக்கு அளித்தது.

வெவ்வேறு சமூக பொருளாதார முறைகளில் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி வெவ்வேறு பின்விளைவுகளை ஏற்படுத்துகிறது. 1980ஆம் ஆண்டுகளின் முதலாளித்துவம், மின்னணுத் துறையும் தகவல் தொடர்பு முறைகளும், கணிப்பொறிகளும் தானியங்கி எந்திரங்களும் பெரும் வளர்ச்சியடைந்துள்ள சகாப்தத்தின் முதலாளித்துவம், இளைஞர்கள், கல்விக் கற்றவர்கள் உட்பட லட்சோபலட்சம் மக்களைப் புதிது புதிதாக வீதிக்குத் தள்ளுகிறது. செல்வமும் அதிகாரமும் ஒரு சிலரின் கரங்களில் இன்னமும் அதிகமாக குவிகின்றன. இராணுவ வெறி, ஆயுதப் போட்டியில் முன்பின் காணா அளவிற்குக் கொழுக்கிறது, இது படிப்படியாக அரசியல் ஆட்சியைப் பிடிக்கவும் முயலுகிறது. இந்த இராணுவ வெறி 20ஆம் நூற்றாண்டின் மிக அகோரமான, ஆபத்தான விஷயமாக மாறி வருகிறது, இதன் முயற்சிகளால் மிக முற்போக்கான விஞ்ஞான தொழில்நுட்பச் சிந்தனை பேரழிவு ஆயுதங்களாக மறு பிறப்பெடுக்கிறது.

வளர்முக நாடுகளின் முன் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி பின்வரும் கேள்வியை மிகக் கடுமையாக வைக்கிறது: இவற்றால் விஞ்ஞான தொழில்நுட்பச் சாதனைகளை முழுமையாகப் பயன்படுத்தி, அதன் மூலம் நவீன காலனியாதிக்கம் மற்றும் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தில் பலம் பெற முடியுமா அல்லது இவை உலக வளர்ச்சியின் எல்லையோரங்களில் அப்படியே நின்று விடுமா என்பதுதான் அக்கேள்வியாகும். உலகின் இப்பகுதியில் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள பல சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் எப்படித் தீர்க்கப்படாமல் உள்ளன என்று விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி தெட்டத்தெளிவாகப் படம் பிடித்து காட்டுகிறது.

நவீன விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மக்களுக்கு சேவை புரியும்படி செய்யவல்ல அனைத்தும் சோஷலிசத்தின் வசம் உள்ளன. ஆனால் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி சோஷலிச சமுதாயத்தின் முன் பிரச்சினைகள் எதையும் வைக்கவில்லை என்று கருதுவது தவறாகும். அதன் வளர்ச்சி சமூக உறவுகள் மேம்படுவதுடனும், சிந்தனையின் சீரமைப்புடனும், புதிய மனநிலை உருவாவதுடனும், வாழ்க்கை முறையாக, வாழ்நிலையின் வரையளவாக முழு வேக நிலை பெறுவதுடனும் தொடர்புடையது என்று அனுபவம் காட்டுகிறது. நிர்வாக முறைகளை இடையறாது மறுபரிசீலனை செய்து புதுப்பிக்கும்படி இது உறுதியோடு கோருகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி எதிர்கால வாய்ப்புகளைத் திறந்து விடுவதோடு கூட, உள்நாட்டு மற்றும் சர்வதேச வாழ்க்கை ஒழுங்கமைப்பு முழுவதன் முன்னும் உள்ள கோரிக்கைகளையும் கறாராக்குகிறது. விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தால் சமுதாய வளர்ச்சியின் விதிகளையோ அதன் சமூக உட்பொருளையோ சாரத்தையோ மாற்ற முடியாது, ஆனால் அம்முன்னேற்றம் உலகில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிப் போக்குகளின் மீது, அதன் முரண்பாடுகள் மீது பெரும் தாக்கம் செலுத்துகிறது.

பிரச்சினைகளைப் பற்றி சிந்திக்கத் தயாராய் இருப்பதிலும் அதற்கான திறமையிலும், அவற்றைத் தீர்ப்பதிலும் இரண்டு சமூக பொருளாதார அமைப்புகளும் கணிசமாக

வேறுபடுவதைப் பார்க்காமலிருக்க முடியாது.

மூன்றாவது ஆயிரமாண்டு பிறக்கவிருக்கும் தருணத்தில் நாம் வாழும் உலகம் இப்படிப்பட்டதுதான். இந்த உலகம் நம்பிக்கைகள் நிறைந்ததாகும், ஏனெனில் நாகரிகத்தை மேலும் வளர்ப்பதற்கு இன்றுள்ளதைப் போல் மக்கள் இதற்கு முன் எப்போதுமே இவ்வளவு பன்முக ரீதியில் தயாராய் இருந்ததில்லை. அதே பொழுது இந்த உலகத்தில் ஆபத்துகளும் முரண்பாடுகளும் மிகுந்து காணப்படுவதால், வரலாற்றிலேயே மிக கவலை தரும் தருணமாக இதைப் பற்றிப் பேச வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது.

முதலாவதாகவும் மனிதகுலத்தின் எதிர்கால நோக்கு நிலையிலிருந்து பார்க்குங்காலை மிக முக்கியமானவையாகவும் குறிப்பிடப்பட வேண்டிய முரண்பாடுகள் இரண்டு முறைகள், இரண்டு சமூக அமைப்புகளைச் சேர்ந்த அரசுகளுக்கு இடையிலான உறவுகளுடன் தொடர்புடையவையாகும். இம்முரண்பாடுகளுக்குப் பல்லாண்டு கடந்த காலமுண்டு. ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் புரட்சி நடந்தது முதல், சமூக வர்க்க அறிகுறியின்படி உலகம் பிளவுண்டது முதல் நடக்கும் சம்பவங்களை மதிப்பிடுவதிலும், உலக சமூக எதிர்காலத்தைப் பற்றிய கண்ணோட்டங்களிலும் கோட்பாட்டு ரீதியான வேறுபாடுகள் வெளிப்பட்டன.

சோஷலிசத்தின் பிறப்பை முதலாளித்துவம் வரலாற்றின் ''தவறாக'' எதிர்கொண்டு, அதைத் ''திருத்தியாக வேண்டும்'' என்று கருதியது. என்ன நேரிட்டாலும் சரி, எப்படியாவது, சட்டம், ஒழுக்கத்தையெல்லாம் பார்க்காது—ஆயுதத் தலையீட்டாலோ, பொருளாதார முற்றுகையாலோ, சீர்குலைவு நடவடிக்கையாலோ, தடை நடவடிக்கைகள் மற்றும் ''தண்டனைகளாலோ'', சகலவித ஒத்துழைப்பையும் நிராகரிப்பதாலோ—எப்பாடுபட்டாவது அதைத் திருத்தியாக வேண்டுமென்று கருதப்பட்டது. ஆனால் புதிய அமைப்பு நிலைபெறுவதை, உயிர்வாழுவதற்கு அதற்குள்ள வரலாற்று உரிமை வெற்றி பெறுவதை எதனாலும் தடுத்து நிறுத்த இயலவில்லை.

எந்த இடர்ப்பாட்டோடு முதலாளித்துவ உலகின் ஆளும் வர்க்கங்கள் எதார்த்தங்களைப் புரிந்து கொள்ள நெருங்கி

வருகின்றனவோ அந்த இடர்ப்பாடும், இரண்டு உலகங் களைப் பிரிக்கும் எல்லா முண்பாடுகளையும் பலத்தின் அடிப் படையில் தீர்க்க அவ்வப்போது மீண்டும் மீண்டும் மேற் கொள்ளப்படும் முயற்சிகளும் நிச்சயமாகத் தற்செயலான வையல்ல. ஏகாதிபத்தியத்தின் உள் காரணங்களும் அதன் சமூக பொருளாதாரச் சாரமும் இரண்டு அமைப்புகளின் போட்டியை இராணுவ சச்சரவு நிலைக்கு மாற்ற தூண்டு கோலாக அமைகின்றன. ஏகாதிபத்தியம் தன் சமூகத் தன் மையின் காரணமாய் எப்போதும் ஆக்கிரமிப்பு நோக்குடைய, அதிசாகசவாதக் கொள்கையைத் தூண்டி விட்டு வருகிறது.

ஆயுத உற்பத்தியாளர்கள் மற்றும் செல்வாக்கு மிக்க இராணுவ அதிகார வர்க்கக் குழுக்களின் பேய்ப்பசி, மூலப் பொருட்கள், விற்பனை சந்தைகள் மீது ஏகபோகங்களுக் குள்ள தன்னல அக்கறை, நடந்து வரும் மாற்றங்களைப் பற்றி பூர்ஷ்வாக்களுக்குள்ள அச்சம், இறுதியில், கூர்மை யடைந்து வரும் சொந்த பிரச்சினைகளை சோஷலிசத்தைக் கொண்டு தீர்க்கும் முயற்சிகள் போன்ற பல தூண்டுகோல் களை இங்கே சுட்டிக்காட்டலாம்.

கடைசியாக கூறிய அம்சம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏகாதிபத்தியத்திற்குக் குறிப்பாக உரித்தானது. 1945ஆம் ஆண்டிற்குப் பின், பாசிசம் மற்றும் இராணுவவெறி முறி யடிக்கப்பட்டதையடுத்து, யுத்தங்களற்ற உலகைப் படைப் பதற்கான உண்மையான வாய்ப்பு ஏற்பட்டதைப் போலி ருந்த பொழுது, இந்நோக்கங்களுக்காக சர்வதேச ஒத் துழைப்பு முறையாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தோற்று விக்கப்பட்ட பொழுது, இப்படிப்பட்டதொரு சூழ்நிலையில் அணு ஆயுதப் போட்டியையும் பிற ஆயுதங்களின் போட்டி யையும் ஏகாதிபத்தியம் கட்டவிழ்த்து விட முக்கியக் காரணம் அதன் மேலாதிக்க சித்தாந்தம், கொள்கை, சோஷ லிசத்தை, சோவியத் நாட்டை அதிகபட்சம் அனுகூலமற்ற வெளிச் சூழ்நிலைகளில் வைக்க வேண்டுமென்ற நாட்டம் ஆகியவையே ஆகும். ஆனால் இந்த முறையும் ஏகாதிபத் தியத்தின் தன்மை மாறவில்லை.

இன்றும் கூட அமெரிக்க ஏகபோக முதலாளிகளின் வலது சாரி பிரிவு, இராணுவ செலவுகள், உலகந்தழுவிய அளவி

லான பேராசை, பிற நாடுகளின் விவகாரங்களில் தலையீடு, அமெரிக்க உழைப்பாளிகளின் உரிமைகள், நலன்களின் மீதான தாக்கம் ஆகியவற்றை நியாயப்படுத்த சர்வதேசப் பதட்ட நிலையை அதிகப்படுத்துகிறது. கூட்டாளிகள் அதிக பட்சம் தமக்கடங்கி நடக்குமாறு செய்ய, அவற்றை வாஷிங்டனின் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்த அவர்கள் மீது நிர்ப்பந்தம் செலுத்த பதட்ட நிலையைப் பயன்படுத்த வேண்டும் என்ற கணிப்பும் கணிசமான பங்காற்றுவதாகப் படுகிறது.

முழுமையான மோதல் நிலை, இராணுவ சச்சரவு கொள்கைக்கு எதிர்காலம் கிடையாது. கடந்த காலத்திற்கு ஓடுவதென்பது எதிர்கால அறைகூவல்களுக்கான பதில் அல்ல, மாறாக கண்மூடித்தனமான ஒரு செயலாகும், ஆனால் அதனால் இந்நிலையின் அபாயம் ஒன்றும் குறைவதில்லை. வாஷிங்டனில் இதை எப்போது, எந்த அளவிற்கு உணருவார்கள் என்பதைக் காலம் காட்டும். சர்வதேச நிலவரத்தை முற்றிலுமாக சீர்படுத்துவதை நோக்கித் திரும்ப எம்மாலியன்ற அனைத்தையும் செய்ய நாங்கள் தயார். இதற்காக சோஷலிசம் தன் கோட்பாடுகளையோ, இலட்சியங்களையோ கைவிட வேண்டிய அவசியமில்லை. வேறுபட்ட சமூக அமைப்புகளைச் சேர்ந்த அரசுகளின் சமாதான சக வாழ்விற்காகத்தான் அது இடையறாமல் பாடுபட்டது, பாடுபடுகிறது.

வரலாற்றுப் போக்கைப் பலம் கொண்டு நிறுத்தி, பழையதைத் திரும்பக் கொண்டுவர முயலும் ஏகாதிபத்தியத்திற்கு மாறாக சோஷலிசம் எப்போதுமே தன் சொந்த விருப்பப்படி தன் எதிர்காலத்தை சர்வதேசப் பிரச்சினைகளின் இராணுவத் தீர்வுகளுடன் இணைத்ததில்லை. மாபெரும் அக்டோபர் புரட்சிக்குப் பின் நம் கட்சியில் நடந்த முதல் பெரும் விவாதமே அதை ஊர்ஜிதப்படுத்தியது. அவ்விவாதத்தின் பொழுது ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' மற்றும் டிராட்ஸ்கிஸ்டுகளின் கண்ணோட்டங்கள்—பிற நாடுகளுக்கு சோஷலிசத்தைக் கொண்டு வர ஏதோ உதவக் கூடிய ''புரட்சி யுத்தத்'' தத்துவத்தை இவர்கள் முன்வைத்தனர்—உறுதியோடு நிராகரிக்கப்பட்டது தெரிந்ததே. 1918ஆம் ஆண்டிலேயே வி.இ. லெனின் கோடிட்டுக் காட்டியபடி இந்நிலை

''மார்க்சியத்துக்கு முற்றாக மாறுபட்டது, ஏனெனில் புரட்சிகளை 'உந்துவதை' எப்போதும் மார்க்சியம் எதிர்த்து வந்திருக்கிறது; புரட்சிகள் அவற்றை உற்பத்தி செய்கிற வர்க்க முரண்பாடுகளின் மிகுந்து கொண்டே போகும் கூர்மையிலிருந்து வளர்கின்றன.''* வெளியிலிருந்து, அதுவும் இராணுவ முறைகளின் உதவியோடு புரட்சியை உந்தித் தள்ளுவதென்பது பயனற்றது, அனுமதிக்கத் தகாதது என்று இன்றும் நாம் உறுதியாக நம்புகின்றோம்.

மூலதன உலகம் அனுபவிக்கும் பிரச்சினைகளும் நெருக்கடிகளும் அதன் உள்ளேயே உருவாகின்றன, இவை பழைய சமுதாயத்தின் உள்பகை முரண்பாடுகளின் நியதியான விளைவாகும். இந்த அர்த்தத்தில் முதலாளித்துவம் தான் வளரும் பொழுது தன்னைத் தானே மறுக்கிறது. முதலாளித்துவ வளர்ச்சியின் கீழ் நோக்கிய கட்டத்தின் பிரச்சினைகள் கூர்மையடைவதைச் சமாளிக்க இயலாத ஏகாதிபத்திய நாடுகளின் ஆளும் வட்டங்கள், வரலாற்றினாலேயே அழியும்படி விடப்பட்ட ஒரு சமுதாயத்தைக் காப்பாற்ற இயலாத முறைகளையும் சாதனங்களையும் நாடுகின்றன.

சோவியத் அல்லது கம்யூனிச ''அபாயம்'' பற்றிய மாயை இன்று பழக்கத்தில் உள்ளது; ஆயுதப் போட்டியையும் தன் ஆக்கிரமிப்புத் தன்மையையும் நியாயப்படுத்துவதுதான் இதன் நோக்கமாகும். ஆனால் இராணுவப் பாதையில் விவேகமான தீர்வுகள் எதையும்—சர்வதேசப் பிரச்சினைகளுக்கும் சரி, உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கும் சரி—கண்டுபிடிக்க முடியாது என்பது மேன்மேலும் தெளிவாகி வருகிறது. உலக வளர்ச்சியின் எதிர்காலம் பற்றிய எதிரெதிரான அணுகுமுறைகளின் மோதலும் போராட்டமும் மிகவும் கடுமையாகியுள்ளன. உலகில் ஏராளமான அணு ஆயுதங்கள் குவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், மனிதகுலத்தை எவ்வளவு தடவை அல்லது டஜன் தடவைகள் அழிக்க முடியும் என்று நிபுணர்கள் விவாதித்து வருகையில், யுத்த விளிம்பில் நின்று ஊசலாடிக் கொண்டிருப்பதிலிருந்து, அச்சம் என்ற சமன்

---

* வி.இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 7, பக்கம் **204**.

நிலையிலிருந்து நடைமுறையில் விலகி, இரண்டு அமைப்புக்களைச் சேர்ந்த அரசுகளின் பரஸ்பர உறவில் சாதாரண, நாகரிக வடிவங்களுக்கு மாற வேண்டிய தருணம் வந்து விட்டது.

அடுத்து வரும் ஆண்டுகளில், சமாதானத்தைப் பேணிக் காக்க வல்ல கொள்கையின் உண்மையான சாரத்தைப் பற்றித் தான் முக்கியப் போராட்டம் நடைபெறும் என்று தெரிகிறது. இப்போராட்டம் சிக்கலானதாக, பன்முகத் தன்மையை உடையதாக இருக்கும், ஏனெனில் நாம் குறிப்பிடும் சமுதாயத்தின் ஆளும் வட்டங்கள் உலக எதார்த்தத்தையும் அதன் எதிர்காலத்தையும் நிதானமாக மதிப்பிடவோ, சொந்த அனுபவத்திலிருந்தும் பிறர் அனுபவத்திலிருந்தும் உரிய முடிவுகளைச் செய்யவோ விரும்பவில்லை. இவையெல்லாம் அதன் உள் ''தற்காப்பு முறை'' தேய்ந்து விட்டதற்கு, அது சமூக ரீதியில் சிதைந்து போனதற்கு அறிகுறியாகும், இது ஆதிக்கம் செலுத்தும் சக்திகளின் கொள்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கிறது, அக்கொள்கையின் விவேகமற்ற தன்மையை அதிகரிக்கிறது.

எனவேதான், உருவாகியுள்ள சூழ்நிலையில் சோஷலிச நாடுகளுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்கும், சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் இடையிலான எதிர்கால உறவுகளைக் கணித்துக் கூறுவது எளிதல்ல. இங்கே உலக அரங்கில் சக்திகளின் சமன்நிலை, சமாதான உள்ளாற்றலின் வளர்ச்சி, அதன் தீவிரத் தன்மை, அணு ஆயுத யுத்த அபாயத்தைச் செயல்வன்மையோடு எதிர்த்து நிற்க அதற்குள்ள திறமை ஆகியவைதான் இங்கே தீர்மானகரமான காரணிகளாகும். நிலவரத்தை மதிப்பிடுவதில் மேலைய ஆளும் வட்டங்கள் காட்டும் எதார்த்தமும் இங்கே கணிசமான அளவிற்கு முக்கியமானதாகும். ஆனால் அரசியல்வாதிகள் தம் பார்வையில் மட்டுமின்றி மனதிலும் குருடர்களாயிருந்தால் அது மோசமானதாகும். அணு ஆயுத யுத்தம் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாக ஆகும் பொழுது சச்சரவு அல்ல, மாறாக, சமாதான சகவாழ்வுதான் சர்வதேச உறவுகளின் விதியாக வேண்டும்.

இரண்டாவது வகையான முரண்பாடுகள் முதலாளித்துவ

உலகின் உள்ளேயுள்ள உள் முரண்பாடுகளாகும். கடந்த கால கட்டம், முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஆழமடைந்ததற்குப் பல சான்றுகளை வழங்கியுள்ளது. நவீன முதலாளித்துவம்—இதன் சுரண்டல் தன்மை இன்னமும் மாறவில்லை—20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், ஏன் நடுப்பகுதியில் அது இருந்த நிலையிலிருந்து பெரிதும் மாறுபடுகிறது. விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் தாக்கத்தின் கீழ், அதன் பின்னணியில், மிகப் பெருமளவு வளர்ந்து விட்ட உற்பத்திச் சக்திகளுக்கும் தனியுடைமை சமூக உறவுகளுக்கும் இடையிலான மோதல் இன்னமும் கடுமையானதாகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தின் அதிகரிப்பு, சமூகப் பிரச்சினைகள் கூர்மையடைந்தது; பொருளாதாரத்தை இழுத்துப் பிடிக்க மிகப் பிரபலமான வழி என்ற வகையில் இராணுவமயப்படுத்தல் எல்லா இடங்களிலும் ஊடுருவியுள்ளது; அரசியல் நிறுவனங்களிலும் ஆன்மீகத் துறையிலும் மேன்மேலும் அதிகரிக்கும் நெருக்கடி; உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை, பொருளாதாரம், கலாசாரம், மனித மேதமையின் சாதனைகளைப் பயன்படுத்தல் ஆகிய எல்லாவற்றிலும் பிற்போக்கின் கடும் நிர்ப்பந்தம் ஆகியவை எல்லாமே மேற்கூறியதில் அடங்கும். வழக்கமான பழமைவாத வடிவங்கள் எதேச்சாதிகாரப் போக்குகளுக்கு வழி விடுகின்றன.

குறிப்பாக, கம்யூனிச எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்பு பற்றிக் கூற வேண்டும், இவை முதலாளித்துவ நெருக்கடியின் ஆபத்தான வெளிப்பாடாகும். இது வெளிநாட்டுக் கொள்கை மட்டுமல்ல. ஏகாதிபத்தியத்தின் நவீன முறையில் இது உள்நாட்டுக் கொள்கையிலும் ஒரு மிக முக்கியப் போக்காகும், முதலாளித்துவ நாடுகளில், சோஷலிசம் நிலவாத பகுதியில் வாழும் முற்போக்கு மக்கள் அனைவர் மீதும் நிர்ப்பந்தம் செலுத்துவதற்கான சாதனமாகும்.

பொது நெருக்கடியின் இன்றைய கட்டமும் முதலாளித்துவத்தின் முழு தேக்கத்திற்கு இட்டுச் செல்லவில்லை, அதன் பொருளாதாரம் வளர்ச்சியடையும் வாய்ப்புகளை மறுக்கவில்லை, புதிய விஞ்ஞான தொழில்நுட்பத் திசையமைவுகளைப் பயன்படுத்துவதை நிராகரிக்கவில்லை என்பது உண்மையே. அது திட்டவட்டமான பொருளாதார, இரா

ணுவ, அரசியல், இன்ன பிற நிலைகளைத் தக்க வைப்பதை யும், வேறு சில இடங்களில் சமூகப் பழிவாங்கலின் வாய்ப் பையும், முன்னர் இழந்த நிலைகளைத் திரும்பப் பெறு வதையும் ''அனுமதிக்கிறது''. ஆனால் முதலாளித்துவம், உழைக்கும் மக்கள் திரளினரின் நலன்களைப் பிரதிபலிக்கும் நல்ல இலட்சியங்களும் வழிகாட்டுதல்களும் இல்லாமல், தன்னுடைய எல்லா வகையான முரண்பாடுகளும் முன்பின் காணாதவாறு ஒன்றுகலந்து, பரஸ்பரம் வலுப்படுவதைச் சந்திக்கிறது. இவ்வளவு அதிகமான சமூக, இன்ன பிற முட்டுக்கட்டைகளை இது தன் வளர்ச்சிக் காலம் பூராவும் சந்தித்ததில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக, **உழைப்பிற்கும் மூலதனத் திற்கும் இடையிலான முரண்பாடுகள்** கூர்மையடைகின்றன. *1960—1970*ஆம் ஆண்டுகளில், அனுகூலமான பொருளா தாரச் சூழ்நிலை நிலவிய பொழுது தொழிலாளி வர்க்கத் தினர், உழைப்பாளிகள் தம்முடைய நிலையைச் சிறிதளவு மேம்படுத்துவதில் வெற்றியடைந்தனர். ஆனால் *1970*ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியிலிருந்து நடைபெற்ற பொருளா தார நெருக்கடிகளும், தொழில்நுட்பச் சீரமைப்பும் நில வரத்தை மாற்றின, முதலாளித்துவம் எதிர்த்தாக்குதலில் இறங்கி, உழைப்பாளிகளுக்கு அவர்களின் சமூக வெற்றியில் கணிசமான பகுதி கிட்டாமல் போகுமாறு செய்தன. வாழ்க் கை தரக் குறியீடுகள் பலவற்றின்படி உழைப்பாளிகள் பல ஆண்டுகளுக்குப் பின்தள்ளப்பட்டனர். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகபட்சத்தை எட்டியது. விவசாயிகள், பண்ணையாளர்களின் நிலை கணிசமாக மோசமடைகிறது: ஒரு சில பண்ணைகள் திவாலடைகின்றன, அவற்றின் முன் னாள் எஜமானர்கள் கூலியுழைப்பாளர்களுடன் வந்து சேரு கின்றனர். மற்றவர்கள் பெரும் விவசாய ஏகபோகங்கள், வங்கிகளின் தளைபூட்டும் சார்புநிலை வலையில் விழுகின் றனர். சமூகப் பிளவு ஆழமடைந்து, மேன்மேலும் ஆச்சரிய கரமானதாகிறது. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட் டில் ஒரு சதவிகிதம் பெரும் பணக்கார குடும்பங்களிடம் உள்ள சொத்து, சொத்துப் பிரமீடின் கீழ்ப்பகுதியிலுள்ள

80 சதவிகித குடும்பங்களின் சொத்துக்களின் மொத்தத்தை விட கிட்டத்தட்ட ஒன்றரை மடங்கு அதிகமாகும்.

இந்நிலவரம் சமூக வெடிப்புகளுக்கு, அரசியல் ஸ்திர மின்மைக்கு இட்டுச் செல்லுமென்பது ஏகாதிபத்தியத்தின் ஆளும் வட்டங்களுக்குப் புரியாமல் இல்லை. ஆனாலும் அது அவர்களின் கொள்கைகளுக்கு அதிக நிதானத்தை அளிக்க வில்லை. மாறாக, சமீப ஆண்டுகளில் ஆதிக்க வர்க்கத்தின் மிகவும் சமரசப்படுத்த இயலா பிற்போக்கு கோஷ்டிகளின் கரம்தான் மொத்தத்தில் மேலோங்கி வருகிறது. இக்கால கட்டத்தில் உழைப்பாளிகளின் உரிமைகளை ஏகபோகங்கள் பெருமளவிலும் மிகக் கடுமையாயும் தாக்கியுள்ளன.

முதலாளித்துவம் சேமித்து வைத்த எல்லாச் சாதனங் களும் பயன்படுத்தப்படுகின்றன. தொழிற்சங்கங்கள் நச்சுப் படுத்தப்படுகின்றன, பொருளாதார மிரட்டலுக்கு ஆளாக் கப்படுகின்றன. தொழிலாளர் விரோத சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. இடதுசாரி சக்திகளும் சகலவிதமான முற் போக்கு சக்திகளும் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகின்றன. மக்களின் மனப்போக்கையும் நடத்தையையும் கண்காணிப் பது என்பது—சரியாகச் சொன்னால் உளவு பார்ப்பது— வழக்கமானதாகி விட்டது. வேண்டுமென்றே திட்டமிட்டு தனிநபர்வாதம், வாழும் உரிமைக்கான போராட்டத்தில் வலியவனின் உரிமை, தார்மீகச் சீரழிவு, எல்லா ஜனநாயக அம்சங்கள் மீதுமான காழ்ப்புணர்ச்சி ஆகியவற்றை வளர்ப் பது முன்பின் காணா அளவுகளை எட்டியுள்ளது.

உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான அடிப் படை முரண்பாட்டின் எதிர்கால வளர்ச்சி எப்படியிருக்கும், உருவாகியுள்ள நிலவரத்திலிருந்து எப்படிப்பட்ட முடிவுகள் செய்யப்படும் என்பதை எதிர்காலமும், தம் உரிமைகளுக் காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் உழைப்பாளிகள் நடத்தும் போராட்டத்தின் போக்கும் காட்டும். ஒரு சில முதலாளித்துவ நாடுகளின் கொள்கைகள், உள்நாட்டு நில வரம் கணிசமான அளவிற்கு வலதுசாரியை நோக்கித் திரும்பு வதானது சர்வதேச உறவுகளுக்கும் பெரிதும் ஆபத்தானது என்பதைக் கூறாமலிருக்க முடியாது. இப்படிப்பட்ட திருப் பத்தின் பின்விளைவுகளைக் கணித்துக் கூறல் கடினம்,

இவற்றின் அபாயத்தைக் குறைத்து மதிப்பிடக் கூடாது.

கடந்த சில பத்தாண்டுகளில் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடுகளின் புதிய வெடிப்புகள் வெளிப்பட்டுள்ளன, அவற்றின் புதிய வடிவங்களும் திசையமைவுகளும் தோன்றியுள்ளன. வர்க்க நெருக்கமோ, சக்திகளின் ஒன்றிணைப்பில் உள்ள அக்கறையோ, இராணுவ, பொருளாதார, அரசியல் இணைப்போ, விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியோ எதுவுமே முதலாளித்துவத்தின் இம்முரண்பாடுகளை அகற்றவில்லை. விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியானது முதலாளித்துவ உற்பத்தி சர்வதேசமயப்படும் போக்கை சந்தேகத்திற்கிடமின்றி துரிதப்படுத்தியது, முதலாளித்துவ நாடுகளின் வளர்ச்சி மட்டத்தைச் சமப்படுத்துவதையும் அவ்வளர்ச்சியின் பாய்ச்சல் தன்மையையும் வலுப்படுத்தியது. விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பின்னணியில் கூர்மையடைந்த போட்டி, பின்தங்கியவர்களை இன்னமும் ஈவு இரக்கமற்று அடிக்கிறது. முதலாளித்துவ புனருற்பத்திச் சூழ்நிலைகள் கணிசமாக சிக்கலானது, பல்வேறு விதமான நெருக்கடிப் போக்குகள், சர்வதேசப் போட்டி கூர்மையடைந்தது ஆகியவை ஏகாதிபத்தியப் போட்டிக்கு விசேஷ கூர்மையையும் கடுமையையும் அளித்தன. ''தாயக'' அரசு ஏகபோக முதலாளித்துவ வல்லமை மீதான ஆதாரம் வலுவடைந்து வருவதன் பின்னணியில், பூர்ஷ்வா அரசின் மேன்மேலும் அதிகமான ஆக்கிரமிப்பு, சுயநல பங்கேற்போடு உலகச் சந்தையில் வர்த்தக, பொருளாதாரப் போராட்டம் நடைபெறுகிறது.

பன்னாட்டு ஏகபோக மூலதனம் விரைவாக வளர்ச்சியடைந்தது. அது தனி நாடுகளிலும் மொத்தமாக உலகப் பொருளாதாரம் முழுவதும் முழு உற்பத்திப் பிரிவுகள் அல்லது துறைகளை நசுக்கி ஏகபோகமயப்படுத்தியது. 1980ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் முதலாளித்துவ உலகில் தொழிற்துறை உற்பத்தியில் மூன்றிலொரு பங்கிற்கு கூடுதலாயும், வெளி வர்த்தகத்தில் பாதிக்கு மேலும், புதிய தொழில்நுட்பம், தொழில்முறைக்கான உரிமைப் பத்திரங்களில் கிட்டத்தட்ட 80% மும் பன்னாட்டு கார்ப்பரேஷன்களின் வசமிருந்தன.

அமெரிக்க கார்ப்பரேஷன்கள்தான் இப்பன்னாட்டு ஏக போகங்களின் உட்கருவாகும். இவை தோற்றுவித்துள்ள அயல்நாட்டுத் தொழில் நிறுவனங்களில் உள்ள கூடுதல் தொழிலாளர்கள், ஊழியர்களின் எண்ணிக்கை அமெரிக்க ஐக்கிய நாட்டின் செய்தொழில் துறையில் உள்ளவர்களின் எண்ணிக்கையில் பாதிக்குச் சமமாகும். மேற்கூறிய அயல் நாட்டுத் தொழில் நிறுவனங்கள் இன்று கிட்டத்தட்ட 1.5 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள பண்டங்களையும் சேவை வசதிகளையும் அளிக்கின்றன; இது அமெரிக்க ஐக்கிய நாட்டின் மொத்த உற்பத்திப் பொருளில் கிட்டத்தட்ட 40%க்குச் சமமாகும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் ''இரண்டாவது பொருளாதாரத்தின்'' அளவுகள், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற முக்கிய மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளின் பொருளாதாரத்தை இரண்டு-மூன்று மடங்கு விஞ்சியிருக்கின்றன, இவை ஜப்பானுக்கு மட்டுமே விட்டுத் தருகின்றன. இன்று பெரும் அமெரிக்க பன்னாட்டு ஏக போகங்கள் பேரரசுகளாகும், இவற்றின் பொருளாதார நடவடிக்கையின் அளவுகளை முழு அரசுகளின் மொத்த தேசிய உற்பத்திப் பொருளோடு ஒப்பிடலாம்.

பன்னாட்டு ஏகபோகங்களுக்கும் சமுதாயத்தின் அரசியல் ஸ்தாபன ஒழுங்கமைப்பின் தேசிய அரசு வடிவத்திற்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றி விரைவாக வளர்ந்து வருகின்றன. பன்னாட்டு ஏகபோகங்கள், வளர்முக நாடுகளின் அரசுரிமையையும் சரி, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் அரசுரிமையையும் சரி, இரண்டையும் குலைக்கின்றன. அவை தமக்கு ஆதாயமான பொழுது அரசு ஏகபோக ஒழுங்கமைப்பைப் பயன்படுத்துகின்றன. பூர்ஷ்வா அரசாங்கங்களின் நடவடிக்கைகளில் தம் லாபத்திற்குச் சிறு அபாயம் தென்பட்டாலும், அவற்றுடன் கடும் மோதலில் இறங்குகின்றன. ஆனால் சாதாரணமாக இங்கே அமெரிக்க பெரும் பன்னாட்டு ஏகபோகங்கள் அரசு மேலாதிக்கவாதக் கொள்கையை, அந்நாட்டு ஆளும் வட்டங்களின் பேரரசு ஆதிக்க நாட்டத்தைப் பின்பற்றி நடப்பவையாக செயல்படுகின்றன.

நவீன ஏகாதிபத்தியத்தின் மூன்று முக்கிய மையங்களாகிய

அமெரிக்க ஐக்கிய நாடு, மேற்கு ஐரோப்பா, ஜப்பான் ஆகியவற்றின் பரஸ்பர உறவுகளில் வெளிப்படையான, மறைமுக முரண்பாடுகள் ஏராளமாக உள்ளன. 1960ஆம் ஆண்டுகளின் இறுதி வரை பொருளாதார, நிதி, தொழில்நுட்ப ரீதியில் அமெரிக்க ஐக்கிய நாடு தம் போட்டி நாடுகளை விட மேலான நிலையில் இருந்தது, பின்னால் இந்நிலை பெரும் சோதனைக்காளாகியது. மேற்கு ஐரோப்பாவாலும் ஜப்பானாலும் அமெரிக்காவை ஓரளவிற்குப் பின்தள்ள முடிந்தது. அமெரிக்க மேலாதிக்கவாதத்திற்கு மிக பழக்கமான துறையாகிய நவீன தொழில்நுட்பத் துறையிலும் இவை அமெரிக்காவிற்குச் சவால் விடுகின்றன.

தமக்குள் வீணாக சச்சரவுகளில் இறங்கவேண்டாமென்று வாஷிங்டன் தன் கூட்டு நாடுகளுக்கு இடையறாமல் அறைகூவல் விடுக்கிறது. ஆனால் அமெரிக்காவே டாலரின் மதிப்பையும் வட்டி விகிதங்களையும் ஏற்றியிறக்கி, மேற்கு ஐரோப்பாவையும் ஜப்பானையும் பயன்படுத்தி தன் பொருளாதாரத்தை மேம்படுத்த முயலும் பொழுது நவீன ஏகாதிபத்தியத்தின் மூன்று மையங்களையும் எப்படி ஒரே கூரையின் கீழ் கொண்டு வர முடியும்? இந்த மூன்று மையங்களின் நிலைகளையும் ஓரளவு ஒத்திசைவிக்கும் பொழுது அது பல நேரங்களில் அமெரிக்க நிர்ப்பந்தம் அல்லது வெளிப்படையான கட்டளையின் விளைவாகத் திகழுகிறது, அது எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் நலன்களுக்கும் இலட்சியங்களுக்கும் உகந்ததாக உள்ளது. இது முரண்பாடுகளை அகற்றுவதில்லை, மாறாக அவை கூர்மையடைய இட்டுச் செல்கிறது.

இந்தக் காரண காரியத் தொடர்பைப் பற்றி மேன்மேலும் அதிகமாக சிந்திக்கத் துவங்கியுள்ளார்கள் போலிருக்கிறது. முதன்முதலாக ஒரு சில மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்களில், சமூக-ஜனநாயக மற்றும் மிதவாதக் கட்சிகளில், பரவலான பொதுமக்களிடையே, இன்றைய அமெரிக்க கொள்கை, சொந்த பாதுகாப்பைப் பற்றிய மேற்கு ஐரோப்பிய கருத்துகளுடன் ஒத்துப் போகிறதா, ''தலைமைக்கான'' தன் நாட்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு மிக அதிகமாகச் செல்லவில்லையா என்று வெளிப்படையாக

விவாதிக்கப்படுகிறது. பிறரின் கண்ணாடி சொந்த கண்களுக்கு மாற்றாக அமையாது என்று அமெரிக்காவின் கூட்டாளிகள் பன்முறை புரிந்து கொண்டனர்.

சக்திகளின் சமன்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களின் பின்விளைவாக, பிரிவினை சக்திகளுக்கும் ஒற்றுமை சக்திகளுக்கும் இடையிலான மோதல் ஏகாதிபத்திய அமைப்பில் எதிர்காலத்திலும் தொடரும் என்பதில் சந்தேகமில்லை. மூன்று ''சக்தி மையங்களுக்கிடையில்'' உருவாகியுள்ள பொருளாதார, இராணுவ, அரசியல், இன்ன பிற பொது நலன்கள் நவீன உலகின் எதார்த்த சூழ்நிலையில் பிளவுபடும் என்று எதிர்பார்ப்பது கடினமாகும். ஆனால் இப்பொது நலன்களின் வரம்புகளுக்குள் தன் போட்டி நாடுகளாகிய கூட்டாளிகள் அமெரிக்க கட்டளைகளுக்கு மறுமொழி கூறாமல் அடங்கி நடப்பார்கள்—அதுவும் அவர்களின் சொந்த நலன்களுக்குப் பங்கமேற்படும் பொழுது—என்று வாஷிங்டனால் எதிர்பார்க்க முடியாது.

இன்றைய காலகட்டத்தில் ஏகாதிபத்திய உள்முரண்பாடுகளின் விசேஷ அம்சம் என்னவெனில், அடுத்த பத்தாண்டுகளில் இவை வேறு வடிவங்களை மேற்கொள்ளக் கூடும், புதிய முதலாளித்துவ ''சக்தி மையங்கள்'' தோன்றும் என்பதாகும். இது கண்டிப்பாக, முரண்பாடுகள் அதிகரிக்கவும், அவை மேன்மேலும் நெருக்கமாக ஒன்றுடன் ஒன்று கலக்கவும் கூர்மையடையவும் இட்டுச் செல்லும்.

**ஏகாதிபத்தியத்திற்கும் வளர்முக நாடுகள், மக்களினங்களுக்கும் இடையில் புதிய, சிக்கலான, இடையறாது மாறக் கூடிய, ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய முரண்பாடுகள் தோன்றியுள்ளன.** முன்னாள் காலனி மற்றும் அரைக் காலனி நாடுகளின் விடுதலை முதலாளித்துவ முறையின் மீது பெரும் அரசியல், சித்தாந்த அடியாக விழுந்தது. இந்த முறை எந்த வடிவத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவாகி, இருபதாம் நூற்றாண்டின் பாதிவரை சென்றதோ அந்த வடிவத்தில் நிலவவில்லை. மனிதகுலத்தில் பெரும்பான்மையினராக உள்ள மக்களினங்களின் வாழ்வில் சமூக பொருளாதார மாற்றங்கள் நடைபெறுகின்றன, இது மெதுவான, கடினமான ஆனால் தடுத்து நிறுத்தப்பட முடியாத நிகழ்ச்சிப் போக்கா

கும். இது பல கோட்பாட்டு ரீதியான மாற்றங்களைக் கொண்டு வந்தது, அதே பொழுது பல இடர்ப்பாடுகளையும் சந்தித்தது.

அரசியல் தகிடுதத்தங்கள், வாக்குறுதிகள், லஞ்சம், இராணுவ அச்சுறுத்தல், மிரட்டல், விடுதலையடைந்த நாடுகளின் உள்விவகாரங்களில் பல நேரங்களில் நேரடியான தலையீடு ஆகியவற்றின் உதவியால் முன்னர் நிலவிய பொருளாதாரச் சார்புநிலை உறவுகளை அப்படியே தக்கவைப்பதில் முதலாளித்துவம் வெற்றி பெற்றது. இந்த அடிப்படையில் ஏகாதிபத்தியம் மிக அருவருப்பான நவீன காலனியாதிக்க சுரண்டல் முறையைக் கொண்டு வந்து நிலைநிறுத்தியது, கணிசமான அளவு விடுதலையடைந்த அரசுகளை அதனுடன் நெருக்கமாக கட்டிப்போட்டது.

இதன் பின்விளைவுகள் சோகமானவை. 2 பில்லியனுக்கும் கூடுதலானோர் வாழும் வளர்முக நாடுகள் கிட்டத்தட்ட முழுக்க முழுக்க ஏழ்மை பிரதேசங்களாயின. 1980ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் விடுதலையடைந்த நாடுகளில் நபர் ஒருவருக்கான வருமானம் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இருந்ததைவிட மொத்தத்தில் 11 மடங்கு குறைவாக இருந்தது. கடந்த முப்பதாண்டுகளாக இப்பிளவு குறையாமல், கூடி வருகிறது. ஒப்பீட்டளவிலான ஏழ்மை நிலையில் மட்டும் விஷயம் அடங்கியிருக்கவில்லை. எழுத்தறிவின்மை, அறியாமை, போதிய உணவின்மை, பட்டினி, பயங்கரமான குழந்தை மரணம், கோடானு கோடி மக்களைப் பாதிக்கும் தொற்று நோய்கள் ஆகியவற்றையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இந்நிலை நாகரிக மனிதகுலமே நாணித் தலைகுனிய வேண்டிய நிலையாகும்! இதற்கான குற்றம் ஏகாதிபத்தியத்தையே சாரும். முழு கண்டங்களில் காலனியாதிக்கம் கொள்ளையடித்து நம்பத்தகாத பின்தங்கிய நிலையை விட்டுச் சென்ற வரலாற்றின் நோக்குநிலையிலிருந்து மட்டுமின்றி இன்றைய நடைமுறையின் நோக்குநிலையிலிருந்தும் இது சரியாகும். கடந்த பத்தாண்டில் மட்டும் வளர்முக நாடுகளிலிருந்து அமெரிக்க கார்ப்பரேஷன்கள் எடுத்துச் சென்ற லாபத்தின் அளவு அவற்றின் முதலீடுகளை விட நான்கு மடங்கு

அதிகமாகும். லத்தீன் அமெரிக்கா, கரீபியன் வளைகுடா பகுதியிலோ இதே காலகட்டத்தில் அமெரிக்க ஏகபோகங்களின் லாபம் அவற்றின் முதலீடுகளைவிட எட்டு மடங்கு அதிகமாயிருந்தது.

ஏகாதிபத்தியமானது வளர்முக நாடுகளை ஈவிரக்கமற்று சுரண்டுவதால் இன்னமும் கணிசமான ஆதாயத்தைப் பெற்று வருகிறது என்று எவ்வித மிகைப்படுத்தலுமின்றி கூற முடியும். இச்சுரண்டலின் வடிவங்களும் முறைகளும் மாறினாலும் சாரம் மாறவில்லை. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு இதனால் கிட்டும் வருமானம் மிகக் கணிசமானதாகும். எல்லா ஏகாதிபத்திய நாடுகளும் வளர்முக நாடுகளைச் சுரண்டினாலும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏகாதிபத்தியம் இதைப் பெரிதும் முறைகேடான வழியில் செய்கிறது. சமமற்ற பரிவர்த்தனை, சமமற்ற வர்த்தகம், வட்டி விகிதங்களில் தகிடுதத்தங்கள், தன்னிச்சைப் போக்கு, பன்னாட்டு ஏகபோகங்கள் உறிஞ்சுதல் ஆகியவை ஒரே திசையில் செயல்படுகின்றன. இவை ஒரு சிலரின் ஏழ்மையையும் வறுமையையும் இன்னமும் அதிகரிக்கின்றன, வேறு சிலரின் செல்வத்தைப் பெருக்குகின்றன, உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் துருவமயப்படும் போக்கை வலுப்படுத்துகின்றன.

வளர்முக நாடுகளின் ஏழ்மை நிலை மிகப் பெரும் உலகப் பிரச்சினையாகும். ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் நிலவும் பல மோதல்களின் உண்மைக் காரணங்கள் இதில்தான் அடங்கியுள்ளனவே தவிர வேறு எதிலுமில்லை. ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஆளும் வட்டங்கள் தம் நவீன காலனியாதிக்கக் கொள்கையை, உலகப் பேராசைகளை நியாயப்படுத்தும் முகமாக, ''மாஸ்கோவின் கரம்'' பற்றி எப்படித்தான் திரித்துக் கூறினாலும் உண்மை இதுதான்.

கடன் பிரச்சினையை எடுத்துக்கொள்வோம். ஆண்டுதோறும் வளர்முக நாடுகளிலிருந்து எடுத்துச் செல்லப்படும் லாபத்தோடு கடன் சுமையும் சேரும் பொழுது அது ஒன்றை மட்டுமே குறிக்கிறது: இந்நாடுகளின் வளர்ச்சி வாய்ப்புகள் குறுகுகின்றன. ஏற்கெனவே கடுமையாக உள்ள சமூக, பொருளாதார, இன்ன பிற பிரச்சினைகள் மேலும்

கூர்மையடைவது தவிர்க்க இயலாததாகிறது.

இன்றுள்ள சூழ்நிலையில் இந்நாடுகளால் நிச்சயமாக கடன்களைத் திருப்பித் தர முடியாது. நியாயமான ஒரு தீர்வு கண்டுபிடிக்கப்படாவிடில் இப்படிப்பட்ட நிலை சர்வதேச உறவுகளுக்குப் பெரும் சமூக, பொருளாதார, அரசியல் பின்விளைவுகளை ஏற்படுத்தும். இங்கே மறைந்துள்ள அபாயத்தை ஆளும் ஏகாதிபத்திய வட்டங்கள் பார்க்கவில்லை என்று கூற முடியாது. ஆனால் இவற்றின் கவலையெல்லாம், வளர்முக நாடுகளின் மக்களைச் சுரண்டி, மேன் மேலும் அதிகமாகச் சுரண்டி தாம் செல்வம் சேர்க்கும் இம் முறையை எப்படிக் காப்பாற்றுவது என்பதன் மீதுதான் உள்ளது.

வேறொரு விஷயமும் சந்தேகத்திற்கிடமற்றது. இந் நாடுகளின் கோடானு கோடி கடன்களுக்கும் கடந்த பத் தாண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவச் செலவு கள் கோடானு கோடிக்கும் அதிகமாகப் பெருகியுள்ளதற் கும் இடையில் கண்டிப்பாக காரணகாரியத் தொடர்பு உள் ளது. ஆண்டுதோறும் வளர்முக நாடுகளிலிருந்து 200 பில் லியன் டாலர்களுக்கும் அதிகமான தொகை பிழிந்தெடுக் கப்படுகிறது, சமீப ஆண்டுகளில் அமெரிக்க இராணுவ பட் ஜெட்டின் அளவும் கிட்டத்தட்ட இதே தொகைக்குச் சம மானது—இந்தப் பொருத்தமும் தற்செயல் அல்ல. எனவே தான் நவீன காலனியாதிக்க அதி சுரண்டல் முறையைத் தக்க வைத்து, அதை இன்னமும் கடுமையானதாக ஆக்குவ தில் இராணுவத் துறை நேரடி அக்கறை கொண்டுள்ளது.

முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் கூர்மையடைந்து வரும் பொழுது, அதன் ஆதிக்க வட்டம் சுருங்கி வரும் பொழுது, சமூக தகிடுதத்தங்களைச் செய்யவும் முக்கிய பூர்ஷ்வா அரசுகளில் சமூகப் பதட்ட நிலையைக் குறைக்க வும், உழைப்பாளிகளில் ஒரு சில பிரிவினருக்கு லஞ்சமளித்து அவர்களை விலைக்கு வாங்கவும் ஏகபோக மூலதனத்திற்கு உதவும் சாதனங்களின் முக்கிய மூல ஊற்றாக நவீன காலனி யாதிக்கம் மாறி வருகிறது. இம்மூல ஊற்று உண்மை யிலேயே ஈடு இணையற்றது; ஒரு சில நேரங்களில், வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்களின்

ஒரு மணி நேரக் கூலி, ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள தொழிலாளர்களின் ஒரு நாள் கூலியை விட அதிகமாகும், இது சில நேரங்களில் பன்மடங்கு அதிக மானது.

இவையெல்லாம் முடிவின்றி தொடர முடியாது. அதிசயங்கள் எதுவும் நடைபெறப் போவதில்லை, நிலவரம் ஒன்றும் தானாகவே சரியாகாது. தன் நிலையை அப்படியே தக்க வைக்கவும், ஏகபோகங்கள் மற்றும் இராணுவத் தொழிற்துறை இணையத்தின் நலன்களைப் பாதுகாக்கவும், விடுதலையடைந்த நாடுகளில் மேற்கொண்டு முற்போக்கு மாற்றங்கள் நடைபெறாது தவிர்க்கவும் அமெரிக்க ஐக்கிய நாடு இராணுவ பலத்தை நம்புவதானது நிலவரத்தைச் சிக்கலாக்கி, புதிய சச்சரவுகளைத் தோற்றுவிக்க மட்டுமே செய்யும். பண மூட்டைகள் வெடிமருந்து டிரம்களாக மாறக் கூடும். பலத்தின் அடிப்படையிலான கொள்கை மற்றும் வெட்கங்கெட்ட கொள்ளை அல்லது நியாயமான அடிப்படையில் ஒத்துழைக்கும் வாய்ப்பு இரண்டில் ஒன்றை என்றாவது ஒரு நாள் இங்கும் முதலாளித்துவம் தேர்ந்தெடுத்தாக வேண்டும். இங்கே வளர்முக நாட்டு மக்களின் நலன் கருதி முற்போக்குத் தீர்வுகளைக் கண்டு பிடித்தாக வேண்டும்.

நாகரிகம் நிலைத்து வாழுவதன் அடிப்படைகளையே பாதிக்கக் கூடிய உலகளாவிய முரண்பாடுகளைப் பகுப்பாய்வு செய்யும் பொழுது அது கவலை தரும் முடிவுகளுக்கு இட்டுச் செல்கிறது. புறச்சூழல், வான் பரப்பு, கடல்கள் ஆகியவற்றிற்கு அசுத்த மேற்படுவதைப் பற்றி, இயற்கை வளங்கள் சூறையாடப் படுவதைப் பற்றி குறிப்பிடுகிறேன். விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாயும் மனித நடவடிக்கைகளின் அளவுகள் அதிகரிப்பதாலும் இயற்கையின் மீது சுமை அளவிற்கதிகமாகப் போவதால் மட்டும் பிரச்சினைகள் கடுமையாகவில்லை. இயற்கையைப் பயன்படுத்துவதை சந்தைச் சக்திகளின் கண்மூடித்தனமான விளையாட்டிற்கு உட்படுத்துவதால் எத்தகைய தீய பின்விளைவுகள் ஏற்படுமென்று எங்கெல்ஸே கணித்துக் கூறினார். பூமியின் இயற்கை வளங்களைப் பொது மானுட சொத்தாகக் கருதி அவற்றை விவேக

மாகப் பயன்படுத்தும் செயல்வன்மையுள்ள சர்வதேச விதிகள், முறைகளின் தேவை மேன்மேலும் தெளிவாகி வருகிறது.

பொது மானுட, உலகப் பிரச்சினைகளுக்கு ஒரு நாட்டின் முயற்சியாலோ, ஒரு சில நாடுகளின் முயற்சியாலோ தீர்வு காண முடியாது. இங்கே உலகந்தழுவிய ஒத்துழைப்பும் பெரும்பாலான நாடுகளின் நெருங்கிய, ஆக்கபூர்வமான பரஸ்பரச் செயலாக்கமும் வேண்டும். இந்த ஒத்துழைப்பு முழு சமத்துவம், ஒவ்வொருவரின் அரசுரிமையையும் மதித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் இருக்க வேண்டும். தந்த வாக்குறுதிகளையும் சர்வதேச சட்ட வரையளவுகளையும் தானாகவே நிறைவேற்றுவதன் அடிப்படையில் இது அமைய வேண்டும். இதுதான் நாம் வாழும் காலத்தின் கறாரான கோரிக்கையாகும்.

முதலாளித்துவம் மக்களின் கலாசாரத்தைப் பாழ்படுத்துகிறது, நூற்றாண்டுகளாக உருவாகிய ஆன்மீக மதிப்புகளை அழிக்கிறது. ஞானத்தைப் போல் வேறெதுவும் மனிதனை உயர்த்துவதில்லை. ஆனால் அனேகமாக இன்றுள்ளதைப் போல் வேறெப்போதும் மனிதகுலம் பொய், ஏமாற்றுதலின் நிர்ப்பந்தத்தை இவ்வளவு அதிகமாக அனுபவித்ததில்லை. உலகம் பூராவும் பூர்ஷ்வா பிரசாரம் திறமையாகப் புரட்டப்பட்ட தகவல்களை மக்கள் மீது கொட்டுகிறது, தனக்குத் தேவையான சிந்தனையையும் உணர்வுகளையும் திணிக்கிறது, ஆளும் சக்திகளுக்கு அனுகூலமான சிவில், சமூக நிலைகளைத் திட்டமிடுகிறது. மக்களுக்குத் தகவல்களையளிப்பதிலும் கல்வி முறையிலும் எப்படிப்பட்ட ஞானம், மதிப்புகள், தார்மீக வரையளவுகள் அடிப்படையாக அமையுமென்பது எல்லாவற்றிற்கும் மேலாக அரசியல் பிரச்சினையாகும்.

கலாசாரத்தைத் தக்க வைத்து, அதை பூர்ஷ்வா சிதைவிலிருந்தும் காட்டுமிராண்டித் தனத்திலிருந்தும் பேணிக் காக்கும் பிரச்சினையை வாழ்க்கையே முன்வைக்கிறது. இது மிக முக்கிய பொது மானுடக் கடமைகளில் ஒன்றாகும். இன்று கலாசாரத் துறையில் ஏகாதிபத்தியம் கடைபிடிக்கும் கொள்கையின் நீண்டகால உளவியல், தார்மீகப் பின்விளைவு

களைப் பற்றி யோசிக்காமலிருக்க முடியாது. வரைமுறை யற்ற வியாபாரப் போக்கு, வன்முறையை உயர்த்திக் காட்டு வது ஆகியவற்றின் விளைவாக கலாசாரம் வளம் குன்று வதை, நிறவெறி பிரசாரத்தை, கீழான உணர்ச்சிகள், குற்ற உலகின் மனப்பாங்குகள், சமுதாயத்தின் ''அடிமட்ட'' உணர்வுகள் ஆகியவற்றைப் பிரசாரம் செய்வதை மனித குலம் நிராகரிக்க வேண்டும், நிராகரிக்கும்.

அளவில் பெரிய, சிக்கலான பிரச்சினைகள் நிறைய இருப் பதை நீங்களே பார்க்கின்றீர்கள். ஆனால் மொத்தத்தில் இவற்றைப் பற்றிய பரிசீலனை, தோன்றக் கூடிய கடமை களின் அளவு, ஆழத்திலிருந்து பின்தங்கியுள்ளதைப் பார்க் காமலிருக்க முடியாது. அரசியல் ஒப்பந்தங்களைத் தேடு வதற்கான காலத்தைக் குறைப்பதும், ஆக்கபூர்வமான நட வடிக்கைகளுக்கு விரைவாக மாறுவதும் சர்வதேச வாழ்க்கை யில் முதிர்ச்சியடைந்துள்ள பிரச்சினைகளின் தீர்விற்கு அவ சியமான நிபந்தனையாகும்.

எல்லாம் நம் கரங்களில் இல்லை, பல விஷயங்கள் மேற் கைப் பொறுத்து, முக்கிய வரலாற்று சந்திப்புகளில் நிதானத் தையும் விவேகத்தையும் இழக்காமலிருக்க அதன் தலைவர் களுக்குள்ள திறமைகளைப் பொறுத்து அமையும் என்பது நமக்கு நன்கு புரிகிறது. வேறொரு கிரகத்திலிருந்து யாரா வது ஒருவர் நம் பூமியில் வந்திறங்கும் அபாயம் நிலவினால் சோவியத் ஒன்றியமும் அமெரிக்க ஐக்கிய நாடும் விரைவில் பொது அணுகுமுறையைக் கண்டுபிடித்திருக்கும் என்று ஒரு முறை அமெரிக்க ஜனாதிபதி கூறினார். நாம் முன்பின் அறியா வேறு கிரகத்து மனிதர்கள் வந்திறங்குவதைவிட அணு ஆயுதப் பேரழிவு அதிக ஆபத்தானதில்லையா என்ன? புறச்சூழல் அபாயம் பெரியதில்லையா என்ன? வளர்முக நாடுகள், மக்களினங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விவேகமான, நியாயமான அணுகுமுறையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதில் எல்லா நாடுகளுக்கும் பொது அக்கறை இல்லையா என்ன?

ஏதாவதொரு அடுத்த நெருக்கடிக்காக காத்திராமல், முற்றிலும் ஆதாரமுள்ள நடைமுறை முடிவுகளுக்கு இன்றே வர இப்போது மனிதகுலத்திடம் சேர்ந்துள்ள அனுபவம்

போதாதா என்ன? அமெரிக்கப் பாதுகாப்பிற்கு நம் பூமியின் சிறு அளவில் இனிமேலும் இடம் அளிக்காத சித்தாந்தங் களை முன்வைப்பதன் மூலம் நீண்ட எதிர்காலத்தில் எதைப் பெறலாம் என்று அமெரிக்க ஐக்கிய நாடு எதிர்பார்க்கிறது?

வரலாற்றின் கடிவாளத்தைத் தன் கையில் வைத்திருப் பதற்காக ஏகாதிபத்தியம் எல்லா வழிகளையும் நாடுகிறது. ஆனால் இக்கொள்கையினால் உலகிற்குப் பேரிழப்பு ஏற் படுகிறது. இதற்காக உலக மக்கள் மேன்மேலும் அதிக விலையைத் தர வேண்டியுள்ளது. இவ்விலையை மறைமுக மாயும் நேரடியாயும் தர வேண்டியுள்ளது. லட்சோபலட் சம் மனித உயிர்களைப் பலி தர வேண்டியுள்ளது, தேசிய வளங்களை விரயப்படுத்த வேண்டியுள்ளது, மிகப் பிரம் மாண்டமான தொகைகளை ஆயுதப் போட்டிக்காகத் திசை திருப்ப வேண்டியுள்ளது. மேன்மேலும் கடினமான பல பிரச் சினைகள் தீர்க்கப்படாமல் நிற்கின்றன. எதிர்காலத்தில், ஒருவேளை, நம்மால் கற்பனை செய்ய முடிந்ததிலேயே உயர்வான விலையைத் தர வேண்டி நேரிடலாம்.

இந்தக் கடினமான வரலாற்றுக் காலகட்டத்தில் அமெரிக்க ஆளும் வட்டங்கள் எதார்த்தப் பார்வையை இழந்து வருவது கண்கூடு. ஆக்கிரமிப்பு நோக்குடைய சர்வதேச நடத்தை, அரசியலையும் சிந்தனையையும் மேன்மேலும் இராணுவ மயப்படுத்தி வருவது, பிறர் நலன்களை அலட்சியப்படுத்து வது ஆகியவை அமெரிக்க ஏகாதிபத்தியம் தார்மீக ரீதி யிலும் அரசியல் ரீதியிலும் தனிமைப்படவும், அதற்கும் மனிதகுலம் முழுவதற்கும் இடையிலான பிளவு அதிகப்பட வும் தவிர்க்க இயலாது இட்டுச் செல்கின்றன. அணு ஆயுதம் பயன்படுத்தப்பட தயாராக இருக்கும் பொழுது நாகரிகத் தைப் பொறுத்த மட்டில் காலமும் விசும்பும் தன் வழக்க மான பண்புகளை இழக்கும், மனிதகுலம் தற்செயலின் கைதி யாகும் என்பதை அந்நாட்டிலுள்ள சமாதான எதிரிகள் ஏதோ பார்க்கவில்லை போலும்.

மூலதனத்தின் ஆளும் வட்டங்களால் நடப்பதை நிதான மாக, ஆக்கபூர்வமாக மதிப்பீடு செய்ய முடியுமா? முடிந்தா லும் முடியும், முடியாமலும் போகலாம் என்று பதில் சொல் வதுதான் மிக எளிதானதாயிருந்திருக்கும். ஆனால் அப்படிப்

பட்டதொரு கணிப்பிற்கு வரலாறு நமக்கு உரிமையளிக்க வில்லை. மனிதகுலத்தால் உயிர் வாழ முடியுமா முடியாதா என்ற கேள்விக்கு ''முடியாது'' என்ற பதிலை நம்மால் ஏற்க முடியாது. சமூக முன்னேற்றம், நாகரிக வாழ்க்கை தொடர்ந் தாக வேண்டும், தொடரும் என்கிறோம் நாம்.

கம்யூனிஸ்டுகளுக்கே உரித்தான எதிர்கால நம்பிக்கை, மனிதர்களின் பகுத்தறிவு, விவேகத்தின் மீதான நம்பிக்கை ஆகியவற்றால் மட்டும் நாம் இப்படி கூறவில்லை. நாம் எதார்த்தவாதிகள், இரண்டு உலகங்களைப் பல அம்சங்கள் பிரிக்கின்றன—ஆழமாகப் பிரிக்கின்றன—என்பது நமக்கு நன்கு புரிகிறது. அதே நேரத்தில் வேறொன்றும் நன்கு புரி கிறது: உடனடி பொது மானுட கடமைகளை நிறைவேற் றும் அவசியம் அவற்றைப் பரஸ்பரச் செயலாக்கத்திற்குத் தட்டியெழுப்ப வேண்டும், மனிதகுலத்தின் சுய பாதுகாப்பு பற்றி இதுவரை முன்பின் காணா சக்திகளை விழித்தெழச் செய்ய வேண்டும். காலத்தின் கடமைகளை நிறைவேற்று வதற்கான உந்து சக்தி இதில்தான் அடங்கியுள்ளது.

வரலாற்றின், சமூக முன்னேற்றத்தின் போக்கு, உலகம் தழுவிய அளவில் நாடுகள், மக்களினங்களுக்கு இடையில் நல்ல, ஆக்கபூர்வமான பரஸ்பரச் செயலாக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்று மேன்மேலும் உறுதியோடு கோருகிறது. அப்படிக் கோருவதோடு மட்டுமின்றி, அதற்கு அவசியமான அரசியல், சமூக, பொருளாயத முன்தேவைகள் அனைத்தை யும் தோற்றுவிக்கிறது.

அணு ஆயுதப் பேரழிவைத் தவிர்க்க, நாகரிகம் பிழைத்து உயிர்வாழ இத்தகைய பரஸ்பரச் செயலாக்கம் வேண்டும். கூர்மையடைந்து வரும் பிற பொது மானுட பிரச்சினை களைக் கூட்டாகவும், ஒவ்வொருவரின் நலன் கருதியும் தீர்க்க வும் அது தேவை. இரண்டு அமைப்புகளுக்கு இடையிலான போட்டி, மோதல், பல்வேறு அரசுகளுக்கு இடையிலான பரஸ்பர சார்புநிலை அதிகரிக்கும் போக்கு—இதில்தான் நவீன வளர்ச்சியின் உண்மையான இயக்கவியல் அடங்கி யுள்ளது. இப்படியாக எதிர்மறைகளுக்கு இடையிலான போராட்டத்தின் மூலம், முரண்பாடான ஆனால் பரஸ்பரம்

ஒன்றையொன்று சார்ந்த, பெரிதும் முழுமையான உலகம் இடர்ப்பாடுகளோடு உருவாகிறது.

கம்யூனிஸ்டுகள் எப்போதுமே சமூக முன்னேற்றப் பாதைகளை அவற்றின் உள் சிக்கல்கள், முரண்பாடுகளோடு தான் பார்த்து வந்துள்ளனர். ஆனால் மனிதனும் அவனுடைய நலன்களும் அக்கறைகளும்தான் இந்த நிகழ்ச்சிப் போக்கின் மையத்தில் மாறாமல் நிற்கும், இதுதான் கம்யூனிஸ்டுகளுடைய உலகக் கண்ணோட்டத்தின் முக்கிய அம்சமாகும். மானுட வாழ்க்கை, அதன் பன்முக வளர்ச்சிக்கான வாய்ப்புகள்தான் மிகப் பெரும் மதிப்பாகும், சமூக வளர்ச்சியின் நலன்கள்தான் எல்லாவற்றிற்கும் மேலானவையாகும் என்று கோடிட்டுக் காட்டினார் வி. இ. லெனின். சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி தன் நடைமுறை நடவடிக்கையில் இதைத்தான் நோக்கமாகக் கொண்டுள்ளது.

நவீன சூழ்நிலையில் போராட்டத்தின் முக்கியத் திசையமைவு, எல்லா மக்களினங்களின் வாழ்விற்கும் அவசியமான மேன்மையான, உண்மையான மானுட பொருளாயத, ஆன்மீகச் சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதும், நம் பூமியில் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்துவதும், பூமியின் இயற்கை வளங்களைக் கவனமாகப் பயன்படுத்துவதுமாகும். முக்கியமாக, மிக முக்கியச் செல்வமாகிய மனிதனையும் அவனுடைய வாய்ப்புகளையும் கவனத்தோடு அணுக வேண்டும். இதில்தான் முதலாளித்துவ முறையுடன் போட்டியிடலாம், உறுதியான சமாதான சூழலில் போட்டியிடலாம் என்று நாம் முன்மொழிகிறோம்.

### கட்சியின் நீண்டகால வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய இலட்சியங்களும் திசையமைவுகளும்

தோழர்களே! நாட்டு பொருளாதார, சமூக வளர்ச்சியின் அடிப்படை கடமைகள்தான் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நீண்டகால வெளிநாட்டுக் கொள்கையையும் நிர்ணயிக்கின்றன. நிலையான சமாதானமும் சுதந்

திரமும் நிலவும் சூழ்நிலையில் உழைக்கும் வாய்ப்பை சோவியத் மக்களுக்கு ஏற்படுத்தித் தருவதுதான் இக்கொள்கையின் முக்கிய இலட்சியம் என்பது வெள்ளிடை மலை. சாராம்சத்தில் பார்த்தால் நம்முடைய வெளிநாட்டுக் கொள்கையின் பாலான கட்சியின் முதல் வேலைத்திட்ட கோரிக்கை இதுதான். இன்றைய சூழ்நிலையில் இதை நிறைவேற்றுவது என்றால் முதலில் அணு ஆயுத யுத்தத்திற்கான பொருளாயத தயாரிப்பைத் தடுத்து நிறுத்துவது என்று பொருள்.

உருவாகியுள்ள நிலவரத்தைப் பன்முக ரீதியில் சீர்தூக்கிப் பார்த்த சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி, இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் பேரழிவு ஆயுதங்களை முழுமையாக ஒழித்துக் கட்டும் ஒரு முழு செயல்திட்டத்தை முன்மொழிந்தது, இது தன் அளவிலும் முக்கியத்துவத்திலும் உண்மையிலேயே ஒரு வரலாற்றுச் செயல்திட்டமாகும். இதை நிறைவேற்றினால், வளர்ச்சியின் முற்றிலும் புதியதொரு காலகட்டம் மனிதகுலத்தின் முன் திறந்து விடப்படும், ஆக்கபூர்வமான அம்சங்களின் மீது மட்டும் கவனம் செலுத்தும் வாய்ப்பேற்படும்.

நாம் நம்முடைய முன்மொழிவுகளை வழக்கமான ராஜதந்திர வழிகளில் அனுப்பியதோடு நின்று விடாமல், நேரடியாக உலக மக்களின் முன்னும் இவற்றை வைத்தோம் என்பது உங்களுக்குத் தெரியும். மனித இனத்தையே பூமியிலிருந்து அழிக்க வல்ல பேரபாயம் அணு ஆயுதங்களில் மறைந்துள்ளது என்ற கசப்பான உண்மையை முழுமையாகப் புரிந்து கொள்ளும் நேரம் வந்து விட்டது. நம்முடைய முன்மொழிவு சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வெளிநாட்டுக் கொள்கைப் போர்த்தந்திரத்தின் ஒளிவு மறைவற்ற, நேர்மையான, லெனினியத் தன்மையை இன்னுமொரு முறை கோடிட்டுக் காட்டுகிறது.

அரசுகளுக்கு இடையிலான அரசியல், பொருளாதார முரண்பாடுகள், சித்தாந்த விவாதங்களைத் தீர்ப்பதற்கு யுத்தம் ஒரு சாதனமாக விளங்கவே முடியாதென்று சோஷலிசம் எவ்வித சந்தேகமும் இன்றி கூறுகிறது. ஆயுதங்களும் வன்முறையும் இல்லாத உலகம்தான், ஒவ்வொரு மக்களினமும் தன் வளர்ச்சிப் பாதையை, வாழ்க்கை முறையைத்

தேர்ந்தெடுக்கும் ஒரு உலகம்தான் நம்முடைய உயரிய இலட்சியமாகும். இது கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் மனிதாபிமானம், அதன் தார்மீக மதிப்புகளின் வெளிப்பாடாகும். எனவேதான் அணு ஆயுத அபாயம் மற்றும் ஆயுதப் போட்டிக்கு எதிரான, உலக சமாதானத்தைப் பேணிக் காப்பதற்கான போராட்டம்தான் எதிர்காலத்திலும் சர்வதேச அரங்கில் கட்சியினுடைய நடவடிக்கையின் முக்கியத் திசையமைவாக திகழும்.

இக்கொள்கைக்கு வேறு மாற்று வழி கிடையாது. அதுவும் சர்வதேச விவகாரங்கள் சிக்கலடைந்து வரும் காலகட்டங்களில் இது மிகச் சரியானதாகும். 1980ஆம் ஆண்டுகளின் முதல் பாதியில் இருந்ததைப் போல் ஆபத்தான, சிக்கலான, மோசமான உலக நிலவரம் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலத்தில் நிலவியதேயில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆட்சிக்கு வந்த வலதுசாரியினரும் அவர்களுடைய முக்கிய நேட்டோ தரப்பினரும் பதட்டத் தணிவிலிருந்து அடியோடு திரும்பி இராணுவ வலுவுள்ள அரசியலை நாடினர். உலக வளர்ச்சியின் கோட்பாடுகள், சர்வதேச உறவுகளின் அரசியல் தத்துவஞானம் என்ற வகையில் நல்லண்டை உறவையும் ஒத்துழைப்பையும் நிராகரிக்கும் சித்தாந்தங்களை இச்சக்திகள் ஏற்றன. ஆயுதப் போட்டியை நிறுத்தி, நிலவரத்தைச் சீர்படுத்தலாம் என்ற நம் கோரிக்கைகளுக்கு வாஷிங்டன் நிர்வாகம் செவிமடுக்கவில்லை.

கடந்த காலத்தைப் பற்றி கிளற வேண்டியது ஒருவேளை அவசியமில்லையோ? அதுவும் இப்போது சோவியத்-அமெரிக்க உறவுகளில் நல்ல மாற்றங்களுக்கான அறிகுறிகள் தோன்றுவதைப் போலுள்ளன, ஒருசில நேட்டோ நாடுகளின் தலைமையின் நடவடிக்கைகளிலும் மனப் போக்கிலும் எதார்த்தப் போக்குகள் மீண்டும் தலைதூக்குகின்றன. இல்லை, இது அவசியமென்று நாம் கருதுகின்றோம், ஏனெனில் 1980ஆம் ஆண்டுகளின் முதல் பாதியில் சர்வதேச நிலவரம் மிகவும் மோசமடைந்ததானது, எதுவும் தானாகச் செய்யப்படுவதில்லை என்பதை இன்னுமொரு முறை நினைவூட்டியது: ஆம், சமாதானத்திற்காக உறுதியோடு, செயல் முனைப்போடு போராடியாக வேண்டும். இராணுவ அபாயம்

அதிகரிக்கும் போக்கை வாய்ப்புள்ள போதே இடைமறிக்க எந்த ஒரு சிறு வாய்ப்பையும் தேடிக் கண்டுபிடித்து பயன் படுத்த வேண்டும். இதைப் புரிந்து கொண்ட சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி தன் னுடைய 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாத முழுப் பேரவை கூட்டத்தில் அணு ஆயுத அபாயத்தின் தன்மையையும் அளவு களையும் மீண்டும் பகுப்பாய்வு செய்தது, நிலவரத்தைச் சீர்படுத்துவதற்கான நடைமுறை நடவடிக்கைகளை நிர்ண யித்தது. பின்வரும் கோட்பாட்டு நிலைகளின் அடிப்படை யில் நாங்கள் செயல்பட்டோம்.

**ஒன்று**. இன்றுள்ள ஆயுதங்களின் தன்மையானது, இரா ணுவத் தொழில்நுட்ப சாதனங்களால் மட்டும், உதாரண மாக தற்காப்பை—அது மிக வலிமையான தற்காப்பு என் றாலும் கூட—தோற்றுவிப்பதன் மூலமாக மட்டும் தன் னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை எந்த ஒரு அரசிற்கும் அளிக்கவில்லை. பாதுகாப்பிற்கு வகை செய்வதென்பது மேன்மேலும் அதிகமாக ஒரு அரசியல் கடமையாகி வருகிறது, இதை அரசியல் வழிகளில் மட்டுமே நிறைவேற்ற முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக, படைக் கலைப்புப் பாதையில் செல்ல உறுதி வேண்டும். பழிவாங் கப்படுவோமோ என்ற அச்சத்தின் அடிப்படையில், அதா வது ''கட்டுப்படுத்தல்'' அல்லது ''அச்சுறுத்தல்'' சித்தாந் தங்களின் அடிப்படையில் முடிவற்று பாதுகாப்பை ஏற் படுத்த முடியாது. உலகம் முழுவதுமே அணு ஆயுதத்தின் பணயக் கைதியாக ஆக்கப்படும் ஒரு நிலையின் முட்டாள் தனம், தார்மீக கேட்டைப் பற்றி கூறவே வேண்டிய தில்லை, இச்சித்தாந்தங்கள் ஆயுதப் போட்டியை ஊக்குவிக் கின்றன, இது என்றாவது ஒரு நாள் கட்டு மீறிப் போகக் கூடும்.

**இரண்டாவது**. பாதுகாப்பு என்பது, சோவியத் ஒன்றி யத்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் இடையிலான உறவுகளை எடுத்துக் கொண்டால் பரஸ்பரப் பாதுகாப் பாக, மொத்தத்தில் சர்வதேச உறவுகளை எடுத்துக் கொண் டால் பொது பாதுகாப்பாக மட்டுமே இருக்க முடியும். முழுக்க முழுக்க தன்னைப் பற்றி மட்டுமே—அதுவும் மறு தரப்பிற்குப்

பங்கமேற்படுத்தி—நினைப்பது உயர் விவேகம் அல்ல. எல்லோரும் பாதுகாப்பைச் சமமான அளவு உணர வேண்டும், ஏனெனில் அணு சகாப்தத்தின் அச்சங்களும் கவலைகளும் அரசியலிலும் நடைமுறை நடவடிக்கைகளிலும் எதிர்பாராதவற்றைத் தோற்றுவிக்கின்றன. காலம் என்ற காரணியின் பெரும் முக்கியத்துவத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்வது மிக முக்கியமானதாகிறது. புதிய வகையான பேரழிவு ஆயுதங்களின் தோற்றம், நெருக்கடிகள் ஏற்படும் பொழுது யுத்தம் அல்லது சமாதானம் என்ற அரசியல் முடிவுகளை எடுப்பதற்கான நேரத்தை இடையறாது குறைக்கிறது, அதற்கான வாய்ப்புகளைச் சுருக்குகிறது.

**மூன்றாவது.** அமெரிக்க ஐக்கிய நாடு, அதன் இராணுவத் தொழிற்துறை இயந்திரம்தான் இராணுவ வெறியின் உந்து சக்திகளாகத் திகழுகிறது, இது தன் செயற்பாட்டை நிறுத்தத் தயாராயில்லை. இதை நிச்சயமாக நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இராணுவத் தொழிற்துறை இணையத்தின் நலன்களும் அக்கறைகளும் அமெரிக்க மக்களின் நலன்களும் அக்கறைகளும், அதாவது அந்த மாபெரும் நாட்டின் உண்மையான தேசிய நலன்களும் வெவ்வேறானவை என்று நமக்கு நன்கு புரிகிறது.

உலகம் என்பது அமெரிக்க ஐக்கிய நாடு, அயல்நாடுகளில் அதற்குள்ள ஆக்கிரமிப்புத் தளங்களைவிடப் பன்மடங்கு விரிவானது. உலக அரசியலில் ஏதாவதொரு நாட்டுடன்—அது மிக முக்கியமான நாடு என்றாலும் சரி—உள்ள உறவுகளுடன் நின்று விடக் கூடாது. இது பலச் செருக்கை மட்டுமே ஊக்குவிக்குமென்று அனுபவம் காட்டுகிறது. ஆனால் சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் இடையிலுள்ள உறவுகளுக்கு, அவற்றின் தன்மைக்கு நாம் நிச்சயமாகப் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றோம். நம்மிரு நாடுகளுக்கும் பொதுவான அம்சங்கள் பல உள்ளன, இரு நாடுகளும் சமாதானமாக வாழ்ந்து சமமான, பரஸ்பர அனுகூல அடிப்படையில்—ஆம், அந்த அடிப்படையில் மட்டுமே—ஒத்துழைக்க புறவய அவசியம் நிலவுகிறது.

**நான்காவது.** உலகில் பெரும் மாற்றங்கள் இடையறாமல் நடந்த வண்ணமிருக்கின்றன, இதில் நிரந்தர நிலையை

யாராலும் பேணிக் காக்க முடியாது. உலகில் பல நாடுகள் இருக்கின்றன, ஒவ்வொன்றிற்கும் முற்றிலும் நியாயமான நலன்கள் உள்ளன. எவ்வித விதிவிலக்குமின்றி இந்நாடுகள் அனைத்தின் முன்னும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த கடமை நிற்கிறது: சமூக, அரசியல், சித்தாந்த முரண்பாடு களைக் கண்டு கண்களை மூடிக் கொள்ளாமல், சர்வதேச அரங்கில் பொறுமையாக, கவனமாக நடந்து நாம் சிறப்பாக விஞ்ஞானத்தையும் கலையையும் கிரகிக்க வேண்டும், நாக ரிகமாக, அதாவது சரியான சர்வதேச ரீதியில் கலந்து பழகி ஒத்துழைக்க கற்க வேண்டும். ஆனால் இந்த ஒத்துழைப் பைப் பரவலாக்க, சர்வாம்ச சர்வதேசப் பொருளாதாரப் பாதுகாப்பு முறை வேண்டும், அது ஒவ்வொரு அரசையும் ஏகாதிபத்திய, நவீன காலனியாதிக்க கொள்கையின் பாகு பாடுகள், தடைகள், பிற அம்சங்களிலிருந்து சமமான அள வில் பாதுகாப்பதாயிருக்க வேண்டும். இப்படிப்பட்டதொரு முறை படைக்கலைப்போடு சேர்ந்து பொதுவில் சர்வதேசப் பாதுகாப்பிற்கு நம்பகரமான அடிப்படையாகும்.

சுருங்கக் கூறின் யுத்தங்களுக்கும் பலத்தின் அடிப்படை யிலான அரசியலுக்கும் இன்றைய உலகம் மிகச் சிறியது, அதனால் அது நொறுங்கிப் போகக் கூடும். யுத்தங்களையும் ஆயுத மோதல்களையும் அனுமதித்து, அவற்றை ஏற்புடைய வையாக்கி பல நூற்றாண்டுகளாக உருவாகிய சிந்தனைகள், நடவடிக்கைகளிலிருந்து உறுதியோடும் திரும்பிப் பாராம லும் விலகாவிடில் உலகைக் காப்பாற்றவோ பேணிக் காக் கவோ முடியாமல் போகும்.

ஆயுதப் போட்டியிலும், அணு ஆயுத யுத்தத்திலும் வெல்ல முடியாது என்பதை உணர வேண்டும் என்று இதற்குப் பொருள். பூமியில் இப்போட்டியைத் தொடருவது, போதாக் குறைக்கு இதை விண்வெளிக்கு எடுத்துச் செல்வது என்பது ஏற்கெனவே ஆபத்தான மட்டத்தில் உள்ள அணு ஆயுத மட்டத்தை, அதன் உற்பத்தியை, அதை மேம்படுத்துவதைத் துரிதப்படுத்தும். உலக நிலவரம் அரசியல்வாதிகளின் பகுத் தறிவு, சித்தத்திற்குக் கட்டுப்படாமல் போகும். அது தொழில்நுட்பத்தின், இராணுவத் தொழில்நுட்ப அதிகார வர்க்கத் தர்க்கத்தின் பணயக் கைதியாகும். எனவே அணு

ஆயுத யுத்தம் மட்டுமல்ல, அதற்கான தயாரிப்பும், அதாவது ஆயுதப் போட்டியும், இராணுவ மேம்பாட்டை அடையும் நாட்டமும் புறவய ரீதியாக யாருக்கும் அரசியல் வெற்றியைப் பெற்றுத் தராது.

அடுத்து இது, எதிரெதிராக நிற்கும் தரப்புகளின் அணு ஆயுத உள்ளாற்றல்களின் இன்றைய சமன்பாட்டு மட்டம் அளவிட முடியாதபடி உயர்வானது என்பதை உணருவதைக் குறிக்கிறது. இப்போதைக்கு இது ஒவ்வொரு தரப்பிற்கும் சமமான ஆபத்தை ஏற்படுத்துகிறது. இப்போதைக்கு மட்டுமே. ஆயுதப் போட்டியைத் தொடருவதானது இந்தச் சமமான ஆபத்தைத் தவிர்க்க இயலாது அதிகப்படுத்தும், சமன்நிலை என்பது இராணுவ, அரசியல் பொறுமையின் காரணியாக உள்ள நிலை மறையும் வரை அபாயத்தை அதிகரிக்கக் கூடும். எனவே, முதலில் இராணுவ மோதல் அபாய மட்டத்தைப் பன்மடங்கு குறைத்தாக வேண்டும். நம் காலத்தில் போர்த்தந்திர சமன்நிலையை உயரிய மட்டத்தில் வைத்திருப்பதால் அல்ல, மாறாக அதை இயன்ற அளவு குறைவான மட்டத்தில் வைத்திருப்பதால்தான் உண்மையான, சமமான பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியும், இச்சமன்பாட்டிலிருந்து அணு ஆயுதத்தையும் பிற பேரழிவு ஆயுதங்களையும் முழுமையாக விலக்க வேண்டும்.

இறுதியாக, இன்று எல்லா அரசுகளுக்கும் இடையில் ஒத்துழைப்பு, பரஸ்பரச் செயலாக்கத்திற்கு வேறு மாற்று வழி கிடையாது என்பதை உணருவதை இது குறிக்கிறது. இவ்வாறாக, முதலாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையிலான போட்டி சமாதானப் போட்டியாக, சமாதான சகவாழ்வுச் சூழலில் மட்டுமே முழுக்க முழுக்க நடைபெற முடியும் என்பதற்கான புறவயச் சூழ்நிலைகள்—புறவய என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறேன்—உருவாகியுள்ளன.

நம்மைப் பொறுத்த மட்டில் சமாதான சகவாழ்வு என்பது அரசியல் கொள்கையாகும், இதை எதிர்காலத்திலும் சோவியத் ஒன்றியம் வழுவாது பின்பற்றும். நீண்டகால வெளிநாட்டுக் கொள்கையின் தொடர்ச்சிக்கு வகை செய்யும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி நவீன உலகின் எதார்த்தத்திற்கேற்ப ஆக்கபூர்வமான சர்வதேசக் கொள்

கையைப் பின்பற்றும். ஓரிரு சமாதான நடவடிக்கைகளால் —அவை மிகத் தீவிரமானவையாக இருந்தாலும்—சர்வ தேசப் பாதுகாப்பு பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாது என்பது சொல்லாமலே விளங்கும். தொடர்ச்சியான, திட்ட மிட்ட, உறுதியான பணிதான் வெற்றியைத் தேடித் தரும்.

வெளிநாட்டுக் கொள்கையில் தொடர்ச்சி என்பது கடந் ததை—குறிப்பாக தேங்கியுள்ள பிரச்சினைகளின் அணுகு முறையின் பால்—அப்படியே திரும்பச் செய்வதாக ஆகாது. சொந்த வாய்ப்புகளை மதிப்பிடுவதில் பெரும் துல்லியமும் முடிவுகளை எடுப்பதில் பெரும் பொறுப்புணர்வும் வேண்டும். கோட்பாடுகளையும் கருத்துநிலைகளையும் காத்து நிற் பதில் உறுதியும், செயல்தந்திர நெளிவு சுழிவும், பரஸ்பரம் ஏற்புடைய சமரசங்களுக்குத் தயாராக இருப்பதும், மோத லை விடுத்து பேச்சுவார்த்தை, பரஸ்பர மன ஒற்றுமையின் பாலான நாட்டமும் வேண்டும்.

பல ஒருதலைப்பட்ச நடவடிக்கைகளை நாம் மேற் கொண்டது உங்களுக்குத் தெரியும்—ஐரோப்பாவில் இடைத் தொலைவு ராக்கெட்டுகளை நிறுவுவதன் மீது நாம் இடைக் காலத் தடை விதித்தோம், அவற்றின் எண்ணிக்கையைக் குறைத்தோம்,எல்லா அணு ஆயுத வெடிப்புகளையும் நிறுத்தி வைத்தோம். மாஸ்கோவிலும் பிற நாடுகளிலும் பல்வேறு அரசாங்கத் தலைவர்கள் அல்லது அரசாங்க உறுப்பினர் களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். சோவியத்-இந்திய, சோவியத்-பிரெஞ்சு, சோவியத்-அமெரிக்க உயர் மட்ட சந்திப்புகள் அவசியமானவையாகவும் பயனுள்ளவை யாகவும் இருந்தன.

ஜெனீவா, ஸ்டாக்ஹோம், வியன்னா பேச்சுவார்த்தை களுக்குப் புதிய உந்து சக்தியை அளிக்க சோவியத் ஒன்றியம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆயுதப் போட் டியை நிறுத்தி, அரசுகளுக்கு இடையிலான நம்பிக்கைகளை வலுப்படுத்துவதுதான் இப்பேச்சுவார்த்தைகளின் நோக்க மாகும். எப்போதுமே பேச்சுவார்த்தைகள் என்பது நுண் ணியமான, கடினமான காரியமாகும். இங்கே முக்கியமானது என்னவெனில் பரஸ்பர ஏற்புடைய நலன்களுக்குப் பாதை யமைப்பதாகும். பேரழிவு ஆயுதங்களை அரசியல் தகிடுதத்

தத்திற்கு ஆளாக்குவது குறைந்தபட்சம் கூறினால் தார்மீகக் கேடானது, அரசியல் ரீதியில் பொறுப்பற்றது.

இறுதியில், நம்முடைய ஜனவரி 15ஆம் தேதி அறிக்கையைக் குறிப்பிட வேண்டும். மொத்தத்தில் நம்முடைய செயல்திட்டம் சாராம்சத்தில் பார்த்தால், அணு-விண்வெளி சகாப்தத்தில் சமாதானமான உலகைப் படைக்கும் தத்துவ ஞானமும் திட்டவட்டமான நடவடிக்கைகளும் இணைந்த ஒரு கலவையாகும். படைக்கலைப்பு பிரச்சினைகளை மொத்தமாக அணுக வேண்டுமென்று சோவியத் ஒன்றியம் முன்மொழிகிறது, ஏனெனில் பாதுகாப்பைப் பொறுத்தமட்டில் ஒன்று மற்றொன்றுடன் சம்பந்தப்பட்டது. கடுமையான முடிச்சுகளைப் பற்றியோ, ஒரு திசையில் ''விட்டுக் கொடுத்து'' இன்னொரு திசையில் தடையை எழுப்பும் முயற்சிகளைப் பற்றியோ நாம் இங்கே குறிப்பிடவில்லை. கால அளவில் கறாராக கணிக்கப்பட்ட திட்டவட்டமான நடவடிக்கைகளின் திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிடுகிறோம். சோவியத் ஒன்றியம் அடுத்து வரவிருக்கும் ஆண்டுகளில் இதைத் தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கையின் மையத் திசையமைவாக கருதி இதை நிறைவேற்ற உறுதியோடு பாடுபடும்.

மேற்கூறிய முன்மொழிவுகளுடன் முழுக்க முழுக்கப் பொருந்திதான் சோவியத் இராணுவ சித்தாந்தம் உருவாக்கப்படுகிறது. இதன் திசையமைவு தற்காப்புத் தன்மையை உடையது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இராணுவத் துறையில் தம் பாதுகாப்பு குறித்து யாரிடமும் எவ்வித கற்பனை சந்தேகமும் எழுவதற்கு எந்த அடிப்படையும் இல்லாதவாறு செய்யும் வகையில் நாம் தொடர்ந்து செயல்படுவோம். அதே நேரத்தில் நாமும் நம் கூட்டு நாடுகளும் நம்மை அபாயம் எதிர்நோக்கியுள்ளது என்ற உணர்விலிருந்து விடுபட அதே அளவிற்கு விரும்புகின்றோம். தான் முதன்முதலாக அணு ஆயுதத்தைப் பயன்படுத்தப் போவதில்லை என்று சோவியத் ஒன்றியம் உறுதிமொழி தந்துள்ளது, இதை கண்டிப்போடு நாம் பின்பற்றி நடப்போம். ஆனால் நம்மீது அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுக்கும் திட்டங்கள் நிலவுகின்றன, இவற்றை நம்மால் கவனத்தில் கொள்ளாமலிருக்க முடியாது. சோவியத் ஒன்றியம் அணு

ஆயுத யுத்தத்தை அதன் சகல வகைகளிலும் உறுதியோடு எதிர்க்கிறது. பேரழிவு ஆயுதங்களை ஒழித்துக்கட்ட வேண்டும், இராணுவ உள்ளாற்றலை விவேகமான வரம்பில் நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று நம் நாடு விரும்புகிறது. ஆனால் இவ்வரம்பின் தன்மையும் மட்டமும் அமெரிக்க ஐக்கிய நாடு, அதன் கூட்டு நாடுகளின் நிலைகள், நடவடிக்கைகளால் நிர்ணயிக்கப்படுவது தொடருகிறது. இச்சூழ்நிலையில் நாம் மீண்டும் மீண்டும் கூறுகிறோம்: **சோவியத் ஒன்றியம் அதிகப் பாதுகாப்பைக் கோரவில்லை, அதே சமயம் இது குறைவான பாதுகாப்பிற்கும் தயாராயில்லை.**

கண்காணிப்பு பிரச்சினையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன், இதற்கு நாம் விசேஷ முக்கியத்துவம் அளிக்கிறோம். கண்காணிப்பிற்கு சோவியத் ஒன்றியம் தயார், பிறருக்கு எவ்விதத்திலும் குறையாமல் நாங்கள் இதில் அக்கறை கொண்டுள்ளோம் என்று பன்முறை கூறினோம். சர்வாம்ச ரீதியான, கறாரான கண்காணிப்பு என்பது படைக்கலைப்பின் மிக முக்கியமானதொரு அம்சமாகும். நம் கருத்துப்படி விஷயத்தின் சாரம் பின்வருமாறு: **கண்காணிப்பின்றி படைக்கலைப்பு சாத்தியமில்லை, அதே நேரத்தில் படைக்கலைப்பின்றி கண்காணிப்பு மட்டும் நிலவினாலும் அர்த்தமில்லை.**

இன்னுமொரு கோட்பாட்டு ரீதியான அம்சத்தைக் குறிப்பிட வேண்டும். ''நட்சத்திர யுத்தம்'' பற்றி எம் கருத்தைப் போதுமான அளவு விளக்கமாகக் கூறியிருக்கின்றோம். அமெரிக்க ஐக்கிய நாடு ஏற்கெனவே தன் கூட்டாளிகளில் பலரை இந்தத் திட்டத்தினுள் இழுத்துள்ளது. இந்த விஷயம் திரும்ப வர முடியா தன்மையைப் பெறும் அபாயம் உள்ளது. **ஆயுதப் போட்டியை விண்வெளிக்கு எடுத்துச் செல்லாமல் தடுக்கும் உத்தரவாதத்தை அளிக்கும்** எதார்த்த தீர்வை நேரமிருக்கும் பொழுதே தேடிக் கண்டுபிடிப்பது பெரிதும் அவசியமாகும். ''நட்சத்திர யுத்தச்'' செயல்திட்டம் மேற்கொண்டு ஆயுதப் போட்டிக்கான உந்து சக்தியாகப் பயன்படுத்தப்படவும் விடக் கூடாது, தீவிர படைக்கலைப்புப் பாதையில் தடையாக இருக்கும் படியும் விடக் கூடாது. அணு ஆயுத உள்ளாற்றல்களைப் பெருமளவு குறைப்பதில் கணிசமான முன்னேற்றம்

ஏற்பட்டால் அது இந்தத் தடையை அகற்றப் பெரிதும் உதவக் கூடும். எனவே சோவியத் ஒன்றியம் இந்தத் திசையில் உண்மையான நடவடிக்கையை எடுக்க, ஐரோப்பாவில் இடைத் தொலைவு ராக்கெட் பற்றிய பிரச்சினையைத் தனியாகத் தீர்க்க—போர்த்தந்திர ஆயுதங்கள் மற்றும் விண்வெளிப் பிரச்சினைகளுடன் இதை நேரடியாகத் தொடர்பு படுத்தாமல்—சோவியத் ஒன்றியம் தயார்.

சோவியத் செயல்திட்டம் கோடானுகோடி மக்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது, அரசியல்வாதிகளும் சமூக நலப் பிரமுகர்களும் இதன் மீது காட்டும் ஆர்வம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதை அலட்சியப்படுத்தி ஒதுக்க முடியா காலம் இது. நவீன காலத்தின் உடனடி பிரச்சினைக்கு—அணு ஆயுதத்தை ஒழித்துக் கட்டும் பிரச்சினைக்கு—தீர்வு காண்பதைத் துரிதப்படுத்துவதிலும், இதை நடைமுறை பாதைக்கு மாற்றுவதிலும் சோவியத் நாடு ஆக்கபூர்வமான அக்கறை கொண்டுள்ளது என்பதை சந்தேகப்படும் முயற்சிகள் மேன்மேலும் தம் நம்பிக்கையை இழந்து வருகின்றன. அணு ஆயுதப் படைக்கலைப்பு என்பது அரசியல்வாதிகளின் ஏகபோகமாக தொடர்ந்து இருக்க முடியாது. இன்று உலகம் பூராவும் இதைப் பற்றி சிந்திக்கிறது, ஏனெனில் இது வாழ்க்கையைப் பற்றிய விஷயமாகும்.

அதே நேரத்தில், படைக்கலைப்பைப் பற்றிய பேச்சுவார்த்தைகளின் வெற்றி அல்லது தோல்விக்கான திறவுகோல்களைத் தம் கரங்களில் வைத்துள்ள ஆட்சி மையங்களின் கருத்தையும் கவனத்தில் கொண்டாக வேண்டும். அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் நோக்கங்கள், சரியாகச் சொன்னால், இராணுவத் தொழிற்துறை இணையத்துடன் தொடர்புடைய, சுயநலம் மிக்க அதன் குழுக்களின் நோக்கங்கள் நம்முடைய நோக்கங்களுக்கு நேரெதிரானவை என்பதை சொல்லத் தேவையேயில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில் படைக்கலைப்பு என்பது லாப இழப்பு, அரசியல் அபாயம், நமக்கோ பொருளாதார, அரசியல், தார்மீக ரீதியில், அனைத்து நோக்கிலும் நலன்.

நம்முடைய முக்கிய எதிர் தரப்பினரைப் பற்றி நமக்குத் தெரியும், அவர்களுடனான உறவு, பேச்சுவார்த்தைகளில்

நமக்கு சிக்கலான, நீண்ட அனுபவம் உள்ளது. அமெரிக்க ஜனாதிபதியிடமிருந்து நம்முடைய ஜனவரி 15ஆம் தேதி அறிக்கைக்கான பதில் நேற்று முன் தினம் வந்தது. அமெரிக்கத் தரப்பு தன் கருத்துகளை ஜெனீவா பேச்சுவார்த்தைகளில் அதிக விரிவாக வெளியிடத் துவங்கியுள்ளது. இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக அமெரிக்கர்கள் வெளியிடும் எல்லா கருத்துகளையும் நாம் நிச்சயமாக கவனத்தோடு ஆராய்வோம். காங்கிரஸ் ஆரம்பமாகவிருந்த தருணத்தில் பதில் வந்துள்ளதால், அமெரிக்க நிலையை நாம் எப்படி மதிப்பிடுகின்றோம் என்பதை இந்த மேடையிலிருந்தே நாம் உலகிற்கு அறிவிக்க வேண்டுமென்று அமெரிக்க நிர்வாகம் ஒருவேளை எதிர்பார்க்கலாம்—குறைந்தபட்சம் நாம் இப்படித்தான் கருதுகிறோம்.

இச்செய்தி வருவதற்கு முன் நம் அறிக்கையில் சர்வதேச நிலவரம் பற்றி அளித்த மதிப்பீட்டில் எவ்வித மாற்றத்தையும் செய்வதற்கான எந்த அடிப்படையும் ஜனாதிபதியின் கடிதத்தில் இல்லை என்று என்னால் உடனடியாகக் கூற முடியும். அணு ஆயுதம் வைத்திருக்கும் எல்லா வல்லரசுகளும் அதை ஒழித்துக் கட்ட முயல வேண்டும் என்று அக்கடிதம் குறிப்பிடுகிறது. படைக்கலைப்பு மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள் சம்பந்தமான அந்தந்த சோவியத் கருத்துநிலைகள், திட்டங்களை ஜனாதிபதி மொத்தத்தில் தன் கடிதத்தில் ஒப்புக்கொள்கிறார். வேறுவிதமாகக் கூறினால் நம்பிக்கையளிப்பதைப் போல் தோன்றும் ஒரு சில கருத்துநிலைகளும் வாதங்களும் அதில் அடங்கியுள்ளன.

ஆனால் இத்தகைய ஆக்கபூர்வமான கருத்துகள் பல்வேறு விதமான விளக்கங்கள், ''கட்டுகள்'', ''நிபந்தனைகளில்'' மூழ்கி விடுகின்றன, இவை படைக்கலைப்பின் அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வில் நடைமுறையில் தடையாக நிற்கின்றன. போர்த்தந்திர அணு ஆயுதங்களின் குறைப்பு ''நட்சத்திர யுத்தத்'' திட்டங்களுக்கு நாம் தரும் ஒப்புதலுடன் தொடர்புபடுத்தப்படுகிறது, இக்குறைப்பும் சாதாரண சோவியத் ஆயுதங்களின் ஒருதலைப்பட்சமான குறைப்பு என்பதைக் குறிப்பிட வேண்டும். இது போதாதென்று பிராந்திய மோதல் பிரச்சினைகளும் இருதரப்பு

உறவுகளும் திணிக்கப்படுகின்றன. பிரிட்டன், பிரான்சின் நிலையை மேற்கோள் காட்டியும், நாட்டின் கிழக்கே நம் தற்காப்பைக் குறைக்க வேண்டும்—இப்பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவ பலம் அப்படியே இருக்க—என்ற கோரிக்கையை முன்வைத்தும் ஐரோப்பாவில் அணு ஆயுதங்களை ஒழித்துக் கட்டும் பாதையில் தடைகள் எழுப்பப்படுகின்றன. அணு ஆயுதம் ''நிறுத்தி வைக்கும்'' காரணியாக விளங்குகிறது என்ற வாதங்களால், அணு ஆயுத சோதனைகளை நிறுத்த மறுப்பது நியாயப்படுத்தப்படுகிறது. அணு ஆயுதத்தை ஒழித்துக் கட்டும் அவசியம்தான் இலட்சியம் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இது நேரடியாக முரண்படுகிறது. அணு ஆயுதப் படைக்கலைப்புப் பாதைக்கு வர அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு, அதன் ஆளும் சக்திகளுக்கு விருப்பமில்லாதது அணு ஆயுத வெடிப்புகளை—இவற்றை நிறுத்த வேண்டுமென்று உலகம் முழுவதும் கோருகிறது—பற்றிய பிரச்சினையில் அப்பட்டமாக வெளிப்படுகிறது.

சுருங்கக் கூறின், இப்போது நமக்கு வந்துள்ள கடிதத்தில், அணு ஆயுத அபாயத்தை அகற்றுவது சம்பந்தமான அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வில் நடைமுறையில் இறங்க அமெரிக்கத் தலைமை உண்மையிலேயே தயாரா இல்லையா என்று கண்டுபிடிப்பது கடினம். வாஷிங்டனில்—அங்கு மட்டுமல்ல, பிற இடங்களிலும்—அணு ஆயுதத்திற்குப் பழக்கப்பட்டுப் போய், சர்வதேச அரங்கில் தம் திட்டங்களை அதனுடன் இணைக்கின்றனர் போலுள்ளது. என்றாலும் மேலைய அரசியல்வாதிகள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்கள் பொதுவில் அணு ஆயுதத்தை விட்டொழிக்க விரும்புகின்றார்களா இல்லையா என்ற கேள்விக்குப் பதிலளித்தாக வேண்டும்.

ஜெனீவா உடன்படிக்கைகளுக்கேற்ப அமெரிக்க ஜனாதிபதியுடன் புதிய சந்திப்பு நடைபெற உள்ளது. ஆயுதங்களை மட்டுப்படுத்தி குறைப்பது பற்றிய முக்கியத் திசைகளில் இச்சந்திப்பு நடைமுறை பயன்களைத் தர வேண்டும், சந்திப்பின் முக்கியத்துவம் அதில்தான் அடங்கியுள்ளது என்று

நாம் கருதுகிறோம். குறைந்தபட்சம், இரண்டு விஷயங் களில் உடன்பாடு அடைய முடியும்: அணு ஆயுத சோதனை களை நிறுத்துவது, ஐரோப்பிய மண்டலத்தில் அமெரிக்க, சோவியத் இடைத் தொலைவு ராக்கெட்டுகளை ஒழித்துக் கட்டுவது என்பவைதான் அந்த இரண்டு விஷயங்களாகும். அப்போது, உடன்பாட்டைத் தேட விருப்பமிருந்தால், எந்த நேரத்தில் சந்திப்பது என்ற பிரச்சினை தானாகவே தீர்க்கப் படும்: இது சம்பந்தமான எந்த ஒரு முன்மொழிவையும் நாம் ஏற்போம். ஆனால் வெற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் அர்த்தமில்லை. நல்ல மாற்றங்கள் ஏற்படக் கூடும் என்பதற்குக் குறிப்பிட்ட, ஆதாரமுள்ள நம் பிக்கைகளை அளித்துள்ள சோவியத்-அமெரிக்க பேச்சு வார்த்தை ஆயுதப் போட்டியைத் தொடரவும் யுத்தத் திற்கான பொருளாயத ரீதியான ஏற்பாடுகளைச் செய்யவும் பயன்படுத்தப்படுமானால் அதை நம்மால் அலட்சியப் படுத்த முடியாது. ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத் தும் திட்டவட்டமான நடவடிக்கைகளை, நடைமுறைச் செயல்களை, எதார்த்த ஒப்பந்தங்களை சோவியத், அமெரிக்க மக்கள், உலக மக்கள் இரு நாட்டுத் தலைவர் களிடமிருந்தும் நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றனர், இந்நம்பிக்கைகளை எதார்த்தமாக்குவதென்று சோவியத் ஒன்றியம் உறுதி பூண்டுள்ளது. நாம் இதற்குத் தயார்.

எந்த ஒரு நாட்டையும் போன்றே நாமும் இயற்கையாக வே நம் தரை, கடல் எல்லைகளின் பாதுகாப்பிற்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றோம். நம்மைச் சுற்றி பல நாடு கள் உள்ளன, அவை வெவ்வேறானவை. இவற்றில் ஒரு நாட் டிடமும் நமக்குப் பிரதேச முறையீடுகள் கிடையாது. இவற் றில் ஒன்றையும் நாம் அச்சுறுத்தவில்லை. ஆனால் வாழ்க்கை பன்முறை ஊர்ஜிதப்படுத்தியுள்ளபடி நம் நாட்டின் தேசிய நலன்களையும் சரி, நமது அண்டை நாடுகளின் தேசிய நலன் களையும் சரி, இரண்டையும் கருத்தில் கொள்ளாமல், சோவியத் எல்லையில் நிலவரத்தைக் கடுமையாக்க முயலும் சக்திகள் பல உள்ளன.

உதாரணமாக, எதிர்ப்புரட்சியும் ஏகாதிபத்தியமும் ஆப்

கானிஸ்தானை இரத்தக் களறியாக்கியுள்ளன. தன் அரசுரிமையைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட அந்நாட்டின் முயற்சிகளை சோவியத் ஒன்றியம் ஆதரிக்கிறது. ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க அந்நாட்டிலுள்ள சோவியத் துருப்புகளைக் கூடிய விரைவில் மீட்டழைக்க நாம் விரும்புகிறோம். ஆப்கான் ஜனநாயக குடியரசின் உள்விவகாரங்களில் ஆயுதத் தலையீட்டை உண்மையில் நிறுத்தி, அது மீண்டும் ஆரம்பிக்கப்படாது என்று நம்பகரமான உத்தரவாதத்தை அளிக்கும் அரசியல் தீர்வு அடையப்பட்டதுமே நம் துருப்புகளைப் படிப்படியாக மீட்டழைக்கும் கால அட்டவணை ஆப்கானிஸ்தானுடன் சேர்ந்து முடிவு செய்யப்பட்டுள்ளது. சோவியத் ஒன்றியத்தைச் சுற்றியுள்ள எல்லா அரசுகளுடனும் நல்ல சமாதான உறவுகள் என்றும் நிலவ வேண்டும் என்பதுதான் நம்முடைய ஜீவாதார தேசிய அக்கறையாகும். இது நம்முடைய வெளிநாட்டுக் கொள்கையின் மிக முக்கிய இலட்சியமாகும்.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஐரோப்பியத் **திசையமைவை** தன்னுடைய முக்கிய சர்வதேச நடவடிக்கைத் திசையமைவுகளில் ஒன்றாகக் கருதுகிறது. ஐரோப்பாவின் வரலாற்று வாய்ப்பு, அதன் எதிர்காலம் கண்டத்திலுள்ள நாடுகளின் சமாதான சகவாழ்வில் அடங்கியுள்ளது. ஏற்கெனவே அடையப்பட்ட சாதனைகளைப் பேணிக் காத்து, தொடர்ந்து முன்னேறுவது முக்கியமாகும்: படைக்கலைப்பின் ஆரம்பக் கட்டத்திலிருந்து அதிக உறுதியான, நன்கு முதிர்ச்சியடைந்த கட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டும், ஹெல்சிங்கி போக்கு, அணு ஆயுதங்களையும் சாதாரண ஆயுதங்களையும் பெருமளவில் குறைப்பது ஆகியவற்றின் அடிப்படையில் நம்பகரமான பாதுகாப்பை ஏற்படுத்துவதை நோக்கி நடை போட வேண்டும்.

**ஆசிய, பசிபிக் மாகடல் திசையமைவின்** முக்கியத்துவமும் அதிகரித்து வருகிறது. இப்பரவலான பிரதேசத்தில் குழப்பமான முரண்பாட்டு முடிச்சுகள் பல உள்ளன, ஒரு சில இடங்களில் அரசியல் நிலவரமும் ஸ்திரமற்றது. இங்கே, தள்ளிப் போடாமல் தீர்வுகளை, வழிகளைத் தேட வேண்டும். அனேகமாக, கடினமான பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு

காணும் நோக்கத்தோடு முயற்சிகளை முதலில் ஒத்திசைத்து, பின்னர் ஒன்றிணைக்க வேண்டும், பின் இதற்கிணையாக, இந்த அடிப்படையில் குறைந்தபட்சம், ஆசியாவின் பல்வேறு பகுதிகளில் நிலவும் இராணுவ மோதலின் கூர்மையை அகற்றலாம், நிலவரத்தைச் சீர்படுத்தலாம்.

ஆசியாவிலும் பிற கண்டங்களிலும் இராணுவ அபாய களங்கள் மறையாமலிருக்கையில் இது இன்னமும் உடனடியான காரியமாகும். மத்திய மற்றும் அண்மைக் கிழக்கு, மத்திய அமெரிக்கா, ஆப்பிரிக்காவின் தென் பகுதி, பிற கொந்தளிப்பான இடங்கள் ஆகியவற்றில் சச்சரவு நிலைகளை அகற்றும் வழிகளைக் கூட்டாகத் தேடும் முயற்சிகளைத் தீவிரப்படுத்த நாம் விரும்புகிறோம். பொது பாதுகாப்பின் நலன்கள் இதைத்தான் உறுதியோடு கோருகின்றன.

நெருக்கடிகளும் சச்சரவுகளும் சர்வதேசப் பயங்கரவாதத்திற்கும் அனுகூலமான அடிப்படைகளாகும். பிரகடனப்படுத்தப்படாத யுத்தங்கள், பல்வேறு வடிவங்களில் எதிர்ப்புரட்சி ஏற்றுமதி, அரசியல் கொலைகள், பணயக் கைதிகளைப் பிடிப்பது, விமான கடத்தல்கள், தெருக்களில், விமான நிலையங்களில், புகைவண்டி நிலையங்களில் வெடிகுண்டுகளை வைப்பது—இவையெல்லாம் பயங்கரவாதத்தின் அருவருக்கத்தக்க அம்சங்களாகும், வெறுப்பேற்படுத்தும் பல்வேறு கற்பனைக் காரணங்களைக் கூறி இதையெல்லாம் மூடிமறைக்க பயங்கரவாதத்தின் ஆதரவாளர்கள் முயலுகின்றனர். கோட்பாட்டு ரீதியில் பயங்கரவாதத்தை சோவியத் ஒன்றியம் நிராகரிக்கிறது, இதைப் பூண்டோடு ஒழித்துக் கட்ட பிற நாடுகளுடன் செயல்முனைப்போடு ஒத்துழைக்க நாம் தயார். சோவியத் ஒன்றியம் தன் குடிமக்களை வன்முறைச் செயல்களிலிருந்து உறுதியோடு பாதுகாக்கும், அவர்களின் வாழ்க்கையையும் கௌரவத்தையும் மேம்பாட்டையும் பேணிக் காக்க எல்லாவற்றையும் செய்யும்.

கடந்த ஆண்டைப் பின்னோக்கிப் பார்க்குங்காலை, சர்வதேச நிலவரத்தைச் சீர்படுத்துவதற்கான முன்தேவைகள் அனேகமாக உருவாகத் தொடங்கியுள்ளதைக் கவனிக்காமல் இருக்க முடியாது. ஆனால் திருப்புமுனைக்கான முன்

தேவைகள் திருப்புமுனையாகா. ஆயுதப் போட்டி தொடரு கிறது, அணு ஆயுத யுத்த ஆபாயம் அப்படியே உள்ளது. ஆயி னும் சர்வதேசப் பிற்போக்குச் சக்திகள் ஒன்றும் சர்வ வல் லமை படைத்தவையல்ல. உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சியும் வெகுஜன ஜனநாயக, யுத்த எதிர்ப்பு இயக்கங்களின் எழுச்சியும் சமாதானம், விவேகம், நல்லெண் ணம் ஆகியவற்றின் பெரும் உள்ளாற்றலைக் கணிசமாக விரிவு படுத்தி வலுப்படுத்தியுள்ளன. இது ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு ஒரு வலுவான எதிர்ப்பாகும்.

இன்று சமாதானம், சமூக முன்னேற்றத்தின் எதிர்கால மானது உலக சோஷலிச அமைப்பின் பொருளாதார, அரசியல் வளர்ச்சியின் சீரிசைவுடன் முன்னெப்போதையும் விட நெருக் கமாக இணைந்துள்ளது. இச்சீரிசைவின் தேவை, மக்களு டைய நல்வாழ்வைப் பற்றிய அக்கறையால் கட்டளையிடப் படுகிறது. அதே பொழுது இது, யுத்த அபாயத்திற்கு எதி ராகச் செயல்பட வேண்டியதன் நோக்குநிலையிலும் சோஷ லிச உலகிற்கு அவசியமாகும். இறுதியில், சோஷலிச வாழ்க்கை முறையின் வாய்ப்புகளின் வெளிப்பாடு இதில் அடங்கி யுள்ளது. நம் நண்பர்களும் எதிரிகளும் நம்மைப் பார்க் கின்றனர். பன்முக ரீதியான பல்வேறு வளர்முக நாடுகள் நம்மைப் பார்க்கின்றன. இந்நாடுகள் தம் பாதையைத் தேடு கின்றன. எந்தப் பாதை தேர்ந்தெடுக்கப்படும் என்பது சோஷலிசத்தின் வெற்றிகளை, காலத்தின் கோரிக்கைகளுக்கு அது எவ்வளவு ஆணித்தரமாகப் பதிலளிக்கப் போகிறது என்பதைப் பெரிதும் பொறுத்துள்ளது.

மிகச் சிக்கலான கடமைகளை சோஷலிசத்தால் நிறை வேற்ற முடியுமென்று நாம் உறுதியாக நம்புகிறோம். இதற்கு மேன்மேலும் சுறுசுறுப்பான பரஸ்பரச் செயலாக்கம் ஜீவா தார ரீதியில் முக்கியமானதாகும், இது நம் உள்ளாற்றல் களை வெறுமனே ஒன்று திரட்டுவதுடன் நிற்காமல், விளை வைப் பன்மடங்கு அதிகமாகப் பெருக்குகிறது, முன்னோக் கிய பொது இயக்கத்தைத் துரிதப்படுத்தி ஊக்குவிக்கிறது. இது சோஷலிச முகாம் நாடுகளின் கூட்டு ஆவணங்களிலும் பிரதிபலிக்கிறது.

ஆளும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பரஸ்பரச் செயலாக்

கம்தான் இவற்றின் அரசியல் ஒத்துழைப்பின் மைய அம்சமாகும். கடந்த ஆண்டில் கிட்டத்தட்ட எல்லா சோதர நாட்டுத் தலைவர்களையும் நாம் சந்தித்து, விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கின்றோம். இத்தகைய ஒத்துழைப்பின் வடிவங்களும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. புதிய அங்கம்—ஒருவேளை இது முக்கியமானதாக அமையக் கூடும்—என்ற வகையில் சோதர நாட்டுத் தலைவர்களின் வேலை நிமித்தமான பல்தரப்பு சந்திப்புகள் நடைபெறுகின்றன. சோஷலிசக் கட்டுமானம், உள்நாட்டு, வெளிநாட்டு அம்சங்கள் சம்பந்தமாக தோழமை ரீதியில் உடனுக்குடன் கலந்தாலோசிக்க இவை உதவுகின்றன.

வார்சா ஒப்பந்தத்தை—அதில் கையொப்பமிட்ட நாடுகளின் ஏகோபித்த முடிவுப்படி—நீட்டித்ததற்கு இன்றைய சிக்கலான சர்வதேச நிலவரத்தில் பெரும் முக்கியத்துவம் உண்டு. இந்த ஒப்பந்தம் மறுபிறப்பு எடுத்தது என்ற கூறலாம், இது இல்லாமல் இன்று உலக அரசியலை மொத்தத்தில் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. சோபியாவில் நடந்த ஒப்பந்தத்தின் அரசியல் கலந்தாலோசனை கமிட்டியின் கூட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இது ஒரு விதத்தில், ஜெனீவா பேச்சுவார்த்தைகளுக்கான முன்னணைப் பொழுதாகியது.

பொருளாதாரத் துறையில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் பற்றிய பன்முகத் திட்டம் ஏற்கப்பட்டுள்ளது. பரஸ்பரப் பொருளாதார உதவிக் கவுன்சில் உறுப்பு நாடுகள் ஒத்திசைவான விஞ்ஞான தொழில்நுட்பக் கொள்கைக்கு மாறும்படி செய்வதுதான் இதன் நோக்கமாகும். நம் கருத்துப்படி, சோஷலிச ஒருங்கிணைப்பின் தலைமையகமாகிய பரஸ்பரப் பொருளாதார உதவிக் கவுன்சிலின் நடவடிக்கையிலும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன. முக்கியமானது என்னவெனில், இத்திட்டத்தின் நிறைவேற்றத்தில் வெறும் நிர்வாக உத்தரவுகளும் சகலவிதமான கமிட்டிகள், கமிஷன்களைக் குறைத்து பொருளாதார உந்து கோல்கள், முன் முயற்சி, சோஷலிச முன்மொழிவு, இதில் உழைப்புக் கூட்டுகளை ஈடுபடுத்தல் ஆகியவற்றின் மீது பெரும் கவனம் செலுத்த வேண்டும். இது இம்மாதிரியான அசாதாரண

ஆரம்பத்திற்கு அவசியமான கட்சி அணுகுமுறையாயும் இருக்கும்.

சுறுசுறுப்பு, காரியநோக்கு, முன்முயற்சிகள்—இவை காலத்தின் கோரிக்கைகளுக்கு ஏற்றவையாகும், சோதரக் கட்சிகளுக்கு இடையிலான பரஸ்பர உறவுகள் அனைத்திற்கும் இவற்றைப் பரப்ப நாம் பாடுபடுவோம். பல்வேறு சோஷலிச நாடுகளில் வாழும் வெவ்வேறு வேலைப் பிரிவுகள், தலைமுறைகளைச் சேர்ந்த மக்கள் ஒருவருடன் ஒருவர் கலந்து பழகுவதற்கு சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி மேன் மேலும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இது பரஸ்பர ஆன்மீகச் செழுமையின் மூல ஊற்று, சிந்தனைகள், கருத்துகள், **சோஷலிசக் கட்டுமான அனுபவம்** ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்ளும் வழியாகும். இன்று வளர்ச்சியின்—ஒரு நாட்டின் வளர்ச்சி மட்டுமல்ல, பல நாடுகளுடைய வளர்ச்சியின்—அடிப்படையில் சோஷலிச வாழ்க்கை முறையின் தன்மையைப் பகுப்பாய்வு செய்வதும், ஜனநாயகம், நிர்வாக முறைகள், ஊழியர் கொள்கை ஆகியவற்றை மேம்படுத்தும் நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றி சிந்திப்பதும் குறிப்பாக முக்கியமாகும். ஒவ்வொருவரின் அனுபவத்தையும் கவனமாக, மரியாதையோடு பரஸ்பரம் அணுகுவதிலும், அதை நடைமுறையில் பயன்படுத்துவதிலும் சோஷலிச உலகின் மிகப் பெரும் உள்ளாற்றல் அடங்கியுள்ளது.

பொதுவாகப் பார்த்தால், சோஷலிசத்தின் மேம்பாடுகளில் ஒன்று, கற்பதற்கு அதற்குள்ள திறமையாகும். அதாவது வாழ்க்கை முன்வைக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க கற்பது. நம்முடைய வர்க்க எதிரி எந்த நெருக்கடிகளைத் தோற்றுவிக்கவும் பயன்படுத்தவும் முயலுகிறானோ அவற்றை முன்கூட்டியே தடுக்க கற்பது. சோஷலிச உலகைப் பிளவுபடுத்தவும் ஒரு நாட்டை மற்ற நாட்டிற்கு எதிராக நிறுத்தவும் செய்யப்படும் முயற்சிகளை எதிர்க்க கற்பது. வெவ்வேறு சோஷலிச நாடுகளின் நலன்கள் மோத இடம் தராமல், அவற்றைப் பரஸ்பரம் சீரிசைவித்து, மிகச் சிக்கலான பிரச்சினைகள் உட்பட அணைத்திற்கும் பரஸ்பர ஏற்புடைய முடிவுகளைக் கண்டுபிடிக்க கற்பது.

மொத்தத்தில் சோஷலிச உலகில் நிலவும் பரஸ்பர உறவு

களையும் கவனமாகப் பார்ப்பது அவசியமென்று நமக்குப் படுகிறது. சோஷலிச ஒப்பந்தமானது பிற சோஷலிச நாடுகளிலிருந்து ஏதாவது தடைகளால் பிரிக்கப்பட்டுள்ளது என்று நாம் கருதவில்லை. எல்லா கம்யூனிஸ்டுக் கட்சிகளுடனும் உலக சோஷலிச அமைப்பின் எல்லா நாடுகளுடனும் நேர்மையான, ஒளிவுமறைவற்ற உறவுகள் வேண்டும், அவற்றுடன் தோழமை ரீதியான பரஸ்பரக் கருத்துப் பரிமாற்றம் வேண்டும் என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி விரும்புகிறது. முதலில் நாம் எது சோஷலிச உலகை இணைக்கிறதோ அதைக் காண விரும்புகிறோம். எனவேதான் எல்லா சோஷலிச நாடுகளையும் நெருங்கி வரச் செய்வதற்கான ஒவ்வொரு நடவடிக்கையையும், இந்நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் ஏற்படும் ஒவ்வொரு நல்ல மாற்றத்தையும் கண்டு சோவியத் கம்யூனிஸ்டுகள் மகிழ்ச்சியடைகின்றனர்.

நம்முடைய மாபெரும் அண்டை நாடாகிய சோஷலிச சீனாவுடன் உள்ள பரஸ்பர உறவுகள் குறிப்பிட்ட அளவு மேம்பாடு அடைந்துள்ளதைப் பற்றி திருப்தியோடு கூற முடியும். அணுகுமுறைகளில் வேறுபாடுகள்—உதாரணமாக பல சர்வதேசப் பிரச்சினைகளின் பாலான அணுகுமுறைகளில்—இன்னமும் நிலவுகின்றன. அதே நேரத்தில் நாம் வேறொன்றையும் குறிப்பிடுகிறோம்—பல சந்தர்ப்பங்களில் கூட்டாக, சமத்துவ, கோட்பாட்டு ரீதியான அடிப்படையில், மூன்றாம் நாடுகளுக்கு எவ்விதப் பங்கமும் ஏற்படுத்தாமல் பரஸ்பரச் செயலாக்கம் புரியும் வாய்ப்பை நாம் குறிப்பிடுகிறோம்.

இதன் முக்கியத்துவத்தை விளக்க வேண்டிய அவசியமில்லை. இரண்டாவது உலக யுத்தத்தில் சோவியத் ஒன்றியம், முன்னேற்றச் சக்திகளின் வெற்றியை சீனாவில் நடைபெற்ற மக்கள் புரட்சியின் வெற்றிக்கான முன்னுரை என்று சீன கம்யூனிஸ்டுகள் அழைத்தனர். தன் பங்கிற்கு, மக்கள் சீனாவின் தோற்றமானது சோஷலிசத்தின் உலக நிலைகள் வலுப்படவும், இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய மிகக் கடினமான ஆண்டுகளில் ஏகாதிபத்தியத்தின் பல சதிகளையும் நடவடிக்கைகளையும் குலைக்கவும் உதவியது.

எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும் பொழுது, சோவியத் ஒன்றியத்திற்கும் சீனாவிற்கும் இடையிலான ஒத்துழைப்பு வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன என்று கூறலாம். இவ் வாய்ப்புகள் பிரம்மாண்டமானவை, ஏனெனில் இத்தகைய ஒத்துழைப்பு இரண்டு நாடுகளின் நலன்களுக்கும் ஏற்றதா யுள்ளது, ஏனெனில் நம் நாடுகளின் மக்களுக்கு மிக நெருக்க மானவையாகத் திகழும் சோஷலிசமும் சமாதானமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க இயலாதவையாகும்.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பிரிக்க இயலா அங்கமாகும். சோஷலிச கட்டுமானத் தில் நாம் அடையும் ஒவ்வொரு வெற்றியும் இயக்கம் முழு வதன் வெற்றி என்பது சோவியத் கம்யூனிஸ்டுகளுக்கு நன்கு புரிகிறது. எனவே அக்டோபர் புரட்சி திறந்து காட்டிய பாதையில் நம் நாடு வெற்றிகரமாக முன்னோக்கி நடை போடுமாறு செய்வதுதான் தன்னுடைய முக்கிய சர்வ தேசியக் கடமையென்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது.

சோஷலிசம் நிலவாத நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் இயக்கம் பிற்போக்கு பூர்ஷ்வா வட்டங்களின் அரசியல் நிர்ப்பந்தத்திற்கும் அடக்குமுறைகளுக்கும் தொடர்ந்து ஆளாகும் முக்கிய அங்கமாகத் திகழுகிறது. எல்லா சோதரக் கட்சிகளும் கம்யூனிச எதிர்ப்பு பிரசாரத்திற்கு நிரந்தரமாக ஆளாகின்றன, இப்பிரசாரம் வெட்கங்கெட்ட முறைகளை யும் வழிகளையும் பின்பற்றத் தயங்குவதில்லை. பல கட்சி கள் தலைமறைவாக, அடக்குமுறை தலைவிரித்தாடும் சூழ லில் இயங்குகின்றன. தனிப்பட்ட வீரத்தை வெளிப்படுத்திப் போராடாமல் ஓரடி கூட கம்யூனிஸ்டுகளால் எடுத்து வைக்க முடிவதில்லை. நம்முடைய தோழர்களின் தன்னலங்கருதா போராட்டத்தைக் கண்டு நாமனைவரும் உண்மையிலேயே மெய்சிலிர்க்கின்றோம், 27ஆவது காங்கிரஸ், சோவியத் கம்யூனிஸ்டுகளின் சார்பில் அவர்களுடன் நமது ஆழ்ந்த சோதர ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கின்றோம்!

சமீப ஆண்டுகளில் கம்யூனிஸ்ட் இயக்கம் பல புது எதார்த்தங்கள், கடமைகள், பிரச்சினைகளைச் சந்தித் துள்ளது. இந்த இயக்கம் குணாம்சரீதியாகப் புதிய வளர்ச்சிக்

கட்டத்தில் அடியெடுத்து வைத்துள்ளதை இவை காட்டு கின்றன. கம்யூனிஸ்டுகளுடைய பணியின் சர்வதேச சூழ் நிலைகள் விரைவாயும் ஆழமாயும் மாறி வருகின்றன. தொழி லாளி வர்க்கத்தின் உள்ளடக்கம் உட்பட பூர்ஷ்வா சமுதா யத்தின் சமூக கட்டமைவில் கணிசமான சீரமைப்பு நடை பெறுகிறது. சுயமான இளம் அரசுகளில் நம் நண்பர்கள் முன் கடினமான பிரச்சினைகள் தோன்றுகின்றன. சோஷ லிசம் நிலவாத நாடுகளில் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி உழைப்பாளிகளின் பொருளாயத நிலை, உணர்வின் மீது முரண்பாடுகள் நிறைந்த தாக்கத்தைச் செலுத்துகிறது. இவை எல்லாவற்றிற்கும் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினின் இறவாப் புகழ் படைத்த போதனையின் அடிப்படையில் பலவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும், புதிய எதார்த் தங்களைத் துணிவோடு, ஆக்கபூர்வமாக அணுக வேண்டும். சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இது தன் சொந்த அனுபவத்தில் நன்கு தெரியும்.

கம்யூனிச இயக்கத்தின் மிகப் பெரும் பன்முகத் தன்மை, இதன் முன் நிற்கும் மிகப் பல்வேறான கடமைகள்—இவை யும் எதார்த்தமாகும். சில நேரங்களில் இது கருத்து மாறு பாடுகளுக்கும் கருத்துப் பிரிவுகளுக்கும் இட்டுச் செல்கிறது. கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கிடையில் எப்போதும் எல்லா வற்றிலும் முழு ஏகோபித்த கருத்து இல்லை என்பதை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி மிகைப்படுத்த வில்லை. எவ்வித விதிவிலக்குமின்றி எல்லாப் பிரச்சினை களிலும் கருத்துகளின் முற்றொருமை அனேகமாக நிலவ முடியாது. தொழிலாளி வர்க்கம் ஒரு சுயமான, வளமை யான அரசியல் சக்தியாக சர்வதேச அரங்கில் காலடி எடுத்து வைத்த பொழுதுதான் கம்யூனிஸ்ட் இயக்கம் உருவாகியது. தேசிய அடிப்படையில் இந்த இயக்கத்தினுள் தோன்றிய கட்சிகளின் பொது, இறுதி இலட்சியங்கள் சமாதானமும் சோஷலிசமும் ஆகும். இவைதான் இக்கட்சிகளை இணைக் கும் முக்கிய, தீர்மானகரமான அம்சங்களாகும்.

நம்முடைய இயக்கத்தின் பன்முகத் தன்மை என்பது பிளவைக் குறிப்பதாக நாம் கருதவில்லை. ஒற்றுமைக்கும் ஒரே மாதிரியானதற்கும், படிநிலை அமைப்பிற்கும், பிற

கட்சிகளின் விவகாரங்களில் தலையிடுவதற்கும், உண்மையின் மீது ஏகபோக உரிமை கொண்டாட ஏதாவதொரு கட்சிக்குள்ள நாட்டத்திற்கும் எப்படிப் பொதுவானது எதுவும் இல்லையோ அதே போல். கம்யூனிஸ்ட் இயக்கமானது தன் வர்க்க ஒருமைப்பாட்டால், பொது இலட்சியங்களுக்கான போராட்டத்தில் எல்லா சோதரக் கட்சிகளின் சமமான ஒத்துழைப்பால் வலுவானதாக இருக்க முடியும், இருக்க வேண்டும். ஒற்றுமை என்பதை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி இப்படித்தான் புரிந்து கொள்கிறது, இதற்கு சகல விதங்களிலும் பாடுபடத் திட்டமிட்டுள்ளது.

சமாதானம், விவேகம், நல்லெண்ணம் ஆகியவற்றின் உள்ளாற்றலைப் பலப்படுத்தும் போக்கு வலுவானது, கோட்பாட்டளவில் பார்த்தால் திருப்ப இயலாதது. ஒற்றுமையாக, ஒத்துழைத்து வாழ வேண்டும் என்பதில் மக்களுக்கும் எல்லா மக்களினங்களுக்கும் உள்ள நாட்டம் இதன் பின்னுள்ளது. ஆனால் விஷயத்தை நிதானப் பார்வையோடு அணுக வேண்டும்: யுத்தத்திற்கெதிரான போராட்டத்தில் சக்திகளின் சமன்நிலை, முற்போக்கிற்கும் பிற்போக்கிற்கும் இடையிலான கடும், தீவிர மோதலின் போக்கில் உருவாகிறது. தேசிய மற்றும் சமூக விடுதலைச் சக்திகளுடன் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி காட்டும் ஒருமைப்பாடும் சோஷலிசத் திசையமைவு நாடுகள், புரட்சிகர ஜனநாயக இயக்கங்கள், கூட்டுச் சேரா இயக்கம் ஆகியவற்றுடன் நெருக்கமாக ஒத்துழைக்க வேண்டுமென்ற கொள்கையும் மாற்றமற்று அப்படியே இருக்கும். யுத்தத்திற்கு எதிராகப் போராடும் மத இயக்கங்கள் உட்பட கம்யூனிஸ்ட் இயக்கத்தோடு சம்பந்தப்படாத போக்குகள், ஸ்தாபனங்களுடன் உள்ள தொடர்புகளைத் தொடர்ந்து வளர்க்க சோவியத் மக்கள் தயார்.

இதே நோக்கு நிலையிலிருந்துதான் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி சமூக-ஜனநாயகத்துடனான தன் உறவுகளையும் அணுகுகிறது. கம்யூனிஸ்டுகளுக்கும் சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் இடையிலான சித்தாந்த வேறுபாடுகள் ஆழமானவை, அனுபவமும் சாதனைகளும் வெவ்வேறானவை, வேறுபட்டவை என்பது உண்மையே. ஆனால் எவ்வித முன்

கருத்துகளுமின்றி ஒவ்வொருவரும் மற்றவரின் நிலைகளையும் கண்ணோட்டங்களையும் பற்றி அறிவது கம்யூனிஸ்டுகள், சமூக-ஜனநாயகவாதிகள் ஆகிய இரு சாராருக்கும் பயன் தர வல்லது என்பதில் சந்தேகமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இது சமாதானம், சர்வதேசப் பாதுகாப்பிற்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதில் பயன்தர வல்லது.

நாம் எதார்த்த உலகில் வாழுகின்றோம், இன்றைய சர்வதேச வளர்ச்சிக் கட்டத்தின் திட்டவட்டமான சிறப்பியல்புகளைக் கவனத்தில் கொண்டுதான் நம்முடைய சர்வதேசக் கொள்கையைத் தீட்டுகிறோம். இக்கட்டத்தின் ஆக்கபூர்வமான பகுப்பாய்வு, எதிர்கால வாய்ப்புகளின் தோற்றம் நம்மை ஒரு முக்கியமான முடிவிற்கு இட்டு வந்தன. இன்று, ஒரு சர்வாம்ச சர்வதேசப் பாதுகாப்பு முறையைத் தோற்றுவிப்பதற்காக உலக அமைதியின் மீது உண்மையான அக்கறை காட்டும் அரசாங்கங்கள், கட்சிகள், சமூக ஸ்தாபனங்களும் இயக்கங்களும், எல்லா மக்களினங்களுடனும் அதிக நெருக்கமாயும் பயன்மிகு வகையிலும் ஒத்துழைப்பது என்பது முன்னெப்போதையும் விட முக்கியமானது.

இந்த சர்வதேசப் பாதுகாப்பு முறையை ஏற்படுத்துவதற்கான கோட்பாட்டு ரீதியான அடிப்படைகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

1. இராணுவத் துறை

—அணு ஆயுத வல்லரசுகள் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் எதிராயும் மூன்றாவது அரசுகளுக்கு எதிராயும் அணு ஆயுத யுத்தத்தையோ சாதாரண யுத்தத்தையோ தொடுப்பதில்லை என்ற முடிவிற்கு வருதல்;

—விண்வெளிக்கு ஆயுதப் போட்டியை எடுத்துச் செல்லாமலிருத்தல், சகலவித அணு ஆயுத சோதனைகளையும் நிறுத்தி அந்த ஆயுதங்களை முழுமையாக ஒழித்துக் கட்டுதல், இரசாயன ஆயுதங்களைத் தடை செய்து ஒழித்தல், வேறு விதமான பேரழிவு ஆயுதங்களைத் தோற்றுவிக்காமலிருத்தல்;

—அரசுகளின் இராணுவ உள்ளாற்றல் மட்டத்தை

விவேகமான அளவு வரை கறாரான கண்காணிப்போடு குறைத்தல்;

—இராணுவக் கூட்டுகளைக் கலைத்தல், இதற்கான முதல் கட்டமாக இவற்றை விரிவுபடுத்தாமலிருத்தல், புதியவற்றைத் தோற்றுவிக்காமலிருத்தல்;

—இராணுவ பட்ஜெட்டுகளை சம விகிதத்திலும் சம அளவிலும் குறைத்தல்.

2. அரசியல் துறை

—சர்வதேச நடைமுறையில் தன் வளர்ச்சிப் பாதையையும் வடிவங்களையும் சுயமாகத் தேர்ந்தெடுக்க ஒவ்வொரு மக்களினத்திற்கும் உள்ள உரிமையை எவ்வித நிபந்தனையுமற்று மதித்தல்;

—சர்வதேச நெருக்கடிகள், பிராந்திய சச்சரவுகளுக்கு நியாயமான அரசியல் தீர்வு காணுதல்;

—அரசுகளுக்கு இடையிலான நம்பிக்கையை வலுப்படுத்தல், இவற்றின் மீது வெளியிலிருந்து தாக்குதல் தொடுக்கப்பட மாட்டாது, இவற்றின் எல்லைகள் மீறப்பட மாட்டா என்ற உண்மையான உத்தரவாதமளித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பன்முக நடவடிக்கைகளைத் தீட்டுதல்;

—சர்வதேசப் பயங்கரவாதத்தைத் தடுக்கும் செயல் வன்மையுள்ள முறைகளை (சர்வதேச தரை, வான், கடல் மார்க்கங்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவது உட்பட) உருவாக்குதல்.

3. பொருளாதாரத் துறை

—சகலவிதமான பாகுபாடுகளையும் சர்வதேச நடைமுறையிலிருந்து அகற்றுதல்; உலக நாடுகளால் சிபாரிசு செய்யப்பட்டாலொழிய பொருளாதார முற்றுகைகள், தடை நடவடிக்கைகளை மேற்கொள்வதைக் கைவிடுதல்;

—கடன் பிரச்சினைகளுக்கு நியாயமாகத் தீர்வு காணும் வழிகளைக் கூட்டாகத் தேடுதல்;

—எல்லா அரசுகளுக்கும் சமமான பொருளாதார பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் புதிய உலகப் பொருளாதார முறையை ஏற்படுத்தல்;

—இராணுவ பட்ஜெட்டுகளைக் குறைப்பதால் விடுபடும்

நிதியில் ஒரு பகுதியை உலக மக்களின் நலனுக்காக, குறிப்பாக வளர்முக நாடுகளின் நலனுக்காகப் பயன்படுத்தும் கோட்பாடுகளை உருவாக்குதல்;

—விண்வெளி ஆராய்ச்சி, அதை சமாதான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தல், நாகரிகத்தின் எதிர்காலம் எந்த உலகப் பிரச்சினைகளின் தீர்வைப் பொறுத்து உள்ளதோ அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் ஆகியவற்றில் முயற்சிகளை ஒன்றிணைத்தல்.

4. மானுடவியல் துறை

—சமாதானம், படைக்கலைப்பு, சர்வதேசப் பாதுகாப்புக் கருத்துகளைப் பரப்புவதில் ஒத்துழைப்பு; பொதுவான பாரபட்சமற்ற தகவல் முறையின் மட்டத்தை உயர்த்துதல், மக்களினங்கள் பரஸ்பரம் ஒன்றின் வாழ்க்கையை மற்றொன்று அறிந்து கொள்வதை அதிகப்படுத்தல்; மக்களினங்களுக்கு இடையிலான உறவுகளில் பரஸ்பர மன ஒற்றுமை, சீரிசைவுப் போக்கை வலுப்படுத்தல்;

—இனப் படுகொலை, நிற வெறி, பாசிசத்தையோ வேறெந்த ஓர் இன, தேசிய அல்லது மத மேம்பாட்டையோ பிரசாரம் செய்வது, இதன் அடிப்படையில் மக்களைப் பாகுபாட்டிற்கு ஆளாக்குவது ஆகியவற்றை அடியோடு ஒழித்தல்;

—மனிதனின் அரசியல், சமூக, தனிப்பட்ட உரிமைகளின் நிறைவேற்றத்தில் சர்வதேச ஒத்துழைப்பை (ஒவ்வொரு நாட்டின் விதிகளையும் மதித்து) விரிவுபடுத்தல்;

—பிரிந்துள்ள குடும்பங்களை இணைத்தல், திருமணம், மக்களுக்கு இடையிலும் ஸ்தாபனங்களுக்கு இடையிலும் உள்ள தொடர்புகளை வளர்த்தல் ஆகிய விஷயங்களில் மனிதாபிமான ரீதியில், ஆக்கபூர்வமாகச் செயல்படுதல்;

—கலாசாரம், கலை, விஞ்ஞானம், கல்வி, மருத்துவத் துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தல், புதிய வடிவங்களைத் தேடுதல்.

இந்த அடிப்படைகள் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்ட அடிப்படைகளிலிருந்து தர்க்க ரீதியில் வருகின்றன. இவை நம்முடைய திட்டவட்டமான வெளிநாட்டுக் கொள்கை முன்மொழிவுகளுடன் முழுக்க முழுக்கப் பொருந்திப் போகின்றன. இவற்றை வழிகாட்டி

யாகக் கொண்டு செயல்பட்டால் சமாதான சகவாழ்வு என்பது அரசுகளுக்கு இடையிலான உறவுகளில் உயரிய சர்வாம்சக் கோட்பாடாக மாறும்படி செய்யலாம். நம்முடைய கருத்துப்படி இந்த அடிப்படைகள், உலகத் தலைவர்களின் நேரடியான, முறைப்படியான இருதரப்பு, பல்தரப்பு பேச்சுவார்த்தைகளுக்கான ஆரம்பமாயும் ஒரு வகையான வரையளவுகளாயும் திகழலாம்.

உலகத்தின் எதிர்காலத்தைப் பற்றி நாம் குறிப்பிடுவதால், பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பு நாடுகளாகிய ஐந்து அணு ஆயுத வல்லரசுகளுக்கு இடையில் இப்படிப்பட்ட பேச்சுவார்த்தைகள் பெரிதும் அவசியமாகும். மனிதகுலத்தின் எதிர்காலத்திற்கான முக்கியப் பொறுப்பு இந்நாடுகளிடம்தான் உள்ளது. ஏதோ சலுகையோ, உலக விஷயங்களில் ''தலைமையை'' கோருவதற்கான அடிப்படையோ அல்ல, மாறாக பொறுப்பு என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன், இதை மறக்க யாருக்கும் உரிமையில்லை. அப்படியென்றால் இந்நாடுகளின் தலைவர்கள் ஏன் வட்ட மேசையின் முன் கூடி சமாதானத்தை வலுப்படுத்த என்ன செய்யலாம், செய்ய வேண்டும் என்று விவாதிக்கக் கூடாது!

நம்முடைய கருத்துப்படி, ஆயுத மட்டுப்பாடு பற்றி நடக்கும் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் முழுப் பயனை அளிக்கும்படி நடந்தாக வேண்டும். பல ஆண்டுகளாக ஒரு புறம் இத்தகைய பேச்சுவார்த்தைகள் தொடர, மறு புறம் அதே நேரத்தில் ஆயுதங்கள் பெருக்கப்படுவதை நம்மால் ஏற்க முடியாது.

உலகப் பொருளாதாரம், படைக்கலைப்பிற்கும் வளர்ச்சிக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்புகள், வர்த்தகத்தையும் விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பையும் விரிவுபடுத்தல் சம்பந்தமான பிரச்சினைகள், இவற்றின் எதிர்காலம் ஆகியவற்றைப் பற்றி ஹெல்சிங்கி நிகழ்ச்சிப் போக்கின் வரம்புகள் உட்பட சர்வதேச சந்திப்புகளில் கூட்டாக விவாதிப்பதன் மீது சோவியத் ஒன்றியம் பெரும் கவனம் செலுத்துகிறது. எதிர்காலத்தில் பொருளாதாரப் பாதுகாப்புப் பிரச்சினைகள் சம்பந்தமாக ஓர் உலக காங்கிரசைக் கூட்டுவதை நாம் ஒரு முக்கிய விஷயமாக கருதுகிறோம்; உலகப் பொரு

ளாதாரத் தொடர்பாடுகளுக்கு இடர்ப்பாடாக உள்ளஅனைத்தையும் பற்றி இங்கே பன்முக ரீதியில் விவாதிக்கலாம்.

இதே நோக்கத்தோடு முன்வைக்கப்படும் வேறெந்த ஒரு முன்மொழிவையும் கருத்தாழத்தோடு பரிசீலிக்க நாம் தயார்.

யுத்தத்திற்கெதிரான போராட்டத்தில் கண்டிப்பாக வெற்றியடைந்தாக வேண்டும். இந்த வெற்றி மனிதகுலம் முழுவதற்கும் பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகத் திகழும். இப்போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்பதுதான் தன்னுடைய நீண்டகால வெளிநாட்டுக் கொள்கையின் சாரம் என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது.

**சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி சமர்ப்பித்த அரசியல் அறிக்கை சம்பந்தமாக 27ஆவது கட்சி காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்திலிருந்து**

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி பொதுச் செயலாளர் மி.செ. கர்பச்சோவ் சமர்ப்பித்த அரசியல் அறிக்கையைக் கேட்டு விவாதித்த பின், நம் லெனினிய கட்சி படைப்பாற்றல் நடவடிக்கையின் புதிய அனுபவத்தால் செழுமையடைந்து, ஒன்றுபட்ட, ஐக்கிய கட்சியாக இக்காங்கிரசிற்கு வந்துள்ளது என்று கட்சியின் 27ஆவது காங்கிரஸ் குறிப்பிடுகிறது. கட்சியின் வேலைத்திட்ட ஆணைகளையும் 26ஆவது கட்சி காங்கிரசின் முடிவுகளையும் நிறைவேற்றிய சோவியத் மக்கள் பொருளாதாரம், சமூகநலத் துறை, கலாசாரத்தில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். வெளிநாட்டுக் கொள்கை நிலைகள் வலுப்பட்டுள்ளன, சோவியத் அரசின் சர்வதேச செல்வாக்கு வளர்ந்துள்ளது. சமாதானம், சமூக முன்னேற்றத்தின் போராட்டப் பதாகையை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி உயரே தூக்கிப் பிடிக்கிறது.

திருப்புமுனையான இன்றைய காலகட்டத்தில், உள்நாட்டிலும் உலக அரங்கிலும் நிலவும் குணாம்ச ரீதியாகப் புதியதொரு சூழ்நிலையில் மார்க்சிய-லெனினியத்தின் பாலான நம் கட்சியின் விசுவாசமும், நிலவரத்தை ஆழ்ந்து சிந்தித்து எதார்த்தமாக மதிப்பிடும் திறமையும், அனுபவத்திலிருந்து சரியான படிப்பினைகளைப் பெறும் திறமையும், முதிர்ச்சியடைந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளைக் கண்டுபிடிக்கும் திறமையும், காலங்கடந்தவை, பழையன அனைத்தையும் அகற்றும் திறமையும் மீண்டும் வெளிப்பட்டன.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி தன் ஏப்ரல் மாத (1985) முழுப் பேரவைக் கூட்டத்தில் தேசியப் பொருளாதாரத்திலும் சமுதாய வாழ்க்கையின் பிற துறைகளிலும் நிலவும் நிலையைப் பன்முக ரீதியில் பகுப்பாய்வு செய்தது, நாட்டின் சமூக, பொருளாதார

வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது தொடர்பான நீண்டகால கொள்கை நிலையை உருவாக்கியது, இதற்கு கம்யூனிஸ்டு களின், எல்லா சோவியத் மக்களின் பெரும் ஆதரவு கிட்டியது. இந்த முழுப் பேரவைக் கூட்டம் குறைகளைத் துணி வோடு சுட்டிக்காட்டியது, இடர்ப்பாடுகள், தவறுகளைப் பற்றி ஒளிவுமறைவற்று குறிப்பிட்டது, முன்னோக்கிய இயக் கத்திற்கு வலுவான உந்து சக்தியை அளித்தது, சுறுசுறுப் பான நடைமுறைச் செயல்கள், கட்டுப்பாட்டையும் காரியத் தின் மீதான ஆர்வத்தையும் பெரிதும் வலுப்படுத்தல் ஆகிய வற்றை நோக்கிய திருப்புமுனையை ஆரம்பித்து வைத்தது.

மத்திய கமிட்டி ஏப்ரல் மாத முழுப் பேரவை கூட்ட முடிவுகள், கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பின் நகல், கட்சி விதிமுறைகளில் முன்மொழியப்படும் மாற்றங்களின் நகல், 1986—1990ஆம் ஆண்டுகளுக்கும் 2000ஆம் ஆண்டு வரைக்குமான காலகட்டத்திலும் சோவியத் ஒன்றியத்தின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் முக்கியத் திசையமைவு களின் நகல் ஆகியவை பொதுமக்களின் ஆதரவைப் பெற்றன. இது கட்சிக்கும் மக்களுக்கும் இடையிலான ஒற்றுமை மேலும் வலுப்பட்டுள்ளதையும் கட்சியின் தலைமைப் பாத்திரம் வளர்ந்துள்ளதையும் காட்டுகிறது, சோஷலிசத்தின் பொரு ளாதார, ஆன்மீக உள்ளாற்றல் மேன்மேலும் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதற்கான புதிய வாய்ப்புகளைத் திறந்து விடுகிறது.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரஸ் பின்வருமாறு தீர்மானிக்கிறது:

**சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் அரசியல் கொள்கையையும் நடைமுறை நடவடிக்கையையும் ஆமோதிப்பது;**

**காங்கிரசிற்கு மத்திய கமிட்டி சமர்ப்பித்த அரசியல் அறிக் கையில் அடங்கியுள்ள கருத்துநிலைகள், முடிவுகள், கடமைகளை ஆமோதிப்பது; எல்லா கட்சி ஸ்தாபனங்களும் தம் பணியில் இவற் றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.**

I

1. இன்றைய உலக வளர்ச்சியின் முக்கியப் போக்குகள், முரண்பாடுகள் பற்றி கட்சி மத்திய கமிட்டியின் அரசியல் அறிக்கையில் அடங்கியிருந்த பகுப்பாய்வையும், உரையில் இடம் பெற்றிருந்த மதிப்பீடுகள், முடிவுகளையும் காங்கிரஸ் ஆதரித்து ஊர்ஜிதப்படுத்துகிறது.

2. 20ஆம் நூற்றாண்டில் முன்னேற்றம் சோஷலிசத்துடன் இயல்பாக இணைக்கப்படுகிறது. உலக சோஷலிசம் என்பது ஒரு வலிமையான சர்வதேச அமைப்பாகும். இது உயர் வளர்ச்சியடைந்த பொருளாதாரம், நவீன விஞ்ஞான அடித்தளம், நம்பகரமான இராணுவ அரசியல் உள்ளாற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. கோட்பாட்டு ரீதியில் புதியதொரு அடிப்படையில், அதாவது கூட்டு அடிப்படையில் சமுதாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வாய்ப்பை சோஷலிசம் எப்போதும் வெளிப்படுத்துகிறது, இப்பாதையில் நடை போடும் நாடுகளை அதிக உயர்வான வளர்ச்சி மட்டத்திற்கு உயர்த்தியுள்ளது.

சமுதாய உறவுகளை சோஷலிசம் இடையறாமல் மேம்படுத்துகிறது, அடையப்பட்ட சாதனைகளைச் செயல் முனைப்போடு பெருக்குகிறது, தன் உதாரணத்தின் பலத்தையும் உறுதியையும் வலுப்படுத்துகிறது, வாழ்க்கை அமைப்பு முழுவதன் உண்மையான மனிதாபிமானத் தன்மையை வெளிப்படுத்துகிறது, சமாதானத்திற்காகவும் எல்லா மக்களினங்களும் மலர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவும் சமமான, பரஸ்பர அடிப்படையில் பரவலான சர்வதேச ஒத்துழைப்பில் பங்கேற்க தான் எப்போதும் தயார் என்பதைக் காட்டுகிறது. இதன் மூலம் யுத்தம், இராணுவ வெறி, பிற்போக்கு, வன்முறை, சகல விதமான மானுட விரோதப் போக்கு சித்தாந்தங்களின் முன் சோஷலிசம் மேன்மேலும் உறுதியான தடையை எழுப்புகிறது, மனிதகுலத்தின் சமூக முன்னேற்றத்திற்குத் தீவிரமாக உதவுகிறது.

3. நவீன முதலாளித்துவம், விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் செல்வாக்கினாலும் அதன் பின்னணியிலும் பிரம்மாண்டமாக வளர்ச்சியடைந்துள்ள உற்பத்திச் சக்திகளுக்

கும் தனியுடைமை சமுதாய உறவுகளுக்கும் இடையிலான மோதலை இன்னமும் கடுமையானதாக்குகிறது. முதலாளித்துவப் பொது நெருக்கடி இன்னமும் ஆழமடைகிறது. முதலாளித்துவம் தன் வரலாற்றில் இதுவரை சந்திக்காத அளவிற்கு முரண்பாடுகளின் வலைப்பின்னலை, பரஸ்பர வலுப்பாட்டை, சமூக, பொருளாதார, இன்ன பிற நெருக்கடிகள், மோதல்களைச் சந்திக்கிறது. நவீன காலத்தின் எல்லா முக்கியப் பிரச்சினைகளையும் உருவாக்கி, தக்க வைத்து, அவற்றைக் கூர்மையடையச் செய்ததற்கான பொறுப்பு முதலாளித்துவத்தையே சாரும்.

முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றாகிய உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைந்ததையடுத்து நவீன சூழ்நிலையில் இதன் பின்விளைவுகளில் ஒன்றாக ஒரு சில முக்கிய முதலாளித்துவ நாடுகளின் அரசியலும் உள்நாட்டு நிலவரம் முழுவதும் கணிசமான அளவிற்கு வலதுசாரியை நோக்கித் திரும்பும் பெரும் அபாயம் தோன்றியது.

4. நவீன சூழ்நிலையில் ஏகாதிபத்தியம் மனிதகுலம் உயிர்வாழ்வதற்கே மேன்மேலும் அதிக ஆபத்தானதாக மாறி வருகிறது. இதன் மிகப் பயங்கரமான படைப்பு இராணுவ வெறியாகும், இது பூர்ஷ்வா சமுதாயத்தின் அரசியல் இயந்திரம் முழுவதையும் தன் செல்வாக்கு, நலன்களுக்கு உட்படுத்த, ஆன்மீக வாழ்க்கையையும் கலாசாரத்தையும் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முயலுகிறது.

நம் நூற்றாண்டின் யுத்தங்கள், மோதல்கள், ஆயுதப் போட்டியை ஆரம்பித்து வைத்து அதை இடையறாமல் முடுக்கி விடுவது, அதில் புதுப் புது திசைகளைத் தோற்றுவிப்பது ஆகியவற்றிற்கான பொறுப்பு ஏகாதிபத்தியத்தை மட்டுமே சாரும். முதன்முதலாக அணு ஆயுதத்தைப் பயன்படுத்திய ஏகாதிபத்தியம் புதியதொரு நடவடிக்கைக்கு—இது அனேகமாக திருத்தவே முடியாத செயலாக அமையக் கூடும்,—ஆயுதப் போட்டியை விண்வெளிக்கு எடுத்துச் செல்ல, உலகம் முழுவதையும் தாக்குதலுக்கான இலக்காக மாற்றத் தயாராகிறது.

ஏகாதிபத்தியம் மிகத் தந்திரமான நவீன காலனியாதிக்க முறையைத் தோற்றுவித்துள்ளது. வளர்முக நாடுகளை மிகக்

கொடுமையாகச் சுரண்டுவதென்பது ஏகாதிபத்தியத்தின் இராணுவத் தயாரிப்புகளுக்கும், அதன் உள்நாட்டுக் கொள்கைக்கும், அது உயிர்வாழவும் தேவையான நிதிகளைப் பெறுவதில் மேன்மேலும் முக்கியமானதொரு காரணியாக மாறி வருகிறது. ஏகாதிபத்தியம் மனிதகுலம் முழுவதற்கும் எதிராக தன்னை மேன்மேலும் வலிமையாக நிறுத்துகிறது.

5. வரலாற்றுப் போக்கு, சமுதாய முன்னேற்றத்தின் போக்கு, உலகம் தழுவிய அளவில் அரசுகள், மக்களினங்களுக்கு இடையில் நல்ல, ஆக்கபூர்வமான பரஸ்பரச் செயலாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மேன்மேலும் உறுதியோடு கோருகிறது. இரண்டு அமைப்புகளின் போட்டி, வரலாற்று ரீதியான போராட்டத்தையும் பல்வேறு அரசுகளின் அதிகரித்து வரும் பரஸ்பரச் சார்புநிலை போக்கையும் இணைப்பதில்தான் நவீன உலக வளர்ச்சியின் இயக்கவியல் அடங்கியுள்ளது. எதிர்மறைகளுக்கு இடையிலான போராட்டத்தின் மூலம் முரண்பாடான, ஆனால் பரஸ்பரம் ஒன்றையொன்று சார்ந்த, பெரும்பாலும் முழுமையான உலகம் உருவாகிறது. உலக வளர்ச்சி, அதன் நவீன கட்டம் ஒவ்வோர் அரசின் முன்னும்—வெளிநாட்டுக் கொள்கையாக இருந்தாலும் சரி, பொருளாதார, சமூக செயல்பாடாக இருந்தாலும் சரி, சமுதாயத்தின் ஆன்மீக அம்சமாய் இருந்தாலும் சரி—குறிப்பாக கறாரான கோரிக்கைகளை முன் வைக்கிறது.

20ஆம் நூற்றாண்டின் கடைசி பத்தாண்டுகள் உலக மக்களின் முன் கடினமான, கடுமையான பிரச்சினைகளை வைத்துள்ளன. உடனடியான பொது மானுட கடமைகளை நிறைவேற்றும் அவசியம் பரஸ்பரச் செயலாக்கத்தை மேற்கொள்ளுமாறு உலக மக்களை ஊக்குவிக்க வேண்டும், மனிதகுலம் உயிர் வாழுவதை நோக்கமாகக் கொண்ட போக்குகளை ஆரம்பித்து வைக்க வேண்டும். உலக வளர்ச்சிப் போக்கு இதற்கு அவசியமான பொருளாயத, சமூக, அரசியல் முன்தேவைகளைத் தோற்றுவிக்கிறது. காலத்தின் எதார்த்தங்களுக்கு ஏற்ற முடிவுகள், செயல்களுக்கான உந்து சக்தியை இதில்தான் கட்சி காணுகிறது.

உலகெங்குமுள்ள சமாதான, முற்போக்குச் சக்திகளால்

ஏகாதிபத்தியத்திடமிருந்து வரும் அபாயத்தை அகற்ற முடியும், உலகம் அணு ஆயுதப் பேரழிவை நோக்கிச் செல்லாமல் தடுக்க முடியும், விண்வெளியைப் போர்க்களமாக மாற்றுவதை நிறுத்த முடியும். மனித வாழ்க்கை, இதன் பன்முக வளர்ச்சிக்கான வாய்ப்புகள், சமுதாய வளர்ச்சியின் நலன்கள்—இவைதான் எல்லாவற்றையும்விட முக்கியமானவையாகும். சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி, சோவியத் அரசின் நடைமுறை நடவடிக்கை இத்திசையில்தான் அமைய வேண்டுமென்று காங்கிரஸ் சுட்டிக்காட்டுகிறது.

II

1. பொருளாதாரத் துறைதான் கட்சி நடவடிக்கையின் முக்கியக் களமாக இருந்தது, இருக்கிறது. சமாதான சூழ்நிலையில் பொருளாயத, ஆன்மீக ரீதியில் வளமான, சமூக ரீதியில் செழுமையான வாழ்க்கையை சோவியத் மக்களுக்கு அளிப்பதற்கும், குணாம்ச ரீதியில் புதியதொரு சமுதாய நிலையை அடையவும் தேவையான முன்தேவைகள் இங்குதான் தோற்றுவிக்கப்படுகின்றன.

கட்சியின் மூன்றாவது வேலைத்திட்டம் ஏற்கப்பட்டபின் கடந்த கால் நூற்றாண்டில் நாட்டின் தேசியப் பொருளாதாரம் கணிசமாக முன்னேறியுள்ளது. தேசிய வருமானம் கிட்டத்தட்ட 4 மடங்கும், தொழிற்துறை உற்பத்தி 5 மடங்கும், விவசாய உற்பத்தி 1.7 மடங்கும் அதிகரித்தன. ஒரு சில முக்கியப் பொருட்களின் உற்பத்தியில் சோவியத் ஒன்றியம் உலகத்தில் நிலையாக முதலிடத்தை வகிக்கிறது. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. நபர் ஒருவருக்கான மக்களின் உண்மை வருமானங்கள் 2.6 மடங்கும், சமூக நுகர்வு நிதிகள் 5 மடங்கிற்கு மேலாயும் கூடியுள்ளன. பெரும்பாலான குடும்பங்களின் வசிப்பிடச் சூழ்நிலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. தாயக விஞ்ஞானம், கல்வி, உடல்நலப் பாதுகாப்பு, கலாசாரத்தில் அடையப்பட்ட வெற்றிகள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன.

அடையப்பட்ட சாதனைகளுக்கு உரிய மதிப்பளிக்கும் காங்கிரஸ், அதே நேரத்தில் 1970ஆம் ஆண்டுகளிலும்

1980ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் தோன்றிய இடர்ப்பாடுகள், தீய போக்குகளைச் சுட்டிக்காட்டுகிறது. இக்காலகட்டத்தில் பொருளாதார வளர்ச்சி வேகங்களும் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு வேகங்களும் கணிசமாகக் குறைந்தன, வேறு சில செயல்வன்மைக் குறியீடுகள் மோசமடைந்தன, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் தாமதப்பட்டது, பொருளாதாரத்தில் சீரிசைவின்மைகள் வலுப்பட்டன. ஐந்தாண்டுத் திட்டக் கடமைகள் நிறைவேற்றப்படவில்லை, திட்டமிடப்பட்ட சமூகநல நடவடிக்கைகளும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. பொருளாதார நிலவரத்தில் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றி உரிய நேரத்தில் அரசியல் மதிப்பீடு செய்யாததும், பொருளாதாரத்தை உடனடியாக தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவதில் உள்ள சிக்கலும் அதன் அவசியமும் உணரப்படாததும், பொருளாதார கொள்கை, நிர்வாக முறை மற்றும் பொருளாதார நடவடிக்கையின் உளவியலை சீரமைப்பது சம்பந்தமான பிரச்சினைகளின் தீர்வில் உறுதியும் தொடர்ச்சியும் இல்லாமல் போனதும்தான் பின்தங்கிய நிலைக்கான முக்கியக் காரணங்களாகும் என்று காங்கிரஸ் கருதுகிறது. சமீப காலமாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நிலவரத்தை முழுமையாக சரி செய்ய முடியவில்லை.

இப்படிப்பட்டதொரு சூழ்நிலையில், பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் தீய போக்குகளை மிகக் குறுகிய காலத்தில் உறுதியோடு முழுமையாக அகற்றி, அதற்கு உயரிய சீரிசைவை அளித்து, உண்மையான புரட்சிகர மாற்றங்களுக்கான வழியை ஏற்படுத்தி, இந்நிகழ்ச்சிப் போக்குகளில் பரவலான உழைப்பாளி மக்கள் திரளினரை ஈடுபடுத்துவதுதான் மிக முக்கிய கட்சி, அரசுக் கடமையாகும்.

2. நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது சம்பந்தமாக கட்சியின் மத்திய கமிட்டி உருவாக்கிய கருத்தமைப்பையும் இதன் நிறைவேற்றம் சம்பந்தமான நடைமுறை நடவடிக்கைகளையும் காங்கிரஸ் முழுமையாக ஆமோதிக்கிறது. பன்முக ரீதியில் வளர்ச்சியடைந்த உற்பத்திச் சக்திகள், முதிர்ச்சியடைந்த சோஷலிச உற்பத்தி

உறவுகள், ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாக முறை ஆகியவற்றுடன் கூடிய உயரிய ஒழுங்கமைப்பையும் செயல்வன்மையையும் உடைய பொருளாதாரத்திற்கு மாறுவதுதான் கட்சியின் நீண்டகாலக் கொள்கையாகும். 12ஆவது ஐந்தாண்டு திட்டம் உற்பத்தியில் ஆழ்ந்த குணாம்ச ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதில் முக்கியக் கட்டமாகும்.

கட்சி, சோவியத், நிர்வாக, சமூகநல ஸ்தாபனங்கள் தேசியப் பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவது சம்பந்தமான வேலைத்திட்டக் கருத்துநிலைகளைச் சற்றும் வழுவாமல் பின்பற்றுவதைத் தம் நடவடிக்கை முழுவதன் அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்று காங்கிரஸ் குறிப்பிடுகிறது. பொருளாதார நிர்வகிப்பின் எல்லா மட்டங்களிலும் முக்கிய கவனத்தை அளவு நிலைக் குறியீடுகளின் மீது செலுத்தாமல் தரக் குறியீடுகள், செயல்வன்மை மீது செலுத்த வேண்டும், இடைநிலை முடிவுகளை விட்டுவிட்டு இறுதி முடிவுகள் மீது கவனம் செலுத்த வேண்டும், உற்பத்திச் சொத்துகளை விரிவுபடுத்துவதை விடுத்து அவற்றைப் புதுப்பிக்க வேண்டும், எரி பொருள், மூலப் பொருள் வளங்களைப் பெருக்காமல் அவற்றைப் பயன்படுத்துவதை மேம்படுத்த வேண்டும், விஞ்ஞானம் அதிகம் பயன்படுத்தப்படும் துறைகளைத் துரிதமாக வளர்ப்பதன் மீதும், அதற்கேற்றபடி கட்டமைப்பு மற்றும் முதலீட்டுக் கொள்கையைச் சீரமைப்பதன் மீதும் கவனம் செலுத்த வேண்டும்.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தை அடிப்படையில் துரிதப்படுத்துவது, அதிகபட்ச உற்பத்தித் திறனையும் செயல்வன்மையையும் அளிக்கவல்ல புதிய தலைமுறை தொழில்நுட்பம், முற்றிலும் புதிய தொழில்முறைகளைப் பரவலாகப் புகுத்துவது ஆகியவற்றை தேசியப் பொருளாதாரத்தைத் தீவிரமயப்படுத்தும் முக்கிய உந்துகோலாக கட்சி முன்வைக்கிறது. மிக நவீன விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளின் அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தில் ஆழ்ந்த தொழில்நுட்பச் சீரமைப்பை நிறைவேற்றுவதைக் கட்சி முதல் கடமையாக முன்வைக்கிறது. ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு தொழில் நிறுவனத்திடமும் உற்பத்தி இணையத்திடமும் உற்பத்தியை இடையறாது புதுப்

பிப்பது சம்பந்தமான திட்டவட்டமான செயல்திட்டம் இருக்க வேண்டும். விஷயத்தின் சாரத்தை வெளிப்பூச்சான நடவடிக்கைகளாலும் அரைகுறை தீர்மானங்களாலும் மாற்றி, தொழில்நுட்பச் சீரமைப்பின் கருத்தையே திரிக்கும் நிர்வாகிகளைக் கறாராக கண்டிக்க வேண்டும்.

விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப் படுத்துவதில் இயந்திரக் கட்டுமானம் முக்கியப் பங்காற்ற வேண்டும்; இத்துறையை மிகக் குறுகிய காலகட்டத்தில் உயர்வான தொழில்நுட்ப மட்டத்திற்கு உயர்த்த வேண்டும். நவீன கணிப்பொறிகளைத் திட்டமிட்டு, அவற்றைப் பெரு மளவில் உற்பத்தி செய்வது மிக முக்கியக் கடமையாகும். எரி பொருள்-எரி சக்தி இணையத்தை அடியோடு சீரமைக்க வேண்டும், எரி சக்தி செயல்திட்ட நிறைவேற்றத்திற்கு வழி கோல வேண்டும். உலோகத் துறை வளர்ச்சி, தேசியப் பொருளாதாரத்தை இரசாயனமயப்படுத்தல், புதிய கட் டமைப்புப் பொருட்கள், மற்ற நவீன பொருட்களின் தேவை களைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றில் நிறைய செய்ய வேண்டியுள்ளது. உற்பத்தி உள்கட்டமைவை, முதலா வதாக போக்குவரத்து, தகவல் தொடர்பு துறைகளைத் தொழில்நுட்ப ரீதியில் புதுப்பிப்பதற்கும், நுகர்வுப் பொருள் துறை, மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் நேரடியாகத் தொடர்புடைய பிற துறைகள் ஆகியவற்றின் முன்னுரிமை வளர்ச்சிக்கும் கட்சி பெரும் முக்கியத்துவமளிக் கிறது.

தேசியப் பொருளாதாரத்தைச் சீரமைக்கும் பணி முழு மூச்சோடு ஆரம்பமாகியுள்ளதையடுத்து, பெருவீத கட்டு மானத்தை அடியோடு மேம்படுத்த வேண்டியதன் அவசியத் தையும், கட்டுமான இணையம் முழுவதையும் புதிய தொழிற் துறை, ஸ்தாபன மட்டத்திற்கு உயர்த்த வேண்டியதன் அவசியத்தையும், முதலீட்டு சுழற்சியைக் கணிசமாக குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் காங்கிரஸ் சுட்டிக் காட்டுகிறது.

தேசியப் பொருளாதாரத்தைத் தொழில்நுட்ப ரீதியில் புதுப்பிக்கும் தேவைகளை நோக்கி விஞ்ஞானத்தைத் தீவிர மாகத் திருப்புவது, உற்பத்தியுடன் விஞ்ஞானத்தை மேலும்

நெருக்கமாக இணைப்பது, இதற்காக தம்மை நிரூபித்த புதிய ஒருங்கிணைப்பு, பரஸ்பரச் செயலாக்க வடிவங்களைப் பயன்படுத்துவது, ஆராய்ச்சி முடிவுகளை நடைமுறையில் புகுத்துவதைத் துரிதப்படுத்துவது, விஞ்ஞானப் பேரவையின் ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழிற்துறையின் ஆராய்ச்சி நிறுவனங்களின் பயன் தரும் தன்மையை உயர்த்துவது, உயர் கல்வி நிலையங்களின் விஞ்ஞான உள்ளாற்றலை உயர்த்துவது, அடுத்த விஞ்ஞானத் தலைமுறையைப் பயிற்றுவிப்பதை மேம்படுத்துவது ஆகிய கடமைகளைக் காங்கிரஸ் முன்வைக்கிறது.

3. கட்சியின் நவீன விவசாயக் கொள்கையை உறுதியோடு பின்பற்றி நடப்பதும் சோவியத் ஒன்றியத்தின் உணவுப் பொருள் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதும்தான் கட்சி, சோவியத், நிர்வாக உறுப்புகளின், எல்லாக் கம்யூனிஸ்டுகள், எல்லா மக்களின் முதல் கடமையாகும். மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குவதை 12ஆம் ஐந்தாண்டிலேயே தீவிரமாக மேம்படுத்தும் பொருட்டு விவசாயத் தொழிற்துறை இணையத்தின் வளர்ச்சியில் உறுதியான மாற்றம் தேவை. இந்த இணையத்தின் எல்லா அங்கங்களின் பணியையும் பொருளாதார ரீதியில் பரஸ்பரம் தொடர்புடையதாக்க, திட்டவட்டமானதாக்க பாடுபட வேண்டியது முக்கியமாகும், விவசாயத் துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற துறைகள் மேலும் ஸ்திரமாக வளர்ச்சியடைவதன் மீது விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் தாக்கத்தை வலுப்படுத்த வேண்டும்.

விவசாயத் தொழிற்துறை இணையத்தின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளத்தை எதிர்காலத்திலும் தொடர்ச்சியாக வளர்க்கும் அதே நேரத்தில் ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்ட வலுவான உற்பத்தி உள்ளாற்றலைப் பயன்படுத்தும் செயல்வன்மையை ஆதியோடு அந்தமாக உயர்த்துவதும், அதிகபட்ச பயனை அளிக்கவல்ல திசைகளில் சக்திகளையும் சாதனங்களையும் குவிப்பதும் அவசியமாகும். எல்லா இடங்களிலும் தீவிர தொழில்நுட்பத்தைப் புகுத்துவதன் மீதும், உண்மையான அடக்கக் கணக்கீட்டு முறையின் அடிப்படையில் கூட்டு வேலை முறையை வளர்ப்பதன் மீதும்,

விவசாயத் தொழிற்துறை உற்பத்தியின் எல்லா கட்டங்களிலும் இழப்புகளைக் குறைப்பதன் மீதும், விவசாய மூலப் பொருட்களைச் சேமித்து பதப்படுத்துவதற்கு அவசியமான தளங்களை மிகக் குறுகிய காலகட்டத்தில் ஏற்படுத்துவதன் மீதும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். கிராமத்தை சமூக ரீதியில் சீரமைப்பதைத் துரிதப்படுத்த வேண்டும், கிராமப்புற உழைப்பாளிகள், அவர்களுடைய உழைப்பு, வாழ்க்கைச் சூழ்நிலைகள் மீது நிரந்கர அக்கறை செலுத்த வேண்டும்.

ஸ்தாபன ரீதியான சீரமைப்பும், விவசாயத் தொழிற்துறை இணையத்தின் அமைப்பில் செயல்வன்மையுள்ள நிர்வாக முறையைத் தோற்றுவிக்கும் புதிய பெரும் நடவடிக்கைகளும் மேற்கூறிய கடமைகளின் நிறைவேற்றத்தை நோக்கமாகக் கொண்டவையாகும்; இந்நடவடிக்கைகள் இந்த இணையத்தின் பல்வேறு பிரிவுகளின் பணியில் பொருளாதார முறைகளைப் பரவலாகப் பயன்படுத்தவும், அரசுப் பண்ணைகள், கூட்டுப் பண்ணைகள், பிற நிறுவனங்களின் சுதந்திரத்தையும் முன்முயற்சிகளையும் கணிசமாக உயர்த்தவும் தேவையான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும், பொறுப்பின்மை, ஒட்டுண்ணித்தனம் ஏற்படாமல் நம்பகரமான தடையை எழுப்பும். கிராமப்புறத்தில் பொருளாதார சூழலை அடியோடு மேம்படுத்த, விவசாயத் தொழிற்துறை இணையத் தலைமையின் பாணியையும் முறைகளையும் பெரிதும் மேம்படுத்த வேண்டும். உழைப்புக் கூட்டுகளின் உற்பத்தி நடவடிக்கையில் திறமையற்றத் தலையீட்டைக் கைவிட வேண்டும், விவசாயத் தொழிற்துறை இணையத்தின் நிர்வாக உறுப்புகளுக்குப் பதிலாக இயங்குவதை நிறுத்த வேண்டும். புதிய சூழ்நிலைகளில், நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்களையும் விவசாய மூலப் பொருளையும் வழங்குவதில் அரசு விவசாயத் தொழிற்துறை கமிட்டிக்கும் அமைச்சரவைக்கும் உள்ள பொறுப்பு கணிசமாகக் கூடுகிறது.

4. சமூகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் கொள்கையானது, பொருளாதார முறையை ஆழ்ந்த சீரமைப்பிற்கு ஆளாக்குமாறும், ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையிலான, சோஷலிசத்தின் வாய்ப்பு

களை முழுமையாகப் பயன்படுத்த உதவக் கூடிய முழுமை யான, செயல்வன்மையுள்ள, நெளிவு சுழிவான நிர்வாக முறையைத் தோற்றுவிக்குமாறும் கட்டளையிடுகிறது. நிர் வாக, பொருளாதார வடிவங்களும் முறைகளும் நவீன கோரிக் கைகளுடன் பொருந்தியிருக்குமாறு செய்யும் நோக்கத் தோடு கூடிய விரைவில் பல நடவடிக்கைகளை மேற்கொள் ளும் கடமையைக் கட்சியின் மத்திய கமிட்டிக்கும், சோவியத் ஒன்றிய அமைச்சரவைக்கும் காங்கிரஸ் அளிக்கிறது.

இந்நோக்கங்களோடு பின்வருபவற்றைச் செய்ய வேண் டும்:

—கட்சியின் நீண்டகாலப் பொருளாதாரக் கொள்கை யின் முக்கியக் கடமைகளின் நிறைவேற்றத்தில் மையப்படுத் தப்பட்ட தலைமையின் செயல்வன்மையை வலுப்படுத்த வேண்டும்; அதே நேரத்தில் தொழில் நிறுவனங்கள், கூட்ட மைப்புகளின் பங்கையும் சுதந்திரத்தையும் உயர்த்த வேண் டும்; உண்மையான அடக்கக் கணக்கீட்டு முறை, சுயமாக ஈடுகட்டும் முறை, சுயநிதியமைப்பு ஆகியவற்றின் அடிப் படையிலும், கூட்டுகளின் வருமான மட்டத்திற்கும் வேலை யின் செயல்வன்மைக்கும் இடையில் நேரடித் தொடர்பை ஏற்படுத்துவதன் அடிப்படையிலும் அதிகபட்ச இறுதி முடிவு களை அடைவதில் இவற்றிற்கு உள்ள அக்கறையையும் பொறுப்பையும் உயர்த்த வேண்டும்;

—தேசியப் பொருளாதாரத்தின் எல்லா மட்டங்களிலும் பொருளாதார நிர்வாக முறைகளுக்கு மாற வேண்டும்; திட்டமிடுதல், நிதி-கடன் முறை, விலைகளை நிலைநாட்டும் முறை ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும், பொருளாயத தொழில்நுட்ப சப்ளையைச் சீரமைக்க வேண்டும்;

—உற்பத்தியின் குவிப்பு, தனித்துறைப்பாடு, கூட்டுறவு மயப்படுத்தல் ஆகிய போக்குகள், பரஸ்பரத் தொடர் புடைய துறைகளின் வளர்ச்சி, பிராந்திய உற்பத்தி அமைப்பு கள், பிற பல்துறை அமைப்புகளின் வளர்ச்சி ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு நிர்வகிப்பிற்கு நவீன ஸ்தாபன கட்ட மைப்புகளை வழங்க வேண்டும்;

—துறை ரீதியான மற்றும் பிராந்தியப் பொருளாதார நிர்வகிப்பின் சாலச்சிறந்த இணைப்பை அடைய வேண்டும்,

குடியரசுகள், பிராந்தியங்களின் பன்முக பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு வகை செய்ய வேண்டும், குடியரசு மற்றும் உள்ளூர் உறுப்புகளின் உரிமைகளை—குறிப்பாக கட்டுமானம், பல்துறை உற்பத்தி, சமூக மற்றும் உற்பத்தி உள் கட்டமைப்பு நிர்வாகத்தில்—மேற்கொண்டு விரிவுபடுத்த வேண்டும்.

நிர்வகிப்பை மேம்படுத்த சிந்தனையில் சீரமைப்பு வேண்டும், புதிய கடமைகளைக் கட்சித் தொண்டர்களும் நிர்வாக ஊழியர்களும் பரவலான உழைப்பாளி திரளினரும் தெட்டத்தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும், வழக்கமான பழைய மாதிரிகளைக் கைவிட வேண்டும். நிர்வகிப்பு சம்பந்தமான தத்துவார்த்த அம்சங்களை விஞ்ஞான ரீதியாக முன் வைப்பதை மேம்படுத்த வேண்டும்; இந்த அம்சங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான பரஸ்பரச் செயலாக்கத்தின் இயக்கவியல், சோஷலிச சொத்துடைமையின் வளர்ச்சி, பண்ட-பண உறவுகளைப் பயன்படுத்துவது, மத்தியத்துவத்தையும் பொருளாதார ஸ்தாபனங்களின் சுதந்திரத்தையும் இணைப்பது ஆகியவற்றுடன் தொடர்புடையவை.

5. திட்டமிடப்பட்ட கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற தேசியப் பொருளாதாரத்தின் வசமுள்ள வாய்ப்புகளை அதிகபட்சம் அணிதிரட்ட வேண்டுமென்று காங்கிரஸ் கோடிட்டுக் காட்டுகிறது. ஸ்தாபன ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் வலுப்படுத்துவதன் மீதும் பொறுப்பின்மையை அகற்றுவதன் மீதும் கட்சி, சோவியத், நிர்வாக, சமூக நல ஸ்தாபனங்கள் பெரும் கவனம் செலுத்த வேண்டும். ஏற்கெனவே இயங்கும் உற்பத்தி ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்துவது, மூலப் பொருள், பிற பொருட்கள், எரி பொருள், சக்தி ஆகியவற்றை சகலவிதங்களிலும் சிக்கனப்படுத்துவது, மூலப் பொருட்களைச் சிக்கனப்படுத்தக் கூடிய, கழிவுப் பொருளற்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல், இரண்டாம்பட்ச மூல ஊற்றுகளைப் பயன்படுத்தல், உற்பத்தியின் சீரிசைவான பாணியை உயர்த்துதல், ஒப்புக்கொண்ட சப்ளைகளைக் கண்டிப்பாக அளித்தல்

ஆகியவற்றின் மீது முக்கியக் கவனம் செலுத்தப்பட வேண்டும். பொருட்களின் தரத்தையும் வேலை முழுவதன் தரத்தையும் அடிப்படையிலேயே மேம்படுத்துவதற்காக அதிக பட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த மிக முக்கியப் பொதுக் கடமையை நிறைவேற்ற, நவீன விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளின் அடிப்படையில் எல்லாத் தொழில் நிறுவனங்களின், எல்லா நிர்வாக அங்கங்களின் முயற்சிகளையும் அதிகபட்சம் அணிதிரட்ட வேண்டும். தர உயர்விற்கான உறுதியான, அன்றாடப் போராட்டம் என்பது ஒவ்வொரு கம்யூனிஸ்டின், ஒவ்வொரு உழைப்பாளியின் பணியாக வேண்டும்.

பொருளாதார, ஸ்தாபன அமைப்பு, அரசியல் பணி முழுவதும், உற்பத்தியின் பால் மக்களுக்கு எஜமானர்களுக்கே உரித்தானதொரு அணுகுமுறை ஏற்படச்செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும், இப்பணி இவர்களை நிர்வாகத்தில் மேன்மேலும் தீவிரமாகப் பங்கேற்கச் செய்ய வேண்டும், உழைப்பாளிகளின் ஆக்கபூர்வமான முன் முயற்சிகளை உயர்த்த வேண்டும், 12ஆவது ஐந்தாண்டுத் திட்டக் கடமைகளின் நிறைவேற்றத்திற்கான சோஷலிசப் போட்டியைக் காரிய ரீதியில் ஏற்பாடு செய்ய வேண்டும். உற்பத்தியில் முன்னணியில் இருப்பவர்களை ஊக்குவிப்பதில் தார்மீகக் காரணியின் பங்கு உயர்த்தப்பட வேண்டும், சிறப்பான உழைப்புப் பாரம்பரியங்கள் பரவலாக வளர்க்கப்பட வேண்டும்.

6. தீவிரமான, முழுமையான சமூக கொள்கையை நிறைவேற்றுவதற்கு, 12ஆவது ஐந்தாண்டிலும் எதிர்காலத்திலும் திட்டமிடப்பட்டபடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை—வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும்—உயர்த்தும் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு காங்கிரஸ் முதலிடம் அளிக்கிறது. திட்ட, நிர்வாக உறுப்புகளை சமூகத் துறையின் தேவைகளை நோக்கி உறுதியோடு திருப்ப வேண்டும், இங்கே முதிர்ச்சியடைந்துள்ள பிரச்சினைகள் உரியபடி மதிப்பிடப்படாமலிருப்பதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். அதிகாரிகளின் நடவடிக்கையில் மக்களின் தேவைகள் பாலான எந்த ஒரு கவனமின்மையும் அனுமதிக்கப்பட இயலாது,

மக்களுடைய சட்டபூர்வமான நலன்களுக்கு எவ்வித பங்கமும் ஏற்படுத்தப்படக் கூடாது. சமூக நீதிக் கோட்பாட்டைக் கட்சி கறாராகப் பின்பற்றும், இக்கோட்பாட்டை நிறைவேற்ற இடையூறாக உள்ள அனைத்தையும் அகற்ற உறுதியோடு பாடுபடும்.

மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைக் குணாம்ச ரீதியில் ஒரு புதிய கட்டத்திற்கு உயர்த்துவது சம்பந்தமான விரிவான செயல்திட்டத்தை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி முன்வைக்கிறது. இதில் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது என்பது ஒவ்வொரு உழைப்பாளியும், ஒவ்வொரு உற்பத்திக் கூட்டும் உழைப்பு ரீதியிலும் சமூக ரீதியிலும் திருப்பித் தருவதை அதிகரிப்பதுடன் பிரிக்க இயலாதபடி தொடர்புடையது அவசியம்.

உழைப்பு மற்றும் நுகர்வு வரையளவின் மீதான கண்காணிப்பை வலுப்படுத்துவதும், ஊதியத்திற்கும் உழைப்பின் உற்பத்தித் திறனுக்கும் அதன் தரக் குறியீடுகளுக்கும் இடையில் அதிக கறாரான சார்புநிலையை ஏற்படுத்துவதும் அவசியம் என்று காங்கிரஸ் கருதுகிறது. கொச்சை சமப்படுத்தலை உறுதியோடு களைந்தெறிய வேண்டும், உழைக்காத ஊதியம், நியாயமில்லாத போனசுகள் வழங்க விடக் கூடாது, உழைக்காமல் பெறப்படும் வருமானங்களுக்கு எதிராக, ''திறமைக்கேற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம்'' என்ற அடிப்படை சோஷலிசக் கோட்பாட்டிலிருந்து எந்த ஒரு பிறழ்வு ஏற்பட்டாலும் சரி, அதற்கெதிராக சமரசமற்று போராட வேண்டும். சோம்பேறிகள், சோஷலிச சொத்தைத் திருடுபவர்கள், லஞ்ச ஊழல் பேர்வழிகள் ஆகியோருக்கு எதிரான கூடுதல் நடவடிக்கைகளைக் கூடிய விரைவில் மேற்கொள்ள வேண்டும்.

மையத்திலும் உள்ளூர்களிலும் உள்ள கட்சி, அரசு, நிர்வாக உறுப்புகள் சந்தையில் தரமான பொருட்களைக் குவிப்பது, சேவை வசதிகளைப் பெருக்குவது சம்பந்தமான விஷயங்களில் தம் அணுகுமுறையை அடியோடு மாற்ற வேண்டும், நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தியையும் சேவை வசதிகளையும் வளர்ப்பது சம்பந்தமான பன்முக செயல்திட்டத்தைக் கண்டிப்பாக நிறைவேற்ற வழியமைக்க வேண்டும், இந்த

மிக முக்கியக் கடமையின் நிறைவேற்றத்தில் ஒவ்வொரு குடியரசின், பிராந்தியத்தின், மாவட்டத்தின், தேசியப் பொருளாதாரத் துறையின், உழைப்புக் கூட்டுகளின் பங்கேற்பை அதிகரிக்க வேண்டும். மக்களின் வாங்கும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உள்ளூர் உறுப்புகளின் பொறுப்பை உயர்த்த வேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தனி பிளாட் அல்லது வீட்டை வழங்க வீடு கட்டுமான அளவுகளையும் வீடுகளைப் புதுப்பிப்பதையும் பெருக்க வேண்டும், கூட்டுறவு மற்றும் தனிநபர் கட்டுமானங்கள், இளைஞர் இணையங்களின் கட்டுமானம் ஆகியவற்றை சகல விதங்களிலும் ஊக்குவிக்க வேண்டும், வீடுகளைப் பகிர்ந்தளிக்கும் நடைமுறையை மேம்படுத்த வேண்டும்.

7. சமூகத் துறையில் குணாம்ச ரீதியான மாற்றங்களை அடைவதென்பது உழைப்பிலும் அதன் சாரத்திலும் ஆழ்ந்த மாற்றங்களையும், உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதையும், உடல் உழைப்பும், தேர்ச்சி குறைவான உழைப்பும் பெரிதும் குறைக்கப்படுவதையும், ஊழியர்களைப் பகிர்ந்தளிக்கும், மறுபங்கீடு செய்யும் அரசு முறை மேம்படுத்தப்படுவதையும் கண்டிப்பாக முன்னனுமானிக்கிறது.

தொடர்ச்சியான கல்வியை அளிக்கும் ஒரு ஐக்கிய முறையைத் தோற்றுவிக்கும் கடமையைக் காங்கிரஸ் முன்வைக்கிறது. இந்நோக்கங்களுக்காக, பொதுக் கல்வி மற்றும் தொழிற்கல்வி சீரமைப்பைத் தொடர்ச்சியாக நிறைவேற்ற வேண்டும், கல்விக் கற்பித்தல், வளர்ப்பு முறையின் செயல்வன்மையை உயர்த்த உறுதியோடு பாடுபட வேண்டும், மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சியளிக்க வேண்டும், சுயமான வாழ்க்கை, உழைப்பிற்கு இளைஞர்களைத் தயார் படுத்துவதை அடிப்படையிலேயே மேம்படுத்த வேண்டும். கல்லூரிக் கல்வியையும் தொழிற்கல்வியையும் சீரமைப்பதும் நிபுணர்களைப் பயிற்றுவித்து அவர்களை உற்பத்தியில் பயன்படுத்துவதை மேம்படுத்துவதும் அவசியமாகும். தேசியப் பொருளாதாரத்தில் பணி புரியும் தொழிலாளர்கள், நிபுணர்களின் தேர்ச்சியை உயர்த்துவதும், அவர்களுக்கு

மறுபயிற்சியளிப்பதும் நவீன கோரிக்கைகளுக்கு ஏற்றபடி இருக்குமாறு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

உடல்நலப் பாதுகாப்பை மேம்படுத்தல், உடற்பயிற்சியையும் விளையாட்டுத் துறையையும் சுற்றுலாவையும் பரவலாக வளர்த்தல், மக்களின், குறிப்பாக இளைஞர்களின் ஆக்கபூர்வமான ஓய்விற்கு வகை செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட அடிப்படை நடவடிக்கைகள் தேவை. ஆரோக்கியமான வாழ்க்கை முறையை நிலைநாட்டவும் குடி வெறியையும் குடிப்பழக்கத்தையும் அகற்றவும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியால் முன் வைக்கப்பட்டு சோவியத் மக்களின் தீவிர ஆதரவோடு நடைபெறும் பணியின் மிகப் பெரும் முக்கியத்துவத்தைக் காங்கிரஸ் சுட்டிக்காட்டுகிறது. இத்தீமைக்கு எதிரான போராட்டத்தில் எவ்விதத் தளர்வும் இருக்கக் கூடாது.

இன்று இயற்கைப் பாதுகாப்பும் இயற்கை வளங்களை விவேகமாகப் பயன்படுத்துவதும் பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. இந்த உலகப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் திட்டமிட்ட உற்பத்தி ஒழுங்கமைப்பையும் மனிதாபிமான உலகக் கண்ணோட்டத்தையும் கொண்ட சோஷலிசத்தின் மேம்பாடுகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

8. சோவியத் சமுதாயத்தின் உறுதியான ஒற்றுமை, கம்யூனிசக் கட்டுமான கடமைகளின் வெற்றிகரமான நிறைவேற்றத்திற்கான கண்டிப்பான நிபந்தனை என்ற வகையில் பல்வேறு வர்க்கங்கள், சமூக குழுக்களின் அடிப்படை நலன்களின் ஒருமையையும் அவற்றின் விசேஷ அக்கறைகளையும் பரிபூரணமாக ஆராய்ந்து தன் கொள்கையில் அவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்வதற்குக் கட்சி மிகப் பெரும் முக்கியத்துவமளிக்கிறது. தொழிலாளி வர்க்கத்திற்கு முக்கியப் பாத்திரத்தையளித்து, தொழிலாளி வர்க்கம், கூட்டுப் பண்ணை விவசாயிகள், உழைக்கும் அறிவுஜீவிகளுக்கும் இடையில் உள்ள கூட்டை வலுப்படுத்துவதுதான் கட்சிக் கொள்கையின் கோடிக்கல் என்று காங்கிரஸ் கருதுகிறது. சோஷலிச வாழ்க்கை முறையை மேம்படுத்தும் பொழுது கூட்டுமனப்பாங்கு நிலைபெறவும், தனிநபர் வளர்ச்சிக்கும்

தேவையான அதிகபட்ச வாய்ப்புகளைத் தோற்றுவிக்க வேண்டும்.

குடும்பத்தை மேற்கொண்டு வலுப்படுத்துவது, குழந்தை வளர்ப்பில் பெற்றோர்களுக்குள்ள பொறுப்பை அதிகப் படுத்தல், பெண்கள் தம் தாய்மைப் பணியை நிறைவேற்றும் அதே நேரத்தில் உழைப்பு மற்றும் சமூக நடவடிக்கையில் தீவிரமாகப் பங்கேற்க உதவும் வகையில் அவர்களின் உழைப்பு, வாழ்க்கைச் சூழலை மேம்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். அடுத்த சில ஆண்டுகளுக்குள், போதுமான அளவு நர்சரிப் பள்ளிகள், குழந்தைக் காப்பகங்கள் கட்டப்பட வேண்டும்.

யுத்தங்களில் பங்கேற்றவர்கள், உழைப்பு முதுவர்களின் மீது அன்றாட கவனம் செலுத்துவதும், பொருளாதார, சமூக, அரசியல் வாழ்க்கையில் அவர்கள் அதிகப் பரவலாக பங்கேற்க உதவுவதும் கட்சி, சோவியத் உறுப்புகள், சமூக நல ஸ்தாபனங்களின் கடமையாகும்.

9. சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி தன் தேசிய இனக் கொள்கையின் லெனினிய கோட்பாடுகளுக்கு விசுவாசமாக இருந்து, நம் நாட்டு மக்களினங்களுக்கு இடையிலான சோதர நட்புறவை முன்போன்றே தொடர்ந்து இடையறாது வலுப்படுத்தும்; உழைப்பாளிகளை சோவியத் நாட்டுப் பற்று, சர்வதேசியத்துவ மனப்பாங்கில் வளர்க்கும்; தேசிய இன உறவுகளின் வளர்ச்சி, ஒவ்வொரு மக்களினம், தேசிய இனத்தின் நலன்களைத் தொடும் அம்சங்கள், மக்களின் தேசிய இன உணர்வுகள் ஆகியவை சம்பந்தப்பட்ட விஷயங்களில் விசேஷ கூருணர்வையும் கவனத்தையும் வெளிப்படுத்தும்; இத்துறையில் தோன்றும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணும்; தேசியவெறி, குறுகிய தேசிய மனப்பாங்கு, ஸ்தல மனப்பாங்கு ஆகியவை எந்த வடிவத்தில் வெளிப்பட்டாலும் சரி, அவற்றிற்கு எதிராக கோட்பாட்டு ரீதியான போராட்டத்தை நடத்தும்.

குடியரசுகளின் பன்முக வளர்ச்சி, நாட்டின் ஐக்கிய தேசியப் பொருளாதார இணையத்தை வலுப்படுத்துவதிலும், நம்முடைய பல்தேசிய அரசாகிய சோவியத் ஒன்றியத்

தின் பொருளாதார வல்லமையையும் தற்காப்புத் திறமையையும் வலுப்படுத்துவதிலும் இக்குடியரசுகள் ஒவ்வொன்றின் பங்கையும் அதிகப்படுத்துவது ஆகியவற்றின் மீது கட்சி ஸ்தாபனங்கள் இடையறா அக்கறை செலுத்த கடமைப்பட்டவையாகும்.

## III

1. நம்முடைய வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நீண்டகாலக் கொள்கையில் சமூக உறவுகளை மேற்கொண்டு மேம்படுத்துவது, அரசியல் மற்றும் சித்தாந்த நிறுவனங்களின் சாரம், வடிவங்கள், முறைகளைப் புதுப்பித்தல், சோஷலிச ஜனநாயகத்தை ஆழப்படுத்தல் ஆகியவை அடங்கும்.

சமுதாயத்தின் அரசியல் முறையை மேம்படுத்துவது, சோவியத்துகள், தொழிற்சங்கங்கள், கம்சமோல், உழைப்புக் கூட்டுகள், மக்கள் கண்காணிப்பு உறுப்புகளின் செயல்பாட்டைத் தீவிரப்படுத்துவது, ஒளிவுமறைவின்மையை வலுப்படுத்துவது ஆகியவை சம்பந்தமாக மத்திய கமிட்டி மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் காங்கிரஸ் உயர்வாக மதிப்பிடுகிறது. ''சோஷலிசம் என்பது ஜீவசக்தியுள்ளது, படைப்பாற்றல் மிக்கது, இது மக்கள் திரளினரின் தோற்றுவிப்பு ஆகும்'' என்ற வி.இ. லெனினின் கருத்தை வழிகாட்டியாகக் கொண்டு, பிரதிநிதித்துவ மற்றும் நேரடி ஜனநாயகத்தின் சகல வடிவங்களையும் அதிக செயல்வன்மையோடு பயன்படுத்துவதன் மீதும், அரசுத் தீர்மானங்கள், பிற முடிவுகளை முன்வைத்து ஏற்று நிறைவேற்றுவதில் மக்கள் திரளினரின் பங்கேற்பை இடையறாது விரிவுபடுத்துவதன் மீதும் கட்சி முன்போன்றே தொடர்ந்து இடையறா அக்கறை செலுத்தும், மக்களின் சோஷலிச சுயநிர்வாகம் தொடர்ந்து வளர முக்கியச் சக்தியாகவும் உத்தரவாதமாயும் திகழும்.

2. சட்டமியற்றுவதை வளர்த்தல், தமக்குக் கீழுள்ள, தமக்கு அறிக்கை சமர்ப்பிக்க கடமைப்பட்ட உறுப்புகளைக் கண்காணித்தல், எல்லா மட்டங்களிலும் மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளுக்கு வழிகாட்டுதல் ஆகியவை சம்பந்தப்பட்ட விஷயங்களில் சோவியத் ஒன்றியத்தின் நாடாளு

மன்றம், ஒன்றியக் குடியரசுகளிலும் சுயாட்சி குடியரசு களிலும் உள்ள நாடாளுமன்றங்களின் நடவடிக்கை மேன் மேலும் காரிய ரீதியானதாக, பயனுள்ளதாக மாறுவது எவ்வளவு முக்கியமானது என்று காங்கிரஸ் கோடிட்டுக் காட்டு கிறது. சமுதாயத்தின் சமூக, பொருளாதார, ஆன்மீக வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது, மக்களுடைய அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றிற்காக மக்கள் திரளினரை அணிதிரட்டுவதில் ஸ்தல சோவியத்துகளின் பங்கை அதிகரித்து, அவற்றின் பணியை மேம்படுத்தும் கடமையை இன்னமும் உறுதியோடு கடைப்பிடிக்க வேண்டும். இதன் தொடர்பாக கூடிய விரைவில், சோவியத்துகளின் சுதந்திரம், பொறுப்பை வலுப்படுத்தி, தொழில் நிறுவனங்கள், தமக்கு மேலேயுள்ள ஸ்தாபனங்களுடன் பரஸ்பரச் செயலாக்க முறையை ஒழுங்கமைப்பதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளை உருவாக்க வேண்டும். தேர்தல் நடைமுறையை மேம்படுத்துவதைப் பற்றிய பிரச்சினை உரிய நேரத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது, இது சரியானது என்று காங்கிரஸ் கருதுகிறது.

நிர்வாகத்தில் ஜனநாயக அடிப்படைகளை மேற்கொண்டு வளர்ப்பது, சோவியத்துகளின் நிர்வாக கமிட்டிகள், பிற அரசு உறுப்புகளின் நடவடிக்கையில் திட்டவட்டமான தன்மையையும் உடனுக்குடன் செயல்படும் தன்மையையும் அதிகப்படுத்துவது ஆகியவற்றின் மீது தொடர்ச்சியாக அக்கறை செலுத்த வேண்டும், இலாக்கா மனப்பாங்கும் ஸ்தல மனப்பாங்கும், பொறுப்பின்மையும் அதிகார சடங்கு மனப்பாங்கும் ஆகியவற்றின் வெளிப்பாடுகளையும் மக்களின் பாலான சம்பிரதாய ரீதியிலான ஏனோதானோவென்ற போக்கையும் உறுதியோடு களைந்தெறிய வேண்டும். உழைப்புக் கூட்டுகள், மக்கள் கூட்டங்களின் முன் நிர்வாக கமிட்டிகளும் நீதிபதிகளும், அமைச்சர்களும் பிற நிர்வாகிகளும் அடிக்கடி அறிக்கை சமர்ப்பிக்கும்படியும், இந்த முறை பயனுள்ளதாக இருக்கும்படியும் செய்ய வேண்டும், உழைப்பாளிகளின் தரப்பிலிருந்து நிர்வாக இயந்திரத்தின் பணியைக் கண்காணிப்பதன் பல்வேறு வடிவங்களையும் அதிக செயல்வன்மை

யோடு பயன்படுத்த வேண்டும். சோவியத் மற்றும் சமூக நல உறுப்புகளின் பொறுப்பதிகாரிகள் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குப் பின் தகுதிச் சான்றிதழ் பெறும் முறையைக் கொண்டு வரும் முன்மொழிவைக் காங்கிரஸ் ஆமோதிக்கிறது.

3. நவீன வளர்ச்சிக் கட்டம் சமூகநல ஸ்தாபனங்களின் முன் முக்கியக் கடமைகளை முன்வைக்கிறது.

மிகப் பெரும் வெகுஜன ஸ்தாபனமாகத் திகழும் தொழிற்சங்கங்கள், தேசியப் பொருளாதாரத் திட்டங்களின் நிறைவேற்றம், சோஷலிசப் போட்டியின் வளர்ச்சி, கட்டுப்பாட்டை வலுப்படுத்தல், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தல் ஆகியவற்றிற்காக உழைப்பாளிகளை அணிதிரட்டும் பணியை அதிகப் பொறுப்புணர்வோடு நிறைவேற்ற வேண்டும். தொழிற்சங்கங்களும் அவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்புகளும் அதிக செயல்முனைப்போடும் உறுதியோடும் உழைப்பாளிகளின் சட்டபூர்வமான நலன்களைப் பேணிக் காக்க வேண்டும், உழைப்புப் பாதுகாப்பு, வேலையில் தொழில்நுட்பப் பாதுகாப்பு, உடல்நலக் காப்பு, விளையாட்டு சங்கங்கள், பொழுதுபோக்கு மன்றங்கள், குழந்தைகள் நிறுவனங்களின் கட்டுமானம், பணி பற்றி அக்கறை செலுத்த வேண்டும், சமூகக் கொள்கை முழுவதன் நிறைவேற்றத்தில் தீவிரப் பங்கேற்க வேண்டும்.

கம்யூனிஸ்ட் இலட்சியங்களுக்குத் தம்மை அர்ப்பணித்த, உழைப்பார்வமுள்ள, தியாகம், வீரத்திற்குத் தயாரான, சுறுசுறுப்பும் சுய உணர்வுமுள்ள புதிய சமுதாயக் கட்டுமான வீரர்களைப் பயிற்றுவிக்க லெனினிய கம்சமோலுக்குக் கட்சி ஸ்தாபனங்கள் சகலவிதங்களிலும் உதவ வேண்டும். சமுதாய வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் தம்மை வெளிப்படுத்த வேண்டுமென்ற இளைஞர்களின் நாட்டத்தை ஆதரிக்க வேண்டும். உற்பத்தி, விஞ்ஞானம், கலாசாரம், நிர்வாகத்தில் அவர்களின் மத்தியிலிருந்து உரிய நபர்களைத் தலைமைப் பதவிக்கு முன்மொழியும் கொள்கையைத் தொடர்ச்சியாகப் பின்பற்ற வேண்டும்.

தொழிற்சங்கங்கள், கம்சமோல், அறிவுத்துறையினரின் சங்கங்கள், வாலன்டியர் ஸ்தாபனங்கள், பெண்கள் ஸ்தாப

னங்களின் பங்கை மேற்கொண்டு உயர்த்த, இவற்றின் பங்கேற்போடு அல்லது அந்தந்த சமூகநல ஸ்தாபனத்தின் பூர்வாங்க ஒப்புதலோடு அரசு உறுப்புகள் முடிவெடுக்க வேண்டிய பிரச்சினைகளின் பட்டியலை விரிவுபடுத்த வேண்டும், ஒரு சில சந்தர்ப்பங்களில் நிர்வாக முடிவுகளின் நிறைவேற்றத்தை நிறுத்திவைக்கும் உரிமையை இவற்றிற்கு அளிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கருதுகிறது.

4. நேரடி ஜனநாயகத்தின் சகல வடிவங்களையும் பயன்படுத்தல், குறிப்பாக உழைப்புக் கூட்டுகளைச் சுறுசுறுப்பானவையாக ஆக்குதல், அவற்றில் சோஷலிசப் பரஸ்பர உதவி மனப்பாங்கையும், கறாரான சூழலையும் தோற்றுவித்தல், தாம் உற்பத்தியின் உண்மையான எஜமானர்கள் என்ற உணர்வை உழைப்பாளிகளிடம் வளர்த்தல், சமுதாயத்தின் முன் தம் கடமைகளை நிறைவேற்றும் உயரிய பொறுப்புணர்வை உண்டாக்குதல் ஆகியவற்றின் மீது கட்சி விசேஷ கவனம் செலுத்துகிறது. உழைப்புக் கூட்டுகளைப் பற்றிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஜனநாயகக் கோட்பாடுகள், வரையளவுகளின் நடைமுறை நிறைவேற்ற முறையை அடிப்படை ரீதியில் மேம்படுத்த வேண்டும், எந்தப் பிரச்சினைகளின் விஷயத்தில் உழைப்புக் கூட்டுகளின் முடிவுகள் தீர்மானகரமானவையோ அப்பிரச்சினைகளின் பட்டியலை விரிவுபடுத்த வேண்டும், தொழிலாளர்கள், ஊழியர்களின் பொதுக் கூட்டங்களின் பங்கையும், அக்கூட்டங்களின் முடிவுகளை நிறைவேற்றுவதில் உள்ள பொறுப்பையும் உயர்த்த வேண்டும். தொழில் நிறுவனங்களில் உழைப்புக் கூட்டுகளின் கவுன்சில்களை (இவை இக்கூட்டுகளின் பொதுக் குழு கூட்டங்களுக்கு இடையில் செயல்படும்) தோற்றுவிக்கும் ஆலோசனையையும், தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் வழக்கத்தைப் படிப்படியாக விரிவுபடுத்தும் ஆலோசனையையும் காங்கிரஸ் ஆதரிக்கிறது. கூட்டுப் பண்ணை, கூட்டுறவு சுயநிர்வாகத்தின் ஜனநாயக அடிப்படைகளை வளர்ப்பது, கூட்டுறவு ஸ்தாபனங்களின் விதிமுறைகளைக் கறாராக பின்பற்றுவது ஆகியவற்றின் மீது கட்சி, அரசு உறுப்புகளுக்கு உள்ள அக்கறையை வலுப்படுத்துவது அவசியமாகும்.

நாட்டு வாழ்க்கையின் முக்கியப் பிரச்சினைகள் சம்பந்தமாக பொதுமக்களின் விவாதத்திற்கு ஏற்பாடு செய்வது, அவற்றின் மீது வாக்கெடுப்பு நடத்துவது, ஸ்தல சோவியத்துகளின் தீர்மான நகல்களை மக்களின் விவாதத்திற்கு விடுவது ஆகியவை தொடர்ந்து மேம்படுத்தப்பட வேண்டும், நேரடி ஜனநாயக வளர்ச்சியின் பிற வழிகளும் (குடிமக்களின் கூட்டங்கள், வாக்காளர்களின் ஆணைகள், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, உழைப்பாளிகளின் கடிதங்கள், பொதுமக்களின் கருத்துகளை வெளிப்படுத்தும் எல்லா முறைகளும்) மேலும் சிறப்பாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

அரசு உறுப்புகள், பிற உறுப்புகளின் நடவடிக்கையில் ஒளிவுமறைவின்மையை விரிவுபடுத்துவதற்கும், இந்த உறுப்புகள் எடுக்கும் முடிவுகள், அவற்றின் நிறைவேற்றம் பற்றி மக்களுக்கு அதிகமாக அறிவிப்பதற்கும் காங்கிரஸ் கோட்பாட்டு ரீதியான முக்கியத்துவமளிக்கிறது.

5. அரசு, சமூக வாழ்க்கையின் சட்ட அடிப்படையை இடையறாது வலுப்படுத்துவதற்கும், சட்டங்களைக் கறாராக பின்பற்றுவதற்கும், சோவியத் குடிமகனின் உரிமைகள், சுதந்திரங்களுக்கான உத்தரவாதத்தை உறுதிப்படுத்துவதற்கும் காங்கிரஸ் மிகப் பெரும் முக்கியத்துவமளிக்கிறது. சட்டங்களை நடைமுறையில் பயன்படுத்துவது, சட்ட ஒழுங்கையும், சோஷலிச சொத்துகளையும், சோவியத் மக்களின் சட்டபூர்வமான நலன்களையும் பேணிக் காப்பது ஆகியவற்றுடன் தொடர்புடைய சட்டப் பாதுகாப்பு உறுப்புகள், பிற உறுப்புகளிலுள்ள ஊழியர்களின் பொறுப்பை விடா முயற்சியோடு உயர்த்த வேண்டும்; பிராஸிகியூட்டர் மேற்பார்வையின் செயல்வன்மையையும் நீதிமன்றங்கள், வழக்குரைஞர்களின் பணியையும் உறுதியோடு உயர்த்த வேண்டும்; பொருளாதார உறவுகளில் சட்ட அம்சத்தையும், அரசு மற்றும் ஒப்பந்தக் கட்டுப்பாட்டையும் மேற்கொண்டு வலுப்படுத்துவதற்காக அரசு மத்தியஸ்துவ அமைப்பின் நடவடிக்கையை, சோவியத்துகளிலும் தொழில் நிறுவனங்களிலும் ஸ்தாபனங்களிலும் சட்ட துறையின் பணியை மேம்படுத்த வேண்டும். உயரிய சிவில் உணர்வைத் தோற்றுவிப்பதும்,

சோவியத் மக்களின், குறிப்பாக இளைஞர்களின் தார்மீக, சட்ட வளர்ப்பும் அவர்களுடைய சமூக, அரசியல் சுறுசுறுப்பை வளர்ப்பதிலும் குறைகள், சட்டமீறல்களின்பால் சகியாமையை ஏற்படுத்துவதிலும், சமுதாயத்தின், அரசின் நலன்களைக் கவனத்தோடு அணுகுவதிலும் செயல்முனைப்புள்ள வழிகளில் ஒன்றாகத் திகழ வேண்டும்.

6. சோவியத் ஒன்றியம், பிற சோஷலிச நாடுகளுக்கு எதிராக ஏகாதிபத்தியத்தின் சீர்குலைவு நாட்டங்கள் அதிகரித்து வரும் இன்றைய சூழ்நிலையில் அரசுப் பாதுகாப்பு உறுப்புகளின் பொறுப்பு கணிசமாக கூடுகிறது; இந்த உறுப்புகள் உயர்வான விழிப்புணர்வை வெளிப்படுத்த வேண்டும், நம்முடைய அரசு, சமூக அமைப்பைக் குலைக்கவோ, பலவீனப்படுத்தவோ செய்யப்படும் எந்த ஒரு முயற்சியையும் உரிய தருணத்தில் அம்பலப்படுத்தி, உறுதியோடு முறியடிக்க வேண்டும்.

கட்சி, அதன் மத்திய கமிட்டி, பொலிட் பீரோ ஆகியவற்றின் இடையறா கவனத்தின் பயனாய் சோவியத் ஒன்றியத்தின் தற்காப்பு வல்லமை, சோவியத் மக்களின் சமாதானமான, ஆக்கபூர்வமான உழைப்பிற்கு நம்பகரமான உத்தரவாதத்தை அளிக்கும் மட்டத்தில் பேணிக் காக்கப்படுவதைக் காங்கிரஸ் திருப்தியோடு குறிப்பிடுகிறது. இராணுவத்தின் தயார்நிலையை சகலவிதங்களிலும் உயர்த்துவதும், தரைப்படை மற்றும் கடற்படை வீரர்களை, எல்லா சோவியத் மக்களையும் சோஷலிசத்தின் மாபெரும் வெற்றிகளைப் பாதுகாக்க எப்போதும் தயாராக இருக்கும் விழிப்புணர்வு மனப்பாங்கில் வளர்ப்பதும் முன்போன்றே தொடர்ந்து கட்சி, அரசு, மக்களின் மிக முக்கியக் கடமைகளில் ஒன்றாகத் திகழ வேண்டும்....

## சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரசில் ஏற்கப்பட்ட கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பிலிருந்து

### முன்னுரை

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியையடுத்துப் பிறந்த சோவியத் நாடு மிகப் பெரும் புகழ் மிகு பாதையைக் கடந்து வந்துள்ளது. கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையின் கீழ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிகள் அடையப் பட்டுள்ளன. தொழிலாளி வர்க்கத்தின், எல்லா உழைப் பாளிகளின் நலன்களைத் தொடர்ச்சிகரமாக வெளிப்படுத்தி, மார்க்சிய-லெனினிய போதனையை வழிகாட்டியாகக் கொண்டு, புரட்சிகரப் போராட்டம் மற்றும் சோஷலிசக் கட்டுமானத்தின் வளம் மிகு அனுபவத்தைப் பெற்று, சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி சோவியத் மக்களை கம்யூனிசக் கட்டுமானம், சமாதானப் பாதையில் உறுதியோடு அழைத்துச் செல்கிறது.

சமுதாயத்தை சோஷலிச ரீதியில் மாற்றியமைப்பதைப் பற்றி கம்யூனிஸ்டுகளின் முதல் வேலைத்திட்ட ஆவணமாகிய கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் பிரகடனப்படுத்தப்பட்ட கருத்துகள், பாரிஸ் கம்யூன் வீரர்களின் என்றும் அழியா தியாகம், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின், ருஷ்யாவின் புரட்சிகர ஜனநாயக இயக்கத்தின் புரட்சிப் பாரம்பரியங் கள் ஆகியவற்றின் உரிய தொடர்ச்சியாகத்தான் கட்சி, அரசியல் அரங்கிற்கு வந்தது.

விஞ்ஞான கம்யூனிச ஆசான்களாகிய கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் வர்க்கப் போராட்டத்தின் வர லாற்று அனுபவம், மனிதகுல முற்போக்கு சிந்தனையின் சாதனைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சமு தாய வளர்ச்சியின் புறவய விதிகளைக் கண்டுபிடித்தனர், முத லாளித்துவம் தகர்ந்து விழுவது தவிர்க்க இயலாதது என் பதை தத்துவார்த்த ரீதியில் மெய்ப்பித்தனர், புதிய, கம் யூனிச சமுதாயத்தின் படைப்பாளி என்ற வகையில் பாட்

டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பணியை ஆதாரப்படுத்திக் கூறினர். ''உலகப் பாட்டாளிகளே, ஒன்றுசேருங்கள்!'' என்ற அவர்களுடைய உணர்ச்சி மிகு அறைகூவல் இன்றும் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டக் கோஷமாகத் திகழுகிறது.

மார்க்ஸ், எங்கெல்சின் இலட்சியத்தை மேதாவிலாசத்தோடு தொடர்ந்த விளதீமிர் இலியீச் லெனின் புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் அவர்களின் போதனையைப் பன்முக ரீதியில் வளர்த்தார், நவீன காலத்தின் அடிப்படை கேள்விகளுக்குப் பதிலளித்தார், தொழிலாளர் இயக்கத்திற்கு சோஷலிசப் புரட்சி மற்றும் சோஷலிசக் கட்டுமான தத்துவத்தை வழங்கினார், யுத்த மற்றும் சமாதானப் பிரச்சினைகளுக்கு ஒரு விஞ்ஞான கண்ணோட்டத்தை அளித்தார்.

மார்க்சிய-லெனினியம் என்பது ஒரு ஐக்கிய புரட்சிகரப் போதனையாகும். மாபெரும் லெனினால் தோற்றுவிக்கப்பட்ட கட்சி, விஞ்ஞான சோஷலிசத்திற்கும் தொழிலாளர் இயக்கத்திற்கும் இடையிலான இணைப்பின், தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் இடையிலான பிரிக்க இயலா ஒற்றுமையின் ஜீவ உருவாகியது. அது மார்க்சிய-லெனினிய கட்சியாக, புரட்சிகரமாகச் செயல்படும் கட்சியாகத்தான் இருந்து வந்துள்ளது, இருக்கிறது, இருக்கும்.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் தன் வேலைத்திட்டங்களில் விஞ்ஞான ரீதியில் ஆதாரப்படுத்தப்பட்ட கடமைகளைத்தான் நிறைவேற்றி வந்துள்ளது.

**1903**ஆம் ஆண்டு **2**ஆவது காங்கிரசில் முதல் வேலைத்திட்டத்தை ஏற்ற போல்ஷிவிக் கட்சி, ஜாரிச எதேச்சாதிகாரத்தையும், பின் முதலாளித்துவ அமைப்பையும் முறியடிக்கும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், ருஷ்யாவின் எல்லா உழைப்பாளிகளையும் வழிநடத்திச் சென்றது, மூன்று ருஷ்யப் புரட்சிகளின் சுவாலையைக் கடந்து வந்தது. **1917** அக்டோபரில் தொழிலாளி வர்க்கம் அரசியல் ஆட்சியைத் தன் கரங்களில் எடுத்துக் கொண்டது. வரலாற்றிலேயே முதன்முதலாக தொழிலாளர், விவசாயிகளின் அரசு தோன்றியது. புதிய உலகின் படைப்பு ஆரம்பமாகியது.

*1919ஆம் ஆண்டு 8ஆவது காங்கிரசில் இரண்டாவது வேலைத்திட்டத்தை ஏற்ற கட்சி, சோஷலிசக் கட்டுமான கடமையை முன்வைத்தது. இதுவரை யாரும் செல்லாத பாதையில் நடைபோட்டு, சொல்லிமாளா இடர்ப்பாடு களைக் கடந்து, முன்பின் காணா வீரத்தை வெளிப்படுத்திய சோவியத் மக்கள், வி.இ. லெனின் உருவாக்கிய சோஷலிச கட்டுமான திட்டத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமை யின் கீழ் நிறைவேற்றினர். நம் நாட்டில் சோஷலிசம் எதார்த்த மாகியது.*

*1961ஆம் ஆண்டு 22ஆவது காங்கிரசில் மூன்றாவது வேலைத்திட்டத்தை ஏற்ற கட்சி, கம்யூனிசக் கட்டுமானத் தின் எல்லா திசைகளிலும் பிரம்மாண்டமான பணியைத் துவக்கியது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலும், சமூக, பொருளாதார உறவுகள், சோஷலிச ஜனநாயகம், கலாசாரத் தின் வளர்ச்சியிலும், புதிய மனிதனை உருவாக்குவதிலும் சோவியத் சமுதாயம் கணிசமான வெற்றிகளை அடைந்துள் ளது. வளர்ச்சியடைந்த சோஷலிச கட்டத்தினுள் நாடு நுழைந்தது. ஏகாதிபத்திய ஒடுக்குமுறை, ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள் கைக்கு எதிராயும் சமாதானம், ஜனநாயகம், சமூக முன் னேற்றத்திற்காகவும் போராடும் மாபெரும் சக்தி என்ற வகையில் சோவியத் ஒன்றியத்தின் பங்கு வளர்ச்சியடைந்தது.*

*மூன்றாவது வேலைத்திட்டம் ஏற்கப்பட்ட பின் கடந்த காலகட்டம் அதில் அடங்கியுள்ள அடிப்படை தத்துவார்த்த மற்றும் அரசியல் கருத்துநிலைகள் சரியானவை என்று மெய்ப்பித்துள்ளது. அதே நேரத்தில், இதுவரை சேர்ந் துள்ள அனுபவமும், உள்நாட்டு வாழ்க்கையிலும் உலக அரங்கிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றிய பரிசீலனை யும், சோவியத் சமுதாயத்தின் வளர்ச்சி வாய்ப்புகளை யும், இறுதி இலட்சியமாகிய கம்யூனிசத்தை அடையும் வழி கள், முறைகளையும், புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் சர்வ தேச அரசியல் கடமைகளையும் துல்லியமாயும் திட்டவட்ட மாயும் வரையறுக்கும் வாய்ப்பை அளிக்கின்றன.*

**சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மூன்றாவது வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பு, சோஷலிசத்தைத் திட்டமிட்ட வகையில், பன்முக ரீதியில் மேம்படுத்தும் வேலைத்திட்டம், நாட்டின்**

சமூகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதன் மூலம் கம்யூனிசத்தை நோக்கி சோவியத் சமுதாயம் மேலும் நடை போடச் செய்யும் வேலைத்திட்டமாகும். இது சமாதானம், சமூக முன்னேற்றத்திற்கான போராட்ட வேலைத்திட்டமாகும்.

முதல் பகுதி

## முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நோக்கிய மாற்றம்— நவீன சகாப்தத்தின் அடிப்படைச் சாரம்

### 1. மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியும் சோவியத் ஒன்றியத்தில் சோஷலிசக் கட்டுமானமும்

சோஷலிசத்தை நோக்கிய மனிதகுலத்தின் வரலாற்றுத் திருப்புமுனை அக்டோபர் புரட்சியால் ஆரம்பித்து வைக்கப் பட்டது, இது சமுதாய வளர்ச்சியின் நியதியான விளை வாகும்.

முதலாளித்துவம் மனித வரலாற்றில் கடைசி சுரண் டலமைப்பாகும். உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குப் பல மான உந்து சக்தியை வழங்கிய இது பின்னர் சமூக முன் னேற்றப் பாதையில் ஒரு தடையாகியது.

முதலாளித்துவத்தின் வரலாறு என்பது அதன் அடிப் படை முரண்பாடு (உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் முத லாளித்துவத் தனியுடைமை சுவீகரிப்பு வடிவத்திற்கும் இடை யிலான முரண்பாடு) ஆழமடைந்த வரலாறு, தொழிலாளி வர்க்கமும் எல்லா உழைப்பாளிகளும் சுரண்டப்பட்டது வலுப் பட்டதைப் பற்றிய வரலாறு, உழைப்பிற்கும் மூலதனத்திற் கும், ஒடுக்குபவர்களுக்கும் ஒடுக்கப்படுபவர்களுக்கும் இடை யிலான போராட்டம் கூர்மையடைந்த வரலாறு, இது பொரு ளாதார நெருக்கடிகள், சமூக, அரசியல் அதிர்ச்சிகள், உழைப்பாளிகளுக்கு அளவிடற்கரிய சோதனைகளைக் கொண்டு வரும் ஆக்கிரமிப்பு யுத்தங்கள், மோதல்களின் வரலாறு.

மூலதனம் குவிக்கப்பட்டு, மையப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிப் போக்கானது 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வலிமை

யான ஏகபோக முதலாளித்துவக் கூட்டுகள் தோன்ற இட்டுச் சென்றது, இக்கூட்டுகள் பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் முக்கிய உந்துகோல்களைத் தம் கரங்களில் எடுத்துக்கொண்டன. முதலாளித்துவம் தன்னுடைய உயர்ந்த, இறுதியான கட்டமாகிய ஏகாதிபத்தியக் கட்டத்தினுள் நுழைந்தது. வி.இ. லெனினின் சொற்படி, ''ஏகாதிபத்திய முதலாளித்துவம், தேசிய இனங்களை மிகப் பெருமளவில் ஒடுக்குவதாக'', ஆக்கிரமிப்பு யுத்தங்களின் அடிப்படை மூல ஊற்றாக ஆகியது.

ஏகாதிபத்தியக் கட்டத்தில், முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை சோஷலிச உற்பத்தி உறவுகளால் மாற்றுவதற்கு அவசியமான பொருளாயதச் சூழ்நிலைகள் உருவாயின, வெற்றிகரமான சோஷலிசப் புரட்சிக்குத் தேவையான புற வய, அகவய முன்தேவைகள் முதிர்ச்சியடைகின்றன. பழைய சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைத்து, புதிய சமுதாயத்தைக் கட்டும் பணியை வரலாறு தொழிலாளி வர்க்கத்திற்கு அளித்துள்ளது. இப்பணியை நிறைவேற்றும் தொழிலாளி வர்க்கம் தன் வர்க்க நலன்களை மட்டுமின்றி எல்லா உழைப்பாளிகளின் நலன்களையும் வெளிப்படுத்துகிறது.

ஜாரிச ஒடுக்குமுறையாலும் பண்ணையடிமை முறையின் மிச்சசொச்சங்களாலும் ஆழமடைந்த ஏகாதிபத்திய முரண்பாடுகள் ருஷ்யாவில் அசாதாரணச் சக்தியுடன் வெளிப்பட்டன. சர்வதேச ஏகாதிபத்தியத்தின் மிகப் பலவீனமான அங்கமாக, அதன் முரண்பாடுகளின் முக்கிய இடமாக ருஷ்யா திகழ்ந்தது. உலகப் புரட்சிகர இயக்கத்தின் மையம் இங்கு தான் மாறியது. முதலாளி வர்க்கத்தின் உலக ஆதிக்க சங்கிலித் தொடரை முதன்முதலாக உடைக்கும் கடினமான, பொறுப்பு மிக்க கடமை ருஷ்யப் பாட்டாளிகளின் முன் நின்றது. புதிய வகையான கட்சியாகிய போராடும் திறனுள்ள பாட்டாளிகளின் புரட்சிகர ஸ்தாபனத்தின் தலைமையின் கீழ்தான் இதைச் செய்ய முடிந்தது.

போல்ஷிவிக் கட்சி தோற்றுவிக்கப்பட்டதானது ருஷ்ய மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்க வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்தது. இது சமுதாய வளர்ச்சியின் புறவயத் தேவை, பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் வெளிப்பாடாக,

வி.இ. லெனின், அவரை சுற்றி அணி திரட்டிய மார்க்சிஸ்டு களின் அயரா அரசியல், ஸ்தாபனப் பணி, விஞ்ஞானத் தொலைநோக்குப் பார்வையின் விளைபயனாக விளங்கியது. ''புரட்சியாளர்களின் ஸ்தாபனம் ஒன்றை எங்களுக்குத் தாருங்கள், நாங்கள் ருஷ்யாவை அடியோடு மாற்றிக் காட்டு கிறோம்'' என்ற லெனினின் அறைகூவல் தொழிலாளர்கள், முற்போக்கு ருஷ்ய மனிதர்கள், உழைக்கும் மக்களின் தலை சிறந்த பிரதிநிதிகளின் நெஞ்சங்களிலும் மனதிலும் பெரும் எதிரொலிப்பை ஏற்படுத்தியது. கட்சியின் சித்தாந்த, அர சியல், ஸ்தாபனக் கோட்பாடுகளையும் மக்கள் திரளினரின் மத்தியில் அது செயல்பட வேண்டிய முறைகளையும் வி.இ. லெனின் உருவாக்கினார். சீர்திருத்தவாதம், வலதுசாரி சந் தர்ப்பவாதம், வறட்டுத்தனம், இடதுசாரி அதிசாகசவாதம் ஆகியவற்றிற்கு எதிரான சமரசப்படுத்த இயலா சமர்களில் தான் புதிய வகையான கட்சி தோன்றி வலுப்பட்டது.

ஏகாதிபத்திய சகாப்தத்தின் முதல் வெகுஜன புரட்சி யாகிய **1905—1907**ஆம் ஆண்டுகளின் புரட்சி தொழிலாளி வர்க்கத்தின் பலத்தைக் காட்டியது, பாட்டாளி வர்க்கத் தின் எதிர்கால வெற்றிகளுக்குக் கட்டியம் கூறியது. **1917**ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடந்த பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி ஜாரிசத்தை அகற்றியது. ஆனால் இது சமூக, தேசிய இன ஒடுக்குமுறையிலிருந்தோ, ஏகாதிபத்திய யுத்தச் சுமைகளி லிருந்தோ மக்கள் திரளினரை விடுவிக்கவில்லை, ருஷ்ய சமுதாயத்தைப் பிளந்த முரண்பாடுகளுக்குத் தீர்வு காணவுமில்லை. சோஷலிசப் புரட்சி, காலத்தின் உடனடிக் கோரிக்கையாகியது.

ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் உயர்வான புரட்சி கரத் தன்மையையும் ஸ்தாபனக் கட்டுக்கோப்பையும் உடைய தாயிருந்தது. அரசியல் போராட்டங்களில் புடம்போட்டு எடுக்கப்பட்ட, முற்போக்கு புரட்சித் தத்துவத்தை உடைய போல்ஷிவிக் கட்சி அதற்குத் தலைமை தாங்கியது. ஏகாதி பத்தியச் சூழ்நிலையில் முதலில் ஒரு நாட்டில் அல்லது ஒரு சில நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெறும் வாய்ப்பைப் பற்றிய போதனையைத் தோற்றுவித்த லெனின் போராட்டத்தின் எதிர்காலம் பற்றிய தெட்டத்

தெளிவான கண்ணோட்டத்தைக் கட்சிக்கு அளித்தார்.

போல்ஷிவிக் கட்சியின் அறைகூவலுக்கிணங்க, அதன் தலைமையின் கீழ் தொழிலாளி வர்க்கம் மூலதனத்தின் ஆட்சிக்கெதிரான உறுதியான போராட்டத்தில் இறங்கியது. சோஷலிசத்திற்கான பாட்டாளிகளின் போராட்டம், நிலத்திற்கான விவசாயிகளின் போராட்டம், ருஷ்யாவிலிருந்த ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டம், ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எதிராயும், சமாதானத்திற்கு ஆதரவாயும் பொதுமக்கள் நடத்திய போர் ஆகியவற்றைக் கட்சி ஒரு மாபெரும் பெருக்காக இணைத்து அதை பூர்ஷ்வா அமைப்பை முறியடிப்பதை நோக்கி வழிநடத்திச் சென்றது.

**மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி உலக வரலாற்றின் திரும்புமுனையாகியது, உலக வளர்ச்சியின் பிரதான திசையமைவையும் முக்கியப் போக்குகளையும் நிர்ணயித்தது, முதலாளித்துவத்தைப் புதிய, கம்யூனிச சமுதாயப் பொருளாதார அமைப்பால் மாற்றும் திருப்ப இயலா நிகழ்ச்சிப் போக்கை ஆரம்பித்து வைத்தது.**

வரலாற்றிலேயே முதன்முதலாக பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசு தோன்றி நிலை பெற்றது. தொழிலாளி வர்க்கம் எல்லா உழைப்பாளிகளையும் தன்னைச் சுற்றி அணிதிரட்டி, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் மாறுகால கட்டத்தின் சிக்கலான கடமைகளை நிறைவேற்றுவதில், புதிய சமுதாயத்தின் அடிப்படைகளைத் தோற்றுவிப்பதில் இறங்கியது.

அரசியலாட்சியை வென்றது, உள்நாட்டு யுத்தத்தில் அடையப்பட்ட வெற்றி, அன்னிய இராணுவத் தலையீட்டை முறியடித்தது, நாட்டின் முன் தோன்றிய புதிய வாழ்க்கைக் கட்டுமானத்தின் வாய்ப்புகள் ஆகியவை உழைப்பாளிகளின் பெரும் சக்தியையும் புரட்சியாற்றலையும் தட்டியெழுப்பின. பொருளாதாரச் சீரழிவு, பூர்ஷ்வா எதிர்ப்புரட்சி சதிகள், சீர்குலைவு நடவடிக்கைகள், நாட்டின் தொழில்நுட்ப, பொருளாதார, கலாசார பின்தங்கிய நிலை ஆகியவற்றால் ஏற்பட்ட சோதனைகளையும் இடர்ப்பாடுகளையும் அவர்கள் அகற்றினர். மாறுகாலகட்டத்தில் நடந்த வர்க்கப் போராட்டம் அவ்வப்போது கடும் மோதல்களின் தன்மை

யைப் பெற்றது. சோவியத் நாடு, பகைமையுணர்வுள்ள முதலாளித்துவ வளையத்தின் கடும் தாக்குதல்களுக்கும் ஏராளமான இராணுவ, அரசியல் ஆத்திரமூட்டல்களுக்கும் ஆளாகியது.

மக்கள் திரளினரின் உற்சாகத்தை அடிப்படையாகக் கொண்டு, வலதுசாரி மற்றும் ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதிகளின் தாக்குதல்களை முறியடித்து, தன்னுடைய சித்தாந்த, அரசியல், ஸ்தாபன ஒற்றுமையை வலுப்படுத்திய கட்சி, சோஷலிசக் கட்டுமானம் பற்றிய லெனினிய பிரதான கொள்கையைச் சற்றும் வழுவாமல் பின்பற்றியது.

அடிப்படை உற்பத்திச் சாதனங்கள் மக்களின் கரங்களுக்கு வந்தன. நிலம், ஆலைகள், தொழிற்சாலைகள், வங்கிகள் ஆகியவற்றை தேசியமயப்படுத்தியதானது பொது சோஷலிச சொத்துடைமை நிலைபெற்று வளரவும் திட்டமிட்ட பொருளாதார முறையை ஏற்பாடு செய்யவும் அவசியமான முன்தேவைகளைத் தோற்றுவித்தது. நாட்டை தொழிற்துறைமயப்படுத்தியதானது சோவியத் ஒன்றியத்தை ஒரு வலிமையான தொழிற்துறை வல்லரசாக்கியது. விவசாயத் துறையைக் கூட்டுறவுமயப்படுத்தியதானது பொருளாதார உறவுகளில், விவசாயிகளின் வாழ்க்கை அமைப்பு முழுவதிலும் ஒரு ஆழ்ந்த திருப்புமுனையாகியது. தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டிற்கு ஒரு உறுதியான சமூகப் பொருளாதார அடித்தளமிடப்பட்டது. கலாசாரப் புரட்சியின் பயனாய் எழுத்தறிவின்மை ஒழித்துக் கட்டப்பட்டது, படைப்பாற்றல் சக்திகளின் வளர்ச்சிக்கும், உழைப்பாளியின் ஆன்மீக மலர்ச்சிக்கும் பரவலான வாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டன, சோஷலிச அறிவுத்துறையினர் உருவாகினர். சோவியத் மக்களின் உணர்வில் மார்க்சிய-லெனினிய சித்தாந்தம் ஆதிக்கம் செலுத்தத் துவங்கியது.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டது சோஷலிசத்தின் மாபெரும் சாதனையாகும். அக்டோபர் புரட்சியின் வெற்றி தேசிய இன ஒடுக்குமுறைக்கும் மக்களினங்கள், தேசிய இனங்களின் சமமின்மைக்கும் என்றென்றைக்குமாக முடிவு கட்டியது. சுயேச்சையான, சம உரிமையுள்ள மக்களினங்கள் தாமாகவே முன்வந்து, ஒரு ஐக்கிய பல்தேசிய அரசாக

—சோவியத் ஒன்றியமாக—இணைந்தது பெரும் பங்காற்றியது. சோஷலிசக் கட்டுமானப் போக்கில் முன்னாள் தேசிய இன எல்லைப்புறங்களின் விரைவான பொருளாதார, சமூக, கலாசார முன்னேற்றத்திற்கு வகை செய்யப்பட்டது. தேசிய இனப் பகைமை மறைந்தது, சோவியத் ஒன்றியத்திலுள்ள எல்லா மக்களினங்களின் சோதர நட்புறவு, நெருக்கமான ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகியவை வாழ்க்கையின் வரையளவுகளாயின.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமூக மாற்றங்கள் நடைபெற்றுள்ளன என்று இவை காட்டின; ஆண்டாண்டுக் காலமாக ஆதிக்கம் செலுத்திய தனியுடைமை என்றென்றைக்குமாக ஒழித்துக் கட்டப்பட்டது, மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு முடிவு கட்டப்பட்டது. தொழிலாளி வர்க்கம், கூட்டுப் பண்ணை விவசாயிகள், மக்கள் அறிவுத்துறையினர், எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைப்பாளிகள் ஆகியோரின் பொது நலன்களின் அடிப்படையில் சோவியத் சமுதாயத்தின் சமூக, அரசியல், சித்தாந்த ஒற்றுமை உருவாகியது. உழைப்பாளி நாட்டின் முழு எஜமானன் ஆனான். சோவியத் ஒன்றியத்தில் சோஷலிச சமுதாயம் பெரும்பாலும் கட்டப்பட்டது.

மாபெரும் தேசபக்த யுத்தம் புதிய அமைப்பிற்கு ஒரு கடும் சோதனையாகியது. கட்சியைச் சுற்றி அணிதிரண்டு, ஈடு இணையற்ற வீரத்தை வெளிப்படுத்திய சோவியத் மக்களும் இராணுவமும் உலக ஏகாதிபத்தியப் பிற்போக்கின் முக்கிய சக்தியாகிய ஜெர்மன் பாசிசத்தைப் படுதோல்வியடையச் செய்தனர். தன் வெற்றியின் மூலம் சோவியத் ஒன்றியம் ஐரோப்பிய மக்களை நாஜி அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதிலும், உலக நாகரிகத்தைக் காப்பாற்றுவதிலும் தீர்மானகரமான பங்காற்றியது. பாசிச ஜெர்மனியும் இராணுவ வெறி கொண்ட ஜப்பானும் முறியடிக்கப்பட்டதானது, சமாதானம், ஜனநாயகம், தேசிய விடுதலை, சோஷலிசத்திற்கான மக்களினங்களின் போராட்டத்திற்குப் புதிய வாய்ப்புகளைத் திறந்து விட்டது. சோவியத் மக்களின் வெற்றி சோவியத் அரசின் சர்வதேச செல்வாக்கைப் பெரிதும் உயர்த்தியது.

குறுகிய காலகட்டத்தில் சோவியத் ஒன்றியம் கடும் யுத்தக் காயங்களைக் குணப்படுத்தியது, தன் பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப, தற்காப்பு உள்ளாற்றலைக் கணிசமாக வலுப்படுத்தியது, சர்வதேச நிலைகளை ஸ்திரப் படுத்தியது. **நம் நாட்டில் சோஷலிசம் முழுமையாகவும் இறுதியாகவும் வெற்றி பெற்றது.**

அடையப்பட்ட சாதனைகளின் அடிப்படையில் சோவியத் சமுதாயம் பொருளாதார, சமூக, அரசியல், ஆன்மீக வளர்ச்சியில் உறுதியோடு நடைபோட்டது. ஒரு ஐக்கிய தேசியப் பொருளாதாரம் நாட்டில் உருவாகியது. நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் பெரும் பிரதேசங்கள் மீட்கப்பட்டன, இயற்கையைப் பயன்படுத்துவது மேம்படுத்தப்பட்டது. தேசிய வருமானமும் சமூக உழைப்பின் உற்பத்தித் திறனும் கணிசமாக அதிகரித்தன. மக்களின் வாழ்க்கைத் தரம் கணிசமாக உயர்ந்தது, பிரம்மாண்டமான வீடு கட்டுமானத் திட்டம் நிறைவேற்றப்பட்டது, மக்களின் ஆன்மீகச் செல்வம் பெருகியது, பொது செகண்டரி கல்வி முறை அமல்படுத்தப்பட்டது, சோவியத் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மகத்தான வெற்றிகளை அடைந்தன. சோவியத் நாட்டில் முதல் அணு மின்நிலையமும், அணுச் சக்தியால் இயங்கும் முதல் பனி உடைப்பு கப்பலும் கட்டப்பட்டன, உலகின் முதல் செயற்கைக் கோள் ஏவப்பட்டது, முதன்முதலில் மனிதனுடன் கூடிய விண்கப்பல் விண்வெளிக்குச் செலுத்தப் பட்டது.

சோஷலிச சமூக உறவுகள் வலுப்பட்டன. புதிய சமுதாய, சர்வதேசிய பொது கூட்டு என்ற வகையில் சோவியத் மக்கள் உருவாயினர். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசு பொதுமக்கள் சோஷலிச அரசாக மலர்ந்தது.

போல்ஷிவிக் கோட்பாட்டு மனப்பாங்கு, சுய விமர்சனம் ஆகியவற்றை வெளிப்படுத்தி, மக்கள் திரளினரின் ஆதரவை அடிப்படையாகக் கொண்ட கட்சி, தனிநபர் வழிபாட்டாலும் லெனினிய கட்சி, அரசுத் தலைமையின் வரையளவுகளிலிருந்து பிறழ்ந்ததாலும் ஏற்பட்ட பின்விளைவுகளை அகற்றவும், அகவய ரீதியான, தன்னிச்சைப் போக்கான தவறுகளைத் திருத்தவும் பெரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. சோவியத் ஜனநாயகம் மேற்கொண்டு வளர்ச்சியடைந்

தது, சோஷலிச சட்ட முறை வலுப்பட்டது.

சோவியத் மக்களின் அயரா உழைப்பும், பொருளாதாரம், சமூகநலத் துறை, அரசியல், விஞ்ஞானம், கலாசாரத்தில் அடையப்பட்ட பெரும் வெற்றிகளும் நம் நாட்டை, வளர்ச்சியடைந்த சோஷலிசக் கட்டத்தை ஆரம்பித்து வைத்த புதிய வரலாற்று எல்லைகளுக்கு இட்டுச் சென்றன.

சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் இடையிலும், வார்சா ஒப்பந்த ஸ்தாபனத்திற்கும் நேட்டோவிற்கும் இடையிலும் இராணுவப் போர்த்தந்திர சமன்நிலையை ஏற்படுத்தியதானது சோஷலிசத்தின் வரலாற்றுச் சாதனையாகியது. அது சோவியத் ஒன்றியம், சோஷலிச நாடுகள், எல்லா முற்போக்கு சக்திகளின் நிலைகளை வலுப்படுத்தியது, உலக அணு ஆயுத யுத்தத்தில் வெற்றி பெறலாம் என்ற ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு வட்டங்களின் கணிப்புகளைத் தவிடு பொடியாக்கியது. இச்சமன்நிலையைப் பேணிக் காப்பதுதான் சமாதானத்தையும் சர்வதேசப் பாதுகாப்பையும் ஏற்படுத்தும் முக்கியக் காரணியாகும்.

மனிதகுலத்தின் முன்னேற்றத்தில் முதலாளித்துவத்தை விஞ்சி நிற்கக் கூடிய கட்டம் என்ற வகையில் புதிய சமுதாயத்தின் சந்தேகத்திற்கிடமற்ற சமூக, பொருளாதார, அரசியல், சித்தாந்த, தார்மீக மேம்பாடுகளை சோவியத் ஒன்றியம், பிற சோஷலிச நாடுகளின் அனுபவம் ஆணித்தரமாக மெய்ப்பிக்கிறது, பூர்ஷ்வா சமுதாய அமைப்பால் பதில் சொல்ல இயலா கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது.

சோஷலிசம் என்பது ''எல்லாம் மனிதனின் பேரால், எல்லாம் மனித நன்மைக்காக'' என்று பொறிக்கப்பட்ட பதாகையைக் கொண்டுள்ள சமுதாயமாகும். இச்சமுதாயத்தில்:

—உற்பத்திச் சாதனங்கள் மக்களின் கரங்களில் உள்ளன, இங்கே மனிதனை மனிதன் சுரண்டுவது, சமூக ஒடுக்குமுறை, சலுகை படைத்த சிறுபான்மையினரின் ஆட்சி, கோடானு கோடி மக்களின் வறுமை, கல்வியறிவின்மைக்கு என்றென்றைக்குமாக முடிவு கட்டப்பட்டு விட்டது;

—உற்பத்திச் சக்திகளின் சீரிசைவான, திட்டமிட்ட வளர்ச்சிக்குப் பரவலான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்

ளன, இங்கே விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்தவில்லை, மாறாக மக்கள் அனைவரின் வாழ்க்கைத் தரத்தை இடையறாமல் உயர்த்துகிறது;

—உழைப்பிற்கான சம உரிமையும், ''திறமைக்கேற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம்'' என்ற கோட்பாட்டின் படியான ஊதியமும் வழங்கப்பட்டுள்ளன, இலவச மருத்துவ உதவி, கல்வி, குறைந்தபட்ச வாடகையில் வீடு போன்ற வசதிகள் மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன;

—தொழிலாளி வர்க்கம், கூட்டுப் பண்ணை விவசாயிகள், அறிவுத்துறையினரிடையே பிரிக்க இயலாத கூட்டு நிலை பெற்றுள்ளது, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமைகளும் அவற்றின் நிறைவேற்றத்திற்கான சம உத்தரவாதமும் அளிக்கப்பட்டுள்ளன, நாளைய தினத்தை நோக்கிய நம்பகரமான பாதை இளைஞர்களின் முன் திறந்து விடப்பட்டுள்ளது, உழைப்பு முதுவர்களுக்கு சமூக வசதி உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது;

—தேசிய இன சமமின்மை அகற்றப்பட்டு விட்டது, எல்லா மக்களினங்கள், தேசிய இனங்களுக்கும் இடையில் சட்ட ரீதியிலும் நடைமுறையிலும் சமத்துவமும் நட்புறவும் சகோதரத்துவமும் நிலைநாட்டப்பட்டுள்ளன;

—உண்மையான ஜனநாயகம்—மக்களுக்காக, மக்களாலேயே நிறைவேற்றப்படும் ஆட்சி நிலைநாட்டப்பட்டு, வளர்ச்சியடைந்து வருகிறது, உற்பத்தி, சமூக, அரசுக் காரியங்களின் நிர்வாகத்தில் குடிமக்களின் பரவலான, முழுமையான பங்கேற்பிற்கு வழி கோலப்பட்டுள்ளது;

—சுதந்திரம், மானுட உரிமைகள், தனி மனித மேன்மை ஆகிய கருத்துகள் உண்மையான சாரத்தைப் பெற்றன, உரிமைகளோடு கூட கடமைகளும் சுட்டிக்காட்டப்பட்டன, எல்லோருக்கும் சரி, ஒவ்வொருவருக்கும் சரி ஒரே சட்டங்களும் தார்மீக வரையளவுகளும் கட்டுப்பாடும்தான் நிலவுகின்றன, தனிநபரின் பன்முக வளர்ச்சிக்கான மேன்மேலும் அனுகூலமான சூழ்நிலைகள் உருவாகின்றன;

—உண்மையான மனிதாபிமானத் தன்மையுள்ள மார்க்சிய-லெனினிய சித்தாந்தம் கோலோச்சுகிறது, சகலவித

ஞானத்தின் மூல ஊற்றுகளும் மக்கள் திரளினரின் முன் திறந்து விடப்பட்டுள்ளன, உலக கலாசாரத்தின் தலைசிறந்த அம்சங்களைத் தன்னுள் அடக்கிய முற்போக்கு சோஷலிச கலாசாரம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது;

—சமூக நீதி, கூட்டு மனப்பாங்கு, தோழமை ரீதியான பரஸ்பர உதவி ஆகியவற்றின் அடிப்படையிலான சோஷலிச வாழ்க்கை முறை உருவாகியது; இது உழைப்பாளிக்கு நாளைய தினத்தில் நம்பிக்கையை அளித்தது, புதிய சமூக உறவுகளை, சொந்த விதியைப் படைப்பவனாக அவனை ஆன்மீக, தார்மீக ரீதியில் உயர்த்தியது.

சோஷலிச சமுதாயத்தின் எண்ணங்களும் செயல்களும் சர்வதேச அரங்கில் சுதந்திரம், சமூக முன்னேற்றத்தின் பாலான மக்களினங்களின் நாட்டத்தை ஆதரிக்கின்றன, உலக அமைதியைப் பேணிக் காத்து வலுப்படுத்துவதுதான் இவற்றின் முக்கிய நோக்கமாகும்.

வரலாற்று வளர்ச்சியின் புதிய கட்டத்தில், சோஷலிச சமுதாயத்தைப் பன்முக ரீதியில் மேம்படுத்துவது, கம்யூனிசத்தை நோக்கி நடைபோடும் பொருட்டு அதன் வாய்ப்புகளையும் மேம்பாடுகளையும் மேன்மேலும் முழுமையாகவும் செயல்வன்மையோடும் பயன்படுத்தல் ஆகிய கடமைகள் நம் கட்சியின் முன், சோவியத் மக்களின் முன் தோன்றின....

## இரண்டாவது பகுதி

# சோஷலிசத்தை மேம்படுத்தி கம்யூனிசத்தை நோக்கிப் படிப்படியாகச் செல்லும் பாதையில் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கடமைகள்

### 1. சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிச எதிர்காலமும் சமூகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியமும்

நம் நாட்டில் கம்யூனிசத்தைக் கட்டுவதுதான் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் இலட்சியமாகும். சோஷ

லிசமும் கம்யூனிசமும் ஒரே கம்யூனிச அமைப்பின் இரண்டு தொடர்ச்சியான கட்டங்களாகும். இவையிரண்டிற்கும் இடையில் தடைச் சுவர்கள் கிடையாது: சோஷலிசத்தின் வளர்ச்சி, அதன் வாய்ப்புகள், மேம்பாடுகளை மேன்மேலும் முழுமையாக வெளிப்படுத்தி பயன்படுத்துவது, அதற்கு உரித்தான பொதுக் கம்யூனிச அடிப்படைகளை வலுப்படுத்து வது ஆகியவை கம்யூனிசத்தை நோக்கிய உண்மையான இயக்கத்தைக் குறிக்கின்றன.

கம்யூனிசம் என்பது உற்பத்திச் சாதனங்களின் மீது ஐக்கிய பொதுச் சொத்துடைமை நிலவும் வர்க்கங்களற்ற சமுதாய அமைப்பாகும், இங்கே எல்லா உறுப்பினர்களின் முழு சமூக சமத்துவம் நிலவும், இங்கே மனிதர்களின் பன்முக வளர்ச்சி யோடு கூட இடையறாமல் வளர்ந்து வரும் விஞ்ஞானம், தொழில் நுட்பத்தின் அடிப்படையில் உற்பத்திச் சக்திகளும் வளரும், சமு தாயச் செல்வத்தின் எல்லா மூல ஊற்றுகளும் முழுப் பெருக் காக மாறி, ''திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி'' என்ற மாபெரும் கோட்பாடு நிறைவேற்றப்படும். கம்யூனிசம் என் பது சுதந்திரமான, சுய உணர்வுள்ள உழைப்பாளிகளின் உயர்வாக ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாயமாகும், இதில் சமூக சுயநிர்வாகம் கோலோச்சும், இங்கே சமுதாய நலனுக்காக உழைப்பதென்பது எல்லோருக்கும் முதல் ஜீவாதாரத் தேவையாக, உணரப்பட்ட அவசியமாக மாறும், ஒவ்வொருவரின் திறமைகளும் எல்லா மக்களுக்கும் அதிகபட்ச அனுகூலத்தோடு பயன்படுத்தப்படும்.

கம்யூனிசத்தின் பொருளாயத தொழில்நுட்ப அடித் தளம், சமுதாயம் மற்றும் தனிநபரின் விவேகமான தேவை களை முழுமையாக பூர்த்தி செய்ய அவசியமான உற்பத்திச் சக்திகளைத் தோற்றுவிப்பதை முன்னனுமானிக்கிறது. கம் யூனிசத்தில் உற்பத்தி நடவடிக்கை முழுவதும் உயர் செயல் வன்மையுள்ள தொழில்நுட்பம், தொழில்முறைகளைப் பயன்படுத்துவதன் அடிப்படையில் அமைந்திருக்கும், மனி தனுக்கும் இயற்கைக்கும் இடையில் சீரிசைவான பரஸ்பரச் செயலாக்கம் நிலவும்.

கம்யூனிச சமுதாய அமைப்பின் உயர் கட்டத்தில் உழைப்பு மற்றும் உற்பத்தியின் நேரடியான சமூகத் தன்மை முழுமையாக நிலைபெறும். பழைய உழைப்புப் பிரிவினை

யின் மிச்சசொச்சங்கள், அவற்றுடன் தொடர்புடைய கணிச மான சமூக வேறுபாடுகள் ஆகியவை இறுதியாக அகற்றப் படுவதையடுத்து, சமூக ரீதியில் ஒரே மாதிரியான சமுதாயம் உருவாகும் நிகழ்ச்சிப் போக்கு முழுமையடையும்.

கம்யூனிசத்தில் மக்களின் சோஷலிச சுயநிர்வாக முறை, சோஷலிச ஜனநாயகம் உயர்வான சமுதாய ஒழுங்கமைப்பு வடிவமாக—கம்யூனிச சமுதாய சுயநிர்வாகமாக மாறும். அவசியமான சமூகப் பொருளாதார, சித்தாந்த முன்தேவை கள் உருவாக உருவாக, மக்கள் அனைவரும் நிர்வாகத்தில் ஈடுபட ஈடுபட, உரிய சர்வதேச நிபந்தனைகள் நிலவும் பொழுது, வி. இ. லெனின் குறிப்பிட்டபடி சோஷலிச அரசு என்பது ‘‘அரசிலிருந்து அரசு அல்லாததை நோக்கிய’’ மாறு கால வடிவமாக மேன்மேலும் மாறும். அரசு உறுப்புகளின் நடவடிக்கை அரசியலற்ற தன்மையைப் பெறும். ஒரு விசேஷ அரசியல் நிறுவனம் என்ற வகையில் அரசின் தேவை படிப் படியாக மறையும்.

சமுதாய உறுப்பினர்களின் உயர்வான உணர்வு மட்டம், சமூக நடவடிக்கை, கட்டுப்பாடு, சுயகட்டுப்பாடு ஆகியவை கம்யூனிச வாழ்க்கை முறையின் பிரிக்க இயலா அங்கமாகும்; இங்கே கம்யூனிச வாழ்க்கையின் ஐக்கியப் பொது விதிமுறை களைப் பின்பற்றி நடப்பதென்பது ஒவ்வொரு நபரின் உள் தேவையாக, பழக்கமாக மாறும்.

கம்யூனிச சமுதாய அமைப்பில் ஒவ்வொருவரின் சுதந் திர வளர்ச்சி, அனைவரின் சுதந்திர வளர்ச்சிக்கான நிபந் தனையாகும்.

முழுமையான கம்யூனிசத்தின் அம்சங்களை விரிவாக முன்னறிவிப்பது சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் இலட்சியம் அல்ல. அதை நோக்கிச் செல்லச் செல்ல, கம்யூ னிசக் கட்டுமான அனுபவம் சேரச் சேர புதிய சமுதாயத் தின் உயர்கட்டத்தைப் பற்றிய விஞ்ஞான கருத்துகள் செழு மைப்படுத்தப்பட்டு திட்டவட்டமாக்கப்படும்.

சோஷலிசம் கம்யூனிசமாக வளர்ச்சியடைவதானது சமு தாய வளர்ச்சியின் புறவய விதிகளால் நிர்ணயிக்கப்படு கிறது, இவ்விதிகளைக் கவனத்தில் கொள்ளாமலிருக்க முடி யாது. அவசரப்பட்டு முன்னுக்குச் செல்ல செய்யப்படும்

எந்த ஒரு முயற்சியும், சமுதாயத்தின் பொருளாயத, ஆன்மீக முதிர்ச்சி மட்டத்தைக் கவனத்தில் கொள்ளாமல் கம்யூனிசக் கோட்பாடுகளைப் புகுத்துவதும் அனுபவம் காட்டும்படி தோல்வியடையும், பொருளாதார, அரசியல் இழப்புகளை ஏற்படுத்தக் கூடும்.

அதே நேரத்தில், முதிர்ச்சியடைந்த மாற்றங்களைச் செய்வதிலும், புதிய கடமைகளின் நிறைவேற்றத்திலும் தாமதம் கூடாது என்று கட்சி கருதுகிறது. 1970ஆம் ஆண்டுகளிலும் 1980ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் நாட்டின் வளர்ச்சியில் அடையப்பட்ட சந்தேகத்திற்கிடமற்ற வெற்றிகளோடு கூட குறிப்பிட்ட தீய போக்குகளும் இடர்ப்பாடுகளுமிருந்தன என்பதைக் கட்சி கவனத்தில் கொள்கிறது. பொருளாதார நிலவரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் உரிய தருணத்தில், உரிய முறையில் மதிப்பிடப்படவில்லை, வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் ஆழ்ந்த மாற்றங்களின் அவசியம் உணரப்படவில்லை, இவற்றின் நிறைவேற்றத்தில் உரிய உறுதி காட்டப்படவில்லை ஆகியவற்றுடன் இவை கணிசமான அளவிற்குத் தொடர்புடையவையாகும். இது சோஷலிச அமைப்பின் வாய்ப்புகள், மேம்பாடுகளை அதிக முழுமையாகப் பயன்படுத்த இடையூறாயிருந்தது, முன்னோக்கிய இயக்கத்தைக் கட்டுப்படுத்தியது.

இன்றைய உள்நாட்டு, வெளிநாட்டுச் சூழ்நிலைகளில், சோவியத் சமுதாயத்தின் பன்முக முன்னேற்றம், கம்யூனிசத்தை நோக்கிய அதன் சீரான இயக்கம், நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் வழிகளில் அடையப்பட முடியும், அடைந்தாக வேண்டும் என்று கட்சி கருதுகிறது. இதுதான் சோவியத் சமுதாய வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் குணாம்ச ரீதியில் மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்ட கட்சியின் நீண்டகாலக் கொள்கையாகும். விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சிச் சாதனைகளின் அடிப்படையில் நாட்டின் பொருளாயத, தொழில்நுட்ப அடித்தளத்தை அடியோடு புதுப்பிப்பது; சமூக உறவுகளை, முதலாவதாகப் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது; உழைப்பின் சாரம், தன்மையிலும், மக்களுடைய பொருளாயத, ஆன்மீக வாழ்க்கை சூழ்நிலைகளிலும் ஆழ்ந்த

மாற்றங்கள்; அரசியல், சமூகநல, சித்தாந்த நிறுவனங்களின் முறை முழுவதையும் முடுக்கி விடுதல் ஆகியவை இக்கொள் கையில் அடங்கும்.

திட்டமிட்ட கடமைகளின் வெற்றிகரமான நிறை வேற்றத்தைக் கட்சி, மானுட காரணியின் பங்கை அதிகரிப்பதுடன் தொடர்புபடுத்துகிறது. வாழ்க்கையின் எல்லா துறைகளி லும் மக்கள் திரளினரின் ஆக்கபூர்வமான நடவடிக்கைக் கான புதிய வழிகளைக் கண்டுபிடிக்காமல் சோஷலிச சமு தாயத்தால் செயல்வன்மையோடு இயங்க முடியாது. வர லாற்று இலட்சியங்கள் எவ்வளவுக்கெவ்வளவு பெரிய வையோ, அவற்றை அடைவதில் கோடானு கோடி மக்களின் எஜமான ரீதியிலான, பொறுப்புள்ள, உணர்வு பூர்வமான, தீவிரப் பங்கேற்பு அவ்வளவுக்கவ்வளவு முக்கியமானது.

சமூகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்து வதன் அடிப்படையில் சோவியத் சமுதாயம் புதிய எல்லை களை அடைய வேண்டும். இதற்குப் பொருள் பின்வருமாறு:

பொருளாதாரத் துறையில்—தேசியப் பொருளாதாரத் தைக் கோட்பாட்டு ரீதியில் புதிய விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார, ஒழுங்கமைப்பு மட்டத்திற்கு உயர்த்தி, அதைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்ற வேண்டும்; சமூக உழைப்பின் உற்பத்தித் திறனிலும், பொருட்களின் தரத் திலும், உற்பத்தியின் செயல்வன்மையிலும் உயர்வான உலக மட்டத்தை அடைய வேண்டும்; நாட்டின் ஐக்கிய தேசியப் பொருளாதார இணையத்திற்கு சாலச்சிறந்த கட்டமைவை யும் சீரிசைவையும் வழங்க வேண்டும்; உழைப்பையும் உற் பத்தியையும் சமூகமயப்படுத்துவதைக் கணிசமாக உயர்த்த வேண்டும்; கூட்டுப் பண்ணை, கூட்டுறவுச் சொத்தும் பொதுச் சொத்தும் நெருங்கி வந்து, எதிர்காலத்தில் அவை ஒன்று கலக்க வேண்டும்.

சமூகநலத் துறையில்—உழைப்பிற்கேற்ற வினியோகம் என்ற சோஷலிசக் கோட்பாட்டைத் தொடர்ச்சியாக நிறை வேற்றி, மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் குணாம்ச ரீதியில் புதிய மட்டத்திற்கு உயர்த்த வேண்டும்; பெரும்பாலும் வர்க்கங்களற்ற சமுதாயக் கட்டமைவைத் தோற்றுவிக்க வேண்டும், நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான கணி சமான சமூக, பொருளாதார, கலாசார, அன்றாட வாழ்க்கை

வேறுபாடுகளை அகற்ற வேண்டும்; உற்பத்தி நடவடிக்கையில் மூளையுழைப்பையும் உடலுழைப்பையும் மேன்மேலும் அங்கக ரீதியில் இணைக்க வேண்டும்; சமூக ரீதியிலும் சர்வதேசிய ரீதியிலும் பொது கூட்டு என்ற வகையில் சோவியத் மக்களின் ஒற்றுமை மேன்மேலும் பெருக வேண்டும்; மக்கள் திரளினரின் ஆக்கபூர்வமான ஆற்றலும் முன்முயற்சியும் உயர்வான மட்டத்தில் இருக்க வேண்டும்.

**அரசியல் துறையில்**—அரசு மற்றும் சமூக காரியங்களின் நிர்வகிப்பில் குடிமக்களை மேன்மேலும் முழுமையாக ஈடுபடுத்துவதன் மூலமும், தேர்தல் முறையை மேம்படுத்துவதன் மூலமும், தேர்ந்தெடுக்கப்படும் மக்களாட்சி உறுப்புகளின் நடவடிக்கையைச் சிறப்பாக்குவதன் மூலமும், தொழிற் சங்கங்கள், கம்சமோல், உழைப்பாளிகளின் இதர வெகுஜன ஸ்தாபனங்களின் பங்கை அதிகரிப்பதன் மூலமும், பிரதிநிதித்துவ மற்றும் நேரடி ஜனநாயகத்தின் எல்லா வடிவங்களையும் செயல்வன்மையோடு பயன்படுத்துவதன் மூலமும் மக்களின் சோஷலிச சுயநிர்வாகத்தை வளர்க்க வேண்டும்.

**ஆன்மீக வாழ்க்கைத் துறையில்**—சோவியத் மக்களின் உணர்வில் சோஷலிச சித்தாந்தம் மேற்கொண்டு வலுவடைதல்; சோஷலிச தார்மீகக் கோட்பாடுகளும், கூட்டுமனப்பாங்கும், தோழமை ரீதியான பரஸ்பர உதவியும் முழுமையாக நிலைபெறுதல்; பரவலான மக்கள் திரளினர் விஞ்ஞான சாதனைகளையும், கலாசார மதிப்புகளையும் நாடுதல்; பன்முக ரீதியில் வளர்ச்சியடைந்த தனிநபர் உருவாதல்.

இம்மாற்றங்களின் பயனாய் குணாம்ச ரீதியில் புதியதொரு நிலை சோவியத் சமுதாயத்தில் உருவாகும், இது வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் சோஷலிசத்தின் மிகப் பெரும் மேம்பாடுகளை முழுமையாக வெளிப்படுத்தும். இதன் மூலம் உயரிய கட்டமான கம்யூனிசத்தை நோக்கிய பாதையில் ஒரு வரலாற்று அடி முன்னெடுத்து வைக்கப்படும். கட்சி தன் அரசியலை, நீண்டகால பொருளாதார, சமூகக் கொள்கையை, ஸ்தாபன அமைப்பு மற்றும் சித்தாந்தப் பணியின் கடமைகளை எப்போதும் கம்யூனிச எதிர்காலத்தோடு இணைத்துப் பார்க்கிறது....

### 3. கட்சியின் சமூகக் கொள்கை

சமூகக் கொள்கையை, நாட்டின் வளர்ச்சியைத் துரிதப் படுத்துவது, மக்கள் திரளினரின் உழைப்பு மற்றும் சமூக, அரசியல் நடவடிக்கையை எழுச்சியுறச் செய்வது, புதிய மனிதனை உருவாக்குவது, சோஷலிச வாழ்க்கை முறையை நிலைநாட்டுவது ஆகியவற்றிற்கு உதவும் வலுவான சாதன மாக, சமுதாயத்தின் அரசியல் ஸ்திர நிலையின் முக்கியக் காரணியாக கட்சி கருதுகிறது. பொருளாதாரத்தின் செயல் வன்மையை உயர்த்துவதன் மீது, சமுதாய வாழ்க்கையின் எல்லா அம்சங்களின் மீது சமூகக் கொள்கையின் தாக்கம் வலுப்படும் என்பதைக் கட்சி ஆதாரமாகக் கொள்கிறது. உழைப்பு, அன்றாட வாழ்க்கை, கலாசாரம், மக்களின் நலன் கள், தேவைகளைப் பூர்த்தி செய்வது சம்பந்தப்பட்ட சமூகப் பிரச்சினைகளின் தீர்வு மீது இடையறாமல் அக்கறை செலுத்துவதுதான் எல்லா அரசு, நிர்வாக உறுப்புகள், சமூக நல ஸ்தாபனங்களின் நடவடிக்கையின் விதியாக விளங்க வேண்டுமென்று கட்சி கருதுகிறது.

**சமூகக் கொள்கையின் முக்கியக் கடமைகளாகப்** பின்வருப வற்றைக் கட்சி முன்வைக்கிறது:

—சோவியத் மக்களின் வாழ்க்கை, உழைப்புச் சூழ்நிலை களை இடையறாது மேம்படுத்தல்;

—சமூக உறவுகளின் எல்லா துறைகளிலும் சமூக நீதிக் கோட்பாட்டை மேன்மேலும் முழுமையாக நிறைவேற்று தல்;

—வர்க்கங்களும் சமூகக் குழுக்களும் பிரிவுகளும் நெருங்கி வரச் செய்தல், மூளையுழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் இடையிலும் நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான கணிசமான வேறுபாடுகளை அகற்றுதல்;

—தேசிய இன உறவுகளை மேம்படுத்தல், நாட்டின் மக்களினங்கள், தேசிய இனங்களுக்கு இடையிலான சோதர நட்புறவை வலுப்படுத்தல்.

**வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், சோவியத் மக்களின் உழைப்பு, வாழ்க்கைச் சூழலை மேம்படுத்தல்.** நாட்டில் தோற்று

விக்கப்பட்டுள்ள உற்பத்தி மற்றும் ஆன்மீக உள்ளாற்றல், நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் கடமைகள், ''சமுதாய உறுப்பினர்கள் அனைவரின் முழுமையான நல்வாழ்க்கைத் தரம், சுதந்திரமான பன்முக வளர்ச்சி'' (வி. இ. லெனின்) ஆகியவற்றை அடைவதை நோக்கி கணிசமாக முன்னேறுவதைத் தேவையானதாக, அவசியமானதாக ஆக்குகின்றன.

சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் குணாம்ச ரீதியாகப் புதிய மட்டத்திற்கு உயர்த்த வேண்டும், சீரிசைவாக வளர்ச்சியடைந்த, ஆன்மீக ரீதியில் செழுமையான தனிநபர் உருவாகும் இலட்சியங்களுக்கும், சமுதாய நலன் கருதி சோவியத் மக்களின் திறமைகளை, ஆற்றல்களை முழுமையாக வெளிப்படுத்த அவசியமான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும் இலட்சியங்களுக்கும் அதிகபட்சம் உகந்த வகையில் பொருளாயத, சமூக, கலாசார நலன்களின் நுகர்வு மட்டத்தையும் கட்டமைப்பையும் ஏற்படுத்த வேண்டும் என்பதை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி தன் கடமையாக கருதுகிறது.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒதுக்கப்படும் நிதிகளை அடுத்த 15 ஆண்டுகளில் இரட்டிப்பாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உழைப்பின் ஆக்கபூர்வமான சாரத்தையும் கூட்டு மனப்பாங்கு தன்மையையும் வலுப்படுத்துவதற்கும், உழைப்புச் சூழலை மேம்படுத்துவதற்கும், சமுதாய நலன் கருதி செயல்படும் உயர் தேர்ச்சியுள்ள, உயர் விளைபயனுள்ள உழைப்பை ஊக்குவிப்பதற்கும் கட்சி விசேஷ முக்கியத்துவமளிக்கிறது. இவையெல்லாம் உழைப்பு படிப்படியாக ஒவ்வொரு சோவியத் மனிதனின் முதல் ஜீவாதாரத் தேவையாக மாற உதவும்.

மக்களின் முழுமையான, செயல்வன்மையுள்ள வேலை வாய்ப்பிற்கு உதவும் விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார, சமூக நடவடிக்கைகளைக் கூட்டாகத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும், சமூகத் தேவைகளைக் கவனத்தில் கொண்டு, ஒவ்வொருவரின் தேர்ச்சி, திறமை, கல்வித் தகுதி ஆகியவற்றிற்கேற்ப உழைக்கும் திறனுள்ளவர்கள் அனை

வருக்கும் தாம் தேர்ந்தெடுத்த துறையில் வேலை செய்யும் வாய்ப்பை வழங்க வேண்டும்.

உடலுழைப்பைக் கணிசமாக குறைத்தல், இயந்திர கதியான, கடினமான, குறைவான தேர்ச்சியுடைய உட லுழைப்பைப் பெரிதும் குறைத்து, எதிர்காலத்தில் அதை அறவே அகற்றுதல், ஆரோக்கியமான சுகாதாரச் சூழலை ஏற்படுத்தல், உற்பத்தி நேரத்தில் விபத்துகள், வேலை சார்ந்த நோய்நொடிகளை அகற்றும் நவீன பாதுகாப்பு முறை களைப் புகுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட கொள்கை தொடர்ச்சியாகப் பின்பற்றப்படும். உற்பத்தியைத் தீவிரமயப்படுத்தல், அதன் செயல்வன்மையை உயர்த்துதல், உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தல் ஆகியவை எதிர்காலத்தில் வேலை நாளைக் குறைக்கவும் ஊதியத் துடன் கூடிய விடுமுறைகளை அதிகரிக்கவும் புதிய வாய்ப்பு களைத் திறந்து விடுகின்றன.

நாட்டின் பொருளாதார வாய்ப்புகளுக்கேற்ப எல்லா சமூகக் குழுக்கள், பிரிவுகளின் வாழ்க்கைத் தரத்தையும் மேற்கொண்டு உயர்த்தவும், உழைப்பாளிகளின் உண்மை வருமானங்களை இடை யறாது கூட்டவும் கட்சி தொடர்ந்து இயன்ற அனைத்தையும் செய் யும்.

கம்யூனிசத்தின் முதல் கட்டம் பூராவும் உழைப்பிற்கான ஊதியம்தான் உழைப்பாளிகளுடைய வருமானங்களின் முக் கிய மூல ஊற்றாகத் திகழுகிறது. ஊதிய முறையானது உழைப்பின் அளவு, தரத்திற்கேற்ற ஊதியக் கோட்பாட்டு டன் முழுமையாகப் பொருந்தி வரவும், அது உழைப்பின் சூழ்நிலைகள், விளைபயன்களைக் கவனத்தில் கொள்ளவும், உழைப்பாளிகளின் தேர்ச்சி, உழைப்பின் உற்பத்தித் திறன், பொருட்களின் தரம் ஆகியவற்றை மேம்படுத்த உதவவும், சகல வித வளங்களையும் விவேகமாகப் பயன்படுத்தி சிக் கனப்படுத்தவும் ஏற்றதாக இருக்கும் வகையில் ஊதிய முறை யை இடையறாது மேம்படுத்த வேண்டும். இந்த அடிப்படை யில்தான் உழைப்பாளிகளின் ஊதியமும் வாழ்க்கைத் தர மும் உயர வேண்டும். சமுதாயச் செல்வம் பெருகப் பெருக குறைந்தபட்ச ஊதிய அளவுகள் கூடும், மக்களிடமிருந்து வசூ லிக்கப்படும் வரிகளைக் குறைக்கும் கொள்கை தொடர்ந்து

பின்பற்றப்படும். உழைக்காமல் பெறப்படும் வருமானங்கள், சோஷலிச வினியோக கோட்பாடுகளிலிருந்து பிறழுதல் ஆகியவற்றை உறுதியோடு களைந்தெறிவதற்குக் கட்சி கோட்பாட்டு ரீதியான முக்கியத்துவத்தையளிக்கிறது.

சமூக நுகர்வு நிதிகளைத் துரிதமாக வளர்த்து, அவற்றின் வினியோகத்தை மேம்படுத்தும் போக்கு தொடரும்; இலவச கல்வி, உடல்நலப் பாதுகாப்பு, சமூக வசதிகள் ஆகிய பொது அரசு முறைகளை வளர்க்கவும், உழைப்பாளிகளின் ஓய்வுச் சூழலை மேம்படுத்தவும், சோஷலிசத்தின் கீழ் தனிப்பட்ட மக்கள், குடும்பங்கள், சமூகக் குழுக்களின் பொருளாயத நிலையில் தவிர்க்க இயலாது புறவய ரீதியில் ஏற்படும் வேறுபாடுகளைக் குறைக்கவும், குழந்தை வளர்ப்பிற்கான சமூக, பொருளாதார, கலாசார சூழ்நிலைகளைச் சமப்படுத்தவும், தனிப்பட்ட மக்கள் பிரிவினரின் வசதிக் குறைவை அகற்றவும் இந்நிதிகள் மேன்மேலும் அதிகப் பங்காற்ற வேண்டும்.

உயர் தரமுள்ள, மிகப் பல்வேறான நுகர்வுப் பண்டங்கள்—உணவுப் பொருட்கள், நல்ல, அழகிய ஆடை, காலணிகள், மேசை, நாற்காலி, கட்டில் வகையறாக்கள், அலங்காரப் பொருட்கள், நவீன மின்சார, மின்னணு கருவிகள், அன்றாட தட்டுமுட்டு சாமான்கள்—சம்பந்தமாக மேன்மேலும் அதிகரித்து வரும் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வது முக்கிய முதல் கடமையாகும்.

வர்த்தகத் துறையும் பொது உணவு விடுதிகளும் மேற்கொண்டு வளர்ச்சியடையும். இவற்றின் பொருள்ாயத, தொழில்நுட்ப அடித்தளம் வலுப்படும், சேவைத் தரம் அதிகரிக்கும். கிராமங்களில் வர்த்தகத்தை மேம்படுத்தி, மக்களிடம் பொருட்களை வாங்குவதையும் விவசாயப் பண்டங்களின் விற்பனையையும் ஒழுங்கமைக்கும் நுகர்வு கூட்டுறவு தொடர்ந்து வளர்ச்சியுறும். கூட்டுறவுச் சந்தையின் முக்கியத்துவம் அப்படியே இருக்கும். மக்களின் உண்மை வருமானங்களைக் கூட்டும் நோக்கத்தோடு சில்லறை விலைக் கொள்கை பின்பற்றப்படும்.

உயர் வளர்ச்சியடைந்த நவீன சேவைத் துறையைத் தோற்றுவிக்கும் நோக்கத்தோடு பெரும் நடவடிக்கைகள் நிறை

வேற்றப்படும். சேவை வசதிகளின் அளவு அதிகரிப்பு, எண்ணிக்கைப் பெருக்கம், தர உயர்வு ஆகியவை மேன்மேலும் அதிகரித்து வரும் வீட்டு வசதி மற்றும் முனிசிபல் தேவைகள், போக்குவரத்துத் தேவைகள், அன்றாட வாழ்க்கைத் தேவைகள், கலாசாரத் தேவைகள் போன்றவற்றைப் பல்வேறு வடிவங்களில் முழுமையாகப் பூர்த்தி செய்ய உதவும், வீட்டு வேலைகளை இலகுவாக்கும், ஓய்விற்கும் ஓய்வு நேரத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தவும் சிறந்த சூழ்நிலைகளை ஏற்படுத்தும். கிராமப்புறங்களிலும் மீண்டும் வளர்ச்சியடையும் பிரதேசங்களிலும் சேவைத் துறை துரிதமாக வளர்க்கப்படும்.

2000ஆம் ஆண்டு வாக்கில் கிட்டத்தட்ட ஒவ்வொரு சோவியத் குடும்பமும் தனி வசிப்பிடத்தை—தனி வீடு அல்லது குடியிருப்பு—பெறும் வகையில் **வீட்டுப் பிரச்சினையின்** தீர்வை துரிதப்படுத்துவது விசேஷ சமூக முக்கியத்துவம் வாய்ந்த கடமையென்று கட்சி கருதுகிறது. அரசுச் செலவில் பெருமளவில் நடைபெறும் வீடு கட்டுமானம், கூட்டுறவு மற்றும் தனிநபர் கட்டுமானத்தைப் பரவலாக வளர்த்தல், வீடுகள், கட்டிடங்களைச் சீரமைத்தல், புதுப்பித்தல், அவற்றைப் பேணிக் காப்பதை உயர்த்துதல், வீடுகள் பகிர்ந்தளிக்கப்படுவதைக் கண்காணிப்பதை வலுப்படுத்தல் ஆகியவை இதற்கு உதவ வேண்டும். வீடு கட்டுமானத்தின் தரம், வசதிகளை அதிகப்படுத்தல், வீட்டு அமைப்பை மேம்படுத்தல், வீடுகளில் நவீன வசதிகளை அதிகப்படுத்தல் ஆகியவற்றின் மீது விசேஷ கவனம் செலுத்தப்படும்.

கட்டிடக்கலை, நகர, கிராமக் குடியிருப்புகளின் அழகியல் வடிவமைப்பு, வசதிகளின் முன் அதிக கறாரான கோரிக்கைகள் வைக்கப்படும். குடியிருப்பிடங்கள் என்பவை உற்பத்தி மண்டலங்கள், வீடுகள், மக்களுக்குத் தலை சிறந்த உழைப்பு, வாழ்க்கை, ஓய்வுச் சூழலை அளிக்கவல்ல சமூக, கலாசார, கல்வி, வளர்ப்பு நிறுவனங்கள், வர்த்தக, சேவை வசதி மையங்கள், விளையாட்டு அமைப்புகள், பொதுப் போக்குவரத்து ஆகியவையனைத்தும் விவேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இணையங்களாகத் திகழ வேண்டும். வீட்டு வசதிகள், கலாசார மற்றும் சேவை வசதிகள், ஓய்வு,

சுற்றுலா போன்றவற்றை மேம்படுத்த மக்களின் நிதிகளைப் பயன்படுத்தும் நடைமுறை பரவி வரும்.

சோவியத் மக்களின் உடல்நலத்தை வலுப்படுத்துவதும் அவர்களுடைய சுறுசுறுப்பான வாழ்நாளை நீட்டிப்பதும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த கடமையாகும். எல்லா இடங்களிலும் நகர, கிராம மக்களுக்குத் தேவைப்படும் உயர் தேர்ச்சியுடைய சகலவித மருத்துவ வசதிகளையும் முழுமையாக அளிக்க வேண்டும், மருத்துவ உதவியின் தரத்தை அடிப்படையிலேயே மேம்படுத்த வேண்டும் என்பதை கட்சி தன் கடமையாக முன்வைக்கிறது. இந்நோக்கத்தோடு மக்களின் சர்வபொது மருத்துவப் பரிசோதனை முறையைப் புகுத்தவும், தாய் சேய் நலப் பாதுகாப்பு நிறுவனங்களை மேற்கொண்டு வளர்க்கவும், பாலிகிளினிக்குகள், மருத்துவ மனைகள், ஆரோக்கிய இல்லங்களை வளர்த்து, அவற்றில் நவீன மருத்துவ உபகரணங்கள், கருவிகளை நிறுவவும், மருந்துகள், சிகிச்சை மற்றும் சுகாதாரச் சாதனங்கள் ஆகியவற்றைப் போதிய அளவு வழங்கவும் திட்டமிடப்படுகிறது.

மக்களின் உடல்நலத்தை வலுப்படுத்தல், தனிநபரின் சீரிசைவான வளர்ச்சி, உழைப்பிற்கும் தாயகத்தைப் பாதுகாக்கவும் இளைஞர்களைப் பயிற்றுவித்தல் ஆகியவற்றில் உடற்பயிற்சி, விளையாட்டு மற்றும் அவற்றை அன்றாட வாழ்க்கையில் புகுத்துவதன் முக்கியத்துவம் அதிகரிக்கிறது. ஒவ்வொரு நபரும் இளவயது முதலே தன் உடற்கூறு ரீதியான மேம்பாட்டின் மீது அக்கறை செலுத்தவும், சுகாதாரம், மருத்துவ உதவி சம்பந்தமாக போதிய ஞானத்தைப் பெறவும் ஆரோக்கியமான வாழ்க்கையை நடத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

குடும்பத்தைப் பற்றிய அக்கறையை வலுப்படுத்துவதற்குக் கட்சி பெரும் முக்கியத்துவமளிக்கிறது. வளரும் தலைமுறையினரின் உடல் நலத்தையும் வளர்ப்பையும் வலுப்படுத்துவதிலும், சமுதாயத்தின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு வகை செய்வதிலும், பிறப்பு இறப்பு போக்குகளை மேம்படுத்துவதிலும் குடும்பம் முக்கியப் பங்காற்றுகிறது. மனிதனுடைய குணநலன்களின் அடிப்படைகளும், உழைப்பின் பாலான அவனுடைய அணுகுமுறையும் அவ

னுடைய தார்மீக, சித்தாந்த, கலாசார மதிப்புகளும் குடும்பத்தில்தான் உருவாகின்றன. உறுதியான, ஆன்மீக ரீதியிலும் தார்மீக ரீதியிலும் ஆரோக்கியமான குடும்பத்தில் சமுதாயத்திற்குப் பெரும் அக்கறையுண்டு. இதன் அடிப்படையில், குடும்பத்தை வலுப்படுத்துவது, சமூகக் கடமைகளை நிறைவேற்றவும் குழந்தை வளர்ப்பிலும் குடும்பத்திற்கு உதவுவது, குழந்தைகளை உடைய குடும்பங்கள் மற்றும் புதிதாக திருமணமான தம்பதியினரின் பொருளாதார, வீட்டு வசதி, சேவை வசதி சூழ்நிலைகளை மேம்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட கொள்கையைப் பின்பற்றுவது அவசியமென்று கட்சி கருதுகிறது. குடும்பம், பள்ளி, உழைப்புக் கூட்டிற்கு இடையிலான பரஸ்பரச் செயலாக்கத்தை ஆழப்படுத்த வேண்டும், குழந்தை வளர்ப்பில் பெற்றோர்களுக்கு உள்ள பொறுப்பையும், பெற்றோர்களின் நலன், அவர்களுடைய அமைதியான, வசதியான முதுமை ஆகியவற்றில் குழந்தைகளுக்குள்ள பொறுப்பையும் உயர்த்த வேண்டும்.

தாய்மார்களின் நிலையை மேலும் மேம்படுத்துவதன் மீது கட்சி நிரந்தர அக்கறை செலுத்துகிறது. இந்நோக்கத்துடன், தாய்மைப் பணியையும் உழைப்பு மற்றும் சமூக நடவடிக்கையில் பெண்களின் தீவிரப் பணியையும் இணைக்க உதவும் அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்படும். தாய் சேய் நலப் பாதுகாப்பின் மீது விசேஷ கவனம் செலுத்தப்படும், குழந்தைப்பேறுக்கு முந்தைய விடுமுறை நீட்டிக்கப்படும், குழந்தை பிறந்த பின் அக்குழந்தையைப் பராமரிப்பதற்காக அளிக்கப்படும் விடுமுறையும் நீட்டிக்கப்படும். ஆரோக்கிய இல்லங்கள், ஓய்வில்லங்கள், குடும்ப ஓய்வுக் கூடங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கும். பெண்களுக்குப் பல்வேறுவிதமான வடிவங்களில் வேலைகளை அளிப்பது அதிகரிக்கும், அவர்களுடைய வசதிக்கேற்ப வேலை நேரங்கள் மாற்றியமைக்கப்படும், குறைவான வேலை நாள் அமல்படுத்தப்படும், வீட்டில் வேலை செய்யும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

இளம் தலைமுறையினரின் வளர்ப்பிற்கேற்ற சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பது தொடர்பாகப் பரவலான நடவடிக்

கைகள் மேற்கொள்ளப்படும். குழந்தைக் காப்பகங்களின் விஷயத்தில் மக்களின் தேவைகள் வெகு விரைவில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும். பயோனிர் முகாம்கள், உழைப்பு மற்றும் விளையாட்டு முகாம்கள், பயோனிர் இல்லங்கள், விஞ்ஞான, தொழில்நுட்பப் பயிற்சி மையங்கள், கலைக் கூடங்கள் ஆகியவை விரிவுபடுத்தப்படும். குழந்தைக் காப்பகங்கள், தொழிற்பயிற்சிக் கூடங்கள், அனாதையில்லங்கள் ஆகியவற்றில் உணவிற்காக ஒதுக்கப்படும் செலவுகள் அதிகரிக்கப்படும்.

இளைஞர்களுடைய சமூகப் பிரச்சினைகளின் பால், எல்லாவற்றிற்கும் மேலாக உழைப்பு, அன்றாட வாழ்க்கை, கல்வி, கலாசாரம், தொழில் ரீதியிலும் வேலை ரீதியிலும் வளர்ச்சி, ஓய்வு நேரத்தை விவேகமாகப் பயன்படுத்தல் ஆகியவை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இளைஞர்களின் சமூக முக்கியத்துவம் வாய்ந்த அக்கறைகள், தேவைகளை வளர்த்து, மேன்மேலும் முழுமையாகப் பூர்த்தி செய்வதன் மீது தன் கவனத்தைக் கணிசமாக அதிகப்படுத்துவது அவசியமென்று கட்சி கருதுகிறது.

உழைப்பு முதுவர்கள், யுத்தங்களில் பங்கேற்றவர்கள், வயது முதிர்ந்தவர்கள், உடல் ஊனமுற்றோர், உயிர்நீத்த போர் வீரர்களின் குடும்பத்தினர் ஆகியோரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவது, அவர்களின் சமூகநல, மருத்துவ, கலாசார சேவை வசதிகள் மீது கட்சி முன்போன்றே தொடர்ந்து அக்கறை செலுத்தும். ஓய்வூதியங்கள், குறிப்பாக குறைந்தபட்ச ஓய்வூதியங்களும், முன்னர் நிர்ணயிக்கப்பட்டவையும் முறைப்படி உயர்த்தப்படும். கூட்டுப் பண்ணை விவசாயிகளின் ஓய்வூதியம், தொழிலாளர்கள், ஊழியர்களின் ஓய்வூதியத்தைப் படிப்படியாக நெருங்கி வரும். வயதானவர்கள், உடல் ஊனமுற்றோருக்கான போர்டிங் விடுதிகள் மேற்கொண்டு வளர்ந்து மேம்படுத்தப்படும். நல்ல அனுபவமுள்ள உழைப்பு முதுவர்கள் தம்மாலியன்ற உழைப்பு நடவடிக்கை, சமூக வாழ்க்கை, வளர்ப்புப் பணியில் பங்கேற்கும் வாய்ப்புகளை விரிவுபடுத்துவது பெரும் சமூக, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

சமுதாயத்திற்கும் இயற்கைக்கும், மனிதனுக்கும் புறச்

சூழலுக்கும் இடையிலான சீரிசைவான பரஸ்பரச் செயலாக்கம் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் மேன்மேலும் அதிக முக்கியத்துவத்தைப் பெற்றுவருகிறது. தன் எதிர் காலத்தை உணர்வு பூர்வமாகப் படைக்கும் சோஷலிச சமுதாயம் திட்டமிட்ட வகையில், கவனமாக இயற்கையைப் பயன்படுத்துகிறது, பூமியின் இயற்கை வளங்களைப் பேணிக் காத்து பெருக்க மனிதகுலம் நடத்தும் போராட்டத்தில் முன்னணியில் நிற்கிறது. இயற்கையைப் பயன்படுத்துவதன் மீதான கண்காணிப்பை வலுப்படுத்துவதும் புறச்சூழலைப் பற்றிய மக்களின் ஞானத்தை விரிவுபடுத்துவதும் அவசியமென்று கட்சி கருதுகிறது.

**வர்க்க வேறுபாடுகளை அகற்றுதல், சமூக ரீதியில் ஓரினத் தன்மையுள்ள சமுதாயத்தை ஏற்படுத்துதல்.** இன்றைய கட்டத்தில் சமூக உறவுகளின் வளர்ச்சியில் முக்கியமானதொரு நியதி, **தொழிலாளி வர்க்கம், கூட்டுப் பண்ணை விவசாயிகள், அறிவுத்துறையினர் நெருங்கி வருவதும், தொழிலாளி வர்க்கத்தின் தீர்மானகரமான பாத்திரத்தின் கீழ் வர்க்கங்களற்ற கட்டமைப்பை ஏற்படுத்துவதுமாகும்.**

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் அனுபவம், அதன் உயர்வான சுய உணர்வு, கட்டுக்கோப்பு, உறுதி ஆகியவை நம் சமுதாயத்தை ஒன்றிணைக்கின்றன. தொழிலாளி வர்க்கத்தின் பொதுக் கல்வி, கலாசார, தொழில் மட்டத்தின் வளர்ச்சியும், உழைப்பு மற்றும் சமூக, அரசியல் நடவடிக்கையின் வளர்ச்சியும் சோஷலிசத்தை மேம்படுத்துவதிலும் கம்யூனிசத்தைக் கட்டுவதிலும் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் பாத்திரத்தை அதிகப்படுத்துகின்றன.

கட்சியின் விவசாயக் கொள்கையைத் தொடர்ச்சிகரமாக நிறைவேற்றும் பொழுது விவசாய உழைப்பானது தொழிற்துறை உழைப்பின் ஒரு வகையாக மாற்றமடைகிறது, நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான கணிசமான சமூக, கலாசார, அன்றாட வாழ்க்கை வேறுபாடுகள் மறைகின்றன; விவசாயிகளின் வாழ்க்கை முறையும் உழைப்பின் தன்மையும் தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை, உழைப்பை மேன்மேலும் நெருங்கி வருகின்றன. நம் நாட்டில் இவ்வர்க்கங்

களுக்கு இடையிலான வேறுபாடுகளை அகற்றுவதும், வர்க்கங்களற்ற சமுதாயம் நிலைபெறுவதும் பெரும்பாலும் கம்யூனிச சமுதாய அமைப்பின் முதல் கட்டமாகிய சோஷலிசத்தின் வரலாற்று வரம்புகளுக்குள் நடைபெறும்.

உற்பத்திச் சக்திகளில் ஏற்படும் புரட்சிகர மாற்றங்கள் பரவலான தொழிலாளர்கள், கூட்டுப் பண்ணை விவசாயிகளின் நடவடிக்கையில் மூளையுழைப்பின் பங்கு அதிகரிப்பதற்கு இட்டுச் செல்லும். அதே நேரத்தில் அறிவுத்துறையினரின் எண்ணிக்கை கூடும், பொருளாயத உற்பத்தியிலும் சமூக வாழ்க்கையின் பிற துறைகளிலும் அறிவுத்துறையினரின் ஆக்கபூர்வமான பங்கேற்பு அதிகரிக்கும். இது உடலுழைப்பிற்கும் மூளையுழைப்பிற்கும் இடையிலான கணிசமான வேறுபாடுகளைஅகற்றவும் எல்லா சமூக குழுக்களும் நெருங்கி வரவும் உதவும். இந்த வேறுபாடுகளை முழுமையாக அகற்றுவதும் சமூக ரீதியில் ஒரினத் தன்மையுள்ள சமுதாயத்தை உருவாக்குவதும் கம்யூனிசத்தின் உயர் கட்டத்தில் முழுமை பெறும். அதே நேரத்தில், இந்த வேறுபாடுகள் நிலவும் வரை, வர்க்கங்கள், சமூக குழுக்களின் நலன்களுடைய சிறப்பியல்புகளைத் தன் கொள்கையில் முழுமையாக கணக்கிலெடுத்துக் கொள்வதை மிக முக்கியக் காரியமாக கட்சி கருதுகிறது. நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள மக்களின் உழைப்பு, வாழ்க்கைச் சூழ்நிலைகளைச் சமப்படுத்துவதன் மீது பெரும் கவனம் செலுத்தப்படும்.

சோவியத் சமுதாயத்தின் சமூகக் கட்டமைவில் உழைப்புக் கூட்டுகளின் பங்கு அதிகரிக்கும். ஒவ்வொரு உழைப்புக் கூட்டும் மக்களுடைய சோஷலிச சுயநிர்வாகத்தின் செயல்வன்மையுள்ள சமூக உயிரணு ஆக வேண்டும், தொழிற்சாலைகள், ஸ்தாபனங்கள், நிறுவனங்களின் பணிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் தீர்வில், தனிநபருடைய ஆக்கபூர்வமான சக்திகளை வளர்த்து பயன்படுத்துவதில் உழைப்பாளிகள் அன்றாடம், எதார்த்தப் பங்கேற்க வேண்டும் என்பதற்குக் கட்சி சகலவிதங்களிலும் உதவும். சமுதாய வாழ்க்கையின் எல்லாத் துறைகளின் மீதும் உழைப்புக் கூட்டுகளின் தாக்கத்தைச் செயல்முனைப்போடு வலுப்படுத்துவதும், அவற்றின் உரிமைகளை விரிவுபடுத்துவதும் அதே நேரத்

தில் பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சியின் திட்ட வட்டமான கடமைகளின் நிறைவேற்றத்தில் அவற்றின் பொறுப்பை உயர்த்துவதும் அவசியமென்று கட்சி கருது கிறது.

**சோஷலிச மக்களினங்களும் தேசிய இனங்களும் மேற்கொண்டு மலர்ச்சியடைந்து நெருங்கி வருதல்.** சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி தன் நடவடிக்கையில் சோவியத் சமுதாயத்தின் பல்தேசிய உள்ளடக்கத்தைப் பன்முக ரீதியில் கணக்கிலெடுத்துக் கொள்கிறது. கடந்த காலம் விட்டுச் சென்ற தேசிய இனப் பிரச்சினை சோவியத் ஒன்றியத்தில் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டு விட்டது என்று கடந்து வந்த பாதை ஆணித்தரமாகக் காட்டுகிறது. எங்கள் நாட்டின் தேசிய இன உறவுகளைப் பொறுத்த மட்டில் மக்களினங்களும் தேசிய இனங்களும் மேற்கொண்டு மலர்ச்சியடையும் அதே நேரத்தில் அவை தாமே விரும்பி சமத்துவம், சகோதரத்துவம், ஒத்துழைப்பின் அடிப்படையில் இடையறாது ஒன்றையொன்று நெருங்கியும் வருகின்றன. இங்கே செயற்கையாக முன் தள்ளுவதோ, முதிர்ச்சியடைந்த வளர்ச்சியின் புறவய நியதிகளை நிறுத்திவைப்பதோ அனுமதிக்கப்படாதவை. இவ்வளர்ச்சி நீண்ட வரலாற்று எதிர்காலத்தில் தேசிய இனங்களின் முழு ஒற்றுமையைக் கொண்டு வருகிறது.

நம்முடைய சோஷலிசப் பல்தேசிய அரசில், நூறுக்கும் மேற்பட்ட மக்களினங்கள், தேசிய இனங்களின் கூட்டு உழைப்பு, வாழ்க்கையில் தேசிய இன உறவுகளை மேம்படுத்துவது சம்பந்தமாகப் புதிய கடமைகள் தோன்றுகின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டு கட்சி செயல்படுகிறது. நன்கு சோதிக்கப்பட்ட லெனினிய தேசிய இனக் கொள்கையின் அடிப்படையில் இக்கடமைகளைக் கட்சி நிறைவேற்றியது, இனியும் தொடர்ந்து நிறைவேற்றும். இத்துறையில் இது பின்வரும் முக்கியக் கடமைகளை முன்வைக்கிறது:

—ஐக்கிய, பல்தேசிய யூனியன் அரசை சகலவிதங்களிலும் வலுப்படுத்தி வளர்க்க வேண்டும். ஸ்தல மனப்பாங்கு, குறுகிய தேசிய இனப் போக்கு ஆகியவற்றின் சகலவித வெளிப்பாடுகளுக்கு எதிராயும் கட்சி முன்போன்றே

தொடர்ந்து தொடர்ச்சியாகப் போராடும், அதே நேரத்தில் பொது தேசியப் பிரச்சினைகளின் தீர்வில் குடியரசுகள், சுயாட்சிப் பிரதேசங்கள், சுயாட்சி வட்டங்களின் பங்கை மேற்கொண்டு வளர்ப்பதன் மீதும், ஆட்சியுறுப்புகள், நிர்வாக உறுப்புகளின் பணியில் எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைப்பாளிகளின் தீவிரப் பங்கேற்பின் மீதும் கட்சி நிரந்தர அக்கறை செலுத்தும். சோஷலிச சமஷ்டி அமைப்பு, ஜனநாயக மத்தியத்துவம் பற்றிய லெனினியக் கோட்பாடுகளை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதன் அடிப்படையில், சோவியத் மக்கள் அனைவரின், ஒவ்வொரு மக்களினம், தேசிய இனத்தின் நலன் கருதி தேசிய இன உறவுகளின் வடிவங்கள் செழுமைப்படுத்தப்படும்;

—ஒரு ஐக்கிய தேசியப் பொருளாதார இணையத்தின் வரம்புகளுக்குள் ஒவ்வொரு குடியரசின் பொருளாயத, ஆன்மீக உள்ளாற்றல் வளர்க்கப்படும். யூனியன் குடியரசுகள், சுயாட்சிக் குடியரசுகள், சுயாட்சிப் பிரதேசங்கள், சுயாட்சி வட்டங்களின் முன்மொழிவை நாடு தழுவிய அளவில் மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாகத்துடன் இணைப்பதானது நாட்டின் வளங்கள், இயற்கை சிறப்பு அம்சங்கள், பிறவற்றை அதிக விவேகமாகப் பயன்படுத்த உதவும். குடியரசுகளுக்கு இடையிலான உழைப்புப் பிரிவினையைத் தொடர்ச்சியாக ஆழப்படுத்த வேண்டும், பொருளாதாரச் சூழ்நிலைகளைச் சமப்படுத்த வேண்டும், புதிய பிரதேசங்களைப் பொருளாதார ரீதியாக மீட்பதில் குடியரசுகளின் தீவிரப் பங்கேற்பிற்கு ஊக்கமளிக்க வேண்டும், குடியரசுகளுக்கு இடையில் தொழிலாளர்கள், நிபுணர்களின் பரிவர்த்தனையை வளர்க்க வேண்டும், குடியரசுகளில் வசிக்கும் எல்லா மக்களினங்கள், தேசிய இனங்களிலிருந்து தேர்ச்சி மிகு பணியாளர்களைப் பயிற்றுவிப்பதை விரிவுபடுத்தி மேம்படுத்த வேண்டும்;

—சோவியத் ஒன்றியத்தில் உள்ள மக்களினங்களின் தலைசிறந்த சாதனைகள், சொந்த முற்போக்குப் பாரம்பரியங்களின் அடிப்படையில் சோஷலிச சாரத்தையும், பல் தேசிய வடிவங்களையும், சர்வதேசிய மனப்பாங்கையும் உடைய சோவியத் மக்களின் ஐக்கிய கலாசாரம் வளர்க்கப்பட வேண்டும். தேசியக் கலாசாரங்களின் வளர்ச்சியும்

அவை ஒன்றையொன்று நெருங்கி வருவதும், அவற்றிற்கு இடையிலான பரஸ்பரத் தொடர்புகள் வலுப்படுவதும் அவை பரஸ்பரம் செழுமையடைவதை மேன்மேலும் பயனுள்ளவையாக்குகின்றன, நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு மக்களினத்தின் திறமையாலும் பிறந்த மதிப்பு மிக்கவை அனைத்தையும் கிரகிக்க சோவியத் மக்களின் முன் பரவலான வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன.

சோவியத் குடிமக்கள் அனைவரின் தாய்மொழிகளும் சுதந்திரமாக வளர்ச்சியடையவும், சம உரிமையோடு பயன்படுத்தப்படவும் தொடர்ந்து வழியமைக்கப்படும். அதே நேரத்தில் தன் தாய்மொழியோடு கூட, சோவியத் மக்கள் தாமாகவே முன் வந்து தேசியத் தொடர்பு மொழியாக ஏற்ற ருஷ்ய மொழியையும் கிரகிப்பதானது தாயக மற்றும் உலக விஞ்ஞான, தொழில்நுட்ப, கலாசார சாதனைகளை அறியும் வாய்ப்புகளை விரிவுபடுத்தும்.

லெனினிய தேசிய இனக் கொள்கையைத் தொடர்ச்சியாகப் பின்பற்றுவது, மக்களினங்களுக்கு இடையிலான நட்புறவை சகலவிதங்களிலும் வலுப்படுத்துவது என்பது சோஷலிசத்தை மேம்படுத்துவதில் ஒரு பகுதி, நம்முடைய பல் தேசிய சோஷலிசத் தாயகம் இன்னமும் மலர்ச்சியடைய இட்டுச் செல்லும் பாதை—இப்பாதை சமூக நடைமுறையால் சோதிக்கப்பட்டது—ஆகும்....

மூன்றாவது பகுதி

## சர்வதேச அரங்கிலும் சமாதானம், சமூக முன்னேற்றத்திற்கான போராட்டத்திலும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கடமைகள்

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சர்வதேசக் கொள்கையானது, சுரண்டல், ஒடுக்குமுறையிலிருந்து விடுவிக்கப்பட்ட, யுத்தங்களைக் கட்டவிழ்த்து விடுவதில் அக்கறை கொண்ட வர்க்கங்களோ, சமூக குழுக்களோ இல்லாத சோஷலிச சமுதாயத்தின் மனிதாபிமானத் தன்மையிலிருந்து

வருகிறது. இது உள்நாட்டில் கட்சியின் அடிப்படையான, நீண்டகால கடமைகளுடன் பிரிக்க இயலாதபடி தொடர்புடையது, ஆக்கபூர்வமான உழைப்பில் ஈடுபட வேண்டும், எல்லா மக்களினங்களுடனும் சமாதானமாக வாழ வேண்டும் என்ற சோவியத் மக்களின் ஐக்கிய நாட்டத்தைப் பிரதிபலிக்கிறது.

**சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சர்வதேசக் கொள்கையின் முக்கிய நோக்கங்களும் திசையமைவுகளும்:**

*—சோஷலிச சமுதாயத்தை மேம்படுத்தவும் சோவியத் நாட்டில் கம்யூனிசத்தை நோக்கி முன்னேறவும் அனுகூலமான வெளிச் சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பது; உலக யுத்த அபாயத்தை அகற்றுதல், சர்வபொது பாதுகாப்பையும் படைக்கலைப்பையும் அடைதல்;*

*—சோதர சோஷலிச நாடுகளுடன் சோவியத் ஒன்றியத்திற்குள்ள ஒத்துழைப்பை இடையறாது விரிவுபடுத்தி வளர்த்தல், உலக சோஷலிச அமைப்பை வலுப்படுத்தவும் அதன் முன்னேற்றத்திற்கும் சகலவிதங்களிலும் உதவுதல்;*

*—விடுதலையடைந்த நாடுகளுடனான சமமான நட்புறவுகளை வளர்த்தல்;*

*—சமாதான சகவாழ்வு, காரிய ரீதியான, பரஸ்பர அனுகூலமுள்ள ஒத்துழைப்பின் அடிப்படையில் முதலாளித்துவ நாடுகளுடன் சோவியத் ஒன்றியத்திற்கு உள்ள உறவுகளைப் பேணிக் காத்து வளர்த்தல்;*

*—கம்யூனிஸ்டு, புரட்சிகர ஜனநாயக கட்சிகளுடனும், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துடனும், மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துடனும் சர்வதேசிய ஒருமைப்பாடு.*

வெளிநாட்டுக் கொள்கைப் பிரச்சினைகளின் பாலான கட்சியின் அணுகுமுறையில் சோவியத் மக்களின் நலன்களை உறுதியோடு பாதுகாத்து நிற்பதும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையை உறுதியோடு எதிர்ப்பதும், சர்வதேசப் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள், கலந்தாலோசனைகளின் மூலம் ஆக்கபூர்வமாகத் தீர்க்கத் தயாராக இருப்பதுடன் இணைந்துள்ளன.

கட்சியால் தீட்டப்பட்டு, சோவியத் அரசால் தொடர்ச்சி

யாக நிறைவேற்றப்பட்ட சமாதான வெளிநாட்டுக் கொள்கையும், நாட்டின் தற்காப்பை வலுப்படுத்தியதும் சேர்ந்து சோவியத் மக்களுக்கும் உலகின் பெரும்பான்மை மக்களுக்கும், 20ஆம் நூற்றாண்டிலேயே மிக நீண்ட காலகட்டத்தில் சமாதான வாழ்க்கையை அளித்தன. சோவியத் மக்களின் ஆக்கபூர்வமான உழைப்பிற்கான சமாதான சூழ்நிலைகளைப் பேணிக் காக்கவும், சர்வதேச உறவுகளைச் சீர்படுத்தவும், உலகை ஆட்டிப் படைக்கும் ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்தவும், உலக மக்களை எதிர்நோக்கியுள்ள அணு ஆயுத யுத்த அபாயத்தை அகற்றவும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி முன்போன்றே தொடர்ந்து தன்னாலியன்ற அனைத்தையும் செய்யும்.

சமாதானத்தைப் பேணிக் காத்து வலுப்படுத்துவது, இன்றைய தலைமுறையினர், எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி ஆக்கிரமிப்பு மற்றும் இராணுவ வெறிச் சக்திகளை அடக்கியொடுக்குவது—இதைவிட இன்று அதிக உயர்வான, பொறுப்புள்ள கடமை வேறில்லை. **யுத்தங்களற்ற, ஆயுதங்களற்ற உலகம்தான் சோஷலிசத்தின் இலட்சியமாகும்.**

**1. சோஷலிச நாடுகளுடனான ஒத்துழைப்பு**

சோவியத் ஒன்றியத்திற்கும் பிற சோஷலிச நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வளர்த்து வலுப்படுத்துவதற்கு சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி பெரும் முக்கியத்துவமளிக்கிறது.

**உலக சோஷலிச அமைப்பைச் சேர்ந்த எல்லா நாடுகளுடனும் சோவியத் ஒன்றியத்திற்கு உறுதியான தோழமை உறவுகளும் பன்முக ஒத்துழைப்பும் நிலவ வேண்டும் என்பதற்காகக் கட்சி பாடுபடுகிறது.** சோஷலிச நாடுகளின் ஒற்றுமை இந்நாடுகள் ஒவ்வொன்றின் நலன்களுக்கும், அவற்றின் பொது நலன்களுக்கும் ஏற்றதாக உள்ளது, சமாதான இலட்சியங்களுக்கும் சோஷலிச இலட்சியம் வெற்றி பெறவும் உதவுகிறது என்று கட்சி கருதுகிறது.

சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகளுடன் சோவியத் ஒன்றியத்திற்குள்ள நட்புறவை சகலவிதங்களிலும் வலுப்

படுத்துவது, தொடர்புகளை வளர்த்து மேம்படுத்துவதன் மீது கட்சி விசேஷ கவனம் செலுத்துகிறது.

இந்நாடுகளின் பன்முக ஒத்துழைப்பின் உந்து சக்தி ஆளும் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளாகும். சோதர நாடுகளின் கம்யூனிஸ்டுகளுடைய ஒற்றுமையை வலுப்படுத்தவும், சமுதாயத்திற்குத் தலைமை தாங்கி வழிநடத்தும் நடைமுறையைப் பரஸ்பரம் செழுமைப்படுத்தவும் மத்திய கமிட்டி முதல் அடிமட்டக் கிளைகள் வரை எல்லா மட்டங்களிலும் கட்சிகளுக்கு இடையிலான தொடர்புகளை விரிவுபடுத்த சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி முன்போன்றே தொடர்ந்து உதவும்; இரு தரப்பு, பல்தரப்பு அடிப்படைகளில் கருத்துப் பரிமாற்றம், அனுபவப் பரிமாற்றத்திற்கு வழிகோலும்.

சோவியத் ஒன்றியத்திற்கும் சோஷலிச நாடுகளுக்கும் இடையிலான அரசுத் தொடர்புகளை வலுப்படுத்துவது, இவற்றை ஒப்பந்தங்களின் மூலம் உறுதிப்படுத்துவது, சட்டமியற்றும் உறுப்புகளுக்கு இடையிலான தொடர்புகளையும் சமூகநல ஸ்தாபனங்களுக்கு இடையிலான தொடர்புகளையும் வளர்ப்பது, அரசியல் ஒத்துழைப்பின் சகல வடிவங்களையும் மேற்கொண்டு தீவிரப்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட கொள்கையைக் கட்சி தொடரும்.

சர்வதேச அரங்கில் சோதர நாடுகளில் ஒவ்வொன்றின் நிலை, அக்கறைகள், சோஷலிச முகாமின் பொது நலன்கள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு அவற்றுடன் மேன்மேலும் செயல்வன்மையுள்ள முறையில் பரஸ்பரத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று சோவியத் கம்யூனிஸ்டுகள் கோருகின்றனர்.

ஏகாதிபத்திய இராணுவக் கூட்டாகிய நேட்டோ நிலவும் வரை, ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு நாட்டங்களுக்கு எதிரான கூட்டுத் தற்காப்பு கருவி என்ற வகையிலும், உறுதியான சமாதானத்திற்காகவும் சர்வதேச ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் கூட்டாகப் போராடும் கருவி என்ற வகையிலும் வார்சா ஒப்பந்த ஸ்தாபனத்தின் நடவடிக்கையை மேம்படுத்த சகலவிதங்களிலும் பாடுபடுவது அவசியமென்று கட்சி கருதுகிறது.

பொருளாதார பரஸ்பரத் தொடர்புகளின் விஷயத்தில், சோஷலிச நாடுகளை அணி திரட்டுவதன் பொருளாயத அடிப்படை என்ற வகையில் சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பை மேற்கொண்டு வளர்க்க வேண்டுமென்று கட்சி பாடுபடுகிறது. தத்தம் நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்துவதற்காகவும் அவர்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காகவும் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னணிக்கு வரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடமையைக் கூட்டாக நிறைவேற்ற, உற்பத்தியைத் தீவிரமயப்படுத்தல் மற்றும் விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தல் என்ற முக்கியத் திசைகளில் சோதர நாடுகளின் முயற்சிகளைத் தொடர்ச்சிகரமாக ஒன்றிணைப்பதற்குக் கட்சி விசேஷ முக்கியத்துவம் அளிக்கிறது.

இந்த ஒருங்கிணைப்பு சோஷலிச முகாம் நாடுகளில் சமூக உற்பத்தி மற்றும் சோஷலிச வாழ்க்கை முறையின் முன்னேற்றத்திற்கும், இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மட்டங்களைச் சமப்படுத்தும் போக்கைத் துரிதப்படுத்தவும், உலகில் சோஷலிசத்தின் நிலைகளை வலுப்படுத்தவும் மேன்மேலும் உதவ வேண்டுமென்று கட்சி கருதுகிறது.

பொருளாதாரக் கொள்கையை ஒத்திசைவிப்பது, பொருளாதார பரஸ்பரச் செயலாக்க முறையை நவீனமயப் படுத்துவது, அதன் புதிய வடிவங்களைத் தேடுவது, உற்பத்தித் தனித்துறைப்பாட்டையும் கூட்டுறவையும் வளர்ப்பது, திட்டங்களை ஒத்திசைவிப்பது, முற்போக்கு அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வது, கூட்டமைப்புகள், தொழில் நிறுவனங்களுக்கு இடையே நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துவது தொடர்பான சோதரக் கட்சிகளின் கூட்டுப் பணியில் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி தீவிரப் பங்கேற்கும். பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சிலின் பங்கை உயர்த்தவும், இருதரப்பு, பல்தரப்பு செயல்திட்டங்களின் அடிப்படையில் பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் கட்சி உதவும்.

சோஷலிச அரசுகளுக்கும் முதலாளித்துவ அரசுகளுக்கும்

இடையிலான சம உரிமையுள்ள, பரஸ்பர அனுகூலமான ஒத்துழைப்பை இயற்கையானதாக, பயனுள்ளதாக மதிப்பிடும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி, அதே நேரத்தில் சோஷலிச ஒருங்கிணைப்பின் வளர்ச்சியானது, ஏகாதிபத்தியத்தின் பகைமைச் செயல்கள், முதலாளித்துவத்திற்கே உரித்தான பொருளாதார நெருக்கடிகள், பிற தீயப் போக்குகளால் தொழில்நுட்ப, பொருளாதார ரீதியில் பாதிக்கப்படாமலிருப்பதை இன்னமும் வலுப்படுத்த வேண்டும் என்று கருதுகிறது.

சித்தாந்தத் துறையில், சோஷலிசக் கட்டுமான அனுபவம், உழைப்பாளிகளின் கம்யூனிச வளர்ப்பு அனுபவத்தைப் பயின்று பயன்படுத்துவது, மார்க்சிய-லெனினிய தத்துவத்தை வளர்ப்பது, அதன் புரட்சிகர சாரத்தைப் பேணிக் காத்து, ஆக்கபூர்வமான தன்மையை ஆழப்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட சோதரக் கட்சிகளின் முயற்சிகளை ஒன்றிணைக்க வேண்டுமென்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாடுபடுகிறது. கூட்டு சிந்தனையை வளர்ப்பதும், ஆன்மீக மதிப்புகளின் பரிமாற்றத்தை இடையறாது விரிவுபடுத்துவதும், விஞ்ஞான, கலாசாரத் துறையில் ஒத்துழைப்பும் சோஷலிச நாடுகளுக்கு இடையிலான நட்புறவை மேலும் வளர்க்கும்.

சோதர மக்களினங்களின் ஒற்றுமை, அவற்றின் வரலாற்று விதிகளின் பொதுமை பற்றிய உணர்வை வலுப்படுத்த கட்சி முன்போன்றே தொடர்ந்து பாடுபடும். சோஷலிசத்தைப் பற்றிய உண்மையைப் பரப்புதல், ஏகாதிபத்தியப் பிரசாரத்தை, அதன் கொள்கையை அம்பலப்படுத்தல், கம்யூனிச எதிர்ப்பிற்கும் சோவியத் எதிர்ப்பிற்கும் பதிலடி தருதல், வறட்டுத்தனம், சீர்திருத்தவாதக் கண்ணோட்டங்களுக்கு எதிராகப் போராடுதல்—கம்யூனிஸ்டுகள் ஓரணியில் திரண்டு நின்றால் இக்கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

**பிற சோதர கட்சிகளுடன் சேர்ந்து சோஷலிச முகாமின் ஒற்றுமையை வலுப்படுத்தி, அதன் வல்லமையையும் செல்வாக்கையும் பெருக்குவது தன் சர்வதேசியக் கடமை என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது.** முதலாளித்துவத்துடன் சோஷ

லிசம் நடத்தும் போட்டியின் போக்கும், உலக நாகரிகத்தின் எதிர்காலமும், சோஷலிச முகாமின் உறுதி, ஒவ்வொரு சோஷலிச நாட்டின் ஆக்கபூர்வமான நடவடிக்கையின் வெற்றி, செயல்முனைப்பு, அவற்றின் நடவடிக்கையின் சீரிசைவு ஆகியவற்றைப் பெரிதும் பொறுத்துள்ளன.

சமுதாயத்தின் உறுதியான முன்னேற்றத்திற்கும் சரி, நாடுகளுக்கு இடையிலான சீரிசைவான பரஸ்பர உறவுகளுக்கும் சரி இரண்டிற்கும் தேவையான எல்லா வாய்ப்புகளையும் சோஷலிச அமைப்பு தோற்றுவிக்கிறது என்று உலக சோஷலிச அமைப்பின் வளர்ச்சியனுபவம் காட்டுகிறது. ஆனால் மேற்கூறியவற்றில் எதுவும் தானாக வராது.

நாடுகளின் பொருளாதார, அரசியல் வளர்ச்சி மட்டங்களும், அவற்றின் வரலாற்று, கலாசாரப் பாரம்பரியங்களும், அவை வாழும் சூழ்நிலைகளும் வெவ்வேறானவை. சோஷலிச நாடுகளின் சமுதாய வளர்ச்சி எப்போதும் நேர்க்கோட்டில் நடைபெறுகிறது என்று கூற முடியாது. இவ்வளர்ச்சியின் ஒவ்வொரு பெரும் கட்டமும் புதிய சிக்கலான கடமைகளை முன்வைக்கிறது, இவற்றின் நிறைவேற்றமானது போராட்டம், தேட்டங்கள், முரண்பாடுகளையும் இடர்ப்பாடுகளையும் கடப்பது ஆகியவற்றுடன் தொடர்புடையது.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கருத்துப்படி இவையனைத்திற்கும் மாபெரும் கவனமும், நல்லெண்ணத்தோடு கருத்துகளை ஒப்பிடுவதும், செயல்முனைப்பான ஒருமைப்பாடும் தேவை, பொது நலன்களுக்குப் பங்கமேற்படுத்தவல்ல கருத்து வேறுபாடுகளுக்கான அடிப்படை தோன்றாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். கோட்பாட்டு ரீதியான பிரச்சினைகளில் நடவடிக்கைகளை ஒத்திசைவிப்பது, பரஸ்பரம் வெற்றிகளின் மீது தோழமை ரீதியான அக்கறை, ஏற்ற உறுதிமொழிகளைத் துல்லியமாக நிறைவேற்றுதல், தேசிய நலன்கள், பொது, சர்வதேசிய நலன்களை அவற்றின் அங்கக ரீதியான பரஸ்பரத் தொடர்பில் ஆழ்ந்து புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றிற்கு விசேஷ முக்கியத்துவமுண்டு.

புதிய சமுதாயம் தோன்றி வளர்ச்சி பெறுவதானது இரண்டு உலக அமைப்புகளுக்கு இடையில் கடும் போட்டி

நடக்கும் சூழ்நிலையில் நடைபெறுகிறது. சோஷலிசத்தின் நிலைகளை வலுக்குன்றச் செய்யவும் சோஷலிச அரசுகளின் பரஸ்பரத் தொடர்புகளை, எல்லாவற்றிற்கும் மேலாக சோவியத் ஒன்றியத்துடனான தொடர்புகளைக் குலைக்கவும் ஏகாதிபத்தியம் மிகப் பல்வேறான அரசியல், பொருளாதார, சித்தாந்த நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விடுகிறது, தோன்றக் கூடிய பிரச்சினைகளைத் தன் விருப்பப்படி பயன்படுத்த முயலுகிறது, தேசியவாத மனநிலைகளைச் சீர்குலைவு நோக்கங்களுக்குப் பயன்படுத்துகிறது. இத்தகையதொரு சூழ்நிலையில் சோஷலிச நாடுகளின் உறுதியான ஒற்றுமைக்கும் வர்க்க ஒருமைப்பாட்டிற்கும் குறிப்பாகப் பெரும் முக்கியத்துவம் உண்டென்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது.

மார்க்சிய-லெனினிய போதனையின் பால் ஆளும் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் காட்டும் விசுவாசம், அப்போதனையை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவது; பரவலான உழைக்கும் மக்கள் திரளினருடன் கட்சிகளுக்குள்ள உறுதியான தொடர்பு, அவற்றின் செல்வாக்கையும், சமுதாயத்திற்குத் தலைமை தாங்கும் பாத்திரத்தையும் வலுப்படுத்தல், கட்சி மற்றும் அரசியல் வாழ்க்கையில் லெனினிய வரையளவுகளைக் கறாராகப் பின்பற்றுதல், சோஷலிச மக்களாட்சியை வளர்த்தல்; எதார்த்த நிலவரத்தை நிதானமாக மதிப்பிடுதல், தோன்றக் கூடிய பிரச்சினைகளை உரிய நேரத்தில், விஞ்ஞான ரீதியில் தீர்த்தல்; சோஷலிச சர்வதேசியக் கோட்பாடுகளின் அடிப்படையில் பிற சோதர நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்தல் ஆகியவைதான் உலக சோஷலிசத்தின் வெற்றிகரமான முன்னோக்கிய இயக்கத்திற்கான மிக முக்கியக் காரணிகள் என்று சோவியத் ஒன்றியம், உலக சோஷலிசத்தின் அனுபவம் காட்டுகிறது.

சோஷலிச நாடுகளில் ஒவ்வொன்றிற்கும் எத்தகைய சிறப்பியல்புகள் இருந்தாலும், அவற்றின் பொருளாதார மட்டம், அளவுகள், வரலாற்று, தேசியப் பாரம்பரியங்கள் எப்படிப்பட்டவையாக இருந்தாலும் அவை எல்லாவற்றின் வர்க்க நலன்களும் ஒரே மாதிரியானவை. எது சோஷலிச

நாடுகளை இணைத்து, ஒன்றுசேர்க்கிறதோ அது, இந்நாடுகளைப் பிரிக்கக் கூடிய அம்சங்களை விட அளவிடற்கரிய விதத்தில் பெரியதும் முக்கியமானதுமாகும்.

சோஷலிச நாடுகள் சம உரிமையை முழுமையாகக் கடைபிடித்து, தேசிய நலன்களைப் பரஸ்பரம் மதித்து மேன் மேலும் ஒன்றையொன்று பரஸ்பரம் புரிந்து, நெருங்கி வரும் பாதையில் நடை போடும் என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுதியாக நம்புகிறது. வரலாற்று ரீதியில் முற்போக்கான இந்நிகழ்ச்சிப் போக்கிற்குக் கட்சி உதவும்.

## 2. விடுதலையடைந்த நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்தல்

முன்னாள் காலனி, அரைக் காலனி நாடுகளின் விஷயத்தில் தன் கொள்கையை நிர்ணயிக்கும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி, முன்னர் அடிமைப்படுத்தப்பட்ட மக்களினங்கள் சுதந்திரப் பாதையில் அடியெடுத்து வைப்பதும், பல டஜன் புதிய அரசுகள் தோன்றுவதும், உலக அரசியலிலும் பொருளாதாரத்திலும் இவற்றின் பங்கு அதிகரிப்பதும் நவீன சகாப்தத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று என்பதை அடிப்படையாகக் கொள்கிறது.

வி. இ. லெனின் கணித்துக் கூறியபடி, மனிதகுலத்தின் எதிர்காலத்தில் விடுதலையடைந்த மக்களினங்கள் பெரும் பங்காற்றுவர். இம்மக்களினங்களின் அதிகரித்து வரும் செல்வாக்கு சமாதானம், சமூக முன்னேற்றத்திற்கு மேன்மேலும் உதவ வேண்டும் என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாடுபடுகிறது.

விடுதலையடைந்த நாடுகளுடன் சோவியத் ஒன்றியத்திற்கு உள்ள தொடர்புகளை விரிவுபடுத்துவது, கடினமான, இழிகேடான காலனியாதிக்கக் கொடுமைக்கு ஆளான மக்களினங்களின் நாட்டங்களை ஆழ்ந்தஅனுதாபத்துடன் அணுகுவது என்ற கொள்கையைக் கட்சி தொடர்ச்சியாகப் பின்பற்றுகிறது. இந்நாடுகளின் சுதந்திரத்தையும் சம உரிமையையும்

கறாராக மதிப்பதன் அடிப்படையில் சோவியத் ஒன்றியம் இவற்றுடன் தன் தொடர்புகளை வைத்திருக்கிறது, ஏகாதிபத்தியத்தின் நவீன காலனியாதிக்கக் கொள்கைக்கு எதிராயும், காலனியாதிக்க மிச்சங்களுக்கு எதிராயும், சமாதானம், சர்வபொது பாதுகாப்பிற்காகவும் இந்நாடுகள் நடத்தும் போராட்டத்தை ஆதரிக்கிறது.

சோஷலிசத் திசையமைவு நாடுகளுடனான ஒருமைப்பாடு, அரசியல், பொருளாதார ஒத்துழைப்பிற்குக் கட்சி பெரும் முக்கியத்துவமளிக்கிறது. ஒவ்வொரு மக்களினமும் பெரும்பாலும், புதிய சமுதாயத்தைக் கட்டுவதற்குத் தேவையான பொருளாயத, தொழில்நுட்ப அடித்தளத்தைத் தன் சொந்த முயற்சிகளாலேயே உருவாக்குகிறது, மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் கலாசாரத்தையும் உயர்த்துகிறது. இப்பாதையில் நடைபோடும் மக்களினங்களுக்குப் பொருளாதார, கலாசாரக் கட்டுமானத்திலும், தேசிய ஊழியர்களைப் பயிற்றுவிப்பதிலும், தற்காப்பு வல்லமையை அதிகரிப்பதிலும் பிற துறைகளிலும் சோவியத் ஒன்றியம் தன்னாலியன்ற வரை உதவி வந்துள்ளது, இனியும் உதவும்.

விடுதலையடைந்த நாடுகளின் புரட்சிகர ஜனநாயக கட்சிகளுடன் உள்ள தொடர்புகளை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி வளர்த்து ஆழப்படுத்துகிறது. குறிப்பாக, எந்தக் கட்சிகள் விஞ்ஞான சோஷலிசத்தின் அடிப்படையில் தம் நடவடிக்கையை அமைக்க முயலுகின்றனவோ அவற்றுடன் நெருங்கிய ஒத்துழைப்பு நிலவுகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு, நாட்டுப்பற்று நிலையை வகிக்கும் எல்லா தேசிய முற்போக்கு கட்சிகளுடனும் தொடர்புகளை வளர்க்க சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி விரும்புகிறது.

விடுதலையடைந்த நாடுகளுடன் சோவியத் ஒன்றியத்திற்குள்ள உறவுகளின் நடைமுறை, முதலாளித்துவப் பாதையில் செல்லும் இளம் அரசுகளுடனும் ஒத்துழைக்க எதார்த்த அடிப்படை உள்ளது என்று காட்டுகிறது. சமாதானத்தைப் பேணிக் காப்பதிலும், சர்வதேசப் பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், ஆயுதப் போட்டியை நிறுத்துவதிலும் உள்ள பொது அக்கறை; மக்களினங்களின் நலன்களுக்கும்

ஏகாதிபத்திய அதிகார, விஸ்தரிப்பு கொள்கைக்கும் இடையில் கூர்மையடைந்து வரும் முரண்பாடு; சோவியத் ஒன்றியத்துடனான அரசியல், பொருளாதாரத் தொடர்புகள் தம் சுதந்திரத்தை வலுப்படுத்த உதவும் என்பதை இளம் அரசுகள் புரிந்து கொள்வது ஆகியவைதான் இந்த அடிப்படையாகும்.

விடுதலையடைந்த நாடுகளிடையே எப்படிப்பட்ட வேறுபாடுகள் நிலவினாலும், இவை எந்தப் பாதையில் நடைபோட்டாலும், சுயமாக வளர வேண்டும், அன்னியத் தலையீடின்றி தம் பிரச்சினைகளைத் தாமே தீர்க்க வேண்டும் என்ற நாட்டம் இவற்றை இணைக்கிறது. சோவியத் ஒன்றியம் இந்நாடுகளுடன் முழுக்க முழுக்க ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கிறது. விடுதலையடைந்த நாடுகள் தம் எதிர்காலத்தை நிர்ணயிப்பதும், சமூக அமைப்பைத் தேர்ந்தெடுப்பதும் அவற்றின் புனித உரிமை என்பது சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொறுத்த மட்டில் மறுக்க முடியாதது ஆகும்.

ஏகாதிபத்தியம், பன்னாட்டு ஏகபோகங்களின் ஒடுக்கு முறைக்கு எதிராக, சொந்த வளங்களைத் தாமே தம் விருப்பப்படி பயன்படுத்தும் சுய உரிமையை நிலைநாட்டுவதற்காக, சமமான, ஜனநாயக அடிப்படையில் சர்வதேச உறவுகளைச் சீரமைப்பதற்காக, புதிய சர்வதேசப் பொருளாதார முறையைத் தோற்றுவிப்பதற்காக, ஏகாதிபத்தியவாதிகள் திணித்த கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்காக ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் நடத்தும் நியாயமான போராட்டத்தை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஆதரிக்கிறது.

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புச் சக்திகளின் தாக்குதல்களை முறியடித்து, தம் விடுதலை, சுதந்திரம், தேசிய மேன்மையைக் காத்து நிற்கும் மக்கள், அரசுகளின் தரப்பில் சோவியத் ஒன்றியம் நிற்கிறது. இவர்களுடன் ஒருமைப்பாடு தெரிவிப்பது என்பது நம் காலத்தில் சமாதானம், சர்வதேசப் பாதுகாப்பிற்கான பொதுப் போராட்டத்தின் முக்கிய அங்கமும் ஆகும். இன்னமும் நிறவெறியின் கீழ் அல்லலுற்று, இனவெறி முறைக்குப் பலியாகி வரும் மக்களினங்களின் போராட்டத்

திற்கு ஆதரவு தருவதென்பது தன் சர்வதேசியக் கடமை யென்று கட்சி கருதுகிறது.

கூட்டுச் சேரா இயக்கத்தின் இலட்சியங்கள், நடவடிக் கையை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி நன்கு புரிந்து கொண்டு, உலக அரசியலில் அதன் பங்கு அதிகரிக்க வேண்டும் என்று விரும்புகிறது. ஆக்கிரமிப்பு, மேலாதிக்க வாதத்திற்கு எதிராக, விவாதங்கள், சச்சரவுகளைப் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்ப்பதற்காகக் கூட்டுச் சேரா நாடுகள் நடத்தும் போராட்டத்தில் சோவியத் ஒன்றியம் முன்போன்றே தொடர்ந்து அவற்றின் தரப்பில் நிற்கும், இந்நாடுகள் இராணுவ, அரசியல் குழுக்களில் இழுக்கப்படு வதை எதிர்க்கும்.

விடுதலையடைந்த நாடுகள் சர்வதேச விவகாரங்களில் முழு உரிமையோடு பங்கேற்க வேண்டும், நவீன காலத்தின் முக்கியப் பிரச்சினைகளின் தீர்வில் இவற்றின் பங்கேற்பு அதிகரிக்க வேண்டுமென்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி விரும்புகிறது. சோஷலிச நாடுகளுடன் இவற்றிற்கு உள்ள பரஸ்பர உறவு மக்களினங்களின் சுதந்திரத்தை வலுப்படுத்துவதிலும் சர்வதேச உறவுகளைச் சீரமைப்பதி லும் சமாதானத்தைப் பேணிக் காப்பதிலும் பெரிதும் முக்கியமானதாகும்.

**சமூக முன்னேற்றச் சக்திகளுக்கும் தேசிய விடுதலைச் சக்தி களுக்கும் இடையிலான கூட்டுதான் மனிதகுலத்தின் தலைசிறந்த எதிர்காலத்திற்கான அடிப்படை ஆகும்.**

### 3. முதலாளித்துவ நாடுகளுடனான உறவுகள். உறுதியான சமாதானம், படைக்கலைப்பிற்கான போராட்டம்

நவீன உலகம் இரண்டு எதிரெதிரான சமூக அமைப்பு களாகப் பிரிக்கப்பட்டுள்ளது, இவற்றிற்கு இடையிலான வரலாற்று விவாதத்தை சமாதான வழியில் தீர்க்க முடியும், தீர்க்க வேண்டும் என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது. சோஷலிசம் தன் மேம்பாடுகளை ஆயுதத்தின் மூலம் அல்ல, சமுதாய வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தன் எடுத்துக்காட்டால்—பொருளாதாரம்,

விஞ்ஞானம், கலாசாரத்தின் சீரிசைவான வளர்ச்சியால், உழைப்பாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதால், சோஷலிச ஜனநாயகத்தை வளர்ப்பதால்—மெய்ப்பிக்கிறது.

எதிர்காலம் சோஷலிசத்திற்கு உரியதென்று சோவியத் கம்யூனிஸ்டுகள் உறுதியாக நம்புகின்றனர். சமூக, தேசிய இன ஒடுக்குமுறையிலிருந்து விடுவிக்கப்பட்ட, உண்மையான சம உரிமைகளும் ஜனநாயகமும் நிலவும் சமுதாயத்தில் வாழ ஒவ்வொரு மக்களினத்திற்கும் உரிமையுண்டு. சுரண்டலிலிருந்தும் அநீதியிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்வதென்பது ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் தனியுரிமையாகும். புரட்சி என்பது ஒவ்வொரு குறிப்பிட்ட நாட்டிலும் நடைபெறும் சமூக வளர்ச்சி, வர்க்கப் போராட்டத்தின் நியதியான விளைவாகும். புரட்சியை ''ஏற்றுமதி'' செய்வதும், அதை வெளியிலிருந்து யார் மீதாவது திணிப்பதும் கோட்பாட்டு ரீதியில் ஏற்புடையதன்று என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி கருதியது, கருதுகிறது. அதே நேரத்தில் எதிர்ப்புரட்சி எந்த ஒரு வடிவத்தில் ''ஏற்றுமதி'' செய்யப்பட்டாலும் அது மக்களினங்களின் சுதந்திரமான விருப்பு வெறுப்புகளையும், தம் வளர்ச்சிப் பாதையைத் தாமே தேர்ந்தெடுக்க அவர்களுக்குள்ள உரிமையையும் முரட்டுத்தனமாக மீறுவதாகும். வரலாற்றுப் போக்கை வலுக்கட்டாயமாகத் தடுத்து நிறுத்தி, பின்னோக்கித் திருப்ப செய்யப்படும் முயற்சிகளை சோவியத் ஒன்றியம் உறுதியோடு எதிர்க்கிறது.

அரசுகளுக்கு இடையிலான உறவுகள் சமாதானப் போட்டி, சம உரிமையுள்ள ஒத்துழைப்புப் பாதையில் செலுத்தப்பட வேண்டுமென்று மக்களினங்களின் நலன்கள் கோருகின்றன.

**வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசுகளின் சமாதான சகவாழ்வு பற்றிய லெனினிய கோட்பாட்டை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுதியோடும் தொடர்ச்சியாகவும் காத்து நிற்கிறது.** சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கட்சி பின்வருமாறு புரிந்து கொள்கிறது: யுத்தங்களை நிராகரித்தல், சச்சரவுகளுக்குத் தீர்வு காண பலத்தையோ பல அச்சுறுத்தலையோ ஒரு வழியாகப் பயன்படுத்துவதைக் கைவிடுதல், இச்சச்சரவு

களைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்தல்; பிறருடைய உள் விவகாரங்களில் தலையிடாதிருத்தல், பரஸ்பரம் ஒவ்வொருவரின் சட்டபூர்வமான நலன்களைக் கவனத்தில் கொள்ளுதல், தம் எதிர்காலத்தைப் பற்றி தாமே சுயமாக முடிவு செய்து கொள்ள மக்களினங்களுக்கு உள்ள உரிமை; அரசுகளின் அரசுரிமை, பிரதேச முழுமையையும், அவற்றின் எல்லைகள் மீறப்படாமையையும் கறாராக மதித்தல்; முழு சமத்துவம், பரஸ்பர அனுகூலத்தின் அடிப்படையில் ஒத்துழைப்பு; பொதுவில் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகள், சர்வதேச சட்ட வரையளவுகள், சர்வதேச ஒப்பந்தங்களி லிருந்து வரும் உறுதிமொழிகளை நேர்மையாக நிறை வேற்றுதல்.

இவற்றின் அடிப்படையில்தான் சோவியத் ஒன்றியம் முதலாளித்துவ அரசுகளுடன் தன் உறவுகளை அமைத்துக் கொள்கிறது. இவை சோவியத் ஒன்றியத்தின் அரசிய லமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, எல்லோராலும் பின்பற்றப்படும் சர்வதேச உறவுகளின் வரையளவு என்ற வகையில் சமாதான சகவாழ்வுக் கோட்பாடு எல்லா இடங் களிலும் நிலைபெற சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி செயல்முனைப்போடு பாடுபடும். இரண்டு அமைப்புகளுக்கு இடையிலான சித்தாந்த முரண்பாடுகள் இத்துறைகளுக்குள் புகும்படி விடக் கூடாது என்று கட்சி கருதுகிறது.

சர்வதேசப் பதட்டத் தணிவுப் போக்கைச் சர்வபொது, நம்பகரமான பாதுகாப்பு முறையை ஏற்படுத்தும் பாதையில் ஒரு இயற்கையான, அவசியமான கட்டமாகக் கருதி, அதை மேலும் வளர்க்க கட்சி பாடுபடும். ஏற்கெனவேயுள்ள ஒத் துழைப்பு அனுபவம் இப்படிப்பட்ட வாய்ப்பு நிறைவேற்றத் தக்கது என்று மெய்ப்பிக்கிறது. தேசிய, அரசு நலன்களையும் பொது மானுட நலன்களையும் சாலச்சிறந்த வகையில் இணைக்கக் கூடிய சர்வதேசிய முறைகள், நிறுவனங்களைத் தோற்றுவித்து பயன்படுத்த வேண்டுமென்று கட்சி விரும்பு கிறது. சமாதானத்தை வலுப்படுத்துவதிலும் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதிலும் ஐக்கிய நாடுகள் சபையின் பங்கை அதிகரிக்க வேண்டுமென்று கட்சி விரும்புகிறது.

உலக நிலவரத்திற்கான விசேஷ பொறுப்பு அணு ஆயுத வல்லரசுகளைச் சாரும். அணு ஆயுதங்களையும் பிற பேரழிவு ஆயுதங்களையும் வைத்துள்ள அரசுகள் அவற்றைப் பயன்படுத்துவதையும் பயன்படுத்துவதாக அச்சுறுத்துவதையும் கைவிட வேண்டும், சர்வதேச நிலவரத்தைச் சீர்கேடாக்க இட்டுச் செல்லும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலிருக்க வேண்டும்.

**சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் இடையில் சாதாரண, நிலையான உறவுகள் நிலவ வேண்டுமென்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி விரும்புகிறது;** உள்விவகாரங்களில் தலையிடாமை, ஒவ்வொருவரின் நியாயமான நலன்களைப் பரஸ்பரம் மதித்தல், சமத்துவம், சமமான பாதுகாப்பு என்னும் கோட்பாட்டை அங்கீகரித்து நடைமுறையில் நிறைவேற்றுதல், இதன் அடிப்படையில் இயன்ற அளவு அதிகமாக பரஸ்பர நம்பிக்கையை நிலைநாட்டுதல் ஆகியவற்றை இவை முன்னனுமானிக்கின்றன. சமூக முறைகள், சித்தாந்தங்களின் வேறுபாடுகள் பதட்டமான உறவுகளுக்கு இட்டுச் செல்லக் கூடாது. பல்வேறு துறைகளில் பயனுள்ள பரஸ்பரம் அனுகூலமான சோவியத்-அமெரிக்க ஒத்துழைப்பை நிலைநாட்ட புறவய ரீதியான முன்தேவைகள் நிலவுகின்றன. சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நம்பிக்கையின் படி, இரண்டு வல்லரசுகளின் கொள்கையும் பரஸ்பரம் புரிந்து கொள்வதன் அடிப்படையில்தான் அமைய வேண்டுமேயன்றி, பகைமையின் அடிப்படையில் அல்ல; இப்பகைமை சோவியத் மக்களுக்கும் அமெரிக்க மக்களுக்கும் மட்டுமின்றி பிற மக்களினங்களுக்கும் பேரழிவான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

கடினமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைத் தேடுவதிலும், சச்சரவுகளைச் சீர்படுத்துவதிலும், பதட்ட நிலையைக் குறைத்து ஆயுதப் போட்டியை மட்டுப்படுத்துவதிலும் சிறிய, பெரிய அரசுகள் அனைத்தும்—அவற்றின் உள்ளாற்றல், பூகோள நிலை, சமூக அமைப்பு எப்படிப்பட்டவையாக இருந்தாலும் சரி—பங்கேற்க வேண்டுமென்று கட்சி நம்புகிறது.

**ஐரோப்பிய அரசுகளுடன் சமாதான நல்லண்டை உறவுகளை**

யும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதற்கு சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி பெரும் முக்கியத்துவமளிக்கிறது. இங்கும்—பிற பிரதேசங்களைப் போல—நல்ல நிகழ்ச்சிப் போக்குகள் நிலையாக இருப்பதற்கான கண்டிப்பான நிபந்தனை, இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் உருவான பிரதேச, அரசியல் எதார்த்தங்களை மதிப்பதாகும். எந்த ஒரு சாக்கு போக்கைக் கூறியும் இந்த எதார்த்தங்களை மறுபரிசீலனை செய்ய மேற்கொள்ளப்படும் முயற்சிகளை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுதியோடு எதிர்க்கும், பழிவாங்கும் போக்கின் எந்த ஒரு வெளிப்பாட்டிற்கும் பதிலடி தரும்.

சோவியத் ஒன்றியத்தின் முன்முயற்சியோடும் தீவிரப் பங்கேற்போடும் ஆரம்பமான ஐரோப்பிய பாதுகாப்பு, நம்பிக்கை, சமாதான ஒத்துழைப்பைத் துரிதப்படுத்தும் போக்கை மேலும் வளர்த்து விரிவாக்கவும், உலகம் முழுவதும் பரப்பவும் கட்சி தொடர்ச்சியாகப் பாடுபடும். ஆசியாவில் பாதுகாப்பை நிலைநாட்டவும், இப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வைக் கூட்டாகத் தேடவும், அக்கறையுள்ள எல்லா அரசுகளின் முயற்சிகளையும் ஒன்றிணைக்க வேண்டுமென்று கட்சி விரும்புகிறது. ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, பசிபிக் மாகடல் பகுதி, இந்தியப் பெருங்கடல் பகுதி ஆகியவை சமாதானம், நல்லண்டை உறவுகளின் மண்டலங்களாக முடியும், ஆக வேண்டும்.

முழு சம உரிமை, பரஸ்பர அனுகூலத்தின் அடிப்படையில் பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பத் துறையில் எல்லா அரசுகளுடனும் பரவலான, நீண்டகால, நிலையான தொடர்புகளை வளர்க்க வேண்டுமென்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி விரும்புகிறது. சமாதானத்தையும், வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசுகளுக்கு இடையிலான சமாதான சகவாழ்வையும் வலுப்படுத்த உதவும் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு பெரும் அரசியல் முக்கியத்துவத்தை உடையது. சோவியத் ஒன்றியம் சகல விதமான பாகுபாட்டு வடிவங்களையும், வர்த்தக, பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்பத் தொடர்புகளை நிர்ப்பந்த சாதனமாகப் பயன்படுத்துவதை

யும் நிராகரிக்கிறது, அரசுகளின் பொருளாதாரப் பாதுகாப்பிற்கு வகை செய்ய பாடுபடும்.

எல்லா நாடுகளுக்கும் இடையில் உண்மையான கலாசார மதிப்புகள் பரவலாகப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்பட வேண்டுமென்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி விரும்புகிறது. இத்தகையப் பரிமாற்றம் மனிதாபிமான இலட்சியங்களுக்கு—மக்களினங்களின் ஆன்மீகச் செழுமைக்கும், சமாதானம், நல்லண்டை உறவுகளை வலுப்படுத்தவும்—உதவ வேண்டும்.

20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குறிப்பாக கடினமானவையாகி, மனிதகுலம் முழுவதற்கும் ஜீவாதார முக்கியத்துவமுடையவையாக மாறியுள்ள உலகப் பிரச்சினைகளின் தீர்வில் பிற நாடுகளுடன் சோவியத் ஒன்றியம் ஒத்துழைக்கும். புறச்சூழல் பாதுகாப்பு, எரிசக்தி, மூலப் பொருள், உணவுப் பொருள், மக்கள் தொகைப் பிரச்சினைகள், சமாதான விண்வெளி ஆராய்ச்சி, உலக கடல்களின் வளங்களை ஆராய்தல், பல விடுதலையடைந்த நாடுகளின் பொருளாதாரப் பின்தங்கிய நிலையை அகற்றுதல், ஆபத்தான நோய்களை அகற்றுதல் போன்றவை மேற்கூறிய உலகப் பிரச்சினைகளில் அடங்கும். இவற்றிற்குத் தீர்வு காண எல்லா அரசுகளின் கூட்டு முயற்சி வேண்டும். ஆயுதப் போட்டிக்காக சக்திகளையும் சாதனங்களையும் செலவிடுவது குறைந்தால் இது கணிசமான அளவு இலகுவாகும்.

மனிதகுலத்தின் நலன் கருதி, எல்லா மக்களினங்களின் நலன் கருதி **சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசும் ஆயுதப் போட்டியை நிறுத்துதல், படைக்கலைப்பு, சமாதானம், பாதுகாப்பை ஏற்படுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பரவலான, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அடங்கிய செயல்திட்டத்தை முன்வைக்கின்றன.**

கறாரான, பன்முக சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் சர்வபொது, முழு படைக்கலைப்பை ஒரு வரலாற்றுக் கடமையாக கருதி, அதன் நிறைவேற்றத்திற்காகப் போராடும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி பின்வருபவற்றிற்காகத் தொடர்ச்சியாகப் பாடுபடும்:

—இராணுவத் தயாரிப்புகளை, குறிப்பாகப் பேரழிவு

ஆயுதங்களுடன் தொடர்புடைய இராணுவத் தயாரிப்புகளை மட்டுப்படுத்தி குறைத்தல். முதலில் விண்வெளிப் பரப்பை முழுமையாக இதிலிருந்து அகற்றி, அது இராணுவப் போட்டிக் களமாக, மரணம், அழிவிற்கான மூல ஊற்றாக மாறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். விண்வெளி ஆராய்ச்சியும் விண்வெளியைப் பயன்படுத்துவதும் சமாதான நோக்கங்களுடன், விஞ்ஞானத்தையும் உற்பத்தியையும் வளர்ப்பதற்காக, எல்லா மக்களினங்களின் தேவைகளுக் கேற்ப மட்டுமே நடைபெற வேண்டும். இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கூட்டு முயற்சிகள் வேண்டுமென்று விரும் பும் சோவியத் ஒன்றியம் இத்தகைய சர்வதேச ஒத்துழைப் பில் செயல்முனைப்போடு பங்கேற்கும். அணு ஆயுதங்கள் பரவாமலிருக்கவும், அணு ஆயுதமோ வேறு விதமான பேரழிவு ஆயுதங்களோ இல்லாத மண்டலங்களை ஏற் படுத்தவும் உதவக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சோவியத் ஒன்றியம் பாடுபடும்;

—அணு ஆயுதச் சோதனைகளையும் அதன் உற்பத்தி யையும் நிறுத்துதல், தாம் முதலில் அணு ஆயுதத்தைப் பயன் படுத்துவதில்லையென்று எல்லா அணு ஆயுத வல்லரசுகளும் முடிவு செய்தல், அணு ஆயுதத் தளவாடங்களை முடக்கி, குறைத்து, ஒழித்துக் கட்டுதல் ஆகியவற்றின் மூலம் 20ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் படிப்படியாக அணு ஆயுதங்களை முழுமையாக ஒழித்துக் கட்டுதல்;

—இரசாயன ஆயுதங்கள் உட்பட பிற வகையான பேரழிவு ஆயுதங்களின் உற்பத்தியை நிறுத்தி, அவற்றை அழித்தல், இத் தகைய புதிய வகையான ஆயுதங்களைத் தோற்றுவிப்பதைத் தடை செய்தல்;

—அரசுகளின் இராணுவத்தைக் குறைத்தல், முதலாவதாக ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர உறுப்பு நாடுகள், இவற்றுடன் இராணுவ உடன்படிக்கைகளை வைத்துள்ள நாடுகள் ஆகியவற்றின் இராணுவத்தைக் குறைத்தல், சாதாரண ஆயுதங்களை மட்டுப்படுத்தல், தம் தாக்கும் சக்தியில் பேரழிவு ஆயுதங்களை ஒத்த புதிய வகையான ஆயுதங்களைத் தோற்றுவிப்பதை நிறுத்துதல், இராணுவச் செலவுகளைக் குறைத்தல்;

—பூமியின் வெடிப்பு அபாயம் மிகுந்த பிரதேசங்களில் துருப்புகளையும் ஆயுதங்களையும் முடக்கி குறைத்தல், அன்னிய பரப்புகளில் இராணுவத் தளங்களை அகற்றுதல், பரஸ்பர நம்பிக்கையை வலுப்படுத்தல், தற்செயல் இராணுவ மோதல்கள் உட்பட பொதுவில் இராணுவ மோதல்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைத்தல் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

உலகம் இராணுவ, அரசியல் குழுக்களாகப் பிளவுண்டு கிடப்பதற்கு முடிவு கட்ட முயல வேண்டும் என்பதுதான் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலையாகும். நேட்டோவும் வார்சா ஒப்பந்த ஸ்தாபனமும் ஒரே நேரத்தில் கலைக்கப்பட வேண்டும், அல்லது முதல் நடவடிக்கையாக இவற்றின் இராணுவ ஸ்தாபனங்கள் கலைக்கப்பட வேண்டும் என்று கட்சி விரும்புகிறது. இராணுவக் கூட்டுகளுக்கு எதிரான மோதல் நிலையைக் குறைக்கும் பொருட்டு சோவியத் ஒன்றியம், இக்கூட்டுகள் பரஸ்பரம் பலத்தைப் பயன்படுத்துவதில்லை, சமாதானத்தைப் பேணிக் காப்பது என்று ஒப்பந்தம் செய்து கொள்ளலாம், இந்த ஒப்பந்தத்தில் பிற அரசுகளும் சேர்ந்து கொள்ளலாம் என்று முன்மொழிகிறது.

ஆயுதங்களை மட்டுப்படுத்துவது, யுத்த அபாயத்தை அகற்றுவது சம்பந்தமான பிரச்சினைகள் சமத்துவம், சமமான பாதுகாப்பின் அடிப்படையில், நேர்மையான, கறாராகப் பின்பற்றப்படும் ஒப்பந்தங்களின் மூலம் தீர்க்கப்படவும், ''பலத்தின் நிலையில்'' பேச்சுவார்த்தைகளை நடத்தச் செய்யப்படும் எந்த ஒரு முயற்சியையும், பேச்சுவார்த்தைகளைத் திரையாகக் கொண்டு ஆயுதங்களைப் பெருக்க செய்யப்படும் எந்த ஒரு முயற்சியையும் அகற்றவும் கட்சி முயற்சிகளை மேற்கொள்ளும்.

சோவியத் அரசும் அதன் கூட்டு நாடுகளும் இராணுவ மேம்பாட்டை அடைய முயலவில்லை, ஆனால் அதே நேரத்தில், உலக அரங்கில் நிலவும் இராணுவப் போர்த்தந்திரச் சமன்பாட்டைக் குலைக்கவும் அவை விடா. அதே பொழுது அவை, இச்சமன்பாட்டின் மட்டம் இடையறாது குறைய வேண்டும், இரு தரப்பிலும் ஆயுதங்களின்

எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும், எல்லா மக்களினங் களுக்கும் பாதுகாப்பு நிலவ வேண்டும் என்பதற்காகத் தொடர்ச்சியாகப் பாடுபடும்.

**பரஸ்பர அடிப்படையில், உண்மையான கண்காணிப்பைப் பயன்படுத்தி எந்த ஒரு ஆயுதத்தையும் மட்டுப்படுத்தவும் தடை செய்யவும் சோவியத் ஒன்றியம் தயார் என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி அறிவிக்கிறது.**

எந்த ஒரு நாட்டின்—அது மேற்கேயிருந்தாலும் சரி, கிழக்கிலிருந்தாலும் சரி — பாதுகாப்பையும் சோவியத் ஒன்றியம் பறிக்கவில்லை. அது யாரையும் அச்சுறுத்தவில்லை, எந்த ஒரு அரசுடனும் மோத முயலவில்லை, எல்லா நாடு களுடனும் சமாதானமாக வாழவே விரும்புகிறது. மாபெரும் அக்டோபர் புரட்சியிலிருந்து சோவியத் சோஷலிச அரசு சமாதானம், நட்புறவுப் பதாகையை உயரே ஏந்திச் செல் கிறது. சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி லெனினிய பதாகையின் பாலான இவ்விசுவாசத்தைத் தொடர்ந்து பேணிக் காக்கும்.

**4. உலகத் தொழிலாளர், கம்யூனிச இயக்கத்தில் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி**

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி—சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒரு அங்கமாகும். சோஷலிச சமு தாயத்தை மேம்படுத்தி, கம்யூனிசத்தை நோக்கி நடை போடும் தன் நடவடிக்கையைக் கட்சி மிக முக்கிய சர்வ தேசியக் கடமையாகக் கருதுகிறது; இக்கடமையின் நிறை வேற்றம் உலக சோஷலிச அமைப்பு, சர்வதேசத் தொழிலா ளர் வர்க்கம், மனிதகுலம் முழுவதன் நலன்களுக்கு ஏற்றது.

எப்போதுமே சமூக, தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக மிகத் தொடர்ச்சியாகப் போராடி வந்துள்ள கம்யூ னிஸ்டுகள் இன்று பூமியில் சமாதானத்தைப் பேணிக் காக்க, மனிதர்களின் வாழும் உரிமைக்கான போராட்டத்தில் முன்னணியில் நிற்கின்றனர். அவர்கள் இராணுவ அபாயத் தின் காரணங்களைத் தெட்டத்தெளிவாகப் புரிந்து கொள் கின்றனர், சர்வதேசப் பதட்டநிலையும் ஆயுதப் போட்டியும்

அதிகரிப்பதற்கான உண்மைக் குற்றவாளிகளை அம்பலப் படுத்துகின்றனர், யுத்த எதிர்ப்புப் போராட்டத்தில் பங்காற்ற வல்ல எல்லோருடனும் ஒத்துழைக்க முயலுகின்றனர்.

சோஷலிசம் நிலவாத நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் சிக்கலான, முரண்பாடான சூழ்நிலையில் செயல்படுவதை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி கவனத்தில் கொள்கிறது. இவை போராடும் சூழ்நிலைகளும் இவற்றின் போராட்ட வடிவங்களும் மிகப் பல்வேறானவை. ஆனால் இது இயக்கத்தைச் சுருக்கவில்லை, மாறாக வாய்ப்புகளை விரிவுபடுத்துகிறது. நடவடிக்கையின் பன்முகத் தன்மையானது தேசிய சிறப்பியல்பு, திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலை, பல்வேறு சமூகக் குழுக்கள், மக்கள் பிரிவினரின் நலன்களை நன்கு கவனத்தில் கொள்ள கம்யூனிஸ்டுகளுக்கு உதவுகிறது.

ஒவ்வொரு நாட்டிலுள்ள கம்யூனிஸ்டுகளும் நிலவரத்தைச் சுயமாகப் பகுப்பாய்வு செய்து மதிப்பிடுகின்றனர், தம் செயல்திட்டத்தையும் கொள்கையையும், உடனடி மற்றும் இறுதி நோக்கங்கள், கம்யூனிச இலட்சியங்களை அடைவதற்கான போராட்ட வழிகளையும் தாமே நிர்ணயிக்கின்றனர் என்பதை ஆதாரமாகக் கொள்கிறது சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி. கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குக் கிட்டியுள்ள அனுபவம் பெரும் மதிப்புள்ள சர்வதேசிய சொத்தாகும்.

அயல் நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரச்சினைகளையும் அனுபவத்தையும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி, கவனமாகப் பயிலுகிறது. தம்முடைய செயல்திட்டம், செயல்தந்திரத்தை மேம்படுத்தவும், ஏகபோக எதிர்ப்பு, யுத்த எதிர்ப்பு இயக்கங்களின் அடிப்படையில் வர்க்கக் கூட்டுகளை விரிவுபடுத்தவும், ஜனநாயகத்திற்கான போராட்டம் சோஷலிசத்திற்கான போராட்டத்தின் ஒரு பகுதி என்பதன் அடிப்படையில் உழைப்பாளிகளின் பொருளாயத நலன்களையும் அரசியல் உரிமைகளையும் காத்து நிற்கவும் இக்கட்சிகளுக்கு உள்ள நாட்டத்தை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி புரிந்து கொள்கிறது.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஏகாதிபத்திய வட்டங்கள்,

சோஷலிசம், ஜனநாயகச் சக்திகளுக்கு எதிரான தம் நடவடிக்கைகளை நெருக்கமாக ஒத்திசைவிக்கின்றன, ஒரு சில கம்யூனிஸ்டுக் கட்சிகளை வேறு சிலவற்றிற்கு எதிராக நிறுத்த முயலுகின்றன. இச்சூழ்நிலையில் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம், கம்யூனிஸ்டுகளின் தோழமை ரீதியான ஒருமைப்பாட்டின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது.

தனிப்பட்ட பிரச்சினைகளில் நிலவும் கருத்து வேறுபாடுகள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சர்வதேசிய ஒத்துழைப்பிற்கோ, அவற்றின் ஒற்றுமையான நடவடிக்கைகளுக்கோ இடையூறாக இருக்கக் கூடாதென்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது.

தனிப்பட்ட பிரச்சினைகளில் கருத்து வேறுபாடுகள் தோன்றும் பொழுது, ஒவ்வொருவரின் கருத்துகளை நன்கு புரிந்து கொள்ளவும், பரஸ்பர ஏற்புடைய மதிப்பீடுகளைச் செய்யவும் தோழமை ரீதியான விவாதங்களை நடத்துவது பயனுள்ளதாயிருக்குமென்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது. மார்க்சிய-லெனினியத்தின் புரட்சி சாரம், எதார்த்த சோஷலிசத்தின் சாரம், பங்கேற்பு ஆகியவை சம்பந்தப்பட்ட விஷயங்களில் கட்சி கோட்பாட்டு நிலைகளை முன் போன்றே தொடர்ந்து உறுதியோடு காத்து நிற்கும். கம்யூனிஸ்டுகளுடைய நடவடிக்கையின் வர்க்க உள்ளடக்கத்தைக் குலைக்கவும், இலட்சியங்களின் புரட்சித் தன்மையையும் அவற்றை அடையும் போராட்ட வழிகளையும் திரிக்கவும் செய்யப்படும் சகலவித முயற்சிகளின் பாலான கட்சியின் அணுகுமுறையும் இதனாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. மார்க்ஸ்-எங்கெல்ஸ்-லெனினின் போதனைகளுடைய அடிப்படைகளிலிருந்து பிறழ்வது கம்யூனிச இயக்கத்தின் வாய்ப்புகளைப் பலவீனப்படுத்துகிறது என்று அனுபவம் காட்டுகிறது.

சோதரக் கட்சிகளுடனான தன் உறவில் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதக் கோட்பாட்டை உறுதியோடு பின்பற்றுகிறது; இதில் புரட்சிகர ஒருமைப்பாடும் ஒவ்வொரு கட்சியின் முழு சுதந்திரம், சம உரிமையை அங்கீகரிப்பதும் அங்கக ரீதியில் அடங்கும். இக்கோட்பாட்டின் அடிப்படையில் சோவியத்

ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி பிற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளுடன் தகவல்களைப் பரிமாறி, இருதரப்பு, பல்தரப்பு சந்திப்புகளில் பங்கேற்று, அவசியத்திற்கேற்ப நடத்தப்படும் பிராந்திய மற்றும் அதிகப் பரவலான சர்வதேசக் கூட்டங்களில் கலந்து கொண்டு அக்கட்சிகளுடனான தொடர்புகளை வளர்க்கிறது.

சோவியத் கம்யூனிஸ்டுகள், முதலாளித்துவ நாடுகளில் உள்ள தம் வர்க்கத் தோழர்களின் தரப்பில் எப்போதும் நிற்பர். பிற்போக்கிற்குப் பலியாகும் கம்யூனிஸ்டுகளைப் பாதுகாக்க சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி தன் சர்வதேச செல்வாக்கைப் பயன்படுத்தும். சோதரக் கட்சிகளின் ஒருமைப்பாட்டை, சோவியத் எதிர்ப்பிற்கு எதிரான அவற்றின் போராட்டத்தைக் கட்சி உயர்வாக மதிப்பிடுகிறது. சோஷலிச நாடுகள், சோஷலிசம் நிலவாத நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் பரஸ்பர ஆதரவு சமுதாய முன்னேற்றத்தின் முக்கியக் காரணியாகும்.

சோஷலிஸ்டுக் கட்சிகள், சமூக-ஜனநாயகக் கட்சிகள், லேபர் கட்சிகளுடனான தொடர்புகளை வளர்க்கும் கொள்கையை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி தொடரும். இவற்றுடனான ஒத்துழைப்பு குறிப்பாக அணு ஆயுத யுத்தத்தைத் தவிர்ப்பதில் கணிசமான பங்காற்றக் கூடும். தொழிலாளர் இயக்கத்தின் பல்வேறு போக்குகளுக்கு இடையிலான வேறுபாடுகள் எவ்வளவு ஆழமானவையாக இருந்தாலும், அடிக்கடி, பயனுள்ள வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் இராணுவ அபாயத்திற்கு எதிராக, சர்வதேச நிலவரத்தைச் சீர்படுத்த, காலனியாதிக்க மிச்சங்களை ஒழித்துக் கட்ட, உழைப்பாளிகளின் நலன்கள், உரிமைகளுக்காக இணையாகவோ கூட்டாகவோ செயல்படவும் அவ் வேறுபாடுகள் தடையாக இல்லை.

சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் எல்லா அணிகளுடைய ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், பல்வேறு போக்குகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள், இளைஞர், மாதர், விவசாய ஸ்தாபனங்கள், பல்வேறு நாடுகளின் ஜனநாயக ஸ்தாபனங்களின் பரஸ்பர ஒற்றுமையை வளர்க்கவும் கட்சி பெரும் முக்கியத்துவமளிக்கிறது.

உலகத் தொழிலாளி வர்க்கத்தின் முன்னும் அதன் கம்யூனிச முன்னணிப் படையின் முன்னும் தனக்குள்ள வரலாற்றுப் பொறுப்பை நன்கு உணரும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி பின்வருபவற்றை முன்போன்றே தொடர்ந்து செய்யும்:

—புரட்சி இலட்சியங்களையும் உலகக் கம்யூனிச இயக்கத்தின் மார்க்சிய-லெனினிய அடிப்படைகளையும் காத்து நிற்கும், விஞ்ஞான சோஷலிச தத்துவத்தை ஆக்கபூர்வமாக வளர்க்கும், வறட்டுத்தனம், சீர்திருத்தவாதம், தொழிலாளர் இயக்கத்தின் மீது பூர்ஷ்வா சித்தாந்த தாக்கத்தின் சகலவித வெளிப்பாடுகள் ஆகியவற்றிற்கு எதிராகப் போராடும்;

—சோதர கட்சிகளின் ஒற்றுமை, பரஸ்பரச் செயலாக்கம், கம்யூனிஸ்டுகளின் சர்வதேசிய ஒருமைப்பாடு, உலக யுத்தத்தைத் தவிர்ப்பதில் கம்யூனிச இயக்கத்தின் பங்கை அதிகப்படுத்துவது ஆகியவற்றிற்காக அனைத்தையும் செய்யும்;

—பொது நலன்கள், உறுதியான சமாதானம், மக்களினங்களின் பாதுகாப்பு, தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிசத்திற்கான போராட்டத்தில் சர்வதேசத் தொழிலாளி வர்க்கம், எல்லா உழைப்பாளிகளின் ஒற்றுமைக்கான கொள்கையைத் தொடர்ச்சியாகப் பின்பற்றும்....

## பெயர்க் குறிப்பகராதி

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் *(1820—1895)—மேதா விலாசம் மிக்க தத்துவகர்த்தா, மாபெரும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர், மார்க்சிய ஆசான்களில் ஒருவர், கா. மார்க்சின் இணைபிரியா நண்பர், சகதோழர்.*

ஓவன் [Owen], ராபர்ட் *(1771—1858)—பிரிட்டிஷ் கற்பனாவாத சோஷலிஸ்டு.—9.*

ஃபூரியே [Fourier], ஷார்ல் *(1772—1837)—பிரெஞ்சுக் கற்பனாவாத சோஷலிஸ்டு.—9.*

கர்பச்சோவ், மிஹயீல் செர்கேயெவிச் *(பிறப்பு 1931)—சோவியத் கட்சி, அரசுத் தலைவர், 1985 முதல் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலர், 1988 முதல் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதி.—134.*

கார்னெலிசன் [Cornelissen], கிறிஸ்தியன்*—ஹாலந்து அராஜகவாதி.—99.*

கிராவ் [Grave], ஜான் *(1854—1939)—பிரெஞ்சுக் குட்டி பூர்ஷ்வா சோஷலிஸ்டு, அராஜகவாதத் தத்துவகர்த்தாக்களில் ஒருவர்.—99.*

கிரொபோட்கின், பியோத்தர் அலெக்சேயெவிச் *(1842—1921)—ருஷ்யப் புரட்சியாளர், அராஜகவாத சித்தாந்தி.—99.*

கிஸோ [Guizot], பிரான்சுவா *(1787—1874)—பிரெஞ்சு பூர்ஷ்வா வரலாற்றாசிரியர், மார்க்சிற்கு முந்தைய வர்க்கப்*

போராட்டத் தத்துவத்தை உருவாக்கியவர்களில் ஒருவர். —23.

கே, அ. யூ. (1919இல் காலமானார்)—ருஷ்ய அராஜகவாதி, 1917இல் ருஷ்யாவில் நடந்த அக்டோபர் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியை ஆதரிக்கலானார்.—99.

சான்-சிமோன் [Saint-Simon], குளோட் அன்ரி டெ ருவ்ருவா (1760—1825)—கோமான், பிரெஞ்சு சிந்தனையாளர், சமூகவியலர், கற்பனாவாத சோஷலிஸ்டு.—9.

செர்னோவ், விக்டர் மிஹாய்லவிச் (1873—1952)—ருஷ்யாவில் இருந்த குட்டி பூர்ஷ்வா தலைவர்கள், தத்துவகர்த்தாக்களில் ஒருவர், 1917இல் அக்டோபர் சோஷலிசப் புரட்சி நடந்த பின் நாடு துறந்து வெளியேறினார்.—98.

தியேர் [Thiers], அடோல்ஃப் (1797—1877)—பிரெஞ்சு பூர்ஷ்வா வரலாற்றாசிரியர், அரசுத் தலைவர்; 1871இல் பாரிஸ் கம்யூனைக் கொடுங்கரம் கொண்டு ஒடுக்கினார்.—67, 71.

துகான்-பரனோவ்ஸ்கி, மிஹயீல் இவானவிச் (1865—1919)—ருஷ்ய பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்.—92.

தெஸெரெத்தேலி, இராக்ளி கியோர்கியெவிச் (1882—1959)—1917இல் ருஷ்யாவிலிருந்த குட்டி பூர்ஷ்வா தலைவர்களில் ஒருவர், 1921இல் நாடு துறந்து வெளியேறினார்.—98.

பிராக்கே [Bracke], வில்ஹெல்ம் (1842—1880)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, பதிப்பாளர், கா. மார்க்ஸ், பி. எங்கெல்சிற்கு நெருங்கியவராயிருந்தார்.—76.

பிளான் [Blanc], லுயீ (1811—1882)—பிரெஞ்சுக் குட்டி பூர்ஷ்வா சோஷலிஸ்டு, முதலாளிகளுடன் உடன்படிக்கை வேண்டுமென்று கோரினார்.—61.

பிளெஹானவ், இயோர்கி வாலென்தீனவிச் *(1856—1918)—ருஷ்ய மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத் தலைவர், தத்துவஞானி, ருஷ்யாவில் மார்க்சியத்தை முதன்முதலில் பரப்பியவர்.—99.*

பிஸ்மார்க் [Bismarck], ஒட்டோ *(1815—1898)—பிரஷ்ய, ஜெர்மன் அரசுத் தலைவர், ராஜதந்திரி, ஜெர்மன் பேரரசின் சான்ஸலர் (1871—1890); தொழிலாளர் இயக்கத்தின் பரம விரோதி.—68.*

புரிஷ்கேவிச், விளதீமிர் மித்ரஃபானவிச் *(1870—1920)—ருஷ்யாவிலிருந்த பெரும் நிலவுடைமையாளர்.—113.*

பெபெல் [Bebel], ஔகுஸ்ட் *(1840—1913)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபல தலைவர், கா. மார்க்ஸ், பி. எங்கெல்சின் நண்பர், சக தோழர்.—76, 77, 84.*

பொமியலோவ்ஸ்கி, நிக்கலாய் கெராசிமவிச் *(1835—1863)—ருஷ்ய எழுத்தாளர், ஜனநாயகவாதி.—97.*

போனபார்ட்டுகள் — *பிரெஞ்சு முடியாட்சி பரம்பரை (ஒரே குலத்தைச் சேர்ந்த பல பேரரசர்கள், இவர்கள் பரம்பரை வரிசையில் ஒருவருக்குப் பின் ஒருவராக வந்தனர்); இப்பரம்பரை 1804இல் முதலாவது நெப்போலியன் போனபார்ட்டால் தோற்றுவிக்கப்பட்டது.—71.*

மார்கன் Morgan], லூயிஸ் ஹென்ரி *(1818—1881)—புராதன கூட்டு சமுதாயம் பற்றிய அமெரிக்க வரலாற்றாசிரியர், தன்னிச்சைப் பொருள்முதல்வாதி.—24.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883)—மேதாவிலாசம் மிக்க தத்துவகர்த்தா, மாபெரும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர், இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் மூலவர், விஞ்ஞான கம்யூனிச ஆசான், தொழிலாளி*

வர்க்கத்தின் முதல் சர்வதேச ஸ்தாபனங்களைத் தோற்று வித்தவர், அவற்றின் தலைவராயிருந்தவர்.

**மெட்டர்னிக்** [Metternich], **கிளெமென்ஸ்** *(1773—1859)*— ஆஸ்திரிய அரசுப் பிரமுகர், ராஜதந்திரி, பிற்போக்காளர்.—*23.*

**மேல்லெர்-ஸகொமேல்ஸ்கி, அ. என்.** *(1844—?)*—ஜெனரல், கடைந்தெடுத்த பிற்போக்குவாதி, ருஷ்யாவில் புரட்சி இயக்கத்தைக் கொடுங்கரம் கொண்டு ஒடுக்கினார்.—*71.*

**மௌரர்** [Maurer], **கியோர்க் லுட்விக்** *(1790—1872)*—ஜெர்மன் வரலாற்றாசிரியர், பண்டைய மற்றும் மத்தியகால ஜெர்மனியின் சமூக அமைப்பை ஆராய்ந்தார்.—*24.*

**ரவெஸ்டெய்ன்** [Ravestein], **விலெம் வான்** *(1876—1970)*—ஹாலந்து சோஷலிஸ்டு, ஹாலந்து கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினராயிருந்தார், பின்னால் கம்யூனிச இயக்கத்திலிருந்து விலகினார்.—*117.*

**ரென்னென்காம்ப், பி. கே.** *(1854—1918)*—ஜெனரல் ருஷ்யாவில் புரட்சிகர இயக்கத்தை அடக்கியொடுக்கிய கொலைபாதகர்களில் ஒருவன்.—*71.*

**லஸ்ஸால்** [Lassalle], **பெர்டினான்ட்** *(1825—1864)*—ஜெர்மன் குட்டி பூர்ஷ்வா சோஷலிஸ்டு, ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதத்தை ஆரம்பித்து வைத்தவர்.—*76, 77, 88, 89, 90, 91.*

**லெத்ரூ-ரொலேன்** [Ledru-Rollin], **அலெக்சாந்தர் ஒகுஸ்ட்** *(1807—1874)*—பிரெஞ்சு அரசியல்வாதி, குட்டி பூர்ஷ்வா ஜனநாயகவாதி.—*61.*

**லெனின், விளதீமிர் இலியீச்** *(1870—1924)*—மேதாவிலாசம் மிக்க மார்க்சிய சிந்தனையாளர், தத்துவகர்த்தா, சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி, சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்தின் தலைவர், ஸ்தாபன அமைப்பாளர், ருஷ்யாவில் சோவியத் அரசை நிறுவியவர்.

**ஹாக்ஸ்த்ஹாவுசன்** [Haxthausen], **ஔகுஸ்ட்** *(1792—1866)*—பிரஷ்ய அதிகாரி, பொருளாதார நிபுணர், ருஷ்யாவிலிருந்த நில உறவுகள், விவசாயக் கூட்டு சமூகம் ஆகியவற்றின் சிறப்பியல்புகளைப் பற்றி எழுதினார்.—*24*.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை “Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR” என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098

கிளைகள்:

136, அண்ணா சாலை, சென்னை—600002
80 மேலக்கோபுர வீதி, மதுரை—625001
3—4 நேரு ஸ்டேடியம், கோவை—641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001
1—ஏ, திருவனந்தபுரம் ரோடு, திருநெல்வேலி—627003
16—சி, வெள்ளாளர் தெரு, பாண்டிச்சேரி—605001
வி.வி.கே. ஹாஸ்டல், போர்ட் ரவுண்ட், வேலூர்—632001

விற்பனை நிலையங்கள்:

பஸ் நிலையம், திருநெல்வேலி—627001
சேரிங் கிராஸ், ஊட்டி—643001
மெயின் ரோடு, திண்டுக்கல்—624001

87/89 ஒப்பணக்காரத் தெரு, கோவை—641001
பஸ் நிலையம், சேலம்—636001
நியூ செஞ்சுரி நடமாடும் புத்தக நிலையங்கள்

# சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசையில் இடம் பெறும் புத்தகங்கள்

சமூக விஞ்ஞான பாடநூல்
மார்க்சிய-லெனினியம் என்றால் என்ன?
அரசியல் பொருளாதாரம் என்றால் என்ன?
தத்துவஞானம் என்றால் என்ன?
விஞ்ஞான கம்யூனிசம் என்றால் என்ன?
இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?
வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?
முதலாளித்துவம் என்றால் என்ன?
சோஷலிசம் என்றால் என்ன?
கம்யூனிசம் என்றால் என்ன?
உழைப்பு என்றால் என்ன?
உபரி மதிப்பு என்றால் என்ன?
சொத்துடைமை என்றால் என்ன?
வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம் என்றால் என்ன?
ஆளுமை என்றால் என்ன?
அரசு என்றால் என்ன?
புரட்சி என்றால் என்ன?
விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி என்றால் என்ன?
சமூக அரசியல் அகராதி

ISBN 5—01—002352—0